2976

T. N. L. A. Debates

OFFICIAL REPORT

VOL: 39 - NO 2

April 21st 1987

V211,31 N87
N87.39.2
136521

வெளியீடு 25-4-1988

Issued 25-4-1988

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
## செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
## OFFICIAL REPORT

செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 21, 1987-தொகுதி 39-எண் 2

Tuesday, the 21st April 1987-Volume 39-No 2

சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009

**Legislative Assembly Secretariat Fort St. George,**
**Madras-600 009**

விலை ரூ.3.00 காசுகள்]

[Price Rs-3.00 paise

V211,31 N87
N87.39.2
136521
600 008.

உள்ளடக்கம்.

21—4—1987.

பக்கங்கள்

1. வினாக்கள்-விடைகள்—

உடுக்குறியிட்ட வினாக்கள் 289—349

2. கவன ஈர்ப்பு—

(அ) உத்திரமேரூர் நடுநிலைப்பள்ளி மாணவர் சிலர் காணாமற்போனது. 349—352

(ஆ) பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு பதிவு செய்ய மறுப்பது குறித்து. 352—355

(இ) தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களைச் சேர்க்க நன்கொடைகள் வசூலித்தல். 356—358

(ஈ) உதகமண்டலத்தில் பிறந்த வெளியாருக்கு கட்டும் பணி. 358—361

(உ) அம்பாசமுத்திரம் வட்டத்தில் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம். 361—363

3. அறிக்கை அளித்தல்—

பொது நிறுவனங்கள் குழு 363

4. வரவு-செலவுத் திட்டம் 1987-88—வாக்கெடுப்பு 435—438

(தொடர்ச்சி). 439—503

(அ) கோரிக்கை எண் 27—கதர்த்தொழில் 363—364

(ஆ) கோரிக்கை எண் 30—சமூகநலன் 364—365

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் 365—

திருமதி தா. இராசாம்பாள் 365—376

*திருமதி பா. வளர்மதி 376—385

திரு. மா. மீனாட்சிசுந்தரம் 385—392

| | பக்கங்கள் |
|---|---|
| *திரு. மு. பாண்டுரங்கன் | 392—396 |
| *திரு. எம். செல்லமுத்து | 396—404 |
| டாக்டர் தே. குமாரதாஸ் | 404—412 |
| *திரு. க. சோலைராசு | 412—422 |
| *திரு. வை. பாலச்சந்திரன் | 422—432 |
| திரு. எஸ். என். இராமசாமி | 435—439 |
| திரு. பொ. உத்திராபதி | 439—450 |
| டாக்டர் கே. சமரசம் | 451—460 |
| திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் | 460—472 |
| 5. அறிவிப்பு— | |
| பேரவை அலுவல் | 432—434 |
| 6. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள். | 503—504 |


## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

1987, ஏப்ரல் 21, செவ்வாய்க்கிழமை.

சித்திரை 8, பிரபவ—திருவள்ளுவர் ஆண்டு 2018

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 10-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :**

"கருமம் செயஒருவன் கைதூவேன் என்னும்
பெருமையின் பீடுடையது இல்".

குடிப்பெருமைக்கு உரிய கடமையைச் செய்வதற்குச் சோர்வடைய மாட்டேன் என்று ஒருவன் முயலும் பெருமையைப் போல மேம்பாடானது வேறொன்று இல்லை.

### 1. வினாக்கள்-விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்.

**தையல் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்ச ஊதியம்**

**430—(* வினா எண் 10363) திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா—

தையல் தொழிலாளர்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதியம் ஏதேனும் நிர்ணயித்துள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தையல் தொழிலாளர்களுக்கு அரசு குறைந்தபட்ச ஊதியம் வழங்குகிற திட்டம் பரிசீலனையில் உள்ளதாகச் சொன்னார்கள். இந்தத் திட்டம் எப்பொழுது அமுல்படுத்தப்படும் என்று நான் தெரிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, தனியார் நடத்துகிற கார்மென்ட் எக்ஸ்போர்ட் கம்பெனிகளில் எல்லாம்

[1987 ஏப்ரல் 21

பெரும்பாலும் பெண்களே வேலை செய்கிறார்கள். அவர்கள் காலை 8-00 மணியிலிருந்து மாலை 6-00 மணி வரை வேலை செய்கிறார்கள். அவர்களுக்குச் சம்பளமாக ரூ. 5, 6 தான் தருகிறார்கள். ஆகவே, கட்டாயமாக, வெகு விரைவிலே இந்தத் திட்டத்தை அமுல்படுத்த அரசு உத்தேசிக்குமா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, தையல் தொழிலாளர்களைப் பொறுத்தவரையில் குறைந்தபட்ச ஊதியம் வழங்க வேண்டுமென்று மாதச் சம்பளமாக நிர்ணயித்து 24—6—1981 முதல் அமுல்படுத்துவதென அரசு ஆணை பிறப்பித்தது. ஆனால் முதலாளிகள் கோர்ட்டுக்குச் சென்றார்கள். கோர்ட்டில் 5 வருஷம் இருந்தது. இப்பொழுது, 29—9—1986-ல் நாம் போட்ட அந்தக் குறைந்தபட்சக் கூலி நிர்ணயம் செல்லும் என்று நீதிமன்றம் தீர்ப்பளித்தது. இப்பொழுது 5 ஆண்டுகள் ஆகிவிட்டதனால் மீண்டும் அறிவிக்கை முறையில் அந்தச் சம்பளத்தை மாற்றியமைப்பதற்கு அரசு ஆலோசனை செய்து வருகிறது.

**திருமதி பா. வளர்மதி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார் நடத்துகிற தையல் கடைகளில் எல்லாம் ஒரு பேண்ட் தைப்பதற்கு ரூ. 60 என்று நிர்ணயம் செய்கிறார்கள். ஆனால் பேண்ட் துணியினுடைய விலையே ரூ. 60 தான். ரூபாய் 60-க்கு பேண்ட், ஷர்ட் துணி வாங்கி, அதே விலைக்குத் தைக்க வேண்டுமென்றால், சில நேரங்களில் முடியாத காரியமாக இருக்கிறது. ஆகவே, மளிகைக் கடைகளிலே விலைப் பட்டியல் வைத்திருப்பதைப் போல தையல் கடைகளிலே துணிகளைத் தைப்பதற்கு இவ்வளவுதான் வாங்க வேண்டுமென்று ஒரு நிர்ணயம் கொண்டு வருவதற்கு அமைச்சர் அவர்கள் அவசரமாக ஆணை பிறப்பிப்பார்களா என்று நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, துணிக்குத் தகுந்த தையல்காரரைத் தேடுவதை விட, கூலிக்குத் தகுந்த தையல்காரரைத் தேடுவது நல்லது. விலைப் பட்டியல் வெளியிடப்பட வேண்டுமென்று சொன்னாலும்கூட, மனம் இருந்தால்தான் அவற்றிற்கெல்லாம் மார்க்கம் உண்டு.



1987 ஏப்ரல் 21]

**திரு. சைதை சா. துரைசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் தையல் கலைஞர்களை ஒன்று சேர்த்து ஆங்காங்கே தையல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்து, அவர்களுக்கு எம்.சி.சி. வங்கி, டி.என்.எஸ்.சி. வங்கி அல்லது தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளிலிருந்து அவர்களே சொந்தமாக அந்தத் தையல் மெஷின்களை வாங்கித் தொழில் செய்வதற்கான வாய்ப்புக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, இப்பொழுதே அவர்கள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் அமைத்துக் கொள்ளலாம். ஆனால், தொழிலாளர் நல அமைச்சர் நடவடிக்கை எடுக்க முடியாது.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, தையல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி திருத்தி அமைக்கப் படும் என்று அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டிருக்கிறார்கள். நான் அரசாங்கத்திற்கு ஒரு வேண்டுகோளாகத் தெரிவிக்க விரும்புவது, குறைந்தபட்சக் கூலி அறிவிக்கப்படுகிறபொழுது, நடைமுறையில் தொழிலாளர்கள் வாங்குகிற சம்பளத்தைக் காட்டிலும் குறைவாகத்தான் பல நேரங்களில் அறிவிக்கப் படுகிறது. எனவே நடப்பில் நிலவுகிற அதிகபட்ச சம்பளத்தைக் குறைந்தபட்சமாகக் கவனத்தில் கொண்டு, அதிலிருந்து அதிக பட்சமாக நிர்ணயிப்பதற்குரிய வரையறையை அறிவிக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவர் அவர்களே, குறைந்தபட்சக் கூலி நிர்ணயித்ததினுடைய நோக்கமே இதனால் தவிடுபொடியாகிவிடும். இதற்குக் கீழ் போகக் கூடாது என்பதைத்தான் நாம் எடுத்துச் சொல்ல வேண்டும். இதற்கு மேல் போகக் கூடாது என்று நாம் சொல்லக் கூடாது. அதிகபட்சமாக உள்ள கூலியைக் குறைந்தபட்சக் கூலியாக நிர்ணயித்தால் தொழிலே இல்லாமல் போய் விடும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள். தையல் தொழிலாளர்களுக்குக் குறைந்தபட்சக் கூலி, மாதச் சம்பளமாக

நிர்ணயிக்கப்படும் என்று சொன்னார்கள். ஆனால், சில பகுதிகளிலே தையல் தொழிலாளர்கள் ஒரு மூட்டைக்குத் தையல் கூலி இவ்வளவு என்று நிர்ணயம் செய்துகொண்டு வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களை மாதச் சம்பளத்திற்கு வரச் சொன்னால் வராமல் இருக்கிறார்கள். அவர்களை மாதச் சம்பளத்திற்குக் கொண்டுவந்து சேர்ப்பதற்கு இந்த அரசு முன்வருமா ?

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு முன்வராது.

### விளாத்திகுளம் தொகுதி மேல்மாந்தை பிரிமியர் சால்ட் ஒர்க்ஸ் தொழிற்சாலை

***421—(* வினா எண் 11578) திரு. ச. குமரகுருபர ராமநாதன் :*** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விளாத்திகுளம் தொகுதியிலுள்ள மேல்மாந்தையில் பிரிமீயர் சால்ட் ஒர்க்ஸ் தொழிற்சாலையில் 22 தொழிலாளர்கள் வேலைநீக்கம் செய்யப்பட்டு இருப்பது உண்மையா ?

(ஆ) ஆம் எனில், அது குறித்து அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) திருநெல்வேலி தொழிலாளர் அலுவலர் மூலமாக வேலைநீக்கம் தொடர்பாக 22 தொழிலாளர்களையும் தனித்தனியாகவோ அல்லது தொழிற்சங்கம் மூலமாகவோ தாவா எழுப்பும்படி ஆலோசனை வழங்கியும் இந்நாள் வரை முறையாக தொழிற்தாவா எழுப்பப்படாததால் 22 தொழிலாளர்கள் வேலை நீக்கம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க இயலவில்லை.



### வேடசந்தூர் வருவாய் வட்டத்தில் சேமிப்புக் கிடங்கு அமைத்தல்

***422—(*வினா எண் 12018) மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்):*** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேடசந்தூர் வருவாய் வட்டத்தில் சேமிப்புக் கிடங்கு (Ware-housing Godown) அமைக்க அரசுக்கு கோரிக்கை வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) இங்கு வணிக வாய்ப்பு வளம் இருக்குமானால், ஒரு சேமிப்புக் கிடங்கு கட்டலாமென தமிழ்நாடு சேமிப்புக் கிடங்கு நிறுவனம் தெரிவித்துள்ளது.

***மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :*** தலைவர் அவர்களே, வணிகர்களும் அதேபோல் விவசாயிகளும் இந்த விலைவாசியேற்றத்தால் பாதிக்கப்படாமல் இருக்க ஒரு நியாயமான விலை கிடைப்பதற்கு வசதியாக இருப்பது இந்த மார்க்கெட்டிங் சொசைடி, வேர்ஹௌசிங் கோடவுன் போன்ற அமைப்புகள்தான். அந்த தாலுகாவிலே 960 ஊர்களைச் சேர்ந்த விவசாயப் பெருமக்கள் ஏதாவது பாதுகாப்பு வசதி வேண்டுமென்றால் அங்கிருந்து 60, 70 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள திண்டுக்கல்லிற்கு வரவேண்டியிருக்கிறது. வணிக வாய்ப்பு இருக்குமானால் பார்த்துச் செய்யலாம் என்று சொன்னார்கள். வணிகர்களுக்கும் விவசாயிகளுக்கும் இரண்டு பேருக்கும் சேர்த்து இது பயன்படும். ஆகவே இந்த ஆண்டே இந்தத் திட்டத்திலே சேர்ப்பதற்கு அரசு பரிசீலிக்குமா ?

***மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:*** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கும்.

**வாடிப்பட்டி வட்டம், பாலமேடு கிராமத்தை மையமாகக்கொண்டு தனி யூனியன் அமைத்தல்.**

**423—(* வினா எண் 12202) திரு. ஆ. சந்திரசேகரன் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம், பாலமேடு கிராமத்தை மையமாகக் கொண்டு தனி யூனியன் அமைக்கப்படுமா ?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) இதுபற்றிய கருத்துரு எதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. சந்திரசேகரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் பாலமேடு அலங்காநல்லூர் ஒன்றியத்திலே இருந்து இயங்கிக்கொண்டிருக்கிறது. அலங்காநல்லூர் ஒன்றியம் மிகப் பெரிய ஒன்றியமாக இருக்கிறது. 39 பஞ்சாயத்துக்களைக் கொண்டு அது இயங்குகிறது. அது பெரிய ஒன்றியமாக இருக்கிற காரணத்தினாலும், பல்வேறு மானியங்களைப் பெறுகிறபோது எல்லா பஞ்சாயத்துக்களுக்கும் மானியங்களைப் பிரித்துக் கொடுப்பதிலே கஷ்டம் இருப்பதாலும், மேலும் அதிகமான தூரத்திலே இருப்பதாலும் அதை இரண்டாகப் பிரித்து பாலமேடு என்று தனி ஒன்றியத்தை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊராட்சி ஒன்றியங்களை மாற்றியமைப்பது என்பது அந்த ஊராட்சி ஒன்றியங்களின் தீர்மானம், ஊராட்சிகளின் தீர்மானம், மாவட்ட வளர்ச்சி மன்றத்தின் தீர்மானம் ஆகியவற்றைப் பெறவேண்டும். அதோடு மட்டுமல்லாமல் ஊராட்சி ஒன்றியங்கள் ஆரிக்கப்பட வேண்டுமென்றால் அவ்வாறு பிரிக்கப்பட்ட பின் ஏற்பட இருக்கும் ஒன்றியத்தில் மக்கள் தொகை, நிர்வாக வசதி, நிதி நிலைமை, தனித்து இயங்கக் கூடிய சாத்தியக் கூறுகள் ஆகியவற்றைக் கருத்தில் கொண்டு முடிவு





எடுக்க வேண்டியவர்களாக இருக்கிறோம். அந்த வகையில் வாடிப்பட்டியை வைத்து ஊராட்சி ஒன்றியம் அமைக்கவேண்டுமென்ற கருத்தைப் பரிசீலிக்கிறோம்.

**திண்டுக்கல்லில் புதிய காய்கறி மார்க்கெட்.**

**424—(* வினா எண் 12315) திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு உணவுத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக உள்ள காய்கறி மார்க்கெட்டை மாற்றி புதிதாக மார்க்கெட் கட்டும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல்லில் அமைந்திருக்கக்கூடிய காய்கறி மார்க்கெட் 'ஹார்ட் ஆப் தி சிடி' என்று சொல்லக்கூடிய முறையிலே மிகவும் இடைஞ்சலான இடத்தில் அமைந்திருக்கிற காரணத்தினால் போக்குவரத்து தடைப்படுகின்ற நிலை இருக்கிறது. இதைக் கருத்தில் கொண்டு விரைவிலே நல்ல ஒரு இடத்தைத் தேர்ந்தெடுத்து இந்தக் காய்கறி மார்க்கெட்டை மாற்றுவதற்கு அரசு முன்வருமா ?

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மார்க்கெட்டை சிலுவத்தூர் சாலையின் தென் பக்கம் உள்ள அரசு புறம்போக்கு குளத்தில் சுமார் 5 ஏக்கர் நிலத்திலே அமைக்கவேண்டி அவ்விடத்தை நகராட்சிக்கு உரிமை மாற்றம் செய்து கொடுக்க நகரமன்றத்தின் ஒப்புதலுடன் அண்ணா மாவட்ட ஆட்சியாளரைக் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

**திரு. ஆ. பிரேம்குமார் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாற்றம் செய்து கொடுக்கப்போவதாக அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதற்காக நான் தொகுதி

மக்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். ஏற்கெனவே குளமாக இருக்கிற இடத்தைச் சொல்லியிருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே ஏராளமான குடும்பங்கள்—300 குடும்பங்கள் இருக்கின்றன. அந்தக் குடும்பங்களுக்கு மாற்று இடங்களைத் தருவதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-10)

**மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் :** தலைவரவர்களே, அந்தக் குடும்பங்கள் பற்றிய விவரம் என்னிடம் இல்லை. அவர் நன்றி சொல்லும்போது அந்த இடம் வெற்றிடமாக இருக்கும் என்று நினைத்தேன். குடும்பங்களையும் அப்புறப்படுத்த வேண்டுமென்றால் அது வேறு பிரச்சனையாக இருக்கிறது. ஆக, எல்லாவற்றையும் பார்த்து அரசு நடவடிக்கை எடுக்கும்.

**தருமபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியனில் உள்ள தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி**

**425—(*வினா எண் 9647) திரு. எச். ஜி. ஆறுமுகம் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி மாவட்டம், மொரப்பூர் யூனியனுக்கு உட்பட்ட தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூடப்பட்டுள்ளதை அரசு அறியுமா ?

(ஆ) இந்தத் தொழிற்சாலையை அரசு ஏற்று நடத்த ஆவன செய்யுமா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வாய்ப்பு இல்லை.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லும்போது வாய்ப்பு இல்லை என்று சொன்னார்கள். தொட்டம்பட்டி லாஸ்கோ ஸ்டீல் பேக்டரி மூடப்பட்டுள்ளதால் தொழிலாளர்கள் அவதிப்படுகிறார்கள். அவர்கள்







வேலையில்லாமல் கஷ்டப்படுகிறார்கள். ஆகவே, அரசாங்கம் நடத்தாவிட்டாலும் தனியாருக்காவது அந்தப் பேக்டரியைக் கொடுத்து, தொழில் தொடங்க ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தனியாருக்குக் கொடுப்பதில் எந்தவிதமான ஆட்சேபணையும் இல்லை. அரசு நடத்த தயாராக இல்லை.

**திரு. எச். ஜி. ஆறுமுகம் :** தலைவரவர்களே, அந்தத் தொழிற்சாலையைக் கேட்டு தனியார்கள் எத்தனை பேர் விண்ணப்பித்துள்ளார்கள் என்ற விவரத்தை மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா ?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, தனியார் நடத்த முன்வந்தால் தாராளமாகக் கொடுக்க அரசு தயாராக இருக்கிறது. ஆனால் தனியார் எடுத்து நடத்துவதாகச் சொல்கிறார்களே தவிர இதுவரையில் எந்தத் தனியாரும் விண்ணப்பம் போடவில்லை.

**திரு. க. இரா. சின்னராசு :** தலைவரவர்களே, இந்த ஸ்டீல் தொழிற்சாலையில் 60, 70 தொழிலாளர்கள் பணியாற்றி வந்தார்கள். நீண்டகாலமாக இந்தத் தொழிற்சாலை மூடப்பட்டிருப்பதால் அவர்கள் எல்லாம் மிகவும் அவதிப்படுகிறார்கள். தொழிலாளர் நலனைக் கருத்திற்கொண்டு மீண்டும் இந்தத் தொழிற்சாலையை அரசே நடத்த பரிசீலனை செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவரவர்களே, அந்த நிறுவனத்தை தேசியமயமாக்கத் திட்டமிடப்பட்டது. 71 இலட்சம் ரூபாய் இதுவரை செலவிடப்பட்டிருக்கிறது. இருந்தாலும், அதைக் காப்பாற்றக்கூடிய நிலைமை இல்லை. தனியார் எடுத்துக்கொள்ள முன்வந்தால் அவர்களுக்குத் தர அரசு தயாராக இருக்கிறது.

[1987 ஏப்ரல் 21

### மேட்டூர்-ஆத்தூர் குடிநீர் திட்டம்.

426—(*வினா எண் 9077) திரு. செ. செம்மலை: மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உலக வங்கி உதவியுடன் நிறைவேற்றப்படவிருக்கும் மேட்டூர்-ஆத்தூர் குடிநீர் திட்டப்பணி எப்போது தொடங்கப்படவிருக்கிறது?

(ஆ) மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர் ஆகிய ஒன்றியங்களில் எந்தெந்த கிராமங்களுக்கு குடிநீர் வழங்கப்படவிருக்கிறது?

(இ) அந்தக் கிராமங்களில் குடிநீர் வசதி பெறும் குடியிருப்புகள் எவை எவை?

(ஈ) இத்திட்டத்தினால் பயனடையும் மக்கள் தொகை எவ்வளவு?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு விவர அறிக்கை @ அவைமுன் வைக்கப் பட்டுள்ளது.

**திரு. செ. செம்மலை:** தலைவரவர்களே, மாண்புமிகு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் சென்ற மாதம் சேலத்திற்கு வந்திருந்தபோது இந்தத் திட்டத்திற்கான அடிக்கல்லை நாட்டினார்கள். அவர் தொட்டது துலங்கும், கை பட்டது விளங்கும் என்ற அடிப்படையில் திட்டப்பணிகள் முடுக்கி விடப்பட்டிருப்பதை நான் நன்றியுணர்வோடு பாராட்டுகிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்ள விரும்புவது, எவ்வளவு காலத்திற்குள் இந்தத் திட்டப்பணிகள் முடிக்கப்பட திட்டமிடப்பட்டிருக்கிறது? திட்டமிடப்பட்டுள்ள அந்த கால்கட்டத்திற்குள் திட்டப்பணிகள் முற்றுப்பெறும் வகையில் பார்த்துக்கொள்ளப்படுமா?

---

@ 505—51 ஆம் பக்கங்களில் இணைப்பு ஆக அச்சிடப் பெற்றுள்ளது.



1987 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, இந்தத் திட்டப் பணிகள் 37,68,00,000 ரூபாய் செலவில் நடைபெறவிருக்கின்றன. இந்தத் திட்டப் பணிகள் 1991 ஆம் ஆண்டு மார்ச் மாதத்திற்குள் முடிக்கப்பட்டு, பயனுக்குக் கொண்டுவரப்படும்.

**திரு. கே. பாலாஜி:** தலைவரவர்களே, உலக வங்கி உதவியுடன் நடத்தப்படுகின்ற குடிநீர்த் திட்டங்கள் முடிவுபெற நீண்ட காலமாவது ஏன்? காஞ்சிபுரத்தில் இப்படிப்பட்ட ஒரு திட்டம் ரூ. 4,20,00,000 செலவில் நிறைவேற்றப்பட ஆய்வு முடிந்து மூன்று ஆண்டுகள் ஆகியும் இன்றுவரையில் பணிகள் தொடங்கப்படாமல் இருக்கின்றன. இப்படிப்பட்ட நிலைமை இல்லாமல் உடனடியாக குடிநீர்த் திட்டங்களை நிறைவேற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இனியாகிலும் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவரவர்களே, உலக வங்கித் திட்டம் என்பது நீண்டதூர திட்டமாகப் போடப்படுவது. இந்தத் திட்டத்திலேகூட 11 நகரங்களும் 3 நகராட்சிகளும் இணைக்கப்பட்டிருக்கின்றன. திட்டத்தைப் போட்டு, குழாய்களைப் பதிக்கப்போனால் நிலச் சொந்தக்காரர்கள் சண்டை போடுகிறார்கள்; கோர்ட்டில் வழக்கு போடுகிறார்கள். இப்படிப்பட்ட பல்வேறு காரணங்களால் காலதாமதம் ஏற்படுவது இயற்கை. அதைத் தவிர்ப்பது அவ்வளவு சுலபமான காரியம் அல்ல. ஆகவே, முடிந்த அளவு திட்டங்களை வேகமாக முடிக்க குடிநீர் வடிகால் வாரியம் முயற்சி எடுத்துவருகிறது.

**திரு. சி. பழனிமுத்து:** தலைவரவர்களே, உலக வங்கி உதவியுடன் மேட்டூரிலிருந்து ஆத்தூர் வரை குடிநீர்த் திட்டப் பணியைத் தொடங்கவிருப்பதாகக் கூறினார்கள். அந்தப் பணி ஆத்தூருடன் நின்றுவிடாமல் தலைவாசல் வரையில் நீட்டிக்கப்படுமா? அந்தத் திட்டப்பணிகள் நூறு கிலோமீட்டருக்கும் அதிகமாக இருப்பதால் திட்டப்பணிகளைப் பல பகுதிகளாகப் பிரித்து, விரைவிலே பணிகளைப் பூர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படுமா? ஆத்தூருக்குத் தண்ணீர் வந்து சேர எத்தனை பூஸ்டர் ஸ்டேஷன்கள் அமைக்கப்பட வேண்டும் என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது தலைவாசல் வரையில் நீட்டிக்கிற திட்டம் இல்லை. ஆத்தூர் வரையில்தான் திட்டம் இருக்கிறது. அதோடு எத்தனை பூஸ்டர் என்பதெல்லாம் டெக்னிக்கல் டீட்டெய்ல்ஸ். அதுபற்றிப் பார்த்துத்தான் சொல்லலாம். ஒவ்வொரு இடத்திலும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி இந்தத் திட்டத்தை நிறைவேற்ற இருக்கிறார்கள். எத்தனை கான்ட்ராக்டர்கள் என்பதைப் பொறுத்தவரையில் இனிமேல் டெண்டர் போடப்பட்டபிறகுதான் அதைப்பற்றிய விவரங்களை அறிவிக்க இயலும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**தஞ்சைப் பகுதியில் அணுசக்தி தயாரிக்க கனிமங்கள்.**

427—(* வினா எண் 10292) **திரு. மா. மணிமாறன்:** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தஞ்சைப் பகுதியில் அணுசக்தி தயாரிக்கப் பயன்படும் கனிமங்கள் கிடைப்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) மோனஸைட் என்ற கனிமத்தில் உள்ள 'தோரியம்' அணுசக்தி தயாரிக்க உபயோகிக்கப்படுகிறது. மோனசைட் என்ற கனிமம் தோரியம் ஆக்ஸைடுடன் கூடிய சீரியம் என்ற உலோக பாஸ்பேட்டாகும். இக்கனிமம், இல்மனைட், கார்னட், ரூடைல் சிர்கான் போன்ற கன கனிமங்களுடன் சிறிய அளவில் நாகூர், தரங்கம்பாடி, பூம்புகார், புகப்புரம் கடற்கரைப் பகுதியில் கிடைக்கின்றன. இக்கன கனிமங்கள் கடல் அலைகளினால் கடற்கரை மணலில் ஒதுக்கப்படுகின்றன.

**திரு. கு. பாலசுப்பிரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மோனசைட் கனிமங்கள் நாகூர், பூம்புகார் போன்ற கடற்கரை ஓரங்களில் கிடைப்பதாக மாண்புமிகு



அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதனை அரசு எப்போது எடுப்பதற்கு முனைப்பாக இருக்கிறது? அதனால் ஏற்படுகிற பலன், அதன்மூலம் எவ்வளவு நமக்கு வருமானம் கிடைக்கும் என்பன போன்ற விவரங்களை அறிவிக்க இயலுமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, தரங்கம்பாடி கடற்கரைப் பகுதியில் இந்தக் கனிமங்கள் கிடைக்கின்றன. ஆகவே விரிவான ஆய்வு ஒன்றை இலாக்கா மேற்கொண்டது. அதன்மூலமாக இந்தப் பகுதியில் 45 சதவீதம் கனிமங்கள் உள்ளதெனவும், மோனசைட் கனிமம் .35 சதவீதம் மட்டுமே இருப்பதாகவும் தெரிய வந்திருக்கிறது. அதோடு தரங்கம்பாடி, பூம்புகார் கடற்கரைப் பகுதியில் மேற்கொண்ட ஆய்வின் மூலமாக அங்கே மோனசைட் என்ற கனிமம் .77 சதவீதம் முதல் .91 சதவீதம் வரையில் உள்ளதாக அறியப் பட்டிருக்கிறது. ஏற்கெனவே 108 கனிமங்களின் மாதிரிகள் எடுக்கப்பட்டு ஆய்வு செய்யப்பட்டு வருகின்றன.

**திரு. கோ. வீரய்யன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நாகூரிலிருந்து தரங்கம்பாடி மற்றும் பூம்புகார் கடற்கரைப் பகுதி வரையில் இந்த அணுசக்திக் கனிமங்கள் இருப்பதாகச் சொன்னார்கள். அவைகளை எடுக்கின்ற முயற்சியை எப்போது அரசு துவங்கும் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, அங்கே கிடைக்கின்ற கனிமம் ஒரு சதவீதத்தை விடக் குறைவாக இருப்பதால் தற்போது கன்னியாகுமரி மாவட்டத்திற்குப் பக்கத்தில்தான் அந்த வேலையை அரசு நடத்தி வருகிறது. அதிலும் மத்திய அரசுதான் அந்தத் தொழிற்சாலையை நடத்தி வருகிறது. தற்போது நாகூர் பகுதியில் அப்படிப்பட்ட முயற்சிகளை மேற்கொள்ள இயலவில்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. மா. சுந்தரதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசு எல்லைப் பகுதியில் இத்தகைய தொழிற்சாலை ஒன்றைத் தொடங்கி இருப்பது அரசுக்குத்

[1987 ஏப்ரல் 21

தெரியுமா? கன்னியாகுமரி மாவட்டத்தில் மணவாளக்குறிச்சிப் பகுதியில் இத்தகைய தொழிற்சாலை ஒன்றைத் தமிழக அரசு தொடங்குவதற்கான உத்தேசம் உள்ளதா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மணவாளக்குறிச்சியில் ரேர் எர்த்ஸ் கார்ப்பரேஷன் என்ற நிறுவனம் அங்கே கனிமம் எடுத்துக்கொண்டு வருவதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் அறிவார்கள். ஆகவே தமிழக அரசுக்கு அப்படிப்பட்ட எண்ணம் தற்போது இல்லை.

**தமிழகத்தில், கஞ்சமலையில் இரும்பு கனிமங்களை வெட்டி எடுத்தல்.**

426—(* வினா எண். 10393)—திரு. எஸ். இராசாராமன்:—மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் கஞ்சமலையில் உள்ள இரும்பு கனிமங்களை வெட்டி எடுக்க அனுமதி கோரி மாநில அரசு மைய அரசிடம் விண்ணப்பித்து உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) இல்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

**திரு. எஸ். இராசாராமன்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் பல்வேறிடங்களில் இதுபோன்ற கனிமங்கள் கிடைப்பதாகத் தெரிய வருகிறது. அதுபற்றித் தமிழக அரசு அறியுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் இருக்கின்ற எல்லா கனிமங்களைப் பற்றியும் அரசு ஆய்ந்து அறிக்கை வைத்திருக்கிறது. அது, எந்தக் கனிமம் என்று கேட்டால் அதுபற்றிய விவரங்களைத் தரத் தயார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 21]

**திரு. கு. ரமணி:** தலைவர் அவர்களே, சேலம் கஞ்சமலையில் இரும்புத் தாது இருப்பதை எடுத்து அங்கே ஒரு உருக்காலை ஏற்படுத்தவேண்டுமென்ற திட்டத்தைத் தமிழக அரசு பல வருஷங்களுக்கு முன்பே உருவாக்கியது. அது மத்திய அரசால் ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டம். உருக்காலை என்ற பெயரிலேயே கோப்புகள் எல்லாம் தயாரிக்கப்பட்டு இன்றைக்கு எவர்சில்வர், ஸ்டீல் போன்றவற்றை உற்பத்தி பண்ணக்கூடிய இடமாக மாற்றப் பட்டிருக்கிறது. அந்த மலையிலிருந்து கிடைக்கக் கூடிய இரும்பு தாதுக்களை வைத்து உண்மையிலேயே லாபகரமாக இரும்பு செய்ய முடியாதா, உருக்கு செய்ய முடியாதா? எதனால் இந்த நிலைமை ஏற்பட்டது? அதை அரசு தொடர்ந்து கவனித்து அங்கே உருக்காலை அமைவதற்கும், இரும்பு தாதுக்களை எடுப்பதற்கும் ஏற்பாடு ஏதேனும் உண்டா என்று அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 10-20).

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, ஏற்கெனவே இன்றைக்கு இருக்கிற துணை ஜனாதிபதி அவர்கள் தொழில் துறை அமைச்சராக இருந்தபோது, இரும்புத் தாது எல்லாம் எடுக்கப்பட்டு, ஸ்வீடன், ஜப்பான் நாடுகளுக்கெல்லாம் அனுப்பி இரும்பை எடுக்க முடியும் என்று அறிவித்து நாட்டுக்கு அறிக்கை எல்லாம் தந்திருக்கிறார்கள். அது குறித்து இந்த மன்றத்தில் பலமுறை விவாதிக்கப்பட்டிருக்கிறது. ஆனால் தற்போது இருக்கக்கூடிய சூழ்நிலையில் ஒரு எவர்சில்வர் பேக்டரிதான் அங்கே அமைந்திருக்கிறது. மீண்டும் அதை உருக்காலை ஆக மாற்றக் கூடிய முயற்சிகளை அரசு மேற்கொள்ளும்.

**திரு. தி. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் வேறு எங்காவது இரும்புக்கனி வெட்டி எடுப்பதற்காக நம் அரசு மைய அரசினுடைய அனுமதியைப்

எதிர்நோக்கி உள்ளதா? வட ஆற்காடு மாவட்டம் திருவண்ணாமலையிலிருந்து வெட்டி எடுக்கும் பகுதியும் அதில் அடங்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, சேலத்திலும் திருவண்ணாமலையிலும் இரும்பு இருக்கிறது என்பதை நாடு நன்கு அறியும். ஆனால் எடுக்கிற வாய்ப்புகள் இதுவரையில் கிட்டவில்லை.

**டாக்டர் கே. பி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் கஞ்சமலையில் உருக்காலை துவக்குவதற்காக மைய அரசு முதலிலே ஆணையிட்டு, அதன் விழாவில் இன்றைய தொழில் துறை அமைச்சர் அவர்கள், அன்றைய பாரதப் பிரதமர் இந்திரா காந்தி அம்மையார் அவர்களுக்கு தங்க மாங்கனி எல்லாம் வழங்கி வாழ்த்துக் கூறினார்கள். ஆனால் இன்றைக்கு அது உருக்காலையாக இல்லாமல் உருட்டாலையாக மட்டும்தான் மைய அரசு நடத்திக் கொண்டிருக்கிறது. எனவே அதை மாற்றி மைய அரசு எந்தத் திட்டத்திற்காக அந்த ஆலையைக் கொண்டு வந்ததோ, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுகின்ற வகையில் உருக்காலை துவக்க வேண்டும் என்று மாநில அரசு மைய அரசை கடிதம் எழுதி வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** நல்ல ஆலோசனை. ஏற்கலாம்.

**திரு. டி. தீர்த்தகிரி கவுண்டர்:** மாண்புமிகு சட்டப்பேரவைத் தலைவர் அவர்களே, தர்மபுரி மாவட்டம் தீர்த்தமலையில் இரும்புக் கனி இருப்பதாக ஜியலாஜிக்கல் சர்வே செய்து







சதவீதம் இரும்பு கிடைக்கலாம் என்று ஆராய்ச்சியும் செய்திருப்பதாக அறிகிறோம். அரசின் கவனத்திற்கும் இந்த தகவல் கிடைத்திருப்பதாக அறிகிறோம். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தர்மபுரி மாவட்டம், குறிப்பாக அரூர் வட்டம் தீர்த்தமலைப் பகுதி மிகவும் பின்தங்கிய பகுதியாக இருப்பதனால், அங்கே இரும்பு கனிமத்தை எடுப்பதற்கு தக்க நடவடிக்கை எடுப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் டெல்லியிலே ஏற்கனவே இருந்தவர்கள். நன்றாக டெல்லியை அறிந்தவர்கள். அவர்கள் டெல்லிக்கு மீண்டும் போகும்போது எங்கள் சார்பாக அவர்களே கூட கேட்டால் நல்லது என்று நினைக்கிறேன். இரும்பு கஞ்சமலையிலும் இருக்கிறது, தீர்த்த மலையிலும் இருக்கிறது, திருவண்ணாமலையிலும் இருக்கிறது. இரும்பு இல்லாத இடம் கிடையாது. தமிழகத்தில் நிறைய இரும்பு இருக்கிறது. அதை எடுப்பதற்கான அதிகாரம் டெல்லியிலே இருக்கிறது. ஆகவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதற்கு உதவுவார்களேயானால் அது பயன் உள்ளதாக இருக்கும்.

**திரு. எ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கஞ்சமலையிலே உருக்காலை அமைப்பதற்கான விவரங்களைச் சரியாகச் சொல்லவில்லை. மத்திய சர்க்கார் அதற்கு ஒப்புதல் அளித்திருப்பதாகச் சொல்லுகிறார்கள். அதற்கு பண ஒதுக்கீடு இல்லையா? என்ன காரணத்தால் அதில் தடங்கல் ஏற்பட்டிருக்கிறது?

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மத்திய சர்க்கார் முதலிலே இரும்பு ஆலைதான் துவக்க இருந்தார்கள். அதற்காகத்தான் அன்றைய பிரதமர் திருமதி இந்திரா காந்தி அம்மையார் அவர்கள் அடிக்கல் நாட்டவும் செய்தார்கள். ...க்கணக்கான மக்கள் கூடி இருந்து பார்த்தார்கள். அதற்குப்

பிறகு ஏற்பட்ட ஏதோ விளைவுகளின் காரணமாக இரும்பு ஆலை உருட்டு ஆலையாக மாறி ஓடிக் கொண்டிருக்கிறது. இரும்பு ஆலையாகத்தான் அது வரவேண்டும், அதற்கான முயற்சிகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை மட்டும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவிலில் மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலை.**

429—(*வினா எண். 11136) **திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தென்னாற்காடு மாவட்டம், காட்டுமன்னார்கோவில் பகுதியில் மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற் சாலை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லை என்று
சொன்னார்கள். தென்னாற்காடு மாவட்டம் காட்டுமன்னார்
கோவில் மிகவும் பின் தங்கிய பகுதி. தமிழகத்தின் பல ஊர்
களுக்கும் என் பகுதியிலிருந்துதான் மல்லிகைப்பூ செல்கிறது.
முல்லை அரும்பும் செல்கிறது. இந்த மலர்கள் எல்லாம் காடு
வெட்டி, சின்னப்புகழேரி, பெரிய புகழேரி, கண்டமங்கலம், வீரவ
நல்லூர் போன்ற கிராமங்களிலிருந்தும், என் பகுதியை அடுத்
துள்ள பக்கத்து கிராமங்களான இராயபுலியூர், மீன்சுருட்டி, குடி
காடு, பாப்பாகுடி போன்ற கிராமங்களிலிருந்தும், தமிழகத்தின்
பல பகுதிகளுக்கும் வந்து கொண்டிருக்கிறது. என்னுடைய
தொகுதியைப் பொறுத்தவரையில் அங்கே எந்தத் தொழிற்சாலை





யும் அமைக்கப்படவில்லை. அதற்கு ஒரு முன்னுரிமை கொடுத்து எந்த நடவடிக்கையும் இந்த அரசு எடுக்கவில்லை. என்னுடைய தொகுதியில் மல்லிகை மலர்கள் அதிகமாக உற்பத்தியாவதால் தயவு செய்து மல்லிகைப் பூவிலிருந்து சென்ட் தயாரிக்கும் தொழிற்சாலையை அங்கே அமைப்பதற்கு அரசு பரிசீலனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, ஒவ்வொரு தொகுதிக்கும் ஒரு தொழிற்சாலை ஏற்படுத்த வேண்டு மென்பது நல்ல எண்ணம்தான், நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்றுதான். என்னுடைய தொகுதியான பனைமரத்துப் பட்டியலில் நிறைய மல்லிகைப்பூ உற்பத்தியாகிறது. இருந் தாலும் அங்கே அதற்கு தொழிற்சாலை எதுவும் அமையவில்லை. இப்போது தொழிற்சாலை அமையவிருக்கிற இடம் தென்காசி. அது அரசுத் துறையில் வெளிநாட்டு கூட்டுறவோடு அமைய ஏற்பாடு செய்திருக்கிறோம். அது வெற்றிபெறுமானால் பல இடங்களில் அந்தத் தொழிற்சாலையை உருவாக்குவதற்கு நல்ல வாய்ப்பாக இருக்கும்.

**திரு. சா. ஜெயச்சந்திரன் :** தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்களின் விளக்கத்திற்கு நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அரசுத் துறை மூலமாகச் செயல்படுத்த முடியாது என்றாலும் கூட்டுறவுத் துறை மூலமாக அந்த செண்ட் தயாரிக்கும் தொழிற் சாலையை அமைக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம் :** தலைவர் அவர்களே, கூட்டுறவுத் துறை மூலமாக முயற்சி செய்யலாம். அதைவிட தனியார் யாராவது முன்வந்தால் அதற்கு ஆவன செய்வதற்கு அரசு தயாராக இருக்கும்.

**திரு. பொ. உத்திராபதி :** தலைவர் அவர்களே, தென்னாற்காடு மாவட்டத்தையொட்டி தஞ்சை மாவட்டம் இருக்கிறது. தஞ்சை மாவட்டத்தில் வேதாரண்யத்தில் அதிகமான விவசாயிகள் மல்லிகைப் பூவை உற்பத்தி பண்ணுகிறார்கள். மல்லிகைப்பூ விவசாயத்திற்கு விவசாயிகள் இரவும் பகலும் உழைக்கவேண்டிய

கஷ்டம் இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் சொல்லும் போது தொழிற்சாலையை தென்காசியில் அவர்கள் தாகச் சொன்னார்கள். நான் கேட்டுக்கொள்வது ஆரம்பிப்ப காடு, தஞ்சை மாவட்டங்களில் உற்பத்தியாகிற தென்னாற் அனைத்தையும் அரசாங்கமே விவசாயிகளுக்கு மல்லிகைப்பூ கக்கூடிய வகையில் வாங்கி, தனியார் குறைந்த நன்மை கிடைக்- வதைத் தடுத்து, அவர்களுக்குக் கட்டுப்படியான விலைக்கு வாங்கு ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒரு விலை கொடுத்து, பதைப் பற்றி பின்னாலே யோசித்தாலும் தொழிற்சாலை அமைப் தொழிற்சாலைக்கு அந்தப் பூக்களைக் கூட, தென்காசி விவசாயிகளைப் பாதுகாக்க அரசு முன்வருமா கொள்முதல் செய்து விரும்புகிறேன். என்று அறிய

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, மல்லிகைப்பூ விவசாயம் செய்கிற விவசாயிகள் நல்ல பலனைப் பெறுகிறார்கள். உதாரணத்திற்குச் சொல்லவேண்டுமென்றால் மல்லிகைப்பூ விவசாயம் செய்கிற விவசாயி எங்கள் மாவட்டத்தில் ஒரு ஏக்கருக்கு 18 ஆயிரம் ரூபாய் பெறுகிறார். ஆகவே அதுவே நல்ல விலை தான், விலையிலே ஒன்றும் பிரச்னை இல்லை. அவைகளுக்கு மார்க்கெட் வேண்டுமென்றால் எல்லா மல்லிகைப்பூ விலும் எஸ்ஸென்ஸ் இறங்குவதில்லை என்பதையும் மனதில் கொள்ள வேண்டும். அது அந்தந்த மண்வாகைப் பொறுத்தது. தென்காசியில் அந்த செண்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய மூலாதாரமான பொருள்கள் கிடைப்பதாகச் சொல்கிறார்கள். வெளிநாட்டு கூட்டுறவும் நமக்குக் கிடைத்திருக்கிறது. அதன் மூலம் அந்தத் தொழிற்சாலை 1¼ கோடி ரூபாயில் உருவாகவிருக் கிறது. அது வெற்றி பெறுமானால் மேற்கொண்டு பல தொழிற் சாலைகளை ஏற்படுத்தலாம். ஏனென்றால் வெளிநாட்டில் இதற்கு நல்ல மார்க்கெட் இருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன்:** தலைவர் அவர்களே, தென் காசியில் மல்லிகைப்பூ தொழிற்சாலை வருமென்று அறிவிக்கப் பட்டு இரண்டு ஆண்டுகள் ஆகியும், எங்களுக்கு இன்னமும் அது எட்டாக்கனியாகத்தான் இருக்கிறது. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் வெளிநாட்டு நிபுணர்கள் வந்தபோது அவர்கள் கூறிய



கருத்துக்கள் அடிப்படையில் நல்ல நிலத்தைதேர்ந்தெடுப்பதற்கு நானும் அவர்களுடன் சென்று வந்தேன் என்பது மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்குத் தெரியுமென்று நம்புகிறேன். அதன் அடிப்படையில் விவசாயிகளுக்கு வங்கிகள் மூலமாக ஏராளமாக கடன் வாங்கிக் கொடுத்து தென்காசி பூராவும் பூக்களின் மணம் மணந்து கொண்டிருக்கிறது. ஆனாலும் தொழிற்சாலையை இன்னமும் காணவில்லை. இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் அறிவிக்கப்பட்டும் இன்னமும் நில ஆர்ஜிதமோ அல்லது அதற் கான உத்தரவோ வெளியிடப்படவில்லை. இந்த காலதாமதத் திற்கு காரணம் என்ன? அந்தத் தொழிற்சாலை எப்போது வருமென்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இனி மேல் காலதாமதம் ஏற்படாது. 16—3—1987 அன்று அரசாணை எண். 330 மூலமாக ஆணை பிறப்பித்தாகிவிட்டது. இனிமேல் தொழிற்சாலை வேகமாக வளரும்.

(முற்பகல் 10-30)

## முன்சீப்—மாஜிஸ்டிரேட் ஒருங்கிணைப்புத் திட்டம்

430—(*வினா எண். 2382) **திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

முன்சீப்—மாஜிஸ்ட்ரேட் ஒருங்கிணைப்புத் திட்டத்தை அமுலாக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவைமுன் விவர அறிக்கை@ வைக்கப்பட்டுள்ளது.

**திரு கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முன்சீப்-மாஜிஸ்ட்ரேட் ஒருங்கிணைப்புத் திட்டத்தை வழக்கறிஞர்கள் சங்கமும் பெரும் பகுதி வழக்கறிஞர்களும் கடுமையாக எதிர்த்திருக்கிறார்கள். நடைமுறையில் வழக்குகள்

---

@ 511—513 ஆம் பக்கங்களில் இணைப்பு II ஆக அச்சிடப் பெற்றுள்ளது.

தேங்குவதைத் தடுப்பதற்கு இந்தத் திட்டம் உதவாது என்ற
நிலைமையில் அவர்கள் எதிர்ப்பைத் தெரிவிப்பதாகத் தெரிகிறது.
எனவே இவற்றைக் கவனத்தில் கொண்டு, அவர்கள் எந்த அடிப்
படையில் அத்தகைய எதிர்ப்புகளைத் தெரிவிக்கிறார்களோ,
அந்த அடிப்படையிலே பரிசீலித்து, இத்தகைய நிலையைக்
கைவிடுவதற்கு அரசு சிந்திக்குமா ?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய எதிர்ப்பு ஒன்றும் இதுகாறும்
வழக்கறிஞர்கள் சங்கத்திடமிருந்து அரசுக்கு வரவில்லை. உயர்
நீதிமன்றத்தின் வழக்கறிஞர்கள் சார்பில் அரசுக்கு எந்தவிதமான
எதிர்ப்பும் தெரிவிக்கப்படவில்லை. இப்படி நீதிமன்ற
இணைப்பு வருகிற காரணத்தால், தற்போது இருக்கிற எந்த
ஒரு நீதிமன்றமும் குறைக்கப்படமாட்டாது.

**திரு. கே. சுப்பராயன் :** பேரவைத் தலைவர் அவர்களே, 60
முன்சீப் காலியிடங்களுக்கு செலக்சன் செய்வதற்கு கால் ஃபார்
பண்ணி 1 மாதம் ஆகியும் இன்னமும் டி.என்.பி.எஸ்.சி. மூலம்
இண்டர்வியூ வைக்கப்படாமல் காலதாமதம் ஆவதற்கு என்ன
காரணம் என்பதை அறிய விரும்புகிறேன்.

அதேபோல் 5 மாவட்ட ஜட்ஜுகளின் பதவிகளுக்கான நேர்
முகத் தேர்வு நடத்தி, அவர்களுக்கு உரிய பெயர்ப் பதிவு உள்ள
லிஸ்டுகள் அரசுக்கு அனுப்பப்பட்டும், அவைகள் இட்டு நிரப்பப்
படாமல் இருப்பதற்கான காரணம் என்ன என்பதையும் அறிய
விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, 60 மாவட்ட முன்சீப் என்பது தவறு. 120
மாவட்ட முன்சீப்களுக்கு தேர்வாணைக் குழு தேர்வை தற்போது
நடத்த இருக்கிறது. காலியாக உள்ள இடங்கள் மிகவும்
குறைவு. ஆனாலும் எச்சரிக்கையாக அதிக இடங்களுக்கு
தேர்வுகளை நடத்தி, அதிகப்படியான பெயர்களை வெயிட்டிங்
லிஸ்ட்டிலே வைத்துக்கொள்ளக்கூடிய முறை என்ற முறையிலே
இந்தத் தேர்வுகள் நடத்தப்படுகின்றன. தேர்வாணைக் குழுவிடம்
போதிய அலுவலர்கள் இல்லாத காரணத்தால் உயர்நீதிமன்றம்



ஒவ்வொரு மனுவையும் ஆய்ந்து, தகுதியுள்ள மனு எது, தகுதி
யற்ற மனு எது என்பதை ஆய்ந்து தரக்கூடிய பணியைச் செய்ய
தேர்வாணைக்குழு உயர்நீதிமன்றத்திடம் கேட்டிருக்கிறது. உயர்
நீதிமன்றம் அதைச் செய்து வருகிறது. உயர்நீதிமன்றமும்,
தேர்வாணைக் குழுவும் இணைந்து அந்தப் பணியை மேற்கொண்டு
இருக்கின்றன.

டிஸ்ட்ரிக்ட் ஜட்ஜுகளைப் பொறுத்தவரைக்கும் ஐவரல்ல,
அறுவருக்கு தேர்வு நடந்து, உயர்நீதிமன்றத்தின் மூலமாகத்
தேர்வு நடந்து, மாநில அரசுக்கு அனுப்பப்பட்டு இருக்கிறது.
அந்த புரஜிசர் பிரகாரம், வழிமுறை பிரகாரம், சி.ஐ.டி.
இன்வெஸ்டிகேசனுக்குப் போக வேண்டும். அந்தப் பணி மேற்
கொள்ளப்பட்டு இருக்கிறது. விரைவில் அது முடிந்து, அந்த
இடங்கள் எல்லாம் நிரப்பப்படும்.

**திரு. வை. பாலச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்
அவர்களே, முன்சீப் மற்றும் மேஜிஸ்ட்ரேட் ஒருங்கிணைப்புத்
திட்டத்தின் மூலம் நிர்வாகப் பிரச்சனையை மட்டும்தான் ஓரள
விற்குத் தீர்க்க முடியுமே தவிர, நீதிகேட்டு வரும் ஏழை
மக்களுடைய பிரச்சனையைத் தீர்க்க முடியாது என்று வழக்கறி
ஞர்கள் பலரும் கருதுகின்றனர். நான் கூட, மாஜிஸ்ட்ரேட்
கோர்ட் மற்றும் முன்சீப் கோட்டிலே கடந்த 12 ஆண்டுக்காலமாக
நேரிடையாகப் பணியாற்றுகிறவன். நான்கூட அதைத்தான்
கருதுகிறேன். எனவே இந்த ஒருங்கிணைந்த திட்டத்தைக்
கைவிட்டுவிட்டு, குற்றவியல் இரண்டாம் வகுப்பு நீதிமன்றங்
களை, முதல் வகுப்பு குற்றவியல் நீதிமன்றமாகத் தரம் உயர்த்தி,
இந்த ஒரு மாற்றத்தோடு, இப்போது இருக்கிற அமைப்பு
முறையை அப்படியே நீட்டிக்க அரசு நடவடிக்கை எடுக்க முன்
வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, The concept is to render justice under one
umbrella to the Public at large என்பதுதான். அதை உயர்நீதி
மன்றம் பரிந்துரை செய்திருக்கிறது. அதை மாநில அரசு ஏற்று
இருக்கிறது. இதனால் மக்களுக்குப் பலன் கிடைக்குமே தவிர,
பாதிப்பு ஒன்றும் ஏற்படாது.

[1987 ஏப்ரல் 21

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஒருங்கிணைப்புத் திட்டம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசால் அறிவிக்கப்பட்டு, அது பலதரப்பட்ட மக்களாலும் வரவேற்கப்பட்ட திட்டம். இரண்டாவது வகுப்பு மாஜிஸ்ட்ரேட்டுகள், பல்வேறு துறையிலேயிருந்து ஒரு ஸ்டாப்-கேப் அரேன்ஞ்ஜ்மென்டாக சில நேரங்களில் நீதித்துறைக்குத் தேவையான மாஜிஸ்ட்ரேட்டுகளை நியமிக்க முடியாத சூழ்நிலையில் அவர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆகவே அவர்களை வரன் முறை செய்வதைத்தான் வழக்கறிஞர்கள் மன்றம் இன்று எதிர்த்து வருகிறது. இந்த எதிர்ப்பைச் சமாளிக்கிற வகையில், அவர்களை அழைத்து, நீதிமன்ற நீதிபதிகளோடு அரசும் இருந்து பேசி, அதற்கான ஒரு வரைமுறையை ஏற்படுத்த, இதற்கு ஒரு முடிவை ஏற்படுத்த அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, தற்காலிக நீதிபதிகளுடைய நிலைமை வேறு. அது குறித்து உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பையொட்டி, உயர்நீதி மன்றம் தற்போது நடவடிக்கை எடுத்து வருகிறது, அவர்களை நிரந்தரப் படுத்துவதற்காக. ஒருங்கிணைப்பு முறையைப் பொறுத்த வரைக்கும் உயர்நீதிமன்றமே மாநில அரசுக்கு அறிவித்து இருக்கிற பரிந்துரை. அவர்கள் ஆய்ந்து, அந்தப் பரிந்துரையை அனுப்பி இருக்கிறார்கள். வரைமுறைகளை அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அதை அரசு அப்படியே ஏற்றுக்கொண்டிருக்கிறது. நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாவட்ட முன்சீப்புகளையும், மாஜிஸ்ட்ரேட்டுகளையும் ஒன்றாக இணைப்பது பற்றி, வழக்கறிஞர்களிடமிருந்து எந்தவிதமான ஆட்சேபணையும் அரசுக்கு வரவில்லை என்று அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். ஆகா உண்மையாக இருக்குமானால், வழக்கறிஞர் என்ற முறையிலும், இந்த மாமன்றத்தின் உறுப்பினர் என்ற முறையிலும் முதலிலே நான் என்னுடைய கடுமையான ஆட்சேபணையை அதற்குத் தெரிவித்துக்கொள்ள ஆசைப்படுகிறேன். இந்த சிவில் கோர்ட்களிலே



1987 ஏப்ரல் 21]

யும், கிரிமினல் கோர்ட்களிலேயும் காலிங் ஓர்க் என்று சொல்லி, லன்ச் ஹவர் வரை நடந்து கொண்டு இருக்கிறது. இப்போது இரண்டு நீதிமன்றங்களையும் ஒன்றாக இணைப்பீர்களேயானால் அந்தக் கோர்ட்களிலே காலிங் ஓர்க் நடப்பதற்கு மட்டும்தான் வேலை இருக்குமே தவிர, நீதி பரிபாலனம் நடப்பதற்கு வாய்ப்பு இல்லாமலே போய்விடும். ஏற்கனவே இந்த மன்றத்திலே தெரிவித்த அனைத்து உறுப்பினர்களுடைய கருத்தோடு, என்னுடைய கருத்தையும் இணைத்துக்கொண்டு, இந்தத் திட்டத்தைத் தயவுசெய்து நீங்கள் மறுபரிசீலனை செய்ய வேண்டும் அல்லது இந்தத் திட்டத்தை நீங்கள் அமுல்படுத்து வதற்கு முன்னாலே இந்த மன்றத்திலே இருக்கிற உறுப்பினர் களைக்கொண்டு ஒரு கமிட்டியாக வைத்து, வழக்கறிஞர்களுடைய கருத்தையும், நீதிமன்றத்தினுடைய நடுவர்களுடைய கருத்தை யும் கேட்கவேண்டும். ஏன் என்றால், மாஜிஸ்ட்ரேட்டுகளுக்கு பதவி உயர்வு கொடுப்பதிலே எனக்கு எந்தவிதமான ஆட்சே பணையும் கிடையாது. ஆனால் நீங்கள் இந்த இரண்டையும் ஒன்றாக இணைப்பீர்களேயானால், The first casualty will be justice என்று தெரிவித்துக்கொண்டு, இதை அமைச்சர் அவர்கள் மறுபரிசீலனை செய்ய முன்வருவார்களா என்பதை நான் இந்த மன்றத்தின் மூலமாகத் தெரிந்துகொள்ள ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, The first casualty will be justice என்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கருத்து முற்றிலும் தவறானது. காரணம், மாஜிஸ்ட்ரேட்டாக இருக் கின்றவர்கள் பிறகு டிஸ்டிரிக்ட் முன்சீப் ஆக ஆகி பிறகு பதவி உயர்வு பெற்று சப்-ஜட்ஜாக, டிஸ்டிரிக்ட் ஜட்ஜாக வருகிறார்கள். அடிப்படை ஞானம் அவர்களுக்கு கிரிமினல் சைடில் மட்டுமே இருக்குமானால் அவர்கள் மேல் பதவிக்கு பொறுப்புக்கு வருகிற போது அவர்கள் எல்லா விதத்திலும் தீர்ப்புகள் செய்ய முடியாமல் போகலாம். எனவேதான் உயர்நீதி மன்றம், நீதிபதி களைப் பொறுத்தவரைக்கும், சிவில் மற்றும் கிரிமினல் சைட் இரண்டிலுமே அவர்களுக்கு ஞானம் வரவேண்டுமென்ற பரிந் துரையை மாநில அரசுக்கு உயர்நீதி மன்றம் தெரிவித்திருக்

கிறது. உயர்நீதிமன்றமே முழுக்க முழுக்க ஆய்ந்து இதை அரசுக்குத் தெரிவித்திருக்கிறது. அரசு ஒன்றும் முன்னோடியாக இந்தத் திட்டத்தைச் சொல்லவில்லை. எனவே அதை அரசு ஏற்றுக் கொண்டிருக்கிறது.

**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Integration of Judiciary என்பது லாங்-டேர்ம், நீண்டகால கண்ணோட்டத்தோடு கொண்டுவரப்பட்டிருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல அவர்கள் பதவி உயர்வு பெறும்போது, டிஸ்டிரிக்ட் ஜட்ஜாக வருபவர்களுக்கு, சிவில், கிரிமினல் இரண்டிலும் ஞானம் இருக்க வேண்டுமென்ற அடிப்படையிலே இது கொண்டுவரப்படுகிறது. இந்த சிஸ்டம் ஒரு நல்ல சிஸ்டம்தான். இதனால் 'காலிங் ஓர்க்' மட்டும்தான் நடைபெறும் என்று சொல்வது தவறு. அதிகமான மாஜிஸ்டிரேட்டுகளை நீதிபதிகளாக ஆக்கி அடிஷனல் கோர்ட்டுகளை நிறைய ஏற்படுத்துவதன் மூலம் நீதி விரைந்து வழங்கப்படும் என்பதால் இதை மிக வேகமாக அமலுக்குக் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர்நீதிமன்றம் துரிதமாக இந்த நடவடிக்கையை மேற்கொள்ளவேண்டுமென்ற நோக்கோடுதான் தற்காலிக நீதிபதிகளின் பணியினை வரன்முறைப்படுத்தும் பணியைத் துரிதப்படுத்தி இருக்கிறது. உயர்நீதிமன்றம் இதைக் கவனித்து வருகிறது. உயர்நீதிமன்றத்தினுடைய அறிக்கை அரசுக்கு வந்தவுடன் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே, முன்சிப், மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்கள் எப்படி நடைமுறையில் நடந்துவருகின்றன என்பது அரசுக்குத் தெரியுமா? இப்போது முன்சிப், மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில் சிவில் வழக்குகளும் சரியாக நடைபெறுவதில்லை, கிரிமினல் வழக்குகளும் சரியாக நடைபெறுவது இல்லை. எனவே, ஏற்கெனவே, முன்சிப், மாஜிஸ்டிரேட் நீதிமன்றங்களில் உள்ள, நடைமுறைகளிலுள்ள சிக்கல்களைக் கருதி அரசு மறுபரிசிலனை செய்யுமா என்று அறி விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நடைமுறையில் இருக்கின்ற சிக்கல்கள் முற்றிலும் தற்காலிகமானவை. காரணம் 1963-ல் இருந்தே தற்காலிக அடிப்படையிலே உயர்நீதிமன்றம், மாஜிஸ்டிரேட், டிஸ்டிரிக்ட் முன்சீப் ஆகிய பதவிகளையெல்லாம் இதுகாறும் எடுத்துவந்த காரணத்தால், இடையிலே 1981-லே அரசு ஒரு முடிவு எடுத்து, வழக்குரைஞர் மத்தியிலிருந்து, பாரிலிருந்துதான் இனிமேல் எடுக்க வேண்டுமென்று அமைச்சரவையிலே முடிவு செய்து, உயர்நீதிமன்றத்திற்குத் தாக்கல் செய்த பிறகு எழுந்த பிரச்சினையின் காரணமாகப் பல இடங்கள் நிரப்பப்படாமல் இருந்தன. காரணம், பாதிக்கப்பட்ட தற்காலிக நீதிபதிகள் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தாலும், வழக்குரைஞர் சங்கமும் நீதிமன்றத்திற்குச் சென்ற காரணத்தால், அவ்வப்போது போதிய நீதிபதிகள் இல்லாத காரணத்தால் இந்தப் பிரச்சினை ஏற்பட்டது. ஆனால் ஒருங்கிணைந்த திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டுவருவது என்பதையெல்லாம் மனதில் கொண்டுதான் தற்போது 120 டிஸ்டிரிக்ட் முன்சீப், 120 சப்-மாஜிஸ்டிரேட் என்ற முறையில் நாம் தேர்வினை நடத்தவிருக்கிறோம். தேர்வாணைக் குழுவும் அந்தப் பணியில் ஈடுபட்டிருக்கிறது. தேவைக்கு அதிகமான பேர் தேர்ந்தெடுக்கப்பட்டுவிடுவார்கள். இருக்கின்ற அனைத்து நீதிமன்றங்களுக்கும் நீதிபதிகள் கிடைத்தாலும் டிஸ்டிரிக்ட் முன்சீப்-கம்-மாஜிஸ்டிரேட் என்று வருகின்ற காரணத்தால் இரண்டையும் ஒருங்கிணைத்துவிட்டால் பாதியாக நீதிமன்றங்களுடைய எண்ணிக்கை குறைந்துவிடும் என்ற எண்ணம் வேண்டாம். உயர்நீதிமன்றத்தைப் பொறுத்தவரைக்கும், நீதிமன்றங்களுடைய எண்ணிக்கையை அதிகப்படுத்தவேண்டுமென்பதுதான். அதிலும் குறிப்பாக each Taluk should have a minimum of one District Munsif-*cum*-Judicial Magistrate என்பதுதான் உயர்நீதிமன்றத்தினுடைய பரிந்துரை. அதை இந்த அரசு ஏற்றுக்கொண்டிருக்கிறது. ஒருங்கிணைக்கின்றபோது இன்னும் அதிகப்படியான நீதிமன்றங்கள் நடைமுறைக்கு வர வாய்ப்பு இருக்கிறது.

[1987 ஏபரல் 21

**திரு. ஏ. எஸ். ரவீந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கடரமணன் அவர் களுடைய கேள்வியை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சரியாகப் புரிந்துகொள்ளவில்லை என்று நான் கருதுகிறேன். ஏனென் றால், உறுப்பினர் அவர்களின் கேள்வி, மாஜிஸ்டிரேட்-கம்-முன்சிப் என்று போட்டால் 'காலிங் ஒர்க்' குக்கே நேரம் சரியாகிவிடும்; நீதி விசாரணைக்கே வாய்ப்பு இருக்காது என்பதுதான். மாஜிஸ் டிரேட்டுகளுக்குப் பதவி உயர்வு கொடுப்பதிலே எந்தவிதமான கருத்துவேறுபாடும் கிடையாது. ஆனால், ஒருங்கிணைப்பதன் மூலம் பார்ட்டிகளைக் கூப்பிடும் வேலை மட்டும்தான் நடை பெறுமே தவிர, விசாரணைக்கோ, நீதி பரிபாலனத்துக்கோ வாய்ப்பு இருக்காது என்றுதான் அவர் குறிப்பிட்டார். ஆகவே அமைச்சர் அவர்கள் அதற்கு விளக்கம் தருவார்களா என்று அறிய ஆசைப்படுகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. வேங்கட ரமணன் அவர்கள் சொன்னதைத் தெளிவாகப் புரிந்துகொண்டு தான் நான் பேசினேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரவீந்திரன் அவர்கள் அதைப் புரிந்துகொள்ளவில்லை என்று கருதுகிறேன். 'காலிங் ஒர்க்' என்றுதான் நீதிமன்றத்தினுடைய பணி என்று மாண்புமிகு உறுப்பினர் நினைப்பாரேயானால் அது முற்றிலும் தவறான ஒன்று. அதற்காகத்தான் மிகத் தெளிவாக விளக்கம் சொன்னேன். மாண்புமிகு உறுப்பினர், பூந்தமல்லி சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டபோதுகூட நான் விளக்கம் சொன்னேன். அரசினுடைய நோக்கம், உயர்நீதி மன்றத்தினு டைய நோக்கம், நீதிமன்றங்களினுடைய எண்ணிக்கையைக் குறைப்பது அல்ல. தற்போது இருப்பதைவிடப் பல மடங்கு நீதிமன்றங்களுடைய எண்ணிக்கையும் நீதிபதிகளுடைய எண் ணிக்கையும் அதிகமாக்கப்பட்டு, சிவில், கிரிமினல் இரண்டு துறைகளிலும் உயர்நீதிமன்றம் ஒரு திட்டத்தைப் போட்டு, ஒரு (phased programme) என்ற முறையிலே அவர்களுக்குப் பயிற்சியைத் தரவேண்டுமென்ற வரைமுறையையும் கொண்டு வந்திருக்கிற காரணத்தால். அந்தப் பிரச்சினை ஏற்படாது.



1987 ஏப்ரல் 21]

சிவில் ஒர்க் எடுக்கின்ற நீதிபதிகள் சிவில் ஒர்க் எடுக்கிறார்கள், குறிப்பிட்ட காலத்திற்குத் தேவை என்றால் அவர்கள் கிரிமினல் சைடுக்குச் செல்லவேண்டிய நிலை ஏற்படுமானால் கிரிமினல் சைடுக்கும் அவர்கள் அனுப்பப்படுவார்கள் என்றும் உயர்நீதி மன்றம் கூறியிருக்கிறது. ஒட்டுமொத்தமாக உயர்நீதிமன்றத்தி னுடைய நோக்கம், ஒரு நீதிபதிக்கு 2 துறைகளிலும் பயிற்சி இருக்கவேண்டும் என்பதுதான் உயர்நீதிமன்றத்தினுடைய ஆழ மான நோக்கமாக இருக்கிறது.

(முற்பகல் 10-40)

**திரு. டி. ஆர். வேங்கடரமணன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** சட்டத் துறை மானியம் வரும்போது முழுமையாகப் பேசலாம்.

திருச்சி சப்-ஜெயில்.

**431—(* வினா எண் 5135) திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக் களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருச்சியில் தற்போது சப்-ஜெயில் இருக்கும் இடத்தை நகராட்சிக்கு அளிக்குமாறு அரசு உத்திரவு ஏதேனும் அனுப்பி யுள்ளதா?

(ஆ) ஆம் எனில், இதற்கான தொகையைத் திருச்சி நக ராட்சி செலுத்திவிட்டதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) இல்லை.

**திரு. அ. மலர்மன்னன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே இந்த இடத்தை நகராட்சி கேட்டு அரசுக்குக் குறிப்பு அனுப்பியிருக்கிறது. ஆகவே இந்தத் திட்டம் நிறைவேற்றப்படுமானால் திருச்சி நகராட்சிக்கு வருவாய்

பெருகும். ஏற்கனவே இந்த அரசு அறிவித்ததைப் போல உள்ளூரில் இருக்கவேண்டிய ஸ்டேடியங்கள் வெளியிடத்தில் இல்லாமல் உள்ளூரிலேயே இன்டோர் ஸ்டேடியம் அமைப்பதற்கு ஏற்ற இடமாகவும், ஷாப்பிங் காம்பிளக்ஸ் அதிலே அமைப்பதற்கு ஏற்ற இடமாகவும், நகராட்சியினுடைய நிதி நிலையைப் பெருக்க வாய்ப்பு வசதி ஏற்படும் அளவுக்கு இது உருவாகக்கூடிய நிலை இருக்கிறது. ஆகவே அதை மீண்டும் அரசு கவனித்து பரிசீலித்து இதை நடைமுறைக்குக் கொண்டுவருமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய நோக்கமும் அதுதான். நகராட்சியைப் பொறுத்தவரையில் நகராட்சிக்கு இந்த இடம் ஒதுக்கப்படுகிறபோது நகராட்சி பலன் உள்ள பணிகளுக்கு இந்த இடத்தைப் பயன்படுத்திக்கொள்ள முடியும். அதற்காக நிர்ணயிக்கப்பட்டு இருக்கிற தொகை 22 லட்சத்து 80 ஆயிரத்து 696 ரூபாயை நகராட்சி செலுத்தவில்லை. அந்தப் பணத்தை செலுத்தியவுடன் அந்த இடத்தை அவர்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பதாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் கூறியிருக்கிறார்கள்.

**நகரங்களுக்குள் உள்ள சிறைச்சாலைகளை வெளியே மாற்றுதல்.**

**432—(*வினா எண் 9211) திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நகரங்களுக்குள் அமைந்துள்ள சிறைச்சாலைகளையெல்லாம் வெளியே மாற்றுகிற திட்டம் உண்டா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை மத்திய சிறையினை மட்டும் நகருக்கு வெளியில் மாற்றும் செயற்குறிப்பு பரிசீலனையில் உள்ளது.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும் போது சொன்னார்கள், சென்னையில் உள்ள மத்திய சிறையினை



மாற்றுவதற்கு உத்தேசம் இருப்பதாக. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தனது பதிலில், இங்கே உள்ள சென்னை மத்திய சிறைச்சாலையை புழலுக்கு மாற்றி அமைக்கும் வேலைகள் நடைபெறுவதாகச் சொன்னார்கள். அந்த வேலை எப்போது முடியும்? எப்போது அங்கே சிறைச்சாலை அமைக்கப்படும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 90 சதவீதத்திற்கு மேற்பட்ட கட்டுமானப் பணிகள் தற்போது முடிந்துவிட்டன. கூடிய விரைவில் கட்டுமானப் பணிகள் முழுவதும் முடிந்த உடன் அங்கே மாற்றி அமைக்கப்படும்.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கைதிகளுக்குப் பணி கொடுக்கும் வாய்ப்பாகவும், சிறைச்சாலைக்குத் தேவையான காய்கறிகளை உற்பத்தி செய்யவும் வசதியாக இருக்க மற்ற பகுதிகளில் உள்ள சிறைச்சாலைகளையும் இப்படி வெளியில் அமைக்க திட்டம் உள்ளதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அத்தகைய செயற்குறிப்பு ஒன்றும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**திரு. ஆ. நடராசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவையில் உள்ள மத்திய சிறைச்சாலை கோவை நகரத்தினுடைய மத்தியப் பகுதியில் சுமார் 100 ஏக்கர் நிலப்பரப்பில் இருக்கிறது. அதை மாற்றுவதற்கு உண்டான பரிசீலனை ஏதாவது உள்ளதா? அப்படியானால் அது எப்போது நிறைவேற்றப்படும் என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோவை மத்தியப் பகுதியில் இருக்கிற மத்திய சிறைச்சாலையினுடைய 100 ஏக்கர் இடத்தை அரசினுடைய மற்றப் பணிகளுக்குச் செம்மையாகப் பயன்படுத்த முடியும் என்ற நோக்கோடு மாற்றுவது நல்லது என்று தான் அரசு கருதுகிறது. ஆனால் மாற்று சிறைச்சாலை அமைக்க நிதி

அதிகப்படியாக தற்போது தேவைப்படும் என்ற காரணத்தால் இந்நிலைக்கு ஏற்ப நடவடிக்கை எடுக்கலாம் என்று அரசு யோசித்துக் கொண்டு வருகிறது.

திரு. ஆ. பிரேம்குமார் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் சப் ஜெயில் என்று அழைக்கப்படுகின்ற அந்த ஜெயில்கள் எல்லாம் தற்போது அதிகமாக தாலுக்கா அலுவலகங்களில்தான் இருக்கின்றன. ஏற்கனவே தாலுக்கா அலுவலகங்களில் கூட்டம் அதிகமாக இருக்கின்ற காரணத்தால் இங்கே காரியங்கள் நடக்கக்கூடிய அளவில் இல்லை. ஆகவே இந்தக் காரணத்தால் அந்த சப்-ஜெயில்களை எல்லாம் தாலுக்கா அலுவலகங்களில் இருந்து எடுத்து வெளியே தனிப்பட்ட முறையில் அமைப்பதற்கு அரசு ஏற்பாடு செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அத்தகைய செயற்குறிப்பு இதுகாறும் அரசின் பரிசீலனையில் இல்லை. அரசு இனி அதுபற்றி ஆயும்.

திரு. இரா. தாமரைக்கனி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சப்-ஜெயில், சிறைச்சாலைகள் போன்றவற்றில் எல்லாம் கைதிகளுக்கு நல்ல முறையில் உணவு கொடுக்கப்படுகிறதா என்பதைக் கண்காணிக்கும் பொருட்டு ஆலோசனைக் குழுவை அரசு போடுவதாக இருந்தது. அது இப்போது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. எப்போது அது போடப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைவில் ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்படும்.

திரு. ஈ. வே. கி. ச. இளங்கோவன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னையில் இருக்கின்ற சிறைச் சாலையை நகருக்கு வெளிப்புறத்தில் அமைப்பதாக அமைச்சரவர்கள் கூறினார்கள். இதில் சிறிது ஜாக்கிரதையாக இருக்கவேண்டும். காரணம், பிரெஞ்ச் நாட்டில் பாரீஸ் நகருக்கு வெளியில் இருக்கின்ற ஒரு சிறைச்சாலையில், அங்கேயிருந்த ஒரு கைதியை



அவருடைய மனைவி ஹெலிகாப்டர் மூலமாக வந்து, தூக்கிக் கொண்டு சென்று விட்டதாக செய்தி வந்தது. தமிழ்நாட்டில் தற்போது அதிகமான அளவில் ஹெலிகாப்டர்கள் இல்லை —என்றாலுங்கூட, இன்னும் 5, 6 வருடங்களில் ஹெலிகாப்டர்கள் பெருகிவிடும்—அதுபோன்று இங்கேயும் நிகழாமல் இருப்பதற்குப் பாதுகாப்பான சிறைச்சாலை கட்டப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, நமது நாட்டிலுள்ள சிறைச்சாலைகள் எல்லாம் ஏற்கனவே நல்ல பாதுகாப்புடன்தான் இருக்கின்றன.

திரு. ஜி. கே. ஜெ. பாரதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய திருவொற்றியூர் தொகுதியில் புழல் நகரில் திறந்தவெளிச் சிறைச்சாலை மூன்று ஆண்டுகளுக்கு முன் கட்டப்பட்டு இன்னும் திறக்கப்படாமல் இருக்கிறது. அந்தச் சிறைச்சாலையை எப்போது திறப்பார்கள் * * என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இந்தக் கேள்வியின் பின் பகுதி நீக்கப்படுகிறது.

திரு. சைதை சா. துரைசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் திறந்த வெளிச் சிறைச்சாலைகள் உள்ளனவா? இல்லையென்றால், திறந்த வெளிச் சிறைச்சாலைகளை அமைக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : தலைவர் அவர்களே, ஒரு இடத்தில் ஏற்கனவே இருக்கிறது. மேலும் திறந்தவெளிச் சிறைச்சாலைகள் திறப்பது குறித்து அரசு பரிசீலித்து வருகிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. பாரதி அவர்களது கேள்வியின் முதல் பகுதிக்கு அமைச்சரவர்கள் பதில் அளிக்கலாம்.

---

**மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

[1987 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, மூன்று ஆண்டுகளுக்கு முன்னரே கட்டப்பட்டு, பணிகள் முடிவடைந்து, இன்னும் திறக்கப்படாமல் இருப்பது என்ற தகவல் முற்றிலும் உண்மைக்கு மாறானது. காரணம், மைய அரசினுடைய நிதியைப் பொறுத்துத்தான் நாம் சிறைச்சாலைகளைக் கட்டிக்கொண்டு வருகிறோம். புழலில் ஒரு சிறைச்சாலையை நவீன முறையில் 'மாடர்ன் பிரிசன்ஸ்' ஆகக் கட்டி வருகின்ற காரணத்தினால்—மேலும் பல முன்னேற்றங்களைச் செய்ய வேண்டுமென்று 4, 5 மாநிலங்களைச் சேர்ந்தவர்கள் கூட அதைப் பார்வையிட்டு, சில ஆக்கபூர்வமான ஆலோசனைகளைத் தந்து அந்தப் பணிகள் இன்னும் முடியவில்லை. அதைத்தான் மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள் கேள்விக்கு நான் பதில் சொன்னபோது, 80 சதவீதப் பணிகள் முடிந்துவிட்டதாகச் சொன்னேன். அங்கே 'இண்டர்நல் ஒர்க்ஸ்' நிறைய முடியவேண்டியிருக்கிறது. அதற்கு சிறிது காலம் பிடிக்கும். கிட்டத்தட்ட, 3 மாதத்திலிருந்து 6 மாத காலத்திற்குள் எல்லாப் பணிகளும் முடியலாம்.

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சையிலே செயல்பட்டுவந்த திறந்த வெளிச்சிறைச்சாலை, தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கின்றது. எப்போது மாற்று திறந்தவெளிச் சிறைச்சாலை தஞ்சைக்கென கட்டப்படும்? அப்படியென்றால், தஞ்சையில் எந்த இடத்தில் ஏற்படுத்தப்பட இருக்கிறது என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, புதியதாக திறந்தவெளி சிறைச்சாலைகளை ஊக்குவிப்பு செய்ய வேண்டுமென்பதுதான் அரசினுடைய நோக்கம். தஞ்சைக்கு எந்த இடத்தில் அமைப்பது என்பது குறித்து அரசு இப்போது ஆய்ந்து வருகிறது.

### அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகம்.

433—(* வினா எண். 11849) **திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—



1987 ஏப்ரல் 21]

அன்னை தெரசா மகளிர் பல்கலைக் கழகத்துக்கென நிலம் ஆர்ஜிதம் செய்தல் போன்ற அத்தியாவசியப் பணிகள் எந்த நிலையில் உள்ளன?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை மாவட்டம், கொடைக்கானல் வட்டம், கொடைக்கானல் நகரில் 2—3—1984 அன்று மகளிர் பல்கலைக் கழகம் தொடங்கப்பட்டு, தற்காலிகமாக கொடைக்கானல் தமிழ்நாடு சிறுதொழில் நிறுவனத்திற்குச் சொந்தமான டான்சி கட்டிடங்களைத் தகுந்தவாறு மாற்றி அமைத்து அதில் செயலாற்றி வருகின்றது. இரண்டு இடங்கள் அதற்குத் தேர்ந்தெடுக்கப்பட்டன. அதில் ஒரு இடத்தில் நீதிமன்றத்தினுடைய தடை ஆணை இருக்கின்ற காரணத்தினால் மேற்கொண்டு முயற்சிகள் இன்னும் நடந்து வருகின்றன ; இன்னொரு இடத்தை அரசு ஆய்ந்து வருகிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொண்டுக்கு ஓர் அன்னையாகவும், ஒப்பற்ற சமூகப் பணிக்காக நோபல் பரிசு பெற்றவராகவும், நாட்டிலே வாடுகின்ற ஆதரவற்ற பிஞ்சு உள்ளங்களுக்கும், புறக்கணிக்கப்பட்ட ஏழை அபலைப் பெண்களுக்கும் தன்னுடைய வாழ்க்கையை அர்ப்பணித்து வரும் மாதரசி அன்னை தெரசா அவர்களுக்காக பல்கலைக்கழகம் அமைத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்றாகும். மேலும் பெண்களுக்காக, படித்துப் பயன்பெறுவதற்காக தோற்றுவிக்கப்பட்ட அந்தப் பல்கலைக்கழகத்திலே பாட வகுப்புகள் ஆரம்பிக்கப்பட்டு விட்டனவா? எத்தனை பெண்கள் படித்து வருகின்றார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 21

(முற்பகல் 10-50)

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, எத்தனை மாணவிகள் என்ற தகவல் இல்லை. பல்வேறு ஆய்வுப் பாடங்கள் ஏற்கெனவே துவங்கப்பட்டு விட்டன. இடத்தைப் பொறுத்தவரைக்கும் அங்கே புனித இருதயக் கல்லூரிக்குச் சொந்தமான ஒரு பால்பண்ணை ஏற்கெனவே இருந்தது. அதை அவர்கள் பயன்படுத்தவில்லை. அந்த இடத்தை அரசு கையகப்படுத்தி இந்தப் பல்கலைக்கழகத்திற்கு தர ஆணையிட்டது. அவர்கள் நீதிமன்றத்திலே தடையாணை பெற்றுவிட்டார்கள். தற்போது ரைபிள் ரேன்ஜ்-க்கு அருகில் உள்ள தோட்டக் கலைத்துறைக்குச் சொந்தமான 50 ஏக்கர் நிலத்தை அரசு எடுக்க நடவடிக்கை எடுத்து வருகிறது. அது வந்த பிறகு யூ.ஜி.சி.யிலிருந்து சாங்க்ஷன் வரவேண்டியிருக்கிறது. யூ.ஜி.சி. சாங்க்ஷன் வந்த பின்புதான் சிக்ஸ்த் அண்டு டெவலப்மெண்ட் புரோக்ராமில் பல புதிய பாடத் திட்டங்கள் துவக்கப்பட இருக்கின்றன.

திரு. என். எஸ். வி. சித்தன்: தலைவர் அவர்களே, 1984 ஆம் ஆண்டு அறிவிக்கப்பட்ட இந்தப் பல்கலைக் கழகத்திலே போதுமான அலுவலர்கள், அதிகாரிகள், இருக்கைகள், இடங்கள் இல்லாத காரணத்தினால் பணிகள் சரிவர நடைபெறவில்லை என்ற செய்தியை அறிந்ததற்குப் பிறகுதான் இந்தக் கேள்வியை நான் கேட்டேன். நான் உங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடமிருந்து தெரிந்துகொள்ள விரும்புவது இந்தக் கல்வி ஆண்டிலிருந்து முறையான வகுப்புகள் தொடங்குவதற்கும் எல்லாப் பிரிவுகளிலும் மாணவிகளைச் சேர்த்துக்கொள்வதற்கும், நிரந்தரக் கட்டடத்தை விரைவிலே கட்டுவதற்கும் அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன்: தலைவர் அவர்களே, யூ.ஜி.சி.யின் நிதி இல்லை என்றபோதிலும் கூட மாநில அரசு நிதியை ஒதுக்கி கட்டடம் கட்ட ஆணையிட்டது. பிரச்சனை என்னவென்றால் புனித இருதயக் கல்லூரி அமைப்பைச் சேர்ந்த



வர்கள் நீதிமன்றத்திற்குச் சென்று தடையாணை வாங்கிவிட்டார்கள். அதனால்தான் இந்தப் பிரச்சினை ஏற்பட்டிருக்கிறது. தற்போது 50 ஏக்கர் நிலத்தை தோட்டக்கலைத் துறையிடமிருந்து பெற்றவுடன் இந்தப் பணியை துரிதப்படுத்த அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது. தங்குவதற்கு இட வசதி இல்லாத காரணத்தினால் (Talented Factulty Members) ஆசிரியப் பெருந்தகைகள் வரமுடியாத ஒரு நிலை இருப்பது உண்மைதான். அதைச் சரிக்கட்டுவதற்காகத்தான் முதன் முதலாக ஆசிரியர்களுக்குத் தங்குமிடம் என்று, அரசு முன் முன்னுரிமை கொடுத்து கட்டிடத்தைக்கட்ட தற்போது நடவடிகை எடுத்து வருகிறது.

திரு. கு. ரமணி: தலைவர் அவர்களே, தமிழகத்தில் பெண்களுக்கு என்றே ஒரு பல்கலைக்கழகம் அமைக்கப்பட்டது தமிழக மக்கள் அனைவரும் குறிப்பாக பெண் சமுதாயம் மிகவும் வரவேற்ற ஒரு விஷயம் அது. 1984-லே மிகுந்த உற்சாகத்தோடு, அதனுடைய ஆரம்ப விழாவெல்லாம் நடத்தி முடித்து இப்போது கட்டிடம் கட்டுவதற்கான இடத்திற்காக கோர்ட்டுக்கு போக வேண்டும் அல்லது வேறுவிதமான நடவடிக்கைகள் என்றும், இடம் இல்லாமல் நின்று போவதும், யு.ஜி.சி. கிராண்ட் கிடைக்கவில்லை என்றும் இத்தனையும் ஏற்பட்டு டிலே ஆகிறது. முன்கூட்டியே இதற்கு வேண்டிய சில தயாரிப்புகளை, குறைந்த பட்சம் கட்டிடம் கட்டுவதற்கான இடம் அரசாங்கத்தின் கையிலே இருக்கிறது. மற்றவர்களுடைய தயவிற்குப் போகவேண்டிய அவசியம் இல்லை என்று உத்திரவாதம் செய்யாமல் இருப்பது நம்முடைய குறை அல்லவா? முதலில் வேறு இடத்தில் பல வகுப்புகள் நடத்த ஏற்பாடு செய்து பின்னாலே இடம் வாங்கிக் கட்டுவது என்றாவது உத்திரவாதம் செய்திருக்க வேண்டும். அப்படிச் செய்யாதது நம்முடைய குறை அல்லவா என்பதை அறிய விரும்புகிறேன். ஆராய்ச்சிப் பணி என்று சில அறைகளில் இப்போது நடக்கிறதே தவிர உண்மையிலே அங்கே மாணவிகள் சேரவோ, படிக்கவோ வழி இல்லாத நிலை இருக்கிறது. எப்படி இது தீர்க்கப்படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

[1987 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** தலைவர் அவர்களே, கருத்து தவறான கருத்து. காரணம் இடமே இல்லாமல் இல்லை. ஏற்கனவே டான்சிக்குச் சொந்தமான கட்டிடங்களில் பல்கலைக் கழகம் நடக்கிறது. பல பிரிவுகள் நடைமுறையில் இருந்து வருகின்றன. முன்கூட்டியே, முன் எச்சரிக்கையாக கட்டிடங்கள் கட்டுவது என்பது இயலாத காரியம். காரணம் பிளாக் கிராண்ட் பொறுத்தவரைக்கும் யு.ஜி.சி. தான் தருகிறது. யு.ஜி.சி.யின்படி பல்கலைக்கழகம் துவங்கிவிட்டு ஓராண்டு, ஈராண்டுக்காலம் அதனுடைய முனைப்புப் பணிகளைப் பார்த்தபிறகுதான் கட்டிடம் கட்ட பிளாக் கிராண்ட் தருகிறார்கள். யு.ஜி.சி. கொடுக்கிறதோ இல்லையோ மாநில அரசே தரவேண்டும் என்ற நோக்கோடுதான் இதற்கு நிதியையும் நாம் ஒதுக்கிவிட்டு இருக்கிறோம். தற்போது தடையாணை வாங்கி விட்ட காரணத்தினால் பணி நடக்காமல் இல்லை. டான்சி கட்டிடங்கள் பணி நடக்கிறது. டான்சி கட்டிடங்கள் போதிய அளவில்லை. ஆசிரியர்கள் தங்குவதற்கு வசதி இல்லை. அங்கு இருக்கின்ற ஒரே பிரச்சனை இதுதான். குடியிருப்புகள்தான் முக்கியத் தேவையாக இருக்கிறது. அதற்குத்தான் தற்போது நடவடிக்கை எடுக்கிறோம்.

**தமிழ்நாட்டில் எல்லா பள்ளிகளிலும் என்.சி.சி. திட்டம்.**

434—(*வினா எண் 12431) **திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தமிழ்நாட்டில் அனைத்துப் பள்ளிகளிலும் என்.சி.சி.யைக் கட்டாயமாக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** தலைவர் அவர்களே, நாட்டைப் பாதுகாக்க, வலிமை மிக்க, கடமையுணர்வு, ஒழுங்கு, கட்டுப்பாடு மிக்க வீரர்களையும், வீராங்கனைகளையும் உருவாக்கும் வகையில் இராணுவப் பயிற்சி, விமானப்படைப் பயிற்சி



1987 ஏப்ரல் 21]

கடற் படைப் பயிற்சி போன்றவற்றை என்.சி.சி. மூலமாக அனைத்துப் பள்ளிகளிலும், அனைத்து மாணவ மாணவிகளுக்கும் கட்டாயப்படுத்திட மத்திய அரசை மாநில அரசு வற்புறுத்துமா அல்லது மாநில அரசு பொறுப்பில் உள்ள சாரண இயக்கத்தில் இராணுவப் பயிற்சிகளை வழங்கும் வகையில் விஸ்தரிப்பதற்கு அரசு பரிசீலிக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சாரணர் பயிற்சியினையும், என்.சி.சி. யினையும் கட்டாயப்படுத்தவேண்டும் என்ற நோக்கம் மைய அரசிடமும் இல்லை, மாநில அரசிடமும் இல்லை. விருப்ப ஏற்பாகத்தான் அதைச் செய்து இருக்கிறார்கள். தற்போது தமிழகத்திலே 624 பள்ளிகளிலே தேசிய மாணவர் படையைச் சார்ந்த பயிற்சி நடைபெறுகிறது. மத்திய அரசினுடைய உதவி கணிசமாக அதற்குக் கிடைத்து வருகிறது. அதை மேலும் 365 பள்ளிகளுக்கு நீட்டிக்கவேண்டும் என்று மைய அரசைக் கேட்டு இருக்கிறோம். மைய அரசினுடைய தாக்கீதை எதிர்பார்க் கிறோம். கிடைத்தவுடன் 365 பள்ளிகளுக்கு நீட்டிக்கப்படும்.

**திரு. எப். எம். இராசரத்தினம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் என்.சி.சி. பயிற்சியைத் தமிழ் மொழியிலேயே அளிக்க மாநில அரசு மத்திய அரசை வற்புறுத்துமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்திக்குப் பதிலாக ஆங்கிலத்தில் பயிற்சி கொடுக்க மைய அரசு இசைவு தெரிவித்து அந்த அடிப்படையில் அது நடந்து வருகிறது.

**திரு. பி. என். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதெல்லாம் இந்த 'டீன் எஜ்' என்று சொல்லப்படுகிற வயதில் உள்ள மாணவர்களுடைய நடத்தை களில் காயங்கள் ஏற்பட்டு அவர்கள் வாழ்க்கைச் சீரழிவதைப் பார்க்கிறோம். அதைப் போக்குகின்ற வகையில் பள்ளிக் கல்வி முடிந்தவுடன்—இப்போது சிங்கப்பூர் போன்ற மேலை நாடுகளில் எல்லாம் மெட்ரிக்குலேஷன் படிப்பு முடிந்தவுடன் இரண்டு

ஆண்டுகள் கட்டாய ராணுவக் கல்வி இருக்கிறது அப்படி ஒரு கல்வியை உருவாக்க மைய, மாநில அரசுகள் முயற்சிக்குமா? அப்படி முயற்சித்தால், உள்நாட்டு, வெளிநாட்டுப் பாதுகாப்பு அற்ற இந்த நேரம் இருக்கிற நிலையில் இந்தியாவிற்கு அது உகந்ததாக இருக்கும். ஆகவே இந்தக் கல்விக் கொள்கையில் ஒரு மாறுதலைக் கொண்டு வர மாநில அரசும், மைய அரசும் முயற்சிகளை மேற்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாணவர்கள் மத்தியிலே ஒழுக்க உணர்வை ஊட்டுவதற்கு உறுதுணையாக இருக்கின்றமுகத்தான், அனைத்து மாநிலங்களிலும் குறைந்தபட்ச கட்டாயத்தை—சாரணப் பயிற்சியாக இருந்தாலும், என்.சி.சி. என்ற அளவாக இருந்தாலும் சரி, பள்ளிப் படிப்பின்போதே ஒரு கட்டாயத்தைக் கொண்டு வரலாமா என்று மனித வளத்துறை ஆய்ந்து வருகிறது. இன்னும் முடிவு எடுக்கப்படவில்லை.

**திரு. இரா. தாமரைக்கனி :** பேரவைத் தலைவர் அவர்களே, எல்லா மாணவர்களுக்கும் என்.சி.சி. மற்றும் சாரணர் பயிற்சி தருவதைவிட, எப்படி ராணுவத்திற்கு ஆள் எடுக்கிறார்களோ, அதுமாதிரி நல்ல உயரம், பாடி உள்ளவர்களை என்.சி.சி.யில் எடுப்பதற்கும், மேலும் அவர்கள் நாளைய ராணுவ வீரர்களாக ஆகிட, ஒரு திறமை இருக்கிற அளவில் அவர்களுக்கு துப்பாக்கிப் பயிற்சி கொடுக்கப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த நோக்கோடு அந்தப் பயிற்சி தற்போது நடைமுறையிலே இருந்து வருகிறது.

**திரு. ஜி. ஆனந்த கிருஷ்ணா :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குத் தமிழகத்திலே பல பள்ளிகளிலே, பயிற்சி பெற்ற என்.சி.சி. ஆசிரியர்கள் வேறு பள்ளிகளுக்கு மாறுதல் செய்யப்படுவதன் காரணமாக, என்.சி.சி. யுனிட்டுகளை டிஸ்பேன்ட் செய்யவேண்டிய நிலை ஏற்பட்டிருக்கிறது. எனவே



என்.சி.சி. ஆசிரியர்கள் பதவி உயர்வு பெறுகிற நேரத்தில்கூட, அதே பள்ளியிலே பணியாற்றுவதற்கு தகுந்த ஏற்பாடுகளை அரசு செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன் :** நல்ல ஆலோசனை. அதைக் கருத்தில் கொண்டு அரசு அதற்கான தக்க நடவடிக்கையை எடுக்கும்.

**திண்டிவனம்-கிடங்கல் ஏரியை மராமத்து செய்தல்.**

435—(*வினா எண் 6662) **திரு. கே. எம். தங்கமணி :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தவும் அகலப்படுத்தவும் அரசிடம் செயற் குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அத்திட்டம் எப்போது துவங்கப்படும்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** (அ) மற்றும் (ஆ) : திண்டிவனம்-கிடங்கல் ஏரியின் வரத்து வாய்க்காலை தூர்வாரி ஆழப்படுத்தும் மற்றும் அகலப்படுத்தும் பணிகள் அவசியம் ஏற்படும்போது அவ்வப்போது உள்ள நிதி நிலைக்குத் தக்கவாறு மேற்கொள்ளப்படுகிறது. இத்திட்டம் வறட்சிப் பணியில் தற்போது சேர்க்கப்பட்டுள்ளது.

**தமிழக ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வஃப் மூலம் பண உதவி.**

436—(*வினா எண் 9099) **டாக்டர் த. முகம்மது சலீம் :** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் உள்ள ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்ய வக்ஃப் Wakf மூலம் பணம் உதவி செய்யப்படுமா?

(ஆ) ஆம் எனில், அதன் விபரம் என்ன?

[1987 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) எந்தக் காரியங்களுக்காகவும், நோக்கங்களுக்காகவும், வக்ஃபின் பணம் செலவிடப்பட வேண்டும் என்று "வக்ஃப் நாமா'வில் எழுதப்பட்டுள்ளதோ அவற்றிற்கு மட்டும் வஃபின் பணம் செல விடப்படும். ஏழை முஸ்லீம் பெண்களுக்குத் திருமணம் செய்யப் பணம் செலவிடப்பட வேண்டுமென்று 'வக்ஃப் நாமா'-வில் வழி வகை செய்யப்பட்டிருந்தால் அதற்காகவும் பணம் செலவிடப் படும்.

**டாக்டர் த. முகம்மது சலீம் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வக்ஃப் போர்டிலிருந்து பணம் ஒதுக்கப் பட்டதில், ஏழை முஸ்லீம்களுக்குத் திருமணம் செய்வதற்காக எவ்வளவு என்று வரையறுக்கப்பட்டுள்ளதா? அந்த வக்ஃப் போர்டின் மூலம் கலந்து, அது எவ்வளவு என்று அறிய விரும்புகிறேன்?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வக்ஃப் போர்டிலே இல்லை. தமிழ்நாட்டிலே இருக்கின்ற பல வக்ஃப்களிலும் அப்படி இல்லை. எனக்கு வந்த புள்ளிவிவரத்தின்படி ஒரே ஒரு வக்ஃப்பில் மட்டும்தான் திருமணத்திற்குப் பணம் கொடுப்பதாக உள்ளது. எவ்வளவு கொடுப்பது என்று அவர்களாகவே முடிவு செய்துகொள்ளலாம்.

**மேற்கு தொடர்ச்சி மலையிலுள்ள மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகள்.**

**437—(* வினா எண் 9167) திரு. வே. கு. சின்னசாமி மற்றும் மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேற்கு தொடர்ச்சி மலையிலிருந்து கேரளாவிற்குள் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு புன்னம்புழா போன்ற ஆறுகளை மத்திய அரசின் உதவியுடன் தமிழகத்திற்குள் கிழக்கு நோக்கித் திருப்பும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?



1987 ஏப்ரல் 21]

(ஆ) ஆம் எனில், ஆய்வு எந்த நிலையில் உள்ளது?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) பாண்டியாறு-புன்னம்புழா நீரைப் பாசனத்திற்காகக் கிழக்கு நோக்கித் திருப்பிவிடும் திட்டத்தைக் குறித்து கேரள அரசுடன் பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றன. கேரள அரசுடன் ஓர் ஒப்பந்தம் ஏற்பட்டவுடன் இத்திட்டம் மேற் கொள்ளப்படும்.

கிழக்கு நோக்கி தமிழகத்திற்குத் திருப்புவதற்கான சாத்தியக் கூறுகள் குறித்து ஆராய மத்திய அரசு 1976 ஆம் ஆண்டிலேயே தொழில் நுட்பக் குழு ஒன்றை அமைத்துள்ளது. கேரளத் திலிருக்கும் அச்சங்கோயில், கல்லாடா, வாமனபுரம் முதலிய படுகைகளிலிருந்து கிழக்கு நோக்கி திருப்பிவிடுவதற்கான உபரி நீர் உண்டா என்று ஆராயவும் இந்தத் திட்டத்தைக் குறித்து ஆய்வு மேற்கொள்ள கேரள அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை நடத்தலாம் எனவும் தொழில் நுட்பக் குழு பரிந்துரைத்தது. இந்தப் பரிந்துரைக்கு இணங்க பேச்சுவார்த்தைக்கான நாள், இடம் முதலியவற்றைக் குறிப்பிட்டு அனுப்புமாறு கேரள முதல்வர் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கிறார். கேரள முதல்வரிட மிருந்து பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

(முற்பகல் 11-00)

**மாண்புமிகு பேரவைத் தலைவர் :** பேரவையின் அனுமதியோடு வினாக்கள்-விடைகள் நேரம் நீட்டிக்கப்பெறுகிறது.

**திரு. வே. கு. சின்னசாமி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் நிறைவேற்றப் படும்போது அதனால் பயனடைகிற மொத்த நிலப்பரப்பு எத்தனை ஏக்கர்? இது கோவை மற்றும் பெரியார் மாவட்டங்களை முழுமையாக இணைக்கும் ஒரு திட்டமாக இருக்கிறது. எனவே இந்தத் திட்டத்தைக் கூடிய விரைவில் மத்திய மாநில அரசுகள் கலந்து நிறைவேற்றினால் நன்றாக இருக்கும் எனவே அப்படி நிறைவேற்ற அரசு முன்வருமா

என்று அறிய விரும்புவதோடு, இன்றையதினம் கோவை மாவட்டம் பெரிய பாலைவனமாக மாறிவிடுமோ என்கிற அச்சத்தில் இருக்கிற காரணத்தால் எப்படியாவது இந்தத் திட்டத்தை நிறைவேற்றியாக வேண்டும் என்ற அடிப்படையில் அடுத்த பேச்சுவார்த்தை எப்போது நடைபெற இருக்கிறது என்பதையும், இந்தத் திட்டத்தில் பயனடையும் விவசாயிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும், இதனால் எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கிடைக்க உள்ளது என்பதையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டம் நடைமுறைக்கு வருகிற நேரத்தில் அந்தத் திட்டத்திற்கான ஒப்பந்தத்தின்படிதான் எவ்வளவு ஏக்கர் நிலங்களுக்குப் பாசனம் கிடைக்கும் என்று நாம் சொல்ல முடியும். ஆனால் இன்றைக்குக் கேரள அரசாங்கத்தோடு நாம் பேச்சுவார்த்தை நடத்தி 7 டி.எம்.சி. தண்ணீரை நம்முடைய கோயம்புத்தூர் மற்றும் பெரியார் மாவட்டங்களில் உள்ள பகுதிகளுக்குத் திருப்பிவிட வேண்டும் என்ற உணர்வை நாம் கேரள அரசுக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறோம்.

**மாண்புமிகு திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன் (பேரவைத் துணைத் தலைவர்) :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீரைக் கிழக்கு நோக்கித் திருப்பிவிடுவது சம்பந்தமாக தொழில் நுட்பக் குழு ஒன்று 1976 ஆம் ஆண்டிலேயே அமைக்கப்பட்டும்கூட அதன் பணியைத் தொடங்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. சமீபத்தில் வந்த செய்திகளைப் பார்க்கிறபோது (National Water Development Agency) மூலமாக மகாநதி-கோதாவரி டெவலெப்மென்ட் ஏஜென்சி மூலமாக மகாநதி-கோதாவரி நதிகளின் இணைப்பை இந்த ஐந்தாண்டு திட்டத்திலேயே சேர்க்க வேண்டுமென்ற இறுதி முடிவை மத்திய அரசே எடுத்து விட்டது. அதைப் போலவே மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தண்ணீரை கிழக்கே தமிழகத்திற்குத் திருப்பிவிடும் திட்டத்தையும் இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலேயே சேர்க்க வேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா?





அதைப்போலவே 220 டி.எம்.சி. தண்ணீர் கடலில் வீணாகிக் கொண்டிருந்தாலும் கூட அந்த மாநில அரசு ஒரு 20 டி.எம்.சி. தண்ணீர் மட்டும்தான் வீணாகிறது என்ற தவறான தகவலைக் கொடுத்துக்கொண்டிருக்கிறது. எனவே உண்மையிலேயே எவ்வளவு தண்ணீர் வீணாகிறது என்பதையும் அதைத் தமிழகத்திற்கு அதிலும் குறிப்பாகத் தென் மாவட்டங்களுக்குத் திருப்பி விடுவதென்றால் எவ்வளவு தண்ணீரைத் திருப்ப முடியும் என்பதையும் ஆய்வு செய்வதற்காக மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா? உண்மையிலேயே எவ்வளவு தண்ணீர் வீணாகிறது என்று அறுதியிட ஒரு குழு அமைக்க வேண்டுமென்று மாநில அரசு மைய அரசை வற்புறுத்துமா என்ற விவரங்களை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு துணைத் தலைவர் அவர்கள் சொன்னதைப்போல் (National Water Development Agency) மகாநதியிலிருந்து கோதாவரி—கிருஷ்ணா—காவிரி வரை இணைக்க வேண்டும் என்ற உணர்வைச் சொல்லி அதையும் 7-வது ஐந்தாண்டு திட்டத்திற்குள் கிருஷ்ணா நதி வரை இணைப்பதற்கான ஆய்வு செய்யப்பட வேண்டும் என்று முடிவு செய்துள்ளது. நமது தமிழக முதல்வர் அவர்கள் அந்தக் கூட்டத்தில் கலந்து கொண்டு பேசியபோதும் அதற்குப் பின்னால் எங்களைப் போன்றவர்கள் கலந்து கொண்டபோதும் மாண்புமிகு நமது முதல்வர் அவர்களின் கருத்தையே வலியுறுத்திச் சொல்லியிருக்கிறோம். இப்படி மகாநதியிலிருந்து காவிரிக்குத் தண்ணீர் கொண்டு வருவதற்கு எத்தனை தலைமுறையாகுமோ என்ற சந்தேகம் எங்களுக்கு இருக்கிறது. எனவே உடனடியாக மேற்கு நோக்கிப் பாயும் நதிகளின் தண்ணீரினை தமிழகத்திற்குத் திருப்பிவிட வேண்டும் என்ற உணர்வை நம் முதல்வர் தெரிவித்ததன் விளைவாக இப்போது 7-வது ஐந்தாண்டு திட்டத்திற்குள் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் தன்மைபற்றி ஆய்வு செய்வதற்கு மத்திய அரசு உத்தரவிட்டிருக்கிறது. இதற்காக என்று இரண்டு டிவிஷன்களை மத்திய அரசு ஏற்படுத்தியிருக்கிறது. அதில் ஒரு டிவிஷன் தமிழக அரசு சார்பாக கொடுக்கப்பட்டிருக்கிறது என்று

தெரிவித்துக்கொள்கிறேன். மேற்கே நோக்கிப் பாயும் ஆறுகள் இன்றையதினம் 43 இருக்கின்றன. அதில் 218 டி.எம்.சி. தண்ணீர் வீணாகிறது என்று நாம் கணக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறோம். ஆனால் கேரள அரசாங்கம் அதை சரி என்று ஒப்புக் கொள்ளவில்லை. கடைசியாக 4 ஆறுகள் மூலமாக 47 டி.எம்.சி. தண்ணீர் வீணாகிறது என்று சொல்லி கேரள அரசோடு நாம் இப்போது பேச்சுவார்த்தை நடத்தி வருகிறோம்.

**திரு. அ. ரகுமான்கான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலிருந்து கேரளத்திற்கு மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளை மத்திய அரசின் உதவியோடு தமிழகத்திற்கு, கிழக்கே நோக்கி திருப்பிட வேண்டுமென்ற திட்டத்தைக் கடந்த 10 ஆண்டுகளாக ஆளுநர் உரையிலும் பட்ஜெட் உரையிலும் சொல்லிவந்திருக்கிறோம். ஆனால் கேரளாவின் நீர்ப்பாசனத் துறை அமைச்சர் திரு. பாலகிருஷ்ண பிள்ளை அவர்கள் தெளிவாக இந்தத் திட்டத்தை ஒப்புக் கொள்ள முடியாது என்று சட்டசபையிலேயே அறிவித்திருக்கிறார்கள். அந்தச் செய்தி பத்திரிகைகளிலும் வந்திருக்கிறது. எனவே குடிநீர் பிரச்சினையும் வறட்சியும் இருக்கிற இந்தக் காலத்தில் கிழக்கு நோக்கி அந்த ஆற்று நீரைத் திருப்பிவிடுவதில் வெற்றிபெற்றால் தமிழ்நாடு வளமுடையதாகும். ஆகவே இது சம்பந்தமாக இந்த பத்து வருடங்களாக தமிழ்நாட்டு அமைச்சர்கள், முதலமைச்சர் உட்பட, யாராவது கேரள அரசு மந்திரிகளோடு பேசியிருக்கிறார்களா? அல்லது அதிகாரிகள் மட்டத்திலேயாவது பேசியிருக்கிறார்களா? அப்படியானால் எந்தத் தேதி, எப்போது என்ற விவரத்தை அரசு அறிவிக்குமா என்று கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் கடந்த பத்தாண்டுக் காலமாக மிகப் பெரிய முயற்சியை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். கேரள முதலமைச்சரோடு பேசியிருக்கிறார்கள். தபால் எழுதியிருக்கிறார்கள். அதிகாரிகளும் பேசியிருக்கிறார்கள் என்ற குறிப்பு என்னிடம் இருக்கிறது. எந்தெந்த தேதி என்பதற்குத் தனியாக





கேள்வி போட்டால் அதைச் சொல்லுவதற்குத் தயாராக இருக்கிறோம். நம்முடைய முதலமைச்சர் அவர்கள் மேற்கு நோக்கி பாயும் ஆறுகளை தமிழகத்திற்குத் திருப்பினால்தான் தென் மாவட்ட குடிநீர் பிரச்சினையைத் தீர்க்க முடியும் என்ற நம்பிக்கையில்தான் இந்த முயற்சியிலே இறங்கியிருக்கிறார்கள் என்று மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. குமரி அனந்தன்:** மாண்புமிகு சபாநாயகர் அவர்களே, மேற்கு நோக்கி பாய்கின்ற ஆறுகளையெல்லாம் கிழக்கு நோக்கி திருப்பி விட வேண்டும் என்று மதிப்பிற்குரிய முதலமைச்சர் அவர்கள் அதிக அக்கறை எடுத்து வருவதை நாம் அறிவோம். அதே நேரத்தில் திருநெல்வேலியில் மாண்புமிகு சபாநாயகர் அவர்கள் தலைமையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுமுடியாற்று அணைக்கு அடிக்கல் நாட்டினார். வள்ளியூரில் ஓர் அலுவலகம் கூட திறக்கப்பட்டு, வேலை சுறுசுறுப்பாக நடந்தது. ஆனால் திடீரென்று அது நிறுத்தப்பட்டதால் அங்கேயுள்ள விவசாயிகளிடையே கொந்தளிப்பு ஏற்பட்டது. அவர்களுடைய உணர்வை அறிய பாதயாத்திரை செய்து நின்றுவிட்ட அந்தத் திட்டம் நிறைவேற வேண்டும் என்ற கருத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கூட நான் சொன்னேன். அந்தத் திட்டம் எந்த நிலையிலே இருக்கிறது என்பதை இந்த அவையின் மூலமாக அந்த மக்களுக்கு அறிவிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்த கேள்விக்குப் பதில் சொல்லும்போது சொல்லுவதாக இருந்தேன். மாண்புமிகு உறுப்பினருடைய உணர்வுகளைப் புரிந்துகொண்டிருக்கிறோம். கொடுமுடியாற்று திட்டத்தை முதலமைச்சர் அவர்கள் ஆரம்பித்து வைத்தார்கள். ஆனால் இப்போது மத்திய அரசு வன இலாகா சட்டத்தைப் [illegible] போட்டதால் வன இலாகாவின் [illegible] எந்தக் காரணத்தைக் கொண்டும் நடைமுறைப்படுத்தக் [illegible] என்று மத்திய அரசினர் சொல்லியிருக்கிறார்கள். அதற்கு [illegible] தெளிவாக பதில் சொல்லியிருக்கிறோம். கொடுமுடியாற்றுத் திட்ட வேலை 1980 ஆம் ஆண்டு வன இலாகா [illegible]

வருவதற்கு முன்பே ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. 1976 இல் வன இலாகாவிற்குச் சொந்தமான 13 ஏக்கர் நிலத்தை எடுத்துப் புனம் கூட பட்டுவாடா செய்திருக்கிறார்கள். ஆகவே அந்தத் திட்டத்தை இந்தச் சட்டம் கட்டுப்படுத்தாது என்று சொல்லி அதிகாரிகள் மட்டத்திலே பேச்சுவார்த்தை நடத்தி ஓரளவிற்கு முடிக்கக் கூடிய சூழ்நிலை இருக்கிறது. இரண்டு, மூன்று மாதங்களில் நிச்சயமாக வேலை தொடங்கப்படும்.

**திரு. பொன். முத்துராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கி பாயும் ஆறுகளையெல்லாம் கிழக்கு நோக்கி திருப்புவதற்கான முயற்சிகளில் ஈடுபடுகிற அதே நேரத்தில் கேரளப் பகுதியில், தமிழகத்திற்குச் சொந்தமான பெரியாறு அணையில் உயர்மட்டக் கொள்ளளவான 152 அடியிலிருந்து 136 அடியாக குறைக்கப்பட்டு பல ஆண்டுகள் ஆகின்றன. அதற்குச் சொல்லப்பட்ட காரணம் தண்ணீர் கசிவு என்பது. இப்போது அந்தக் கசிவு எல்லாம் பழுது பார்க்கப்பட்ட நிலையிலே உயர்மட்டக் கொள்ளளவான 152 அடிக்கு ஏன் உயர்த்தப்படவில்லை? அதனாலே மதுரை மாவட்ட விவசாயிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். அங்கே குடிநீர்ப் பஞ்சமும் கடுமையாக இருக்கிறது. இதைப் போக்கிட அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என்று நான் அறிய விரும்பு கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் சொல்லு வதைப்போல வேலைகள் நடந்து கொண்டிருக்கின்றன. அணையைப் பலப்படுத்தும் பணி பாதியளவிற்கு முடிந்துவிட்டது. பின்பக்கமாக பலப்படுத்தியிருக்கிறோம். மீதி அளவிற்கு உயர்த்துவதற்கு டெண்டர் கோரியிருக்கிறோம். டெண்டர் கோரி வேலை முடிந்த பிறகு 152 அடி கொள்ளளவிற்கு தண்ணீர் நிறுத்த முடியும். அதற்கான வேலைகளைத் துரிதமாகச் செய்து கொண்டிருக்கிறோம்.



**திரு. கே. குப்புசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரளாவிலிருந்து கடல் நோக்கி பாய்கின்ற ஆறுகளில் வீணாகும் தண்ணீர் எவ்வளவு டி.எம்.சி. என்பது பற்றியும், அதில் எந்த அளவிற்கு தமிழ்நாட்டிற்குத் திருப்பிவிட வேண்டியது என்பது பற்றியும் ஏற்கெனவே மைய அரசு நியமித்த தொழில் நுட்பக் குழு அறிக்கையை தந்திருக்கிறது. மேற்கு நோக்கிப் பாய்கின்ற தண்ணீர் குறிப்பிட்ட டி.எம்.சி. என்று தெரிந்த பிறகும் கேரள அரசு அதை ஆட்சேபிக்கக் காரணம் என்ன? அதை நிறைவேற்றுவதில் மத்திய அரசின் நிலை என்ன என்பதை அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்லியதைப்போல நாம் 43 ஆறுகளில் இருந்து 218 டி.எம்.சி. தண்ணீர் வீணாகிறது என்று சொல்லுகிறோம். மிகப் பெரிய 4 ஆறுகளில் இருந்து 47 டி.எம்.சி. தண்ணீர் வீணாகிறது என்று சொல்லுகிறோம். கேரள அரசைக் கேட்டால் அப்படியில்லை என்று சொல்லுகிறார்கள். மத்திய அரசிலிருந்து அதிகாரிகளைப் போட்டு ஆய்வு செய்து கொண்டிருக்கிறோம். பொதுவாக எந்த மாநில அரசாக இருந்தாலும் என். டபிள்யு. ஏ. மீட்டிங்கில் கலந்துகொள்ளும் நேரத்தில் எல்லோரும் சொல்லு கிறார்கள். எந்த மாநிலமாக இருந்தாலும், தண்ணீரே இல்லையென்று சொல்லக்கூடிய உணர்விலே இருக்கிறார்கள். ஆகவே தான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆறுகளையெல்லாம் தேசவுடைமையாக்க வேண்டும் என்றும், அப்படியாக்கினால் தான் எல்லா மாநிலங்களுக்கும் நியாயமான அளவிற்கு கிடைக்கும் என்ற உணர்வைத் தெரிவித்து மத்திய அரசிடம் வலியுறுத்திக்கொண்டிருக்கிறார்கள்.

(முற்பகல் 11-10)

**திரு. ச. சங்கரலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, திருநெல்வேலி கட்டபொம்மன் மாவட்டத்திற்கு அருகாமையில் இருக்கும் மேற்குத் தொடர்ச்சி மலையில் கீரியாறு

என்ற ஆறு தமிழகத்தில் உற்பத்தியாகி, கேரளக் கடலில் கலக்கிறது என்றும், இந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்தினால் திருநெல்வேலி மாவட்டத்தில் இருக்கும் பல லட்சக் கணக்கான ஏக்கர் நிலங்களுக்குப் பாசன வசதி கிடைக்குமென்று இந்த அவையில் 1952-லிருந்து பல முறை அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இது பற்றி அரசின் நிலை என்ன? இது பற்றி ஆய்வு நடத்தப்பட்டிருக்கிறதா என்று மாண்புமிகு அமைச்சரவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கீரியாறு திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து கொண்டிருக்கிறது. நமக்கு இருக்கும் பிரச்சினையெல்லாம் இன்டர்-ஸ்டேட் பிரச்சினை என்பதுதான். அங்கே அணை கட்ட வேண்டுமென்றால் கேரள அரசும், நாமும் பேசித் தீர்க்க வேண்டிய காலகட்டத்தில் இருக்கிறோம். நமக்கும் அவர்களுக்கும் பல இடங்களில் ஒப்பந்தம் இருக்கிறது. ஆகவே பேசி, அதற்கு வேண்டிய முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திரு. மா. சின்னராசு :** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, கேட்கப்பட்டுள்ளது பாண்டியாறு-புன்னம்புழா திட்டம் பற்றிய கேள்வியாகும். இது குறித்து கேரள அரசினுடைய நிலை என்ன என்பதையும், அதை நிறைவேற்றுவதற்கான சாத்தியக் கூறுகளை அவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்களா என்பதையும் அறிய விரும்புகிறேன். பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்திற்குத் தமிழகத்திலுள்ள நீலகிரி மாவட்டத்திலிருந்து தான் தண்ணீர் போகிறது. அவர்கள் இந்தத் திட்டத்திற்கு ஒப்புக்கொள்ளவில்லை என்றால், அந்த நீரை நம்முடைய எல்லையிலேயே திருப்பிவிட அரசு முயற்சி எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, 1965-லே ஓர் ஒப்பந்தம் போட்டிருக்கிறார்கள். அந்த ஒப்பந்தத்தின்படி கேரளாவுக்குச் செல்லும் 14 டி.எம்.சி. தண்ணீரை தமிழ்நாடு மின்சாரம்





உற்பத்தி செய்ய எடுத்துக்கொள்ளலாம்; தண்ணீர் முழுவதும் கேரளாவுக்கு. ஆனால் அதற்குப் பின்னாலே கோவையிலே உள்ள விவசாயிகள் எல்லாம் விவசாயத்திற்குத் தண்ணீர் வேண்டுமென்று நம்முடைய அரசாங்கத்தின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது, 7 டி.எம்.சி. தண்ணீரைத் தமிழகத்திற்குத் திருப்பிக் கொள்வதற்கும், 7 டி.எம்.சி. தண்ணீரைக் கேரளாவுக்கு அனுப்பு வதற்கும் ஒரு முடிவுக்கு அப்போது வந்திருக்கிறார்கள். அப்போது கேரளா ஒன்றைச் சொல்லியிருக்கிறது. தங்களுக்கு பவானி ஆற்றுப் படுகையிலிருந்து 10 டி.எம்.சி. தண்ணீரைக் கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். பவானி தண்ணீர்ப் பிரச்சினை காவிரிப் பிரச்சினையோடு சேர்ந்திருக்கிற காரணத்தினாலும், அதில் தகராறு இருப்பதாலும், பவானியி லிருந்து 10 டி.எம்.சி. தண்ணீரைக் கேரளாவுக்குக் கொண்டு போகக்கூடாது என்று அதிகாரிகள் சொல்லியிருக்கிறார்கள். சட்ட வல்லுநர்களும், அப்படித் தண்ணீர் கொண்டு போனால், காவிரிப் பிரச்சினையில் நமக்குப் பாதகம் வரும் என்று சொல்லி யிருக்கிறார்கள். இருந்தாலும், அதில் முறைப்படி பேசி, எந்த அளவுக்குச் சாதகமாகத் திருப்ப முடியுமோ அந்த முயற்சிகளை நாம் மேற்கொள்ளத் தயாராக இருக்கிறோம்.

**திரு. எம். அண்ணாதாசன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர வர்களே, நெல்லை மாவட்டம், சிவகிரி தாலுக்காவில் மேற்கு தொடர்ச்சி மலை அருகே கடந்த காலத்தில் உள்ளாறு அணைக் கட்டு என்றும். கோம்பையாறு நீர்த்தேக்கம் என்றும் சொல்லி ஆய்வு நடத்தப்பட்டு, பத்திரிகைகளில் பெரிதாக விளம்பரம் செய்யப்பட்டும், கடந்த 10 ஆண்டுகளாக அந்தத் திட்டம் என்ன வாயிற்று என்று தெரியவில்லை. அதனுடைய நிலை எப்படி இருக்கிறது? அதைப் பற்றி அரசு ஆய்வு செய்து, நடவடிக்கை எடுக்க முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர்களே, சட்டமன்ற உறுப்பினர் திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த திருவரம்பூர் தொகுதி உறுப் பினராக இருந்தாலும் அவர்கள் சொந்த மாவட்டத்திற்குச் சென்

திருக்கிறார்கள். இதே உணர்வைப் பல தடவை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதிலிருக்கும் பிரச்சினையும், எதனால் தகராறு என்பதும் அவர்களுக்குத தெரியும். இப்போது அதிகாரிகளை அழைத்து அந்தப் பகுதிக்கு நேராகச் சென்று, அதற்கு வேண்டிய முடிவுகளை, அந்த இடத்திலேயே எடுக்க வேண்டுமென்று சொல்லியிருக்கிறேன்.

**திரு. வி. எஸ். பஞ்சவர்ணம்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மேற்குத் தொடர்ச்சி மலையிலே மேற்கு நோக்கிப் பாயும் அச்சங்கோவில் ஆற்றை மத்திய அரசின் உதவியோடு கிழக்கே திருப்பிவிடும் திட்டத்தினால் எவ்வளவு டி.எம்.சி. தண்ணீர் எடுக்க உத்தேசம் உள்ளது என்பதை அறிய விரும்புகிறேன். அதனால் தென் மாவட்டங்களாகிய காமராஜ், இராமநாதபுரம், பசும்பொன், நெல்லை கட்டபொம்மன், வ.உ.சி. ஆகிய மாவட்டங்களில் எவ்வளவு ஏக்கர் பாசன வசதி பெறும்? அந்தத் திட்டத்தை எவ்வளவு காலத்திற்குள் அந்தப் பகுதி மக்களுக்கு மாண்புமிகு இதயதெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்கள் அரசு முடித்து கொடுக்கும் என்பதை தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பகுதி மிக வறட்சியாக இருக்கிறது என்பது அவருடைய பேச்சிலிருந்தே தெரிகிறது. நம்முடைய முதலமைச்சரவர்கள் மிகத் தீவிரமான நடவடிக்கை எடுத்திருக்கிறார்கள். இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே முதல்வரவர்கள் கோடிட்டுக் காட்டியிருக்கிறார்கள். மிக வேகமாகக் கேரள அரசோடு பேசி, அதற்கு வேண்டிய நல்ல முடிவுகளை எடுக்கும் போதுதான், எவ்வளவு தண்ணீர் கிடைக்கும், எவ்வளவு விவசாயத்திற்குக் கிடைக்கும் என்பதை நாம் தெரிந்துகொள்ள முடியும்.

**திரு. ஏ. எஸ். ஏ. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் அவர்கள் கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயக்கூடிய ஆற்று



நீரைப் பாசனத்திற்கு உபயோகப்படுத்துவது பற்றிப் பேசிக்கொண்டிருக்கின்றார்கள். மாண்புமிகு திரு. ஆர். எம். வீரப்பன் அவர்கள் முன்பு விருதுநகரிலே பெருந்தலைவர் காமராஜ் அவர்கள் பிறந்தநாள் விழா நிகழ்ச்சியிலே அரசாங்கம் குடிப்பதற்கு நீர் கொடுக்கவேண்டும் என்று கேரள அரசைக் கேட்பதாக இருக்கிறது என்றார்கள். அதுமாதிரி கேட்கப்பட்டிருக்கிறதா? அப்படிக் கேட்டதற்கு அவர்கள் என்ன பதில் சொல்லியிருக்கிறார்கள் என்பதைப் பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியதுபோல கேட்கப்பட்டிருக்கிறது. கேட்டதற்கு அவர்கள் கொடுப்பதாக ஒத்துக்கொண்டார்கள். இப்போது அரசாங்கம் மாறியிருப்பதால் புதிய அரசாங்கத்தோடு பேசி முடிவு செய்யவேண்டிய கால கட்டத்தில் இருக்கிறோம்.

**திரு. எஸ். என். இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கி பாயும் நீர் இன்று கடலில் போய்ச் சேர்வதைத் தடுத்து, அங்கேயிருந்து—பெரிய மலைகளும், சிறிய மலைகளும் இருக்கின்றன. அதில்—சிறிய மலைகளில் குடைந்து போதுமான அளவுக்கு ஒரு கால்வாய் வெட்டி நீரைத் திருப்பினால், பாபநாசம் நீர்த்தேக்கத்தில் அந்தத் தண்ணீர் அதிகமாக நிரம்ப வாய்ப்பு இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் உடனடியாகக் கால்வாய் வெட்டுவதற்கு ஏற்பாடு செய்வார்களா என்பதைப்பற்றி அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேரள அரசாங்கம் ஒத்துக்கொண்டது என்று சொன்னால், சின்ன மலை என்பதல்ல, பெரிய மலையையே வெட்டத் தயாராக இருக்கிறோம். கேரள அரசாங்கம் முதலிலே ஒத்துக்கொள்ளவேண்டும்.

**திரு. பொ. உத்திராபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேள்விக்குப் பதில் சொல்கின்ற போது, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் எல்லா நதிகளையும் தேசியமயம் ஆக்க

[1937 ஏப்ரல் 21

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடிக்கொரு தரம் தரம் இதைப்பற்றி விவாதித்துக்கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதில் நல்ல கருத்துக்கள் இருக்கும் என்று கருதினால் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் எடுத்துச் சொல்லி, அதற்கு வேண்டிய நல்ல முடிவு எடுக்க அரசாங்கம் தயாராக இருக்கிறது.

(முற்பகல் 11-20)

**திரு. தே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கி ஓடுகிற ஆறுகளை கிழக்கு நோக்கி திருப்பி விடுவது என்பது மிக முக்கியமான, நீண்ட காலமாக கேட்கப்பட்டுக்கொண்டு வருகிற ஒரு பிரச்சினையாகும். இரண்டு மாநிலங்களிடையே சம்பந்தப்பட்டிருக்கிற பிரச்சினையிலே எந்தவிதமான உணர்ச்சிகளுக்கும் இடம் கொடுக்காமல், தமிழ்நாட்டு நலன்களும், கேரள நலன்களும் பாதிக்கப்படாமல் ஒரு தீர்வு காண வேண்டும். அதற்கு இங்கே இருக்கக்கூடிய அனைத்து அரசியல் கட்சிகளைச் சார்ந்தவர்களையும் கொண்ட ஒரு குழு அமைத்து தீர்வு காண வேண்டும். அந்த வகையில் மேற்கு நோக்கி போகிற நதிகளை எல்லாம் தமிழகத்தின் பகுதிகளுக்குக் கொண்டு வந்தால் அது நமக்குப் பயன்படும் அளவுக்குக் கேரளத்தோடு நாம் பேச்சுவார்த்தை நடத்த அணுக வேண்டும். ஏனென்றால் வெறும் கடிதங்களாலே மட்டும் பிரச்சினை தீர்ந்து விடாது. தமிழகத்தைப் பொறுத்தவரையில் இந்தப் பிரச்சினையில் எத்தகைய அரசியல் உணர்வுகளுக்கும் இடம் தராமல் தடுக்க, அதற்கு ஆட்படாமல் தடுக்க அனைத்துக் கட்சிக் குழு ஒன்றை அமைத்து அதன்மூலம் பேச்சுவார்த்தை நடத்தியாவது விரைவாக இதைகுறித்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினரின் கருத்து நல்ல கருத்துதான். போகிறவர்கள் எல்லோருமே நல்லவர்களாக போய் ஆக வேண்டும். ஆனால் இதன்மூலம் இந்த

அரசாங்கத்துக்கு நல்ல பெயர் வந்து விடுமோ என்று சொல்லி, ஒருசிலரால், ஒருசில தடங்கல் வந்துவிடும் என்ற அச்சமும் இருக்கிறது. அங்கே ஆட்சியில் இருப்பது மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கட்சியைச் சார்ந்த அரசுதான். அவர்களிடம் உறுப்பினர் அவர்கள் தனிப்பட்ட முறையில் இந்த விஷயத்தை வலியுறுத்தலாம். ஆனால் எங்கள் முதலமைச்சரைப் பொறுத்த வரையில் அவர்கள் இதில் தீவிரமாகத்தான் இருக்கிறார்கள். (குறுக்கீடு).

**திரு. அ. ரகுமான்கான் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர்களைப் பற்றி இங்கே குறை சொல்லக் கூடாது. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நான் அதைப் படித்துப் பார்த்து உறுப்பினருக்குப் பாதகமாக இருக்குமேயானால் எடுத்து விடுகிறேன். (குறுக்கீடு) நான் கவனிக்கவில்லை, திரு. தாமரைக்கனியைப் பார்த்துக்கொண்டிருந்தேன்.

**திரு. இரா. தாமரைக்கனி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேற்கு நோக்கிப் போகிற தண்ணீரைத் தமிழகத்தில் திருப்பி விடுகின்ற அளவில் பழைய பிரதமர் மொரார்ஜி தேசாய் அவர்களும், நமது தமிழக முதலமைச்சர் அவர்களும், அதுபோல கேரள கவர்னரும், நமது தமிழக கவர்னரும் முன்பு பேச்சு வார்த்தை நடத்தினார்கள். அதுபோல இப்போது இருக்கிற பிரதமரும், நமது முதலமைச்சர் அவர்களும் கேரள முதலமைச்சர் அவர்களோடு பேச்சுவார்த்தை நடத்தி இது குறித்து விரைவில் தீர்வு காண அரசு முயற்சி செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக அதுகுறித்து நல்ல முயற்சிகளை இந்த அரசு எடுக்கும்.

**நெல்லை மாவட்டம் ஜம்பு நதியில் அணைக்கட்டு.**

*28—(வினா எண் 12[illegible])—திரு. டி. ஆர். வெங்கடரமணன்: மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நெல்லை மாவட்டம், ஜம்பு நதியில் அணைகட்டும் செயற் குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆம்.

**திரு. டி. ஆர். வெங்கடரமணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருநெல்வேலி மாவட்டத்தில், தென்காசி தொகுதியிலுள்ள மிகவும் வறண்ட பகுதியில் இந்த ஜம்பு நதி அணைக்கட்டு திட்டம இடம்பெற்றிருக்கிறது. இந்த அணை கட்டப்பட்டால் மழைக் காலத்தில் வீணாகின்ற தண்ணீர் எல்லாம் தேக்கப்பட்டு, அந்த நீரைப் பயன்படுத்தி தரிசாக இருக்கின்ற பூமி எல்லாம் வளமாக ஆக்கப்படுகின்ற வாய்ப்பு இருக்கிறது. ஆகவே, எப்போது இத்திட்டம் நடைமுறைக்கு வரும் என்று அந்தத் தொகுதி மக்கள் சார்பாக நான் அறிய ஆவலாக இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்.** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தத் திட்டத்தின் மீது இப்பொழுது மாவட்ட ஆட்சித் தலைவருடைய கருத்தையும் மற்றும் நில ஆணையாளருடைய கருத்தையும் கேட்கும் அளவுக்கு முயற்சிகள் மிக வேகமாக முன்னேறிக் கொண்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்

**டாக்டர் கே. குமாரசம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நெல்லை மாவட்டத்தில் ஜம்பு நதியில் அணை கட்டும் திட்டத்தைப் பொறுத்தவரையில் தீவிரமாக, மிக வேகமாக அதனை நிறைவேற்ற முயற்சிகள் எடுக்கப்பட்டு வருவதாக இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்கள். அங்கே மிகவும் காய்ந்திருக்கும் கடையம் ஊராட்சி ஒன்றியப் பகுதியையும் இத்திட்டத்துடன் இணைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

1987, ஏப்ரல் 21]

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படிப்பட்ட செய்திக்குறிப்பு இங்கே குறிப்பிலே இல்லை. தனிக் கேள்வி போட்டால் அந்தப் பகுதி இதனுடன் சேர்க்கப்பட்டிருக்கிறதா என்று பார்த்து சொல்லப்படும்.

திரு. டி. ஆர். வேங்கடரமணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமாசம அவர்கள் சொன்ன கருத்தை நானும் ஏற்றுக்கொள்கிறேன். உண்மையிலேயே ஜம்பு நதித் திட்டம் நிறைவேற்றப்பட்டால் அங்கேயுள்ள பாலைவனப் பகுதிகள் எல்லாம் சோலையாக மாற்றப்படும் மகத்தான வாய்ப்பு ஏற்படும். இத்திட்டத்தை நிறைவேற்ற நாம் வேறு மாநிலங்களை நம்பியிருக்க வேண்டிய அவசியமும் இல்லை. இது நம்முடைய மாநிலத்தில் ஓடுகிற நதி தான். ஆகவே, இப்போது இருக்கிற செயற்குறிப்பின் அடிப்படையில் இதற்கு எந்த அளவுக்கு அரசு செலவு செய்ய இருக்கிறது? அதன்மூலம் புதிதாக எத்தனை ஏக்கர் ஆயக்கட்டு பயனடையும்? அதுபோல் எந்த அளவு மக்களுக்குக் குடிநீர் ஆதாரம் என்கிற வகையில் பலன் கிடைக்கும்?

மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கேட்டதைப் பொறுத்தவரையில் ஏறக்குறைய 19 கோடி ரூபாய் அளவில் இன்றைக்கு இதற்கான திட்டங்களைத் தீட்டியிருக்கிறோம். அந்த அணையின் கொள்ளளவு 207 மில்லியன் கன அடி. இன்றைக்கு இதன் மூலம் ஏற்கெனவே உள்ள 1,422 ஏக்கர் நிலங்களுக்கு நீர்ப் பாசன வசதி உறுதிபடுவதோடு, 438 ஏக்கர் நிலங்களுக்கு பாசன பற்றாக்குறையை போக்கவும் முயற்சிக்கப்படும். மேலும் 2,965 ஏக்கர் புதிய நிலங்களுக்கு இதன் மூலமாகப் பாசன வசதி அளிக்கப்படும்.

[1987 ஏப்ரல் 21

**தாடண்டர் நகர் சமூகக் கூடம்.**

439—(*வினா எண் 13390) **திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பொதுப்பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

தாடண்டர் நகர் பகுதியில் உள்ள சமூக நலக்கூடத்தை விரிவுபடுத்துகின்ற செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா ?

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லை.

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே கேட்ட கேள்விக்கு 'இல்லை' என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொன்னார்கள். அந்தத் திருமண மண்டபம் அந்தப் பகுதியில் இருக்கின்ற குடியிருப்புகளில் வசிப்பவர்கள் மாத்திரமல்லாமல் பொருளாதாரத்தில் பின்தங்கிய மக்களும் பயன்படுத்துகின்ற திருமண கூடம். மழை பெய்தால் பிரச்சினை ஏற்படுகிறது. மேலே உள்ள உணவு பரிமாறும் இடம் எல்லாம் திறந்த வெளியாக இருக்கிறது. எனவே மாடியில் ஆஸ்பெஸ்டாஸ் சீட்டில் கூரை அமைக்கவும். சுற்றுப்புறத்தைச் சுகாதாரமாக வைத்துக்கொள்ளவும், சுவரை எழுப்பவும் மாண்புமிகு அமைச்சரவர்கள் நடப்பு நிதியாண்டில் நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை அபிவிருத்தி செய்வதற்காக நான் அதிகாரிகளிடத்திலே பேசியபொழுது நான்கு இலட்சம் ரூபாய் தேவை என்று சொன்னார்கள். எனவே, இந்த வருடமோ அல்லது அடுத்த வருடமோ அல்லது அதற்கு அடுத்த வருடமோ நிதிநிலைமையைப் பொறுத்து ஆவன செய்யப்படும்.



1987 ஏப்ரல் 21]

**திரு. சைதை சா. துரைசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலைமைக்கு ஏற்றாற்போல் செய்கின்ற பணிகளில் முதலில் மேல் தளத்தில் ஆஸ்பெஸ்டாஸ் கூரை அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, நிதிநிலைமை சரியானவுடன் அந்த முயற்சிகள் மேற்கொள்ளப்படும்.

**திருமதி டி. யசோதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாலுக்கா தலைநகரங்களில் சமூக நலக் கூடங்கள் இல்லாத இடங்களில் எல்லாம் ஒட்டுமொத்தமாக அதுபோன்ற சமூக நலக் கூடங்களை அமைக்கின்ற செயற்குறிப்பு அரசிடம் இருக்கிறதா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அது என்னுடைய துறையிலே இல்லை. இருந்தாலும் அப்படிப்பட்ட செயற்குறிப்பு அரசினுடைய பரிசீலனையில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[குறிப்பு.—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறி இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரி பார்க்கப் பெற்றது என்பதைக் குறிக்கும்.]

**2. கவன ஈர்ப்பு.**

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுகளைக் குறித்த கவன ஈர்ப்பு.

**திரு. கி. மனோகரன்:** * * *

(நண்பகல் 11-30)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** * * *

கேள்வி நேரம் முடிந்ததற்குப் பின்னால் பேசிய ஒன்றும் அவைக் குறிப்பில் இடம் பெறாது (கூச்சல்-குழப்பம்).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றது.

(ஆ) உத்திரமேரூர் நடுநிலைப்பள்ளி மாணவர் சிலர் காணாமற் போனது.

திரு. க. நரசிம்மபல்லவன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பயிலும் மாணவர்கள் 20—3—1987 அன்று கடத்தப்பட்டது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் கீழ்க்கண்ட அறிக்கையை வைக்கிறேன்.

அறிக்கை

செங்கற்பட்டு (மேற்கு) மாவட்டம் உத்திரமேரூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் பிச்சாண்டி (வயது 10) த/பெ. முனுசாமி, (2) ரங்கநாதன் (வயது 9), த/பெ. மாரிமுத்து, (3) சீனிவாசன் (வயது 5) த/பெ. மாரிமுத்து ஆகிய மூவரும் படித்து வருகின்றனர். பிச்சாண்டியும், ரங்கநாதனும் 4-வது வகுப்பிலும், சீனிவாசன் 1-வது வகுப்பிலும் படித்து வருகின்றனர்.

2. 20—3—1987 அன்று இம்மூவரையும் காணவில்லை என்று பிச்சாண்டியின் மாமன் திரு. கன்னியப்பன் கொடுத்த புகாரின் பேரில் வழக்கொன்று உத்திரமேரூர் காவல் நிலையக் குற்ற எண் 71/87 இ.த.ச. பிரிவு 363-ன் கீழ் பதிவு செய்யப்பட்டுப் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டது.

* * *

3. ஆனால், காணாமற் போனதாக குறிப்பிடப்பட்ட இம்மூன்று சிறுவர்களும் மறுநாளே (26—3—1987) 11-00 மணிக்கு தங்களது வீட்டிற்கு திரும்பி விட்டனர். விசாரணையில் பிச்சாண்டி மற்ற இரு சிறுவர்களையும் விளையாட்டுத்தனமாக வட ஆற்காடு மாவட்டத்தில் உள்ள வெள்ளைமலை கிராமத்தில் உள்ள தனது பாட்டி வீட்டிற்கு அழைத்துச் சென்று விட்டதாகவும், பின்னர் திரும்பி விட்டதாகவும் அவர் கூறியுள்ளார்.

4. காணாமற் போனதாகக் குறிப்பிடப்பட்ட இம்மூன்று சிறுவர்களும் உடன் திரும்பி வந்து விட்டபடியால், இவ்வழக்கில் மேல்நடவடிக்கை இல்லை என முடிக்கப்பட்டது. (கூச்சல், குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவை நடவடிக்கைகளை இடைமறிக்காதீர்கள். இவ்வளவுதான் சொல்வேன். (கூச்சல்—குழப்பம்). விதியை படித்துவிட்டு வாருங்கள். Please go through the Rules (குறுக்கீடுகள்).

**திரு. கு. நரசிம்மபல்லவன்:** தலைவரவர்களே, தமிழ் நாட்டினுடைய காவல் துறையாவது சிறந்த முறையில் பணியாற்றுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டாக நான் கொடுத்த புகார் அடிப்படையில் மாண்புமிகு முதல்வர் இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய பொறுப்பில் செயல்பட்டு வருகின்ற காவல் துறை துரித நடவடிக்கை எடுத்ததற்கு என்னுடைய தொகுதி மக்களின் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். (கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் எதற்காக பாயின்ட் ஆஃப் ஆர்டர் எழுப்பினீர்களோ அந்தப் பிரச்சினை முடிந்து விட்டது; திருப்தி அடைந்திருப்பீர்கள் (கூச்சல், குழப்பம்). அடுத்த கவன ஈர்ப்பு. திரு. என். எஸ். வி. சித்தன் அவர்கள்.

**திரு. இ. மனோகரன்:** * * * (குறுக்கீடுகள்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது ரொம்ப சிறுபிள்ளைத் தனமாக இருக்கிறது. You are all behaving like School Children இது எல்லாம் வேண்டாம். (கூச்சல்-குழப்பம்) இது முறையல்ல; முறையல்ல; முறையல்ல. இதற்கு அனுமதி கிடையாது என்று சொல்லிவிட்டேன். ஒன்றும் அவைக் குறிப்பில் ஏறாது. (கூச்சல்-குழப்பம்) இன்றைக்கு ஒரு முடிவு செய்து வந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்). இது முறையல்ல. எல்லோரும் அமருங்கள். அவையினுடைய நடவடிக்கைகளை இடைமறிக்காதீர்கள். (கூச்சல்—குழப்பம்).

---

* மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப் பெற்றன.

I cannot give you permission. I have not given permission. I am not going to grant permission. எவ்வளவு சத்தம் போட்டாலும் கிடையாது ; (கூச்சல்—குழப்பம்) திரு. என் .எஸ். வி. சித்தன் அவர்கள்.

**(ஆ) பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு பதிவு செய்ய மறுப்பது குறித்து.**

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலை நிர்வாகம் கரும்பு பயிரிடும் விவசாயிகளின் கரும்பை பதிவு செய்ய மறுப்பதால் கரும்பு பயிரிடும் விவசாயிகளிடையே ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசர் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழில் மற்றும் வேளாண்மைத் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

பெரம்பலூர் சர்க்கரை ஆலையின் தற்போதைய அரைவைத் திறன் நாளொன்றுக்கு 1,250 டன்கள். இதற்கு 7,500 ஏக்கர் கரும்பு தேவைப்படும். சர்க்கரை ஆலையின் முழு அரைவைத் திறனுக்குத் தேவைப்படும் கரும்பு மட்டுமே அந்த ஆலையினால் பதிவு செய்வது அவசியம். இருப்பினும் விவசாயிகளின் நன்மையைக் கருதி பெரம்பலூர் சர்க்கரை ஆலைப் பகுதியில் கூடுதலாகப் பயிரிடப்படும் கரும்பை மதுரை சர்க்கரை ஆலை, பொன்னி சர்க்கரை ஆலை மற்றும் சக்தி சர்க்கரை ஆலை ஆகியவற்றிற்கு அனுப்ப இந்த ஆலை விவசாயிகளுடன் கலந்து பேசி ஏற்பாடுகள் செய்துள்ளது.

2. எனினும் நிரந்தரமான முறையில் கூடுதல் கரும்பை பயன்படுத்தும் நோக்கத்துடன் பெரம்பலூர் சர்க்கரை ஆலை தன்னுடைய அரைவைத் திறனை தினசரி 1,250 டன்களிலிருந்து தினசரி 3,000 டன்கள் அளவிற்கு விரிவாக்கம் செய்ய அனுமதி கோரிய விண்ணப்பம் மாநில அரசால் மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. விரிவாக்கம் செய்ய அனுமதி கிடைத்தபின்





சுமார் 15 மாத காலத்தில் விரிவாக்கப் பணிகளைச் செய்து முடிக்கலாம். அதன்பின் சுமார் 15,000 ஏக்கர் கரும்பை இந்த ஆலை தானே பயன்படுத்த முடியும். இதன் மூலம் இந்தப் பகுதி விவசாயிகள் பலன் அடைவார்கள்.

3. நமது அரசு அதிகாரிகள் சென்ற வாரம் இதுபற்றி மத்திய அரசு நடத்திய கூட்டத்தில் கலந்து நிலைமையை விளக்கியுள்ளார்கள். அரசு சாதகமான பதிலை எதிர்நோக்கியுள்ளது. (தொடர்ந்து கூச்சல்—குழப்பம்).

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இது எல்லாம் நாட்டு மக்களுக்குத் தெரியட்டும். நாட்டு மக்கள் நன்றாகப் பார்க்கட்டும். (குறுக்கீடுகள்). இது முறையல்ல. திருப்பித் தந்தால், நெஞ்சில் தாங்கக்கூடிய சக்தி வேண்டும். நீங்கள் ஏதாவது சொன்னால் மற்ற உறுப்பினர்கள் திருப்பிச் சொல்வார்கள். உங்களுக்கு அதைத் தாங்கக்கூடிய சக்தி வேண்டும். (கூச்சல்—குழப்பம்). எல்லோரும் அமருங்கள். நீங்கள் எவ்வளவு சொன்னாலும் அனுமதி கிடையாது. (குறுக்கீடு). It is not a point of order. You cannot force me to yield. I will not yield. (குறுக்கீடு). உறுப்பினர்கள் அவரவர்கள் இடத்தில் போய் அமருங்கள். (குறுக்கீடு). உங்கள் தலைவரை எனக்கு ஃபோன் பண்ணச் சொல்லுங்கள். (கூச்சல்—குழப்பம்). இது முறையல்ல; முறையல்ல. அவ்வளவுதான் சொல்வேன். (கூச்சல்—குழப்பம்) இடத்தில் போய் அமருமாறு திரு. ரகுமான்கான் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன். அவ்வளவுதான். (கூச்சல்—குழப்பம்). Fine! Fine! kindly note it. Very fine! நாட்டுக்கு எல்லாம் தெரியட்டும் எப்பேர்ப்பட்டவர்கள் இருக்கிறார்கள் என்று. (கூச்சல்—குழப்பம்). இந்தச் சபை நடவடிக்கையைக் கெடுக்கிறீர்கள். ஜனநாயக அமைப்பைக் குலைக்கிறீர்கள். ஜனநாயக அமைப்பைக் கெடுத்து விட்டீர்கள். ஜனநாயக அமைப்பை வெளியே போய் குலைத்து விட்டீர்கள். உங்களுக்காக இந்த அமைப்பு இல்லை. (கூச்சல்—குழப்பம்). இந்த அமைப்பு பாதுகாக்கப்பட வேண்டும். இது மக்களின் அமைப்பு. மக்கள் மன்றம் இது. (கூச்சல்—குழப்பம்). இந்த மன்றத்தில் நீங்கள் இவ்வாறு பேசுவது முறையல்ல. விசிக்குட்பட்ட பேச்சல்ல இது.

[1987 ஏப்ரல் 21

[திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் கட்சி உறுப்பினர்கள், இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி உறுப்பினர்கள் ஆகியோர் வெளியேறினர்.]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவைக்கு ஒன்றைத் தெரிவிக்க விரும்புகிறேன். இந்த அவையிலே இப்பேர்ப்பட்ட நடவடிக்கைகளில் ஈடுபடக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்கள் வெளியே செல்கிறார்கள். இந்த அவையின் கண்ணியம் வெளியே குறைத்து மதிப்பிடப்படுகிறது. அதற்கு இப்பேர்ப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள்தான் பொறுப்பு. இப்பேர்ப்பட்ட கட்சியினர்தான் பொறுப்பு என்பதை நாட்டு மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும். அவர்கள் ஏதோ இங்கே பிரச்சினையை உருவாக்கி இந்த அவையைத் தங்களுடைய அரசியலுக்குப் பயன்படுத்துவதற்காக வந்திருக்கிறார்கள். நாட்டு மக்களுக்கு இந்த விவகாரம் தெரிந்தாக வேண்டும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, பெரம்பலூர் நேரு சர்க்கரை ஆலைப் பகுதியில் இருக்கிற வேளாண் பெருமக்களிடமிருந்து கரும்பை அதிக அளவில் பெறாத காரணத்தால்தான் இந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் கொண்டுவரப்பட்டது. நாள் ஒன்றுக்கு 1,200 டன்தான் அந்த ஆலையினுடைய பிழிதிறன் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிக்கை கொடுத்திருக்கிறார்கள். அந்தப் பகுதியிலே அதிகமாக இருக்கிற கரும்பின் அளவைப் பற்றி அரசுக்கு ஏதாவது உத்தேசமான மதிப்பீடு இருக்கிறதா என்பதை நான் அறிய விரும்புகிறேன். இந்த நேரு சர்க்கரை ஆலையினுடைய பிழிதிறனை அதிகப்படுத்த வேண்டுமென்று மத்திய அரசுக்கு எழுதி இருப்பதாக அவர் அறிக்கையில் இருந்து தெரிய வருகிறது. இந்த ஆலையினுடைய பிழிதிறனை அதிகரிக்கிற அந்த முயற்சி எப்போது எடுத்துக் கொள்ளப்பட்டது? இதனை விரிவாக்கம் செய்யவேண்டுமென்று மத்திய அரசுக்கு மாநில அரசு எப்போது எழுதியது? மத்திய அரசிடமிருந்து என்ன பதில் வந்திருக்கிறது?



1987 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** பேரவைத் தலைவர் அவர்களே, அந்த ஆலை 1,250 டன் பிழிதிறன் உடையது. 7,500 ஏக்கர் பரப்பளவில் உள்ள கரும்பை எடுத்து அமைத்துக் கொண்டிருக்கிறார்கள். இப்போது அதனை 3,000 டன்னாக மாற்றுவதற்காக மத்திய அரசுக்குச் சென்ற ஆண்டு விண்ணப்பிக்கப்பட்டு இருக்கிறது. ஆனால் மத்திய அரசு இதுவரையிலும் சர்க்கரைக் கொள்கையை வகுக்கவில்லை. தற்போதுதான் வகுத்திருக்கிறார்கள். ஆகவே வெகு விரைவில் நல்ல முடிவு வரும் என்று கருதுகிறேன். அப்படி வந்தால் 15,000 ஏக்கராவிலே கரும்பு பயிரிடுவதற்கான வேலை தொடங்கும். அப்போது கரும்பு வாங்கப்பட்டு சாறு பிழியப்பட்டு சர்க்கரை உருவாகும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, இந்த ஆலையினுடைய விரிவாக்கப்பணி நிறைவேறுவது ஒருபுறம் இருக்க, இப்போது அந்தப் பகுதியிலிருக்கிற வேளாண்பெருமக்கள் தங்களுடைய கரும்புகளை மதுரை சர்க்கரை ஆலைக்கு எடுத்துச் செல்கிற காரணத்தால் அதில் உள்ள தொல்லைகளைப் போக்குகின்ற வகையில் அந்தப் பகுதியிலே இருக்கிற கரும்பு முழுவதையும் நேரு சர்க்கரை ஆலையே எடுத்துக்கொள்கின்ற வகையில் அரசு என்ன முயற்சி எடுத்துக் கொண்டிருக்கிறது என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

(முற்பகல் 11-40)

**மாண்புமிகு திரு. க. இராசாராம்:** தலைவர் அவர்களே, இப்போது இருக்கிற கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகள் அத்தனையும் தங்களுடைய வரம்புக்கு மீறி அதிகமாக கரும்பை எடுத்து உபயோகப்படுத்திக்கொண்டிருக்கிறார்கள். மீதி இருக்கிற கரும்பை மற்ற ஆலைகளுக்கு அனுப்புகிற சூழ்நிலைதான் இருக்கிறது. ஆகவேதான் இன்றைக்கு இந்த ஏற்பாடுகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை.)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சருக்குரிய கவன ஈர்ப்பு, அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்தி வைக்கப் பெறுகின்றது.

(இ) தனியார் கல்வி நிறுவனங்கள் மாணவர்களைச் சேர்க்க நன்கொடைகள் வசூலித்தல்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, திரு. எஸ். இராசாராமன், டாக்டர் க. நல்லமுத்து ஆகியோர் ஒரே பொருள் குறித்து கவன ஈர்ப்புத் தீர்மானம் கொடுத்துள்ளனர். அவர்களில் ஒருவர் மாண்புமிகு கல்வி மற்றும் சட்ட அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

**திரு. எஸ். இராசாராமன்:** துணைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் தனியார் மருத்துவக் கல்லூரி, பொறியியல் கல்லூரி மற்றும் தொழில் பயிற்சி நிலையம் ஆகியவற்றில் நன்கொடைகள் வாங்குவதால் வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் பொதுமக்கள் தங்கள் செல்வங்களை கல்லூரியில் சேர்க்க இயலாமல் இருப்பதால் அப் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ள நிலை" குறித்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி மற்றும் சட்டத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் . . . . .

அறிக்கை.

தனியார் துறையில் சுயநிதி ஆதாரத்தின்கீழ் இயங்கும் பொறியியற் கல்லூரிகள் அரசாணை (பல்வகை) எண் 429( கல்வித் துறை, நாள் 17—4—1984-ல் அரசு வகுத்துள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயங்குகின்றன.

அதன்படி அக்கல்லூரி நிர்வாகத்தினர் அக்கல்லூரிக்கு அனுமதியளிக்கப்பட்ட மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையில் 50 சதவிதம் மாணவர்களை நிர்வாகத்தினரே விதிமுறைகளுக்கு உட்பட்டு சேர்த்துக் கொள்ளலாம். மீதம் உள்ள 50 சத விகிதத்துக்கான இடங்களை தொழில்நுட்பக் கல்வி இயக்குநர், ஒவ்வொரு ஆண்டும் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் கல்லூரிகளுக்காக தகுதி அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர் பட்டியலிலிருந்து எடுத்து நிரப்புவார்.

இம்மாணவர்களிடத்தில், அரசு மற்றும் அரசு பொறியியற் கல்லூரியில் சேர்க்கப்படும் மாணவர்களுக்கு உண்டான கல்விக் கட்டணம் மற்றும் சிறப்புக் கட்டணங்களே வசூலிக்க வேண்டும்





என்றும், அதற்குமேல் எந்தவிதமான கேபிடேஷன் கட்டணமும் வசூலிக்கக்கூடாது என்றும் மேற்படி ஆணையில் நிபந்தனை எண் 13 மற்றும் 14-ல் அறிவிக்கப்பட்டுள்ளது. தொழில்நுட்பக் கல்வி இயக்குநரால் (Government Quota) நிரப்பப்பட்ட மாணவர்களிடமிருந்து வந்த ஒரு சில புகார்கள் மீது உடனடியாக உரிய நடவடிக்கை எடுத்து குறைகள் தீர்க்கப்பட்டு விட்டன. ஆனால் நிர்வாகத்தினரால் நிரப்பப்பட்ட மாணவர்கள் சம்பந்தமாக புகார்கள் ஏதும் வரவில்லை.

**தன் நிதி தொழில் நுட்பப் பயிலகங்கள் :**

தன் நிதி தனியார் தொழில் நுட்பப் பயிலகங்கள் அரசு ஆணை (பல்வகை) எண் 2007, கல்வி அறிவியல் தொழில் நுட்பம், நாள் 18—10—1983-ல் விதிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு இயங்கி வருகின்றன.

மேற்படி அரசாணையில் உள்ள நிபந்தனை எண் 1-ன்படி தன் நிதி தொழில் நுட்பப் பயிலகங்களின் நிர்வாகிகள் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் சேர்க்கை எண்ணிக்கையில் 50 சதவிகிதம் அவர்கள் சேர்க்கை விதிமுறைகளுக்குட்பட்டு மாணவர்களைச் சேர்த்துக் கொள்ளலாம். மீதியிருக்கின்ற 50 சதவிகித மாணவர்களை அரசு மற்றும் தொழில் நுட்பக் கல்வி இயக்குநர் ஆகிய இவர்கள் வகுத்துள்ள வழிமுறைகளுக்கு ஏற்ப சேர்க்க வேண்டும். அத்துடன் அரசு மற்றும் அரசு மானியம் பெறும் தொழில் நுட்பப் பயிலகங்களில் படிக்கும் மாணவர்களிடமிருந்து வசூலிக்கப்படும் கல்விக் கட்டணம் சிறப்புக் கட்டண அளவுக்கு மேல் வசூலிக்கப்படக்கூடாது என்று மேற்படி அரசாணையில் நிபந்தனைகள் விதிக்கப்பட்டுள்ளன. மேலும் 'கேபிடேஷன்' கட்டணங்கள் ஏதும் வாங்கக்கூடாது என்கின்ற நிபந்தனையும் விதிக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக வந்த ஒருசில புகார்கள் மீது உடனடியாக நடவடிக்கைகள் எடுத்து குறைகள் தீர்க்கப்பட்டன.

**திரு. எஸ். இராசாராமன்:** தலைவர் அவர்களே, தனியார் துறையிலே சுய நிதி ஆதாரத்தின்கீழ் இயங்கிக் கொண்டிருக்கிற பல கல்லூரிகள் அதிகமாக கேபிடேஷன் பீஸ் என்ற முறையில் பணத்தை வசூல் செய்து கொண்டு, 50 விழுக்காட்டிற்கு மேலே

[திரு. எஸ். இராசாராமன்] [1987 ஏப்ரல் 21

யும் மாணவர்களை கல்லூரிகளில் சேர்க்கிறார்கள். இதனால் பணம் படைத்த மாணவர்கள்தாம் அந்தக் கல்லூரிகளில் இடம் பெறுகிறார்கள். மதிப்பெண்கள் அதிகமாகப் பெற்ற சிலர் இதனால் பாதிக்கப்படுகிறார்கள். இதை அரசு அறியுமா? இந்த முறையை மாற்றி அமைப்பதற்கு அரசு முன் வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி. பொன்னையன்:** துணைத் தலைவர் அவர்களே, 50 சதவிகிதம் தகுதி அடிப்படையில் சேர்க்க வேண்டும் என்று ஆணை இடப்பட்டிருக்கிறது. அரசுக்கு அவ்வப்போது தகவல்கள் வருகிறபோது நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து திரு. சைதை சா. துரைசாமியின் கவன ஈர்ப்பு மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப் பெறுகிறது. அடுத்த கவன ஈர்ப்பு.

**(ஈ) உதகமண்டலத்தில் திறந்த வெளியரங்கு கட்டும் பணி.**

**திரு. கே. உச்சி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "நீலகிரி மாவட்டம் உதகையில் வெளி விளையாட்டு அரங்கம் கட்ட நிதி ஆதாரம் இருந்தும், அடிக்கல் நாட்ட தேதி குறிக்கப்பட்டும் பணி தொடங்கப்படாமையால் மக்களிடையேயும், விளையாட்டு வீரர்களிடையேயும் ஏற்பட்டுள்ள கவலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு சுற்றுலா, மதுவிலக்கு மற்றும் மின்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

**அறிக்கை.**

நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் உதகமண்டலத்தில் விளையாட்டுப் போட்டிகள் நடத்துவதற்கு திறந்த வெளி அரங்கு ஒன்று அவசியம் என பொதுமக்களால் நீண்ட நாட்களாக வலியுறுத்தப்பட்டு வருவதாகவும், இதற்கு ஒரு செயல்

1987 ஏப்ரல் 21] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

வடிவம் கொடுப்பதற்கு மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் 22 அங்கத்தினர்களைக் கொண்ட "விளையாட்டு அரங்கு குழு" ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்து திறந்த வெளி அரங்கு ஒன்று உதகமண்டலத்தில் கட்டுவதற்கு மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் நிதி உதவி கோரி கருத்துரு ஒன்று அனுப்பியிருந்தார். இவ்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்கு மைய அரசின் திட்டக்குழு தனது ஒப்புதலை அளித்து ரூ. 32.00 இலட்சம் மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடும் செய்தது. இவ்விளையாட்டு அரங்கை உதகமண்டலத்திலுள்ள பிரிக்ஸ் நினைவுப் பள்ளி விளையாட்டு மைமைதானத்தில் அமைக்க நீலகிரி மாவட்ட ஆட்சியர் தலைமையிலான அப்பள்ளியின் மேலாண்மைக்குழு முடிவு செய்து அதற்கான நிலத்தை எந்தவிதமான நிபந்தனையும் இன்றி அரசுக்கு சரண் செய்திட 14—8—1986 அன்று முடிவு செய்துள்ளது. நீலகிரி மாவட்ட ஆட்சித் தலைவரின் கருத்துரு மற்றும் பிரிக்ஸ் பள்ளி மேலாண்மைக் குழுவின் தீர்மானம் இவற்றின் அடிப்படையில் திறந்த வெளி அரங்கு கட்டுவதற்கு ரூ. 32.00 இலட்சம் நிதியுதவி வழங்கி அரசு ஆணை எண் 178, திட்டம் மற்றும் வளர்ச்சி (ம. மே.தி.) துறை, நாள் 23—9—1986ல் அரசு ஆணை பிறப்பித்தது. உதகமண்டல நகர வாசிகளில் ஒருசிலர் இத்திறந்த வெளியரங்கை பிரிக்ஸ் பள்ளியின் மைதானத்தில் கட்டுவதால் அதன் அருகில உள்ள அரசினர் தாவர இயல் பூங்கா மற்றும் ராஜபவன் வளாக சுற்றுப்புற சூழல் பாதிக்கப்படும் எனவும் பிரிக்ஸ் பள்ளியின் திறந்தவெளியினை தங்கள் உல்லாசப் பயணத்துக்குப் பயன்படுத்தி வரும் மக்களுக்கும் பள்ளிக் குழந்தைகள் அந்த திறந்த வெளியில் சுதந்திரமாக விளையாடுவதற்கும் பாதிப்பு ஏற்படும் எனவும் கூறி பிரிக்ஸ் பள்ளி விளையாட்டு மைதானத்தில் இவ்விளையாட்டு அரங்கம் கட்டுவதற்குத் தங்கள் எதிர்ப்புகளைத் தெரிவித்துள்ளனர். சுற்றுப்புறச் சூழலுக்குக் குந்தகம் ஏற்படாவண்ணம் அந்த அரங்கைக் கட்டுவது பற்றிய கருத்துரு அரசின் தீவிரப் பரிசீலனையில் உள்ளது. இதுபற்றி இறுதி முடிவு எடுக்கும் வரை இந்த விளையாட்டு அரங்கு கட்டும் பணியை அரசு தற்காலிகமாக நிறுத்தி வைத்துள்ளது.

**திரு. கே. உச்சி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையின்படி யாரோ சிலர் அந்தப் பகுதியிலுள்ள பொட்டானிக் கார்டனுடைய சுற்றுப்புறச் சூழ்நிலையும் மற்றும் கவர்னர் மாளிகை சூழ்நிலையும் கெட்டு விடும் என்று தவறான ஒரு தகவலைத் தந்திருக்கிறார்கள். அப்படிச் சொன்னவர்கள் யாரும் நீலகிரியில் வாழ்பவர்கள் அல்லர். நீலகிரியில் வாழ வந்தவர்கள், அங்கேயே குடியிருப்பவர்கள் அல்லர், என்பதை நான் சொல்வதோடு அதை நிராகரித்து உடனடியாக அந்த அரங்கைக் கட்ட வேண்டும். அதைக் கட்ட அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மேற்படி அரங்கு கட்டுவதற்குரிய இடத்தை 14—8—1986 அன்று தருவதாக சம்பந்தப்பட்ட உரிமையாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். 23—9—1986-ல் அதைக் கட்டுவதற்கு 32 லட்சம் ரூபாயை மத்திய அரசு உதவி, ஆணை பிறப்பித்திருக்கிறது. அவர்கள் அங்கே ஏற்கெனவே நிரந்தரமாக குடியிருந்தவர்களாக இருந்தாலும், அல்லது குடியிருக்க வந்திருந்தாலும் ஆட்சேபணை கிளப்புகிற போது, அந்த ஆட்சேபணையைக் கவனிக்க வேண்டியது அரசினுடைய கடமையாகும். சுற்றுப்புறச் சூழல் கெட்டு விடுமென்று அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே வேளாண்மைத் துறைச் செயலரை நேரில் பார்த்து வரச் சொல்லி அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. மாவட்ட ஆட்சித் தலைவரிடமிருந்து அறிக்கை பெறப்பட்டிருக்கிறது. தனியாக தலைமைச் செயலாளர் சென்று பார்த்து அவருடைய அறிக்கை பெறவிருக்கிறது. ஆகவே அங்கேயுள்ள மக்களுடைய ஆசையை, அங்கே அரங்கம் கட்டப்பட வேண்டுமென்ற எண்ணத்தை விரைவில் அமல்படுத்த இந்த அரசு நடவடிக்கையெடுக்கும்.

**திரு. கே. உச்சி:** துணைத் தலைவர் அவர்களே, அந்த மக்களுடைய எண்ணம் விரைவில் நிறைவேற்றப்படுமென்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். மாவட்ட ஆட்சித் தலைவருடைய அறிக்கை வந்திருக்கும் என்று கருதுகிறேன். விவசாய இலாக்கா செயலாளரின் அறிக்கையும் வந்திருக்கிறது. மற்ற அறிக்கைகள் எப்போது வரும்? இந்த பணி எப்போது ஆரம்பிக்கப்படும்? இந்த அரங்கம் நீண்ட நாட்களாகக் கட்டப்படாமல்





இருப்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா? ஆகவே அந்த மக்களுடைய குறையை உடனடியாக தீர்ப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. வி. வி. சுவாமிநாதன்:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 1986 ஆம் ஆண்டு நிலம் கொடுத்த தேதி மற்றும் இதைக் கட்டுவதற்கு 32 லட்சம் ரூபாய் நிதி ஒதுக்கப்பட்ட தேதியெல்லாம் சொல்லியிருக்கிறேன். தலைமைச் செயலர் நேரில் சென்று ஒரு அறிக்கையை சமர்ப்பிக்க இருக்கிறார்கள். அதைப் பெற்ற பிறகு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து கொண்டு ஒரு திங்களுக்குள் இதற்கு இறுதியான முடிவு எடுக்கப்படுமென்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

### (உ) அம்பாசமுத்திரம் வட்டத்தில் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம்.

**திரு. கூடலூர் இ. வி. வேலு:** துணைத் தலைவர் அவர்களே, "தெற்கு கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் குறும்பாகுளத்திற்கு எலுமிச்சை ஆற்றின் குறுக்கே விவசாயிகளால் போடப்படும் மண் அணை வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்டு பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதால் எலுமிச்சை ஆற்றின் குறுக்கே சிறிய அணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்:

#### அறிக்கை.

அம்பாசமுத்திரம் வட்டம், தெற்கு கல்லிடைக்குறிச்சி கிராமத்தில் உள்ள குறம்பா குளத்தை பாய்விக்க, எலுமிச்சை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம், ஏற்கனவே ஊரக நிலமற்றோர் வேலை வாய்ப்பு உறுதித் திட்டத்தின்கீழ் 1986-87-இன் பணிகளின் அடுக்கம் தொகுப்பு எண் 1-இல் சேர்க்கப்பட்டு இத்தொகுப்பையும் அரசு செயல்படுத்த அரசு ஆணை எண் 162, ஊரக வளர்ச்சி (ஊ.நி.வே.உ.தி. 1) துறை, 1987 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம்

362 கவன ஈர்ப்பு

[திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்] [1987 ஏப்ரல் 21

24-ஆம் நாளில் அனுமதி அளித்துள்ளதால் இப்பணிக்கு ரூ. 5.00 இலட்சத்திற்கு தொழில்நுட்ப ஒப்புதல் அளிக்கப்பட்டு வேலை துவங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**திரு. கடலூர் இ. வி. வேலு:** துணைத் தலைவர் அவர்களே, விவர அறிக்கையினைப் படித்தேன். வேலை துவங்க நடவடிக்கை யெடுக்கப்பட்டு வருகிறது என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். எனவே அதற்காக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அதே பகுதியில் பொட்டல் மலையன் குளம் போன்ற பகுதியில் மணிமுத்தாறு கால்வாய், 80 அடி கால் தால் அவர்கள் சார்பாக நான் நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். அந்தப் பகுதியில் தண்ணீர் பாயாது. எனவே 80 அடி கால்வாயை அந்தத் திட்டத்தில் சேர்த்து அந்தப் பகுதியில் தண்ணீர் பாய்வதற்கு ஏற்றவகையில் செய்வதற்கு அரசு ஆலோசனை செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, அது வேறு பகுதியாக இருக்கிற காரணத்தால் அதிகாரிகளோடு கலந்து பேசி சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து பார்த்து தகுந்த நடவடிக்கையெடுக்கப்படும்.

**திரு. கடலூர் இ. வி. வேலு:** துணைத் தலைவர் அவர்களே, பேரவைத் தலைவர் அவர்களின் தொகுதியாக இருக்கிற காரணத்தால் அவர்கள் சார்பாக நான் நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அதே நேரத்தில் இலண்டன் போன்ற அயல் நாடுகளில் பேரவைத் தலைவர் அவர்களின் தொகுதி வேலைகளை எல்லாம் அரசாங்கமே நேரிடையாக எடுத்துச் செய்கிறது. நம்முடைய அரசும் பல புரட்சிகளைச் செய்து வருகிற இந்த நோக்கில் அந்த வகையில் பேரவைத் தலைவர் அவர்களின் தொகுதியையும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களின் தொகுதியையும் அரசாங்கமே நேரிடையாக எடுத்து மக்கள் பிரச்சனைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கையெடுக்குமா? அவற்றிற்கு முன்னுரிமை கொடுத்து அந்த வேலைகளை கவனிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

கவன ஈர்ப்பு 363

1987 ஏப்ரல் 21]

**மாண்புமிகு திரு. கே. கே. எஸ். எஸ். ஆர். இராமச்சந்திரன்:** துணைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர் யாருடைய தொகுதியாக இருந்தாலும் சரி, அரசாங்கம் ஒரே கண்ணோட்டத்தில் வேலைகளை எடுத்துச் செய்து கொண்டிருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் வேலு சொன்னதைப் போல நாம் இலண்டன் மாநகருக்குப் போக வேண்டாம். தமிழ் நாட்டில் இருப்பதே சரியாக இருக்குமென்று நினைக்கிறேன்.

## 3. அறிக்கை அளித்தல்.

### பொது நிறுவனங்கள்குழு.

**டாக்டர் கே. சமரசம்:** துணைத் தலைவர் அவர்களே, பொது நிறுவனங்கள் குழுவின் கீழ்க்கண்ட அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்:

"இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 மற்றும் 1983-84-ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) செய்தி, சுற்றுலாத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி மூன்றாம் அறிக்கை".

## 4. வரவு-செலவுத் திட்டம், 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

### (அ) கோரிக்கை எண். 27—கதர்த்தொழில்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,76,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

**திரு. கோ. வீரய்யன்:** துணைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம் வேட்டைக்காரனிருப்பில் கதர்த் தொழில் துறையின் மூலம் செயல்பட்டு வரும் கதர் உற்பத்தி நிலையத்தை விரிவுபடுத்தி, உற்பத்தி செய்வது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 3,76,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

[1987 ஏப்ரல் 21

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பனையிலிருந்து தயார் செய்யப்படும் கருப்பு கட்டி, கற்கண்டு ஆகியவை அத்தியாவசிய பொருட்கள் பட்டியலிருந்து நீக்கப்பட வேண்டியதின் அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,76,95,000-ல், ரூ. 100 குறைக்க வேண்டும்".

(முற்பகல் 11-50)

**திரு. கே. சுப்பராயன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் துறையில் பணியாற்றுகிற ஊழியர்களின் வேலை நிலைமையை அபிவிருத்தி செய்து சம்பள உயர்வு தரவேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 3,76,95,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**(ஆ) கோரிக்கை எண் 30—சமூக நலன்.**

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ரூ. 92,18,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்.".

**திரு. கி. வெங்கடாசலம் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறையின் சார்பில் செய்யப்படுகிற சமுதாய நலத் திட்டங்கள் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :



1987 ஏப்ரல் 21] [திரு. கி. வெங்கடாசலம்]

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 92,18,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**திரு. கோ. வீரய்யன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நிபந்தனையின்றி 60 வயது நிரம்பிய அனைவருக்கும் ஓய்வு ஊதியம் கொடுப்பது குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன் :

"மானியக் கோரிக்கை எண். 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் ஒதுக்கப் பெறுகின்ற ரூ. 92,18,97,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்".

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவை முன் விவாதத்திற்கு வைக்கப் பெறுகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால் கூறலாம்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கதர்த் தொழில் சம்பந்தமாகவும், சமூக நலன் சம்பந்தமாகவும், கொள்கை குறிப்புகளை அச்சிட்டு, அவைகள் ** அவை முன் வைக்கப்பட்டு இருக்கின்றன. அவைகளை நான் படித்ததாகக் கருதி குறிப்பேடுகளில் ஏற்றுக்கொள்ள வேண்டுகிறேன். மாண்புமிகு உறுப்பினர்களுடைய நல்ல கருத்துக்களைப் பெற்றதற்குப் பிறகு தேவையானால் என்னுடைய உரையை நான் இறுதியில் வழங்குகிறேன்.

* **திருமதி தா. இராசாம்பாள் :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றைக்கு அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்ட கதர் கிராமத் தொழில் வாரியம், மற்றும் சமூக நலன் என்ற இந்த இரண்டு மானியக் கோரிக்கைகள் மீது இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பாக ஒரு சில கருத்துக்களை கூற முன்வருகிறேன்.

---

** 513—572 மற்றும் 573—586 ஆம் பக்கங்களில் இணைப்புகள் முறையே III, IV ஆக அச்சிடப்பெற்றுள்ளன.

[திருமதி தா. இராசாம்பாள்] [1987 ஏப்ரல் 21

கதர் கிராமத்தொழில் வாரியத்தின் மூலமாக பல திட்டங்களை செயல்படுத்தியிருந்தாலும் கூட, வட்டாரங்கள்தோறும் ஏதாவது ஒரு திட்டத்தை பிளான் செய்து, திட்டமிட்டு நிறைவேற்ற வேண்டும். எந்தெந்த இடங்களில் இந்த கனிப் பொருட்கள் கிடைக்கின்றனவோ, அவைகளைக் கொண்டு, இன்னின்ன பணிகளைத் தொடங்கலாம் என்ற ஓர் திட்டம் இல்லாமல் இருக்கிறது. தற்போது தமிழ்நாடு முழுவதும் அல்லது மாவட்ட வாரியாக என்று நாம் திட்டங்களை எடுத்துக்கொள்கின்ற காரணத்தால், பல இடங்களில் கனிப்பொருட்கள் கிடைக்காத காரணத்தால், வேலைகள் நிறுத்தப்படுகின்றன. சில இடங்களில் இடங்கள் செலக்ஷன் செய்யப்படாத காரணத்தால் நிறுத்தப் படுகின்றன. ஆகவே கனிப் பொருட்கள் கிடைக்கின்ற வட்டாரங்களில், ஒரு வட்டாரத்திற்கு 10 ஊராட்சிகள் என்று எடுத்துக்கொண்டு, தச்சர், கொல்லர், கூடை முடைவோர், மட்பாண்டம் செய்வோர், செருப்பு தைப்போர், ஆகியவர்களுக்கு தொழில் கருவிகளையும், மூலதனத்தையும் கொடுத்து, அவர்களை ஊக்குவிக்க வேண்டும் என்ற என்னுடைய கருத்தைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீடுகள் கட்டும் பணியில் இன்று அரசு ஒரு பெரும் இலக்கை முன் வைத்துள்ளது. தனியார்களும் கிராமங்களில் தங்களுடைய வீடுகளைப் புதுப்பிக்கவும் புதிதாக அமைக்கவும் முயற்சி செய்கின்றனர். இந்த நிலையில் கட்டுமானப் பொருட்கள் ஒன்றியந்தோறும் கிடைக்கத்தக்கவாறு ஒரு திட்டத்தை அரசு அறிமுகம் செய்ய வேண்டும். வீடு கட்டும் தொழிலாளர்களுக்கு ஒரு வாரம் பயிற்சி தருவதற்கு அரசு தக்க ஏற்பாடுகளைச் செய்து தந்தால்தான் வீடு கட்டுவோரும், அதில் ஈடுபடுவோரும் கட்டுமானப் பொருட்களை சேதமின்றி சரியாகப் பயன்படுத்த இயலும் என்ற என்னுடைய யோசனையை கூற விழைகிறேன்.

கிராமங்களில் உள்ள வீடுகளுக்குக் கழிப்பிட வசதி செய்து கொள்ள சிமெண்ட் பைப் முதலியவற்றை தயாரிக்க ஒன்றியங்கள் தோறும் ஒரு தொழில் கூடம் அமைக்க வேண்டும். மலைகளில் மலைவாழ் மக்கள் வாழ்கிறார்கள். வனத்துறையில் உள்ள பகுதிகளில் இருந்து கடுக்காய் மரங்களிலிருந்து அந்தக் கடுக்காய்களை பொறுக்குவதற்கு அவர்களுக்கு வாய்ப்பு



1987 ஏப்ரல் 21] [திருமதி தா. இராசாம்பாள்]

இல்லாத நிலைமை இருக்கிறது. ஆகவே அந்தக் கடுக்காய்களை பிஞ்சிலேயே உலுக்கி நல்ல விலைக்கு விற்க முடியாத நிலைமை இருக்கிற காரணத்தால், அந்தக் கடுக்காய்களை முழுமையாக அவர்களே பொறுக்கி அதைக் கூட்டுறவிலே கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள் கிறேன்.

இன்றைக்கு சமூக நலத்துறையின் கீழ் பெண்களுக்கும் ஊனமுற்றவர்களுக்கும், அனாதைகளுக்கும பல திட்டங்களை நாம் செயல்படுத்தி இருக்கிறோம். என்றாலும் கூட சமூகநலன் என்று சொன்னால், அவர்களுடைய பொருளாதார நலனுக்காக, கடன் கொடுப்பது என்பது மட்டுமல்ல, அவர்களுக்கு ஒரு தொழிலை அறிமுகப்படுத்துவது என்பது மட்டுமல்லாமல் அவர்களுக்கு முன்னுரிமை கொடுத்து, வேலைவாய்ப்பிலே இடம் கொடுக்க வேண்டும். தகுதியின் அடிப்படையில் அவர்களை அரசாங்கப் பணியில் அமர்த்துவதற்கான ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தினால்தான், அவர்களுடைய வாழ்வு நிரந்தரமாகி, பொருளாதார உயர்வை அவர்கள் அடைய முடியும் என்பதை நான் கூறிக்கொள்ள ஆசைப்படுகிறேன். அதிலும் குறிப்பாக பெண்களுக்குப் பல திட்டங்கள் தீட்டப்பட்டாலும் வசதி இல்லாத காரணத்தாலோ அல்லது அவர்கள் எதையும் தெரிந்து கொள்ளுகின்ற வாய்ப்பு இல்லாத காரணத்தாலோ கிராமத்தி லுள்ள பெண்கள் அரசாங்கம் தீட்டுகின்ற அந்தத் திட்டங்களைத் தங்களுக்குச் சொந்தமாக்கிக் கொள்ள முடியாமல் இருக்கின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே பெண்களுக்கு ஜனத்தொகையில் பாதிக்குமேல் இருக்கிற பெண்களுக்கு—வேலைவாய்ப்பில் குறைந்தது 3 பர்சென்டாவது அல்லது முன்னுரிமையாவது அளிக்க வேண்டுமென்ற கோரிக்கையை முன் வைக்கிறேன்.

ஊனமுற்றோருக்கு, ஊனமுற்றோர் ஆண்டுக்கு மட்டும் 3 பர்சென்ட் வேலைவாய்ப்பில் இடம் ஒதுக்கப்பட்டது. ஆனால் இன்றைக்கு ஊனமுற்றோர் பலர் நல்ல நிலையிலுள்ளவர்களோடு போட்டியிட்டு வேலைவாய்ப்பில் இடம் பெறமுடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. உதாரணமாக, ஒரு கோர்ட்டில் வேலை

[திருமதி தா. இராசாம்பாள்] [1987 ஏப்ரல் 21

வாய்ப்பு அலுவலகத்திலிருந்து பட்டியல் கேட்டிருந்தார்கள் அதிலே பல வேலைமுற்றவர்கள் அந்த அலுவலகத்திற்கு அலுவலக உதவியாளர் பதவிக்கு நேர்முகத் தேர்வுக்கு வந்திருந்தார்கள். ஆனால் அவர்களை சைக்கிள் ஓட்ட தெரியுமா மாடியிலிருந்து இறங்கி ஏற முடியுமா என்றெல்லாம் கேட்டிருக்கிறார்கள். அவர் களுக்குரிய வேலையைக் கொடுத்தால் அவர்களால் செய்ய முடியுமேயொழிய எல்லோரோடும் போட்டியிலே அவர்கள் வெற்றி பெற்று வேலையைப் பெற முடியாது என்பதை நான் கூறிக் கொள்ள ஆசைப்படுகிறேன். ஆகவே அவர்களுக்கு முன்னுரிமை அல்லது 3 சதவிகிதம் அவர்களுக்கு வேலைவாய்ப்பில் ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையினை முன் வைக்கிறேன்.

இன்றைக்கு ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திற்கும் 30 மாதர் சங்கங்கள் இருக்கின்றன. நாங்கள் ஏதோ அரசாங்கத்தைக் குறைகூறுகிறோம் என்ற கருத்தாக நீங்கள் இதை எடுத்துக் கொள்ளக் கூடாது. அந்த மாதர் சங்கங்கள் ஒரு ஊராட்சி ஒன்றியத்தில்கூட நடைமுறையில் இல்லை. அங்கே மாதர் சங்கத் தலைவிகள் யாராவது இருக்கிறார்களா அல்லது அந்தச் சங்கங்களில் உள்ள மெம்பர்கள் வாரம் ஒரு முறையோ அல்லது மாதம் ஒரு முறையோ கூடுகிறார்களா என்றால், இல்லை. மாதத்திற்கு 5 ரூபாய் வீதம் காலாண்டிற்கு 15 ரூபாய் செலவழிக்கப்படுகிறதே என்று சொன்னால், சங்கங்கள் நடப்பதாக, ஊராட்சி ஒன்றியத்தில் பணம் செலவழிக்கப்படுவதாக கணக்கு இருக்கிறதேயொழிய உண்மையில் அந்த மாதர் சங்கங்கள் இயங்கவில்லை. சமூக நலத்துறை மூலமாக அந்த மாதர் சங்கங்கள் நல்லமுறையிலே இயங்கினால் நாம் தீட்டுகின்ற திட்டங்கள் அனைத்தும் அந்த மாதர் சங்கங்கள் மூலமாக நடைமுறைப்படுத்தப்பட முடியும். நல்லமுறையில், அது பெண்களுக்கு பயனுள்ளதாக இருக்கும்.

இன்றைக்கு அரசாங்கம் காய்கறி உற்பத்தியாளர் சங்கம் என்ற ஒரு சங்கத்தை ஏற்படுத்தி அதன் மூலமாக சத்துணவு மையங்களுக்கு காய்கறிகளை விநியோகம் செய்ய ஒரு ஏற்பாட்டைச் செய்திருக்கிறது. உண்மையில் காய்கறி உற்பத்தி யாளர் சங்கம் இருக்கிறதேயொழிய—நான் கட்சிக்காரர்கள் என்று சொல்ல விரும்பவில்லை—காய்கறி உற்பத்தி செய்பவர்



1987 ஏப்ரல் 21] [திருமதி தா. இராசாம்பாள்]

களுக்கும் அந்த உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தில் பணி புரிகின்ற இயக்குநருக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை. அவருக்கும் காய்கறி உற்பத்தியாளருக்கும் சம்பந்தமில்லாத ஒருவரை அதிலே போட்டுள்ளது மட்டுமல்லாமல், சத்துணவுக் கூடங்களுக்கு காய்கறி வழங்குகின்ற சூழ்நிலையில் அன்றைய மார்க்கெட்டில் 1 ரூபாய்க்கு காய்கறி விலை இருக்கிறது என்று சொன்னால் அந்த மார்க்கெட்டில் 1 ரூபாய் 70 பைசாவிற்கு விற்கிறார்கள். ஏனென்று கேட்டால் அவர்கள் ஆட்களைப் போட்டு வாடகை கொடுத்து அதை விற்கவேண்டிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால் . . . . . .

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காய்கறி உற்பத்தி யாளர் கூட்டுறவுச் சங்கங்கள் தோற்றுவிக்கப்பட்டதன் காரணமே நல்ல காய்கறிகள் குறைந்த விலையில் சத்துணவுக் கூடங்களுக்கு கிடைக்க வேண்டுமென்ற எண்ணத்தில்தான். ஆனால் சில இடங்களில் சரியில்லாதவர்கள் புகுந்துவிட்ட காரணத்தால் சில தவறுகள் ஏற்பட்டது என்பது சுட்டிக்காட்டப்பட்டு அவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு விட்டன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்வதுபோல வேறு எங்காவது அத்தகைய நிலைமைகள் இருக்கிறது என்று சுட்டிக்காட்டுகின்றபோது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படும். மேலும் வெளியார் சந்தையில் விற்பதைவிட குறைந்த விலையில்தான் கூட்டுறவுச் சங்கங்களிலே காய்கறிகள் விற்கப் படவேண்டுமென்று தற்போது நாம் உத்தரவுகளை வழங்கி இருக்கிறோம்.

திருமதி தா. இராசாம்பாள்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, காய்கறி உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் உட்பட நம்முடைய அரசாங்கம் போடுகின்ற அனைத்துத் திட்டங்களும் கூட்டுறவு முறையில் நடைபெறவேண்டு மென்பதில் எனக்கு மாறுபட்ட கருத்து கிடையாது. இருந் தாலும்கூட, இன்றைக்கு 1 ரூபாய்க்கு விற்கின்ற காய்கறிகள் 1.20-க்கு விற்கும்போது உண்மையிலேயே மனம் வருத்தப்படு கிறேன். உதேசடு பாடுபடாமல், கத்தரிக்காய் சாதாரணமாக கிராமங்களில் கிடைக்கிறது. அவர்கள் சொத்தை காய்கறிகளைக்

கொண்டு வந்து விற்கும்போது, நாங்கள் நேரடியாக அதைப் பார்வையிடுகின்றபோது இந்த காய்கறிகளைத்தான் அவர்கள் கொடுத்தார்கள் என்று சொல்கிறார்கள். ஆகவே, நிர்பந்தமாக, அந்தச் சத்துணவு மையங்களுக்கு நாம் போடுகின்ற திட்டத்தில் கொடுக்கின்ற அந்தத் தொகை அவர்களுக்குப் போய்ச் சேராமல் இடைத் தரகர்களால் கொள்ளையடிக்கப்படுகிறது என்றுதான்

(நண்பகல் 12-00)

நான் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தக் காய்கறி கூட்டுறவுச் சங்கங்கள், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வரும் அந்த காய்கறிகளை விற்கின்ற பொறுப்பை நம்முடைய மாதர் சங்கங்களுக்கு, பெண்கள் ஏற்று நடத்துகின்ற மாதர் சங்கங்களுக்குக் கொடுத்தால் உண்மையிலேயே நன்மையாக இருக்கும். அவர்கள் நல்லமுறையில் ஏற்று நடத்துவார்கள் என்ற அந்த உறுதியை நான் கூறக் கடமைப்பட்டு இருக்கிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அம்மையார் அவர்கள் முதலில் பேசுகின்றபோது மாதர் சங்கங்கள் செம்மையாக செயல்படவில்லை என்றும் எங்கே இந்த மாதர் சங்கங்கள் இருக்கின்றன என்று தெரியவில்லை என்றும் சொன்னார்கள். மீண்டும் இப்போது காய்கறி வழங்கும் பொறுப்பை மாதர் சங்கங்களுக்குக் கொடுக்க வேண்டும் என்று சொல்கிறார்கள். ஆகவே முதலில் மாதர் சங்கங்களுடைய இயக்கத்தைப் பெருக்க வேண்டும் அதன் பிறகு நாம் அவர்களுக்கு இந்த காய்கறி வழங்குவதைப் பற்றி யோசிக்கலாம். தற்போது குறிப்பாக எங்காவது இதுபோன்ற காய்கறி சங்கங்களில் தவறுகள் நடைபெறுகின்றன என்று தெரிவிப்பார்களானால் அதற்கு வேண்டிய உரிய நடவடிக்கையை எடுத்து அந்தச் சத்துணவு அமைப்பாளர்கள் வெளியிலே காய்கறிகளை வாங்குவதற்கு வேண்டிய உத்திரவை வழங்கியிருக்கிறோம்.

**திருமதி தா. இராசாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாதர் சங்கங்கள் இன்றைக்கு இயங்கவில்லை என்பதை நான் குறிப்பிட்டேன். ஆனால் இவைகளுக்கு





எல்லாம் பொறுப்புகளை, அரசாங்கம் தொடர்புள்ள பொறுப்பு களை கொடுக்க வேண்டும். இன்றைக்கு துணி தைத்து கொடுக் கின்ற சூழ்நிலை இருக்கிறது, பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் போன்றவைகள் எல்லாம் கொடுக்கின்ற ஒரு சூழ்நிலையை அரசு எடுத்து இருககிறது. அவைகள் அனைத்தையும் அந்த மாதர் சங்கங்களுக்குக் கொடுத்தால் அவர்கள் நல்லமுறையில் இயங்குவதற்கு ஒரு சூழ்நிலை ஏற்படும். இன்றைக்கு 15 ரூபாயிலிருந்து 90 ரூபாயாக உயர்த்தி இருக்கிறோம். அதை வரவேற்கிற அதே நேரத்தில் அவர்களுக்கு காசு மட்டும் கொடுத்தால் போதாது. அவர்களுக்கு பொறுப்பு கொடுத்து நல்லமுறையில் இயங்கக்கூடிய சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் கூற கடமைப்பட்டு இருக் கிறேன்.

இன்றைக்கு முதியோர், விதவைகள், ஊனமுற்றோர், விவசாய கூலிகள் இவர்களுக்கு எல்லாம் உதவித் தொகை கொடுக்கிறோம். இந்த மன்றத்தில் பலரும் கூறிவிட்டார்கள். முதியோர்கள், விதவைகள், ஊனமுற்றோர்கள், விவசாய கூலிகள் ஆகியோருக்கு கொடுக்கின்ற அந்த உதவித் தொகை என்பது ஒரு குறியீடு இல்லாமல் விண்ணப்பிக்கின்ற அனைவருக்கும் தகுதி உடைய வர்கள் அனைவருக்கும் கொடுக்கப்படும் என்பது தான் அரசினுடைய அறிவிப்பு. ஆனால் உண்மையிலேயே அங்கே நடப்பது அப்படி அல்ல, யாராவது ஒருவர் இறந்தால் கூட அந்த கிராமத்தில் உள்ள மற்ற ஒருவருக்கு அதை மாற்றிக் கொடுக்காமல் இருக்கிறார்கள். 5 பேர், 10 பேர் இறந்த பின்னால்தான் அதை கூட்டாக வைத்துக்கொண்டு .வரிசைப்படி அந்த 10 பேருக்கு மீண்டும் கொடுக்கிறார்கள். அதோடு இன்றைக்கு வேலைப் பளு காரணமாக தாலுக்கா அலுவலகத்தில் 3 மாதம் 4 மாதத்திற்கு ஒரு முறை தான் அந்தத் தொகையை வழங்குகிறார்கள். அரிசி கார்டுக்கும் அப்படி தான். சரியான முறையில் கொடுக்கப்பட வில்லை. ஆகவே தாலுக்கா அலுவலகத்தில் ஒரு செக்ஷனை ஆரம்பித்து, அதற்கான ஊழியர்களைப் போட்டு தனி நடவடிக்கை முறையில் இதைத் தனித்து செய்தால் ஒழிய இந்த அரசின் திட்டம் சரியாக நடப்பதற்கு சாத்தியக் கூறுகள் இல்லை என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

[திருமதி தா. இராசாம்பாள்] [1987 ஏப்ரல் 21

தையல் ஆசிரியர் என்ற பதவியில் ஆசிரியர்கள் நீண்ட நெடுங்காலமாக ஊராட்சி ஒன்றியங்கள் ஆரம்பிக்கப்பட்டதிலிருந்து அவர்கள் பணி புரிந்து வருகிறார்கள். அவர்கள் எஸ்.எஸ்.எல்.சி. பாஸ் செய்தவர்கள், அதோடு பெயில் ஆனவர்கள் கூட இருக்கிறார்கள். ஆனால் அவர்கள் முதலில் வாங்கிய அதே சம்பளத்தைத் தான் இது நாள் வரையில் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்களுடைய பொறுப்பு என்ன என்றால் மாதர் சங்கத்தில் உள்ள தையல் இயந்திரங்களை இயக்கி அங்கே மாதர் சங்கங்களில் உள்ள பெண்களுக்குத் தையலை கற்றுக் கொடுப்பது. இன்றைக்கு அந்தத் தொழில் நடைபெறுகிறதா என்றால் நீண்ட நெடும் நாட்களாக 1960 ஆம் ஆண்டில் ஆரம்பித்த ஊராட்சி ஒன்றியத்தில் மாதர் சங்கத் தலைவியார் இருந்தார்களோ அவர்கள்தான் இன்று வரை அந்தப் பெயரில் தான் Voucher வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் திருமணம் செய்து கொண்டு பாட்டியாகக் கூட ஆகியிருப்பார்கள். ஆகவே அதைப் புதுப்பித்து புதிதாக மாதர் சங்கத் தலைவியை நியமித்து அங்குள்ள கருவிகள் இருக்கின்றனவா? அவை இயங்குகின்றனவா? அவற்றால் பயன் அடைகிறார்களா என்று பார்வையிட தையல் ஆசிரியர்களை நியமிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு நல்ல ஊதியத்தைக் கொடுக்க வேண்டும். அதோடு கிராம சேவக் புரமோஷன் செய்யும்போது குழந்தைகள் நல காப்பாளர்களை நாம் நியமனம் செய்கிறோம். அதோடு இவர்களும் எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்கள்தான், நல்ல அனுபவமிக்கவர்கள், இவர்கள் நீண்ட நெடும் நாட்களாக சர்வீசில் இருப்பதால் இவர்களுக்கும் அந்தத் தகுதியைக் கொடுத்து நல்ல சம்பளத்தைக் கொடுத்து அவர்களிடமிருந்து மக்களுக்காக நல்ல வேலையை நாம் பெற்றுக் கொடுக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதோடு இன்று கலப்புத் திருமணம் செய்து கொள்ளும் தம்பதியர்களில் அந்தக் கணவன் மனைவி இருவரில் யாராவது ஒருவருடைய ஜாதியை அந்தப் பிள்ளைக்கு வைக்க வேண்டும் என்பது அரசினுடைய ஆணையாக இருக்கிறது. ஆனால் மீண்டும் மீண்டும் அந்த ஜாதியை சொல்லி சலுகையை பெறு



1987 ஏப்ரல் 21] [திருமதி தா. இராசாம்பாள்]

கின்ற சூழ்நிலை இருப்பதால் கலப்பு மணம் செய்து கொண்டவர்களுடைய வாழ்க்கையில் ஜாதி ஒழிப்பு என்ற அந்த எண்ணம் சரியாக ஈடேறாத சூழ்நிலையில் இருக்கிறது. அதற்கு என்ன ஜாதி வைக்கலாம் என்று கேட்டால் அதை அரசு முடிவு செய்யவேண்டும். அப்படி ஜாதி இல்லாத ஒரு சமுதாயத்தை அமைப்பதற்கு கலப்பு மணம் செய்து கொண்ட அந்த தம்பதியர்களுக்கு நல்ல ஒரு முடிவை எதிர்காலத்தில் பெற்றுத் தரவேண்டும் என்று அன்போடு கேட்டுக் கொள்கிறேன்.

அனாதை குழந்தைகள் என்று சில குழந்தைகளை அனாதை இல்லங்களில் கொண்டு வந்து விடுகிறார்கள். அனாதை இல்லங்களில் கொண்டு வந்து விடும்போது யார் அந்தக் குழந்தையை எடுத்து வந்து விடுகிறார்களோ அவர்களுடைய ஜாதியை அந்தக் குழந்தைக்கு வைக்கிறார்கள். அந்தக் குழந்தைகளுக்கு எந்தச் சாதியை வைத்து சலுகைகளைப் பெறுவார்கள் என்று கேள்வியை முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

என்னுடைய தொகுதியில் கங்கவல்லி ஊராட்சி ஒன்றியத்தில் காது கேளாதோர் பள்ளி ஒன்று இருக்கிறது. அந்தப் பள்ளியில் நீண்ட நாட்களாக 5 ஆம் வகுப்பு வரையில் தான் சேர்ந்து படித்துவருகின்ற சூழ்நிலை இருக்கிறது. இன்றைக்கு தஞ்சையில் 'பிளஸ் 2' வரை படிக்கின்ற ஒரு வாய்ப்பை தமிழக அரசு ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு உண்மையிலே நன்றியையும், பாராட்டுதலையும் தெரிவித்தோடு, என்னுடைய தொகுதியில் அந்த மாணவ-மாணவியர் வசதியை முன்னிட்டு, குறைந்தது ஒரு நடுநிலைப் பள்ளியாகவது, அதாவது எட்டாம் வகுப்பு வரையாவது படிக்கக்கூடிய ஒரு வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அவர்களுக்குத் தனியாக ஒரு கட்டிடம் கட்டித் தரவேண்டும். அதற்கு தேவையான இட வசதி இருக்கிறது. 25 ஏக்கர் நிலம் இருக்கிறது. அதற்கு ஒரு பள்ளிக் கட்டிடம் கட்டித்தர வேண்டுமென்று இந்த நேரத்தில் அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அடுத்து ஊனமுற்றோர் பள்ளிக் குழந்தைகளுக்கு வாகன வசதி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஆனால் அதிலே கூட முன்னுரிமை அடிப்படையில் வரிசைப்படுத்தி கொடுக்க வேண்டும். காரணம், படிக்காதவர்கள், படித்தவர்கள், தொழில்

[திருமதி தா. இராசாம்பாள்] [1987 ஏப்ரல் 21

செய்பவர்கள், இவர்களையெல்லாம், அனைவரையும் ஒரே பட்டியலில் போட்டு, முன்னுரிமை அடிப்படையில் நாம் இதுவரையில் வாகன வசதி செய்து கொடுத்துக் கொண்டிருக்கிறோம். அந்தப் பள்ளியிலே படிக்கின்ற மாணவர்கள் ஊனமுற்றவர்களாக இருந்தால், அவர்களுக்கென்று தனியாக ஒரு பட்டியல் போட்டு, அல்லது அந்த வருடத்தில் எத்தனை விண்ணப்பங்கள் அவர்களிடமிருந்து வருகின்றனவோ, அவர்களுக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். ஏனென்று சொன்னால், ஊனமுற்றவர்களுடைய எதிர்காலம் பாதிக்கப்படும். ஆகவே, பள்ளிக்குச் செல்வதற்கு அவர்களுக்கு அவசியமாக வாகன வசதி செய்து கொடுக்க வேண்டும். வெளியூர்களுக்குச் செல்வதற்கு பஸ் பாஸ் கொடுக்கிறோம். உள்ளூரில் அவர்கள் செல்வதற்கு கண்டிப்பாக வாகன வசதி செய்து கொடுக்க வேண்டுமென்று அன்போடு கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

செயற்கை உறுப்பு துணை நிலையங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆனால் சேலத்தில் நீண்ட நாட்களாக மருத்துவ அதிகாரிகள் இருந்தும்கூட, அந்த நிலையம் ஏற்படுத்தாத சூழ்நிலையில் ஏழைகள் தங்களுடைய ஊனமுற்ற பிள்ளைகளுக்கு காலணி வாங்க வேண்டுமென்று சொன்னால், பணம் கொடுத்துத்தான் வாங்கிக்கொள்ள வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. பணம் கொடுத்து வாங்க முடியாத சூழ்நிலை இருக்கிற காரணத்தினால் அந்தத் துணை நிலையத்தை அங்கே ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

தையல் கற்றுக் கொடுக்கின்ற ஒரு நிலையத்தை பச்சைமலைப் பகுதியில் அமைத்துக் கொடுக்க வேண்டும். காரணம், அங்கே 32 கிராமங்கள் இருக்கின்றன. அந்தப் பகுதியில் மருத்துவ வசதி இருக்கிறது. கால்நடை மருத்துவ வசதி இருக்கிறது. அங்கே படித்த, 7-வது, 8-வது, 10-வது, பிளஸ் டூ வரையில் படித்த மாணவ மாணவியர்கள் இருக்கிறார்கள். அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. குடிசைத் தொழில் செய்வதற்கும், தையல் பயில்வதற்கும், டைப்ரைட்டிங் கற்றுக் கொள்வதற்கும் அவர்கள் கீழே வரவேண்டும். திரும்ப மேலே போவதற்கு போக்குவரத்து வசதியில்லை. அங்கேயே தங்கிப் படிப்பதற்கும் வசதியில்லை. ஆகவே தையல் கற்றுக்கொள்ள, டைப்ரைட்டிங் கற்றுக்கொள்ள, அவர்களுக்கு நல்ல ஒரு வாய்ப்பை அளிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திருமதி தா. இராசாம்பாள்]

கங்கவல்லி ஆதரவற்ற குழந்தைகள் அரசு பராமரிப்பு இல்லத்தை ஏற்படுத்திக் கொடுத்தமைக்கு என்னுடைய நன்றியை தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பள்ளியை வேறு இடத்திற்கு மாற்ற வேண்டிய சூழ்நிலை இருப்பதாக நான் கேள்விப்படுகிறேன். காரணம், கங்கவல்லி ஊராட்சி ஒன்றியப் பகுதியில் பஸ் போக்குவரத்து மிகக் குறைவாக இருக்கிறது. அங்கே கட்டிட வசதி மிக நெருக்கடியான சூழ்நிலையில் இருக்கிறது. ஆகவே இப்படிப்பட்ட திட்டங்களை எல்லாம், நகரங்களிலும், தாலுக்காக்களிலும் இருப்பதை விட, நாங்கள் வாழ்கின்ற கிராமங்களுக்கு கொடுக்கவேண்டுமென்ற விதத்தில், கொடுத்த வசதியை மீண்டும் பறிக்க வேண்டாம் என்ற எண்ணத்தைத் தெரிவித்து, அந்த இடத்திற்கு ஒரு கட்டிடத்தை ஏற்படுத்தித்தர வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் என்பது நடைமுறையில் இருந்துவருகிறது. உண்மையிலேயே திட்டம் சிறப்பானதுதான். அதை நான் குறை கூற வரவில்லை. ஆனால் அதிலுள்ள பெண்களுக்கு சம்பளம் மிகக் குறைவாகக் கொடுக்கப்பட்டு வருகிறது. அதன் காரணமாக அவர்கள் செய்கின்ற சிறு சிறு தவறுகளை நாம் கண்டிக்க முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே அவர்களுக்குச் சம்பளத்தை சற்று உயர்த்திக் கொடுத்தால் பரவாயில்லை. அவர்களுக்கு நிரந்தரமாக 'செகண்டரி கிரேட் ஆசிரியர்களைப்போல்' பாவித்து செய்தால், அவர்களுக்கு பணிப் பாதுகாப்பு கொடுத்தால் ஒரு நன்மையாக அமையும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இராணிப்பேட்டை பகுதியில், வாலாஜாபாத்தில் அமைந்துள்ள கூட்டுறவு பிரம்புத் தொழிற்சாலையில், தலைவர், செயலாளர், அதிகாரிகள் சுமார் ரூ. 1½ இலட்சத்திற்கு ஊழல் செய்திருப்பதாக சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவித்தார்கள். அப்படி ஊழல் செய்தது கண்டுபிடிக்கப்பட்டது. இதுபோன்ற தவறுகள் செய்பவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுப்பதில் எங்களுக்கு ஒன்றும் ஆட்சேபணை இல்லை. ஆனால் அந்தத் தொழிலில் செய்யும் 60 குடும்பங்களையும் காப்பாற்ற அதிக அளவில்

பிரம்புகளை வரவழைத்து அந்தக் குடிசைத்தொழிலை ஊக்குவிக்கவேண்டுமென்று இந்த நேரத்தில் சொல்லிக்கொள்ள ஆசைப்படுகிறேன்.

மட்பாண்ட தொழிலாளர்கள் பல இடங்களில் என்னுடைய ஊரில் கூட இருக்கிறார்கள். அவர்கள் அந்த மண்ணை எடுப்பதற்கு சில இடங்களில் ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டு வருகிறது. அதை தவிர்க்க அரசு ஆணை இருந்தாலும் கூட ஆட்சேபணை செய்கின்ற காரணத்தினால் அவர்கள் மண் எடுக்க எந்த இடத்திலும் ஆட்சேபணை செய்யக்கூடாது என்று கேட்டுக்கொள்கிறேன். சிறுதொழில், கிராமத் தொழில், நலிந்த தொழில் போன்றவற்றை பாதுகாக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அவர்களுக்கு வீட்டுவசதி செய்து கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக பல திட்டங்களைச் செயல்படுத்துகிறோம். இன்றைக்கு நம்முடைய அரசு காலணி தைத்துக் கொடுக்கின்ற அந்தப் பொறுப்பினை ஏற்றுக்கொண்டிருக்கின்ற காரணத்தினால், அந்தக் கிராமத்தில் உள்ள நலிவுற்ற காலணி செய்பவர்களுக்கே இந்தத் தொழிலை கொடுத்து அவர்களை முன்னேற்ற வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொண்டு, வாய்ப்பளித்த தலைவருக்கு நன்றி கூறி முடிக்கிறேன். நன்றி.

(பிற்பகல் 12-10)

*திருமதி பா. வளர்மதி: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சமூக நலத்துறை அமைச்சர் அவர்களால் கொண்டுவரப்பட்டுள்ள சமூகநலம், சத்துணவு, கைத்தறித் துறை மானிய கோரிக்கைகளை வரவேற்று என்னுடைய சில கருத்துக்களை எடுத்து வைக்க விரும்புகிறேன். சமூக நல மானியக் கோரிக்கையின் மீது இந்த துறையினுடைய வளர்ச்சிக்காக 93 கோடி ரூபாய்களை ஒதுக்கியுள்ளதை நான் முதலிலே பாராட்டுவதற்கு கடமைப்பட்டிருக்கிறேன். காரணம் 1980 ஆவது ஆண்டிலிருந்து 10 கோடியிலிருந்து உயர்த்தி இன்றைக்கு 1988 ஆவது வருடத்திற்குள்ளாக 93 கோடி ரூபாய்களை இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்காக ஒதுக்கியிருக்கின்ற எங்களின் இதய தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களை தாய்க்குலத்தின் சார்பில் இந்த நேரம் மனமார

வரவேற்பதற்கு நான் கடமைப்பட்டிருக்கிறேன். பெண்களுடைய முன்னேற்றத்தைக் குறித்து, அது எந்த சட்டமாக இருந்தாலும் சரி பெண்குலத்தினுடைய வளர்ச்சியை மனதிலே வைத்து இந்தத் திட்டங்களுக்கு அதிக நிதி ஒதுக்கீட்டை அரசு செய்திருக்கிறது. எவ்வளவோ எத்தனையோ பெண்ணுரிமை இயக்கங்கள், எத்தனையோ போராட்டங்கள் நடத்தியும் கூட, எத்தனையோ பெரியோர்கள் முயன்றும் கூட வரதட்சிணை கொடுமை இன்னமும் ஒழிந்து முடிவிற்கு வரவில்லை. தினந்தோறும் பத்திரிகைகளில் செய்திகளைப் படிக்கின்றபோது இன்றைக்கு தமிழ்நாட்டிலே இருக்கின்ற தாய்மார்கள் மனம் நோகக்கூடிய அளவிற்கு செய்திகள் பல எண்ணம் இருக்கின்றன. பெண்களை போகப் பொருளாக நினைக்கக்கூடிய இந்த நிலை இன்றைக்கும் மாறவில்லை. எத்தனையோ குடும்பங்களில் பதுமைகளாகவே பெண்கள் அடிமைப்படுத்தப்பட்டு சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள். மேகத்தை சிறைபிடித்தால் யாருக்கும் மழை இல்லை. பாவேந்தர் பாரதிதாசன் சொன்னதைப்போல, பெண் அடிமை தீருமட்டில் பேசும் திருநாட்டில் மண் அடிமை தீருவது முயல் கொம்பே—என்று சொன்னதைப் போல வரதட்சிணை கொடுமைகளை தடுப்பதற்கும் கண்டு பிடிப்பதற்கும் தனியாகவே ஒரு காவல்துறை பிரிவை ஏற்படுத்த வேண்டும் என்கின்ற ஒரு நல்ல திட்டத்தை செயல்படுத்திய மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அவர்களை இந்தச் சமயத்தில் பாராட்டுவதற்கு கடமைப் பட்டிருக்கிறேன். இன்னொன்றையும் இந்தச் சந்தர்ப்பத்திலே நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். வரதட்சிணை என்ற பெயராலே இன்றைக்கு பல பேர் செத்து மடிந்து கொண்டு இருக்கிறார்கள். அதைத் தடுப்பதற்காக பெண்களுக்கு திருமணம் முடிந்த கையோடு—திருமணங்களை பதிவு செய்வதைப் போல— பெண்களுக்கு சீதனம் என்ற பெயரால் தரப்படுகின்ற வரதட்சிணைகள் நகைகள், பாத்திரங்கள், சேலைகள் கொடுக்கப் படுகின்ற அத்தனை சீதன பொருள்களையும் பதிவு அலுவலகத்திலே போய் பதிவு செய்ய வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அது நிச்சயமாக பெண்களுக்கு பாதுகாப்பாக இருப்பதற்கு ஒரு

வாய்ப்பாக அமையும். பின்னால் ஏதாவது அந்தப் பெண்களுக்கு டீரச்சலவை என்று வந்தால் கூட தரப்பட்ட சதன சொத்துக்களை அவர்களுடைய எந்த வொரு தத்துக்கும் இடமின்றி பெண்களுக்குச் சேரவேண்டிய வகையிலே வது முறைகளையும் அரசு வகுக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். பெண்கள் முன்னேற்றத்துறைகான செயல்பாடுகளை கவனிப்பதற்காகத்தான் இன்றைக்கு சமூக நல வாரியம் என்ற ஒரு அமைப்பு இருக்கிறது. என்ன காரணத்தினாலோ தெரியவில்லை, இந்த வாரியத்தின் பணிகளில் ஏதோ ஒரு சுணக்கம் தெரிகிறது. முன்போல மாவட்ட கருத்தரங்குகள், மாநாடுகள் இப்போது நடத்தப் படுவதில்லை. செமினார் என்று சொல்லி சமூக நல வாரியம் செமினார் நடத்துகிறார்கள். அந்த செமினார் நடத்துவதிலே சமூக நலத்துறைக்கு உட்பட்ட அதிகாரிகள், சமூகநல வாரிய உறுப்பினர்கள் இவர்கள் மட்டும்தான் அந்த கருத்தரங்குகளில் கலந்துகொள்கிறார்களே தவிர பொது மக்களுக்கு இந்த செமினாரிலே போடப்பட்ட தீர்மானங்கள், பெண்களுக்குப் போய்ச்சேர வேண்டிய நல்ல பல கருத்துக்கள் அவர்களுக்கு தெரிய வாய்ப்பில்லாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. அரங்குகளிலே கொண்டு போய் அந்த செமினார்களை, மாநாடுகளை நடத்து கிறார்கள். நான் இந்தச் சமயத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்வது, இதுபோன்ற மாநாடுகள், கருத்தரங்குகள் எல்லாம் கிராமப்புறங்களிலே ஏழை எளிய மக்கள் இருக்கிற பகுதிகளிலே நடத்தப்பட வேண்டும் என்பதுதான்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர்—தலைமை.)

தங்களுக்கு ஒரு துன்பம் என்றால், கணவனிடம் மட்டுமே பெண்களுக்குச் சொல்லத் தெரிகிறது. காவல்துறை மீது இருக் கிற அச்சத்தின் காரணமாக, காவல் நிலையங்களுக்குச் செல் வதற்குத் தயங்குகிறார்கள். கொடுமைகளைச் சொல்வதற்கும், பரிகாரங்களைத் தேடிக்கொள்வதற்கும் உரிய வழிவகைகள் செய் வதற்குத் தனியான வழிவகைகளைக் காணவேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்கு முன்னோடியாக, சமூக நல வாரியம் சுறுசுறுப்பாகச் செயல்படவேண்டும். இந்தக் கருத்தரங்குகளையும், மாநாடு களையும் வெறும் விழாக் கோடைகளாக மட்டும் இருத்திக்

கொள்ளாமல், வாரியத்தினுடைய பணிகளை முடுக்கி, அங்கே அடிமட்டத்துப் பெண்களுக்குப் போய்ச் சேரக்கூடிய வழிவகை களில் எல்லாம் இந்தச் சமூக நல வாரியம் செயல்படவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு மாவட்டத்திலேயும் பெண்கள் நல விழிப்புக் குழுக்கள்— Vigilance Committee அமைப்பது நிச்சயமாக சிறப் பாக இருக்கும். அதற்குக் காரணம், சென்னையிலே சமூக நல வாரியம் இருக்கிறது. மாவட்டங்களிலே ஏதாவது ஒரு இடத்தில் அலுவலகம் வைத்து இருக்கிறார்கள். ஏதாவது பிரச்சினை என்று சொன்னால்கூட, காவல்துறைக்கு போவதற்கு அஞ்சக்கூடிய தாய்மார்கள், மாவட்டத்திற்கு ஒன்று இல்லை யெனில் யூனியனுக்கு ஒன்று என்று விஜிலன்ஸ் கமிட்டி அமைக்கிறபோது, பெண்கள் தங்களுக்குள் இருக்கிற பிரச்சினை களைப் பெண்களிடத்தில் கூச்சப்படாமல் சொல்வதற்கு வாய்ப்பாக இருக்கும். அதை மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் பரிசீலிக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அதுபோல், அரசால் நடத்தப்படுகிற பெண்கள் விடுதிகள் தமிழ்நாட்டிலேயே மிக மிகக் குறைவாக இருக்கின்றன. 5 இடங்கள் என்று கருதுகிறேன். இந்தக் கொள்கைக் குறிப்பு, சென்னை நகரத்திலே ஒரே ஒரு இடத்திலே மட்டும், அப்படிப் பட்ட பெண்கள் விடுதி நடத்தப்படுவதாக தெரிவிக்கிறது. சென்னை போன்ற நகரங்களில் வெளியூரிலிருந்து வரக்கூடிய பெண்கள், வேலை செய்யக்கூடிய பெண்கள் தங்குவதற்கு இட மில்லாமல் தனியான முறையில் தங்குவதற்கு அச்சப்படக்கூடிய சூழ்நிலை இன்றைக்கு பெண்கள் மத்தியில் இருக்கிறது. மாண்புமிகு இதயதெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் அந்தப் பெண்கள் விடுதிகளை—சென்னை மாநகரத்திலே ஒரு விடுதியாக இருப்பதை—தயவுசெய்து 10 விடுதிகளாகக் கட்டித் தருவதற்கு வழி வகைகளைச் செய்யவேண்டும். பெண்களுடைய பிரச்சினை களைத் தீர்ப்பதற்கு அது ஒரு வழியாக இருக்கும் என்ற காரணத்தால் அதையும் பரிசீலிக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

[திருமதி பா. வளர்மதி] [1987 ஏப்ரல் 21

இன்றைக்குத் தமிழகம் முழுவதும் 11,520 மகளிர் மன்றங்கள் இருப்பதை மானியக் கோரிக்கை தெளிவுபடுத்தியிருக்கிறது. 11,520 மகளிர் மன்றங்கள் செயல்படுவது—உண்மையிலேயே இன்றைக்கு தாய்மார்கள்—அடிப்படைப் பதுமைகளாக இருக்கக் கூடியவர்கள்—இவ்வளவு பேர் முன் வந்து நடத்தக்கூடிய சூழ்நிலை வந்திருக்கிறது என்றால், தாய்க்குலத்தைப் பாதுகாப்பு அளிக்கக்கூடிய அரசு இருக்கிற காரணத்தால்தான் இவ்வளவு மகளிர் மன்றங்கள் செயல்படுவதற்கு ஒரு வாய்ப்பாக இருக்கிறது.

இந்த மகளிர் மன்றத்தினர் சில கோரிக்கைகளைத் தருகிறார்கள். மகளிர் மன்ற அமைப்பாளர்களுக்குக் கொடுக்கக் கூடிய ஊதியம் மாதம் ஒன்றுக்கு ரூ. 15 என்று இருக்கிறது. இந்த வருடத்திலே ரூ. 20-ஆக உயர்த்தலாம் என்று ஆலோசித்து வருவதாக இந்த மானியக் கோரிக்கையில் தெரிவித்திருக்கிறார்கள். இன்றைக்கு 15 ரூபாய் என்பது—சமூக நலப் பணியிலே ஈடுபட்டிருப்பவர்கள், அங்கே ஒன்றிய அலுவலகத்திற்குப் போய்த் திரும்புவது என்று சொன்னால், அதற்கு இந்த 15 ரூபாய்—மாதத்திற்கு போதுமா என்று சொன்னால், நிச்சயமாகப் போதாது.

20 ரூபாய் என்பதை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் 50 ரூபாயாக உடனடியாக உயர்த்தித் தருவதற்குப் பரிசீலனை செய்யவேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

சிறு தொழில் செய்வதற்காகக் கடன் உதவி மனுக்கள் சமூக நலத் துறை மூலமாகப் பரிந்துரை செய்யப்பட்டு வங்கிகளுக்கு அனுப்பப்படுகின்றன. ஆனால் வங்கிகளுக்கு அனுப்பப்படுகிற மனுக்கள்—சில நேரங்களில் சில கட்சியைச் சேர்ந்தவர்களுக்கு, அந்த வங்கிகளிலே தருகிற கடன்கள் போய்ச் சேருகின்றன. நான் இந்த நேரத்தில் பணிவோடு கேட்டுக்கொள்வது, வங்கிகளுக்கு அனுப்பப்படுகிறபோது, தகுதியின் அடிப்படையில் கடன் வழங்கி, அவர்கள் உதவி பெறக்கூடிய ஒரு வாய்ப்பைப் பெற்றுத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

விதவைப் பெண்களுக்கு ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. 35 ரூபாய் என்று இன்றைக்குப் புரட்சித் தலைவர் அரசு [illegible]யாக உயர்த்தியிருக்கிறது. அந்த 35 ரூபாய் என்பதை—

1987 ஏப்ரல் 21] [திருமதி பா. வளர்மதி]

இன்றைக்கு இருக்கக்கூடிய வறட்சியின் காரணமாக, அவர்களுக்கு—ஒரு 50 ரூபாய்—ஆக உயர்த்தித் தருவதற்கு வழிவகை செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன். அது மட்டுமல்ல. இன்றைக்கு ஓய்வூதியம் வேண்டுமென்று சொல்லி, தாசில்தார் அலுவலகத்திலே இருந்தாலும் சரி, கலெக்டர் அலுவலகத்திலே இருந்தாலும் சரி, 23,000 பெட்டிஷன்கள் இன்றைக்குப் பொதுமக்கள் சார்பிலே போடப்பட்டிருக்கின்றன. ஆனால் 23,000 பேர்களுக்கும் என்ன காரணத்தாலோ இதுவரை ஓய்வு ஊதியம் வழங்கப்படவில்லை. விதவைகளும், முதியவர்களும் ஓய்வு ஊதியம் கேட்டு மனுச் செய்கிறார்கள். தயவுசெய்து இந்த மனுக்கள் மீது உடனடியாகப் பரிசீலனை செய்து அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். அரசாங்கம் போடுகின்ற நல்ல திட்டங்கள், அரசாங்கம் நிறைவேற்றுகின்ற நல்ல திட்டங்கள், ஆகியவைகளெல்லாம் இன்றைய தினம் அதிகாரிகளிடத்தில் காணப்படும் சுணக்கம் காரணமாக ஏழை எளிய மக்களைப் போய்ச் சேர முடியாமல் இருக்கின்றன. எனவே அதிகாரிகளை வேகமாகச் செயல்படும்படி முடுக்கிவிட்டு, எல்லோருக்கும் எந்தவிதமான தங்குதடையில்லாமல்—மனு செய்கிற அத்தனை பேருக்கும்—ஓய்வு ஊதியம் வழங்கப்படுவதற்கு அரசு நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 12-20)

இன்னொன்றையும் நான் குறிப்பிட விரும்புகிறேன். ஓய்வு ஊதியம் வழங்கப்படுவதற்கான வயது 45 என்று நிர்ணயம் செய்திருக்கிறார்கள். 45 வயது என்று அரசு நிர்ணயித்திருந்தாலும் பல நேரங்களில் 25 வயதிலேயேகூட சில பெண்கள் தங்கள் கணவனை இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுவிடுகிறது. எனவே 25 வயதில் கணவனை இழப்பதால்—அப்படிப்பட்டவர்கள் மறுமணம் செய்து கொள்ளலாம் என்று நாம் திட்டம் வைத்திருக்கிறோம் என்றாலும் தமிழ்நாட்டுப் பண்பாட்டின் அடிப்படையில் அவ்வாறு மறுமணம் செய்து கொள்கிறவர்கள் மிக மிகக் குறைவாகவே இருக்கிறார்கள்—ஆகவே, அவ்வாறு மறுமணம் செய்து கொள்ள முடியாது என்று இருக்கிற தாய்மார்

[திருமதி பா. வளர்மதி] [1987 ஏப்ரல் 21

களைப் பொறுத்தவரையில் அவர்கள் 25 வயதில் கணவனை இழந்தாலும் சரி, அல்லது 18 வயதில் கணவனை இழந்தாலும் சரி—அவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்கவேண்டுமென்று தாய் உள்ளம் படைத்திருக்கின்ற மாண்புமிகு புரட்சித் தலைவரின் அரசை நான் இந்த நேரத்தில் கேட்டுக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து ஓய்வூதியம் வழங்கப்படுகிற திட்டத்தின் அடிப்படையில் தாசில்தார் அலுவலகத்திற்குச் செல்லுகிற தாய்மார்கள் பல தடவை அங்கே நடந்துபோய்க் கையெழுத்து வாங்கச் சிரமப்படுகிறார்கள். எனவே அவர்கள் மனுச் செய்த 3 மாதத்திற்குள்ளாக ஓய்வூதியம் அவர்களுக்குக் கண்டிப்பாக வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். ஓய்வூதியம் இல்லை என்றால் அதை இல்லை என்றாவது சொல்லிவிட வேண்டும். 3 மாதமெல்லாம் அலைகிறார்கள். இரண்டாவது மாதமும் அலைகிறார்கள். 3 வது மாதம் அலைகிறபோது அவர்கள் அரசின் மீதே வெறுப்படைகிற வாய்ப்பு இருக்கிறது. எனவே 3 மாதத்திற்குள்ளாக நிச்சயமாக அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டுமென்ற கட்டாய உத்தரவை மாண்புமிகு புரட்சித் தலைவர் அரசு பிறப்பிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அரசாங்கப் பணிகளிலும் மற்ற வேலை வாய்ப்புகளிலும் அவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படுவது உண்மையிலேயே பாராட்டப்பட வேண்டிய அம்சம், வரவேற்க வேண்டிய அம்சம். இன்னொரு முக்கியமான விஷயம் பற்றியும் நான் குறிப்பிட விரும்புகிறேன். இன்றையதினம் நகரில் பிச்சைக்காரர்களின் தொல்லை மிக அதிகமாக இருக்கிறது. பிச்சைக்காரர்கள் சென்னை மாநகரத்தின் சிக்னல்களுக்கு பக்கத்தில் இருந்து கொண்டு பிச்சை எடுக்கிறார்கள். அவ்வாறு சிக்னல்களுக்கு அருகே நின்றுகொண்டு பிச்சை எடுக்கிறபோது அது போக்குவரத்திற்கும் இடைஞ்சலை ஏற்படுத்துவதோடு, அவர்களே விபத்துக்களுக்கு ஆளாகி பாதிக்கப்படுகிற சூழ்நிலையும் இருக்கிறது. எனவே விபத்துக்களைத் தடுக்கிற முறையிலாவது பிச்சைக்காரர்கள் சிக்னல்களுக்கு அருகிலே நின்று கொண்டு பிச்சை எடுப்பதைத் தடுக்கக் கட்டாய உத்தரவிட

1987 ஏப்ரல் 21] [திருமதி பா. வளர்மதி]

வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். சிக்னல்களுக்கு அருகில் நின்று பிச்சை எடுப்பதை உடனடியாகத் தடுக்க வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும் உடல் ஊனமுற்றவர்கள், கண்பார்வை அற்றவர்கள் காது கேளாதவர்கள் போன்றவர்கள் எல்லாம் தங்களுக்கு உதவித் தொகை கோரியும். வேலைவாய்ப்பு கோரியும் அலைவதற்குக் கொஞ்சம் சிரமப்படுகிறார்கள். ஒவ்வொரு இடத்திற்கும் போய் உதவித் தொகை கோரி மனுச் செய்து அலைகிறபோது உதவித் தொகை கிடைப்பதில் கால தாமதம் ஏற்படுகிறது. இதற்காக நாம் வழிகாட்டி நிலையங்களை அமைத்து வைத்திருக்கிறோம் என்றாலும். அவற்றை இன்னும் அதிகமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இன்னும் அதிகமான வழிகாட்டி நிலையங்களை அரசு அமைத்து சமூக நலப் பணிகளைச் செய்ய வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். இவ்வாறு அதிக எண்ணிக்கையில் வழிகாட்டி நிலையங்கள் அமைக்கப்பட இருப்பதாகக் கொள்கைக் குறிப்பில் கூட சொல்லியிருக்கிறார்கள். அது பாராட்டப்பட வேண்டிய அம்சம். சென்னை மாநகரத்தில் வழிகாட்டி நிலையங்களை பஸ் ஸ்டாண்டுகளிலும், ரெயில்வே ஸ்டேஷன் களிலும் இதுபோன்ற முக்கியமான பகுதிகளிலும் அமைத்து உடல் ஊனம் உற்றவர்கள் உதவித் தொகை கேட்டு வருகிறபோது எந்த அலுவலகத்திற்குப் போனால் சீக்கிரமாக உதவித் தொகையைப் பெறலாம், அல்லது எந்த அலுவலகத்திற்குப் போனால் வேலைவாய்ப்பு கிடைப்பதற்கு முன்னுரிமை வழங்க ஏற்பாடு செய்யப்படும் என்று விவரம் அளிக்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். இனி அமைக்கப்படுகிற வழிகாட்டி நிலையங்கள் இதற்கு உறுதுணை புரிய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். போக்குவரத்து அதிகமாக உள்ள இடங்களில் நடந்து போகிறபோது இத்தகைய வழிகாட்டி நிலையங்களில் இருப்பவர்கள் உதவி செய்தால் அது உடல் ஊனமுற்றவர்களுக்கு உயர்ந்த உதவி செய்வதாக இருக்கும் என்றும் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

[திருமதி பா. வளர்மதி] [1987 ஏப்ரல் 21

மேலும் சட்ட மன்றத்திலேயே பல பெண்கள் நிரந்தரமான வேலையில்லாமல் பணி புரிகிறார்கள். அவர்களுக்கெல்லாம் நிரந்தரமான வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து என்னுடைய மைலாப்பூர் தொகுதியில் கலாக்ஷேத்ரா கல்விக்கூடம் என்ற ஒரு அமைப்பு மிகப் பெரிய கல்விக்கூடமாக பெயரும் புகழும் வாய்ந்த கல்விக்கூடமாக விளங்குகிறது. மரியாதைக்குரிய ஒன்றாக நாட்டில் இருப்பவர்கள் எல்லாம் பாராட்டக்கூடிய முறையில் நடைபெற்று வருகிறது. வணக்கத்திற்குரிய மறைந்த திருமதி ருக்மணி அருண்டேல் அவர்கள் தற்போது மறைந்துவிட்டார்கள். எனவே அந்தக் கலாக்ஷேத்ரா கல்விக்கூடத்திற்கு ருக்மணி அருண்டேல் கல்விக்கூடம் என்று பெயர் சூட்டி அவருடைய சிலையை அங்கே நிறுவ வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன்.

மரியாதைக்குரிய டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி அவர்களுக்குத் தமிழக அரசு, புரட்சித் தலைவர் அரசு எப்படிப் பெருமை சேர்த்ததோ, அவருடைய பெயரை இன்றைக்கு முக்கியமான இடங்களில் வைத்து பெண் இனத்திற்கு எப்படிப் பெருமை சேர்த்ததோ அதுபோலவே இந்தியத் துணைக் கண்டத்திலே சமூக நலத்திற்காகப் பாடுபட்ட ருக்மணி அருண்டேலுக்கும் பெருமையைத் தேடித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சத்துணவுத் திட்டத்திலே பணிபுரிபவர்களுக்குச் சம்பளம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். அவர்கள் குறிப்பிட்ட நேரத்திலே தான் வேலை செய்கிறார்கள். அந்த நேரத்திற்காக அவர்களுக்குச் சம்பளம் குறைவாக கொடுக்கப்படுகிறது என்றாலும் அவர்கள் பிரசவத்திற்காக விடுப்பில் செல்லும்போது அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். பிரசவத்திற்காக மூன்று மாதங்கள் விடுப்பில் இருந்தால் அந்த மூன்று மாதங்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படுவதில்லை. ஆகவே அவர்களுக்குச் சம்பளத்தோடு கூடிய விடுப்பை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது).



1987 ஏப்ரல் 21] [திருமதி பா. வளர்மதி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்கள் சம்பந்தப்பட்ட மானியம். நாங்கள் கொஞ்சம் பேர்தான் இருக்கின்றோம். ஆகவே எங்கள் கோரிக்கைகளை வைக்க தயவு செய்து அனுமதி தர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, இலவச சீருடைத் திட்டத்திலே இரண்டரை வயது பிள்ளைகளுக்குச் சீருடை தருவதில்லை. ஐந்து வயதுடைய பிள்ளைகளுக்குத் தான் தருகிறார்கள். பால்வாடி பிள்ளைகளுக்கும் சீருடை வழங்க வேண்டும் என்று தயவு செய்து ஐந்து வயது பிள்ளைகளுக்குச் சீருடை வழங்குகிற புரட்சித் தலைவர் அவர்களிடத்திலே சொல்லுங்கள் என்று கேட்கிறார்கள். ஆகவே இரண்டரை வயது பால்வாடி பிள்ளைகளுக்கும் சீருடை, காலணி வழங்க தாய் உள்ளம் கொண்ட புரட்சித் தலைவர் அவர்கள் தயவு செய்து ஆணையிட வேண்டும் என்று கேட்டு, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று அமர்கிறேன். நன்றி. வணக்கம்.

**திரு. மா. மீனாட்சிசுந்தரம்:** மாண்புமிகு தலைவர் அவர்களே, சமூக நலம், மற்றும் கதர் தொழில் மானியக் கோரிக்கைகளின் மீது என்னுடைய கட்சியின் சார்பாக சில கருத்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன். சமூக நலத் துறையின் மூலமாக பல நல்ல திட்டங்களை இந்த அரசு செய்வதை நாங்கள் பாராட்டுகிறோம். அதோடு இந்தத் திட்டங்கள் முறையாக, சரியாக நடைபெற வேண்டும் என்பதாலே தான் நான் சில கருத்துக்களைச் சொல்லுகிறேனே தவிர, இந்தத் திட்டங்களை எதிர்ப்பதாகத் தயவுசெய்து நீங்கள் எண்ண வேண்டாம் என்பதை முதலிலே தெரிவித்துக் கொள்கிறேன்.

விதவைகள் திருமணத்தைப் பொறுத்தவரையில் பல நேரங்களில் திருமணம் நடைபெற்று விதவைகள் மாவட்ட ஆட்சித் தலைவருக்கோ அல்லது அரசுக்கோ மனுச் செய்தால் அவர்கள் எல்லோருக்கும் சரியாகச் சலுகை கிடைப்பதிலே தர்ம சங்கடமான நிலை இருப்பதை இந்த அரசு கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

எனக்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி அவர்கள் சொன்னது போல முதியோர் உதவித் தொகைக்காக மனுச் செய்து, எந்தவிதமான பதிலும் கிடைக்காத காரணத்தால் பல வயதானவர்கள் தாலுகா ஆபீஸ், ஆர்.டி.ஓ. அலுவலகம் ஆகியவற்றுக்குச் சென்று அலுத்துப் போய் கிடைக்காது என்று வரும் நிலைமை இருப்பதை அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும்.

அதே மாதிரி உடல் ஊனமுற்ற விதவைகள், கணவனால் கைவிடப்பட்ட பெண்கள் ஆகியவர்களுக்கு உண்டு, இல்லை என்ற பதிலை உடனடியாக தீர்த்து அரசு கொடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். உடல் ஊனமுற்றவர்களில் படித்தவர்களுக்கு சர்வீஸ் கமிஷன் தேர்வு முறையில் முன்னுரிமை தருவதாக இங்கே சொல்லியிருக்கிறார்கள். அப்படிச் சொன்னதாக எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஆனால் சர்வீஸ் கமிஷனில் அவர்களுக்குச் சலுகை இல்லை. அதற்கான உத்தரவு சரியாக கிடைக்கவில்லை என்பதை அரசு கவனத்திலே எடுத்துக் கொள்ள வேண்டும்.

சத்துணவு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளைப் பற்றி நான் சென்ற சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே பேசியிருக்கிறேன். அது ஒழுங்காக நடைபெறுகிறதா என்பதைப் பல அமைச்சர்கள் திடீரென்று சென்று கண்காணித்தாலும் சரியாக நடைபெறவில்லை என்பதை நாம் எல்லோரும் உணர்ந்திருக்கிறோம். சத்துணவுக் கூடங்களில் சாப்பிடுகின்றவர்களின் கணக்கைப் பார்த்தால், நீங்கள் அதிகமாகச் சொன்னாலும், உண்மையிலேயே சத்துணவு மையங்களில் கணக்கில் உள்ள அத்தனை பேரும் சத்துணவு சாப்பிடுகிறார்களா என்றால், இல்லை. அந்தக் கணக்கின்படி நூற்றுக்கு 75 பேர் சத்துணவு சாப்பிடுவதில்லை. ஓரளவிற்கு வசதி, வாய்ப்பு உள்ளவர்கள், ஓரளவிற்கு தன்னை உயர்ந்த சாதிக்காரர்கள் என்று எண்ணுபவர்கள் எல்லாம் கணக்கிலே இருக்கிறார்கள் என்றாலும், அவர்கள் சத்துணவைப் பயன்படுத்துவதில்லை. இதை முறைப்படுத்துவதற்கு ஒரு திட்டம் வகுக்க வேண்டும். வறுமைக்





கோட்டிற்குக் கீழேயுள்ள அல்லது விரும்பிச் சாப்பிடுகிறவர் களுடைய பட்டியலைத் தயார் செய்து அவர்களுக்குச் சத்தான சத்துணவை அளிக்க முயற்சி எடுக்க வேண்டும். சத்துணவுக் கூடங்களில் பல ஊழல்கள் நடப்பதைப்பற்றி அப்போதைக்கப் போது பல மனுக்கள் தந்திருப்பது உங்களுக்கு ஞாபகம் இருக்கும். சத்துணவுத் திட்டம் சரியாக நடப்பதற்கு ஏதாவது ஒரு குழுவைப் போட வேண்டும். சட்டமன்ற உறுப்பினர்களும், மற்றவர்களும் சென்று பார்க்க அரசு அனுமதி அளிக்க வேண்டும்.

(பிற்பகல் 12-30)

அடுத்து பெண்களுக்கான பயிற்சிப் பள்ளிகளைத் தனியார் நிறுவனங்கள் நடத்துகின்றன. அதற்கு அரசு மானியம் நிறையத் தந்து கொண்டிருந்தாலும், ஒன்றிரண்டைத் தவிர, மற்ற நிறுவனத்தினர் இலாப நோக்கோடு, வியாபார நோக்கோடு அவற்றைப் பயன்படுத்துகிறார்கள். அவற்றைச் சரியாகக் கவனிக்க வேண்டும். மானியம் பெறும் தனியார் மகளிர் பயிற்சி நிறுவனங்களைக் கண்காணிக்க வேண்டும். அப்படிக் கண்காணித்தால்தான் அவை ஒழுங்காக நடக்கும்.

அடுத்து, மகளிர் மன்றங்கள் நாட்டிலே நிறைய இருக்கின்றன. ஆனால் அந்த மகளிர் மன்றங்கள் சரியாக இயங்கவில்லை. அங்கே கவர்ச்சியான திட்டங்கள் இல்லை. அவர்களுக்கு, போக்குவரத்துக்குக் கூட பணம் தரவில்லை. எனவே மகளிர் மன்றங்களை முறையாக அமைத்து, பெண்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் அளவுக்கும், எல்லா இனத்தவர்களும் வரும் அளவுக்கும் அவற்றைக் கவர்ச்சிகரமாக அமைக்க அரசு முயற்சி எடுத்துக்கொள்ள வேண்டும். இங்கே பெண்கள் பயிற்சிக்கென்று பலவிதமான துறைகள் இருந்தாலும், மூலப் பொருள் கிடைப்பதிலே கவனத்தைச் செலுத்த வேண்டும். பெண்கள் சமுதாயத்திலே முன்னேற தேவையான பல திட்டங்களை நாம் செய்தாலும், பெண்கள் முன்னேறுவதில் பல முட்டுக்கட்டைகள் இந்தச் சமூக அமைப்பிலே இருப்பதை அரசு கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும். பெண்களுக்கு மட்டுமல்ல. இளைஞர்கள் கூட சமுதாயத்தில் உள்ள ஒழுக்கக் கேடுகளை உணரும் அளவுக்கு நல்ல பிரச்சாரங்களைச் செய்ய வேண்டும்.

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1987 ஏப்ரல் 21

நம் நாட்டில் பல பெரியவர்கள் எல்லாம் இருந்திருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுரைகளை எல்லாம் வெளியிடலாம். குறிப்பாக தந்தை பெரியார் அவர்கள் பெண்கள் சமூகம் முன்னேற 60 ஆண்டு காலம் எவ்வளவோ உழைத்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதுமட்டுமல்ல, சமுதாயத்தில் ஜாதி ஏற்றத்தாழ்வை ஒழிக்க வேண்டுமென்று பெரியார் அவர்களும், அண்ணா அவர்களும் பாடுபட்டிருக்கிறார்கள். அவர்களுடைய அறிவுரைகளை மக்களுக்குச் சொல்லி, அவர்கள் அந்த முற்போக்கான எண்ணங்களை ஏற்றுக்கொள்ளும் அளவுக்குப் பிரச்சாரம் செய்தால், நிச்சயமாக பெரியார் கண்ட கனவு நிறைவேறும். எனவே சமூக நலத் துறை மூலமாக பகுத்தறிவுக் கொள்கையை நாட்டிலே பரப்ப வேண்டும். பேரறிஞர் அண்ணா அவர்கள் வழியில், தந்தை பெரியார் அவர்கள் வழியில் ஆட்சி நடத்துகிறோம் என்று சொன்னால் போதாது. அவர்களுடைய அறிவுரைகளை மலிவுப் பதிப்பாகப் போட்டு, பொது நல மன்றங்களுக்கு, இனாமாகக் கொடுக்கலாம். மகளிர் சங்கங்களுக்கு இனாமாகக் கொடுக்கலாம். அவற்றை நல்ல முறையிலே பிரச்சாரம் செய்தால் தான், துணிவான காரியங்களைப் பெண்கள் செய்ய முடியும்.

இன்றைக்கு வரதட்சிணைக் கொடுமை, இன்னும் பல பிரச்சினைகள் நாட்டிலே இருக்கின்றன. அவற்றை எல்லாம் போக்க, பெண்களுக்கு முக்கியமாக சொத்துரிமை வழங்க வேண்டும். சொத்துரிமை வழங்கும் சட்டத்தை, ஆண்களைப் போல் பெண்களுக்கும் சொத்தில் பங்கு உண்டு என்று சொல்லும் சட்டத்தை மாநில அரசோ அல்லது மத்திய அரசோ நிறைவேற்றினால், தானாக வரதட்சிணைக் கொடுமை நீங்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து திருமணச் சட்டங்களை இங்கே கடுமையாக வைத்திருக்கிறோம். திருமண விலக்கு இருக்கிறது. அதை எளிதாக்க வேண்டும். மேலை நாடுகளில் இருப்பதுபோல திருமண விலக்கை எளிதாக்கினால் நிச்சயமாக எதிர்கால சமுதாயத்திற்கு, குறிப்பாகப் பெண்களுக்கு நன்மை ஏற்படும். அதுபற்றியும் இந்த அரசு சிந்தித்து, ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

நாம் அளிக்கும் சிறு உதவிகளின் மூலமாக இந்த நாட்டுப் பெண்கள் சமுதாயம் முன்னேற முடியாது. இந்த நாட்டில் தாழ்த்தப்பட்டவர்கள் என்ற நிலையை ஒழிப்பதற்கு, சாதி வேற்றுமைகளை ஒழிப்பதற்கு கடவுள், சம்பிரதாயம், இதிகாசம் என்ற பெயரால் பல இன்னல்கள் இருப்பதைப் பார்க்கிறோம். அதைப் போக்க இந்த அரசு துணிந்து செயல்பட வேண்டும். சம்பிரதாயம், இதிகாசம் என்ற பெயரால் வர்ணாஸ்ரமக் கொள்கை இருக்கிறது. அந்த வர்ணாஸ்ரமக் கொள்கை எப்போது ஒழிகிறதோ அப்போதுதான் முற்போக்கான கொள்கை வெற்றி பெறும் என்பதை நீங்கள் எல்லாம் எண்ணிப் பார்க்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். பெரியாருடைய படத்திற்குக் கீழே பகுத்தறிவு நெறியை பண்பாட்டு நெறி என்று எழுதி வைத்தால் மட்டும் போதாது. டாக்டர் அம்பேத்கார் அவர்களுடைய படத்திற்குக் கீழே சமத்துவம் கொண்ட சமூக நெறி காண்போம் என்று எழுதி வைத்தால் மட்டும் போதாது. அதை வெற்றிகரமாக நடப்பதற்கு இந்த அரசு முன்வர வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பல திட்டங்களை, சமூக நலத் துறையின் மூலமாக பல நேரங்களில் தேர்தல் நேரத்திலே, மற்ற நேரங்களிலே இந்த அரசு அறிவித்தது ஞாபகம் இருக்கலாம். தாலிக்குத் தங்கம் தருவோம் என்று சொல்லி ரூ. 10 லட்சம் ஒதுக்கினார்கள். அது என்னவாயிற்று என்று தெரியவில்லை. அடுத்தபடியாக கருவுற்ற தாய்மார்களுக்கு ரூ. 50 என்று மாதத்திற்கு தருவார்கள் என்று சொன்னார்கள். அதாவது ஒரு பகுதியிலே தருவதாகவும் கொட்டாம்பட்டியிலே தருவதாகவும் பிறகு நாடு பூராவும் தருவதாகவும் சொன்னார்கள். அது நடைபெற்றதாகத் தெரியவில்லை. பட்டினியால் சாவதுபோல இருந்தால், தாசில்தார் வந்து ரூ. 100 கொடுப்பார் என்று சொன்னார்கள். அதாவது இந்த நாட்டிலே நடைபெற்றதாகத் தெரியவில்லை. படித்த பட்டதாரிகளுக்கு ரூ. 100 என்று சொன்னார்கள். எஸ்.எஸ்.எல்.சி. படித்தவர்களுக்கு ரூ. 75 தருவது என்றும் சொன்னார்கள். அது எத்தனை பேர்களுக்குக் கொடுத்திருக்கின்றார்கள் என்ற கணக்கு இந்த துறையிலே இதுவரைக்கும்

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1987 ஏப்ரல் 21

கொடுக்கவில்லை. ஐந்து கிலோ அரிசி வாங்கினால் ஒரு கிலோ அரிசி இனாம் என்று சொன்னார்கள். அது கிடைக்கவில்லை. வேலையில்லாத விவசாயத் தொழிலாளர்களுக்கு தினம் ஒரு ரூபாய் கூலியாகத் தரப்படுவதாகச் சொன்னார்கள். அப்படி தரப்படுவதாகத் தெரியவில்லை. சொன்ன வாக்குறுதிகளை நம்பி பல இளைஞர்கள் இருக்கின்றார்கள். அவர்கள் தங்களுக்குக் கிடைக்கவில்லை என்ற அளவில் விரக்தியான நிலைமைக்கு ஆட்பட்டிருக்கின்றார்கள் என்பதை நீங்கள் எல்லாம் தெரிந்து கொள்ள வேண்டும் என்று சொல்லிக் கொள்கிறேன்.

அவ்வை இல்லங்கள் போன்ற இல்லங்கள் இருக்கின்றன. அந்த இல்லங்களில், பெண்கள் பாதுகாப்பு இல்லங்களிலே நடக்கின்ற சூழல்கள் அதிகமாக ஆகிக் கொண்டிருக்கின்றன. இங்கே பல திருமணங்கள், கலப்புத் திருமணங்கள் செய்து கொண்டு பெண்கள் இந்த மாதிரி இல்லங்களிலே இருக்கின்றவர். அவர்கள் பிறகு மனம் மாறி அவர்களுடைய கணவர்கள் இடத்திலே சேர வேண்டுமென்று சொன்னால் ஒரு முட்டுக் கட்டையை உயர்ந்த சாதிக்காரர்கள் போடுகின்றார்கள். அந்த இல்லங்களிலே இருக்கின்றவர்கள், அதிகாரிகளாக இருக்கின்றவர்களைப் பார்த்துச் சொல்லி அவர்களுக்குச் சங்கடங்களை ஏற்படுத்துகிறார்கள். அவர்களுக்குப் பொருள்களைக் கொடுத்து, பெண்களை வெளியிலே அனுப்பக் கூடாது என்ற அளவுக்கு அவர்கள் செல்வாக்கை பயன்படுத்துகின்றார்கள். இதையெல்லாம் அரசு கண்காணிக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு பல இடங்களில் சிறுவர்களாக இருக்கின்றவர்கள், சிறு குற்றங்களைச் செய்தவர்களாக இருக்கின்றவர்களை, அந்தக் குற்றவாளிகளை பெரியவர்கள் இருக்கின்ற சிறைச்சாலைக்கு அனுப்பியிருப்பதாகப் புகார்கள் எல்லாம் அரசுக்கு வந்திருக்கின்றன. உயர்நீதி மன்றத் தலைமை நீதிபதி அவர்கள்கூட இதைப்பார்த்துக் கண்டித்திருக்கின்றார்கள். அப்படிப்பட்ட அதிகாரிகள் மீது கண்டிப்பான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. மா. மீனாட்சிசுந்தரம்]

இங்கே சமூக நலத் துறையில் வேலை செய்கின்றவர்கள் இருக்கின்றார்கள். அதாவது சமூக நலத் துறைக்கு வேறு துறையைச் சேர்ந்தவர்கள் ஊழியர்களாக கிட்டத்தட்ட 200 பேர்கள் வந்திருக்கின்றார்கள். அவர்களை அங்கே நியமனம் செய்திருக்கின்றார்கள். இன்றையதினம், அவர்களின் தாய்த் துறைக்கே அவர்களை அனுப்புகின்ற ஒரு நிலைமை ஏற்பட்டிருக்கின்றது. இந்த அரசு அதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது. இந்த 200 பேர் பழைய துறைக்கு, சுகாதாரத் துறைக்குப் போனால், அவர்கள் அங்கே சென்று பதவி ஏற்கிறபோது, அங்கே வேலை செய்கின்ற நிரந்தரத் தொழிலாளர்கள் சில பேர்—முதலமைச்சர் அவர்கள் அறிவித்த திட்டத்தின்கீழ், 10,000 பேர்களுக்கு வேலையளிக்கின்ற திட்டத்தின்கீழ் வேலைக்கு வந்தவர்கள்—பாதிக்கப்படுகிறார்கள். அவர்கள் எல்லாம் வீட்டிற்குப் போகின்ற நிலைமை இருப்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். அதிலே இந்த இலாகாவிலே சில மோசடியான நிலைமைகள் இருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அதையெல்லாம் போக்கி அவர்களை அந்தத் துறையில் நிரந்தரமாக்கவும், பதவி உயர்வு தரவும் வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அது சம்பந்தமாகப் பல விண்ணப்பங்கள் இந்த அரசுக்கு வந்து இருப்பது தெரியும். அதுமாதிரி சங்கடங்கள் இந்த ஊழியர்களுக்கு இருக்கின்றன. ஒரு வருடம், இரண்டு வருடம் இந்தத் துறையிலே வேலை செய்பவர்களை வீட்டிற்கு அனுப்பாமல் எப்படியாவது அவர்களை அந்தத் துறையிலே சேர்த்து அவர்களுக்குப் பதவி உயர்வு அளிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

அதோடு திருச்சியிலே, குழந்தைகள் காப்பகத்திலே நான்கு குழந்தைகள் இறந்தது உங்களுக்குத் தெரியும். அதிலே இரண்டு குழந்தைகளுக்கு போஸ்ட் மார்ட்டம் செய்யாமலேயே ஒளித்து விட்டார்கள்.

புதுக்கோட்டையிலே காப்பகத்திலே பெண் கற்பழிப்பு சம்பவம் நடைபெற்றிருக்கிறது என்பது உங்களுக்குத் தெரியும்.

[திரு. மா. மீனாட்சிசுந்தரம்] [1987 ஏப்ரல் 21

ஒரு கண்காணிப்பாளர் கடலூரிலே 20 ஆயிரம் ரூபாய் நோட்டுகளை எடுத்துக்கொண்டு போய் விட்டார் என்று தெரிகிறது. அதற்காகக் கேஸ் போடப்பட்டு பதிவாகியிருக்கிறது. எப்படி என்றால் முட்டைத் திருடியதாகக் கேஸ் பதிவு செய்து இருக்கிறார்கள். அந்த மாதிரியான அதிகாரிகளை எல்லாம் உடனடியாகக் கண்காணிக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன். இந்தத் துறை சமூகத்தை முன்னேற்ற பல வகையிலும் முற்போக்கான பகுத்தறிவுச் சிந்தனையோடு செயல்பட, பகுத்தறிவுச் சிந்தனையை நாட்டில் பரப்ப உறுதுணையாக இருக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி தெரிவித்து அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

(பிற்பகல் 12.40)

**திரு. மு. பாண்டுரங்கன்**: மாண்புமிகு பேரவை மாற்றுத் தலைவர் அவர்களே, இன்று மாண்புமிகு சத்துணவு மற்றும் சமூக நல அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள கோரிக்கை எண் 30-ஐ வரவேற்று அதன்மீது என்னுடைய ஒருசில கருத்துக்களைக் கூற விழைகிறேன்.

"கொடிது, கொடிது, வறுமை கொடிது, அதனினும் கொடிது இளமையில் வறுமை" என்ற சொற்றொடர்களை மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் நன்கு உணர்ந்தவர்கள். இளம் வயதில் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் பசிக் கொடுமையால் துன்புற்றிருக்கிறார்கள். அந்த நிலை தமிழகத்தில் உள்ள ஏழை எளிய மக்களுக்கு வந்துவிடக் கூடாது என்ற நல்ல எண்ணத்தினால்தான், வறுமையை, இல்லாமையை, இந்த நாட்டை விட்டே விரட்ட வேண்டும் என்று கங்கணம் கட்டிக் கொண்டு மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செயல்பட்டு வருகிறார்கள்.

சமுதாயத்தில் மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவர்கள் மூன்று சாரார். ஒன்று மகளிர், இரண்டு குழந்தைகள், மூன்று உடல் ஊனமுற்றவர்கள். இதில் மகளிரைப்



1987 ஏப்ரல் 21] [திரு. மு. பாண்டுரங்கன்]

பொறுத்தவரையில் சமூக பொருளாதார வளர்ச்சியில் அவர்களுக்குச் சம வாய்ப்பு அளிக்க வேண்டும். அதுபோல ஆதரவற்ற பெண்களுக்கும், விதவைகளுக்கும் அவர்களுக்குத் தேவையான நேரத்தில சட்ட உதவி மற்றும் அவர்களுக்கென்ற ஏற்படுத்தப்பட்ட சமூக, பொருளாதாரத் திட்டத்தின்கீழ் பலவகை உதவிகளைச் செய்தல் ஆகியவற்றையும் மாண்புமிகு புரட்சித் தலைவரவர்கள் மேற்கொண்டிருக்கிறார்கள். அதுபோல 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய சத்துணவு, உடல் நலம் மற்றும் கல்வி முதலியவைகளை அளித்தல் ஆகியவற்றையும், உடல் ஊனமுற்றோர் உள்ளத்தால் ஊனமுற்றோர் அல்ல என்பதனை உணர்ந்து, அவர்கள் தங்கள் இயலாமையை மறந்து சமூகத்தில் மற்றவர்களைப் போல தகுந்த நிலையை அடைவதற்குத் தேவையான உதவிகளை இன்றையதினம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் செய்து வருகிறார்கள். ஆக, 1947 ஆம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட மகளிர் நலப் பிரிவு, சமூக நலத் துறை என்ற தனித் துறையின் கீழ் மகளிர், குழந்தைகள், உடல் ஊனமுற்றோர் நலப் பணிகளில் அதிகப் பங்கேற்கும் பேரியக்கமாகச் செயல்பட்டு வருவதை, தமிழக மக்கள் உளமார வரவேற்பார்கள் என்பதில் இரு கருத்துக்கள் எழ வாய்ப்பே கிடையாது.

அடுத்து, மகளிர் நலம் கருதி மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசு எழுதுபொருள் உற்பத்தித் தொழில் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி, 975 பெண்களுக்கு பயிற்சி அளித்துள்ளதுடன் அதில் 700 பெண்களுக்கு இத்திட்டத்தின்கீழ் வேலைவாய்ப்பையும் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. பனைப் பொருள் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதென்றும், கிராமப்புற நூற்பு மையம் தொடங்கப்பட்டு பல பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளதென்றும், சாக்குக்கட்டி மற்றும் மெழுகுவர்த்தி உற்பத்திக் கூடம் ஆரம்பித்து பல மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது என்றும், கயிறு தயாரிக்கும் பயிற்சி நிலையம் அமைக்கப்பட்டு இதுவரை பல நூற்றுக்கணக்கான மகளிர்க்கு கயிறு தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளதென்றும் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது. அதுபோல பட்டு நூல் தயாரிக்கும் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் பல மகளிர்க்கு வேலைவாய்ப்பு அளிக்கப்

[திரு. மு. பாண்டுரங்கன்] [1987 ஏப்ரல் 21

பட்டுள்ளதென்றும், தையல் கூட்டுறவுச் சங்கங்களின்மூலம் 6,000 மகளிர் உறுப்பினர்களுக்கு வேலைவாய்ப்பு அளிக்கப் பட்டுள்ளதென்றும், தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் துறைகளில் மகளிர்க்கு சுமார் 120 தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது என்பதையும் கொள்கை விளக்கக் குறிப்பில் குறிப்பிட்டிருப்பது தமிழகத்து மகளிர் மனதை எந்த அளவு குளிர வைக்கும் என்பதையும், மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களின் அரசின்மீது மகளிர்க்கு எந்த அளவு நம்பிக்கை வளரும் என்பதையும் படம் பிடித்துக் காட்டுகிறது.

அதுமட்டுமல்லாமல், வழிகாட்டி நிலையங்களின் மூலம் 63,150 ஏழைப் பெண்களுக்கு வங்கி மூலம் கடனுதவி பெற்று சிறு தொழில் செய்ய வழி வகை செய்யப்பட்டுள்ளதையும், விதவை களின் குழந்தைகளுக்குப் பாடப் புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்கள் ஆகியவைகளை இலவசமாக வழங்கும் திட்டத்தையும் ஆதரவற்ற விதவைகளின் பெண்களுக்கும், அனாதைப் பெண் களுக்கும், விதவைகளுக்கும் இந்த அரசு திருமணம் செய்து வைக்க திட்டம் தீட்டி செயல்பட்டு வருவதையும் அறியும்போது "வாழ்த்த வாயும், நினைக்க மட நெஞ்சும், தாழ்த்தச் சென்னியும், தந்த தலைவனை, மாண்புமிகு புரட்சித் தலைவரை, சூழ்த்த வா வினையேன் . நெடுங்காலமே" என்றுதான் சொல்லத் தோன்றுகிறது.

அடுத்து, குழந்தைகள் நலத்தைப் பொறுத்தவரையில் "Strong mind in a strong body" "உறுதியான உடலில்தான் உறுதியான மனம் அமையும்" என்னும் பழமொழி பொய்க்கா வண்ணம், தமிழகத்து மாண்புமிகு முதலமைச்சர் கருணை வள்ளல், இந்நாட்டு மழலைச் செல்வங்கள் பட்டினியால் வாடிவிடக் கூடாது என்ற ஒரே நோக்கம் கருதி "மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்" என்ற தலைப்பின்கீழ் கிராமப்புறங்களில் 23,081 குழந்தைகள் நல மையங்களையும், நகர்ப்புறங்களில் 5,044 குழந்தைகள் நல மையங்களையும் நிறுவியிருக்கிறார்கள். அப்படி இவை,



1987 ஏப்ரல் 21] [திரு. மு. பாண்டுரங்கன்]

தமிழகத்திலுள்ள குழந்தைகளுக்குத் தினம் தினம், பல இலட்சம் குழந்தைகளுக்குச், சத்துணவு அளித்து வருகிறார்கள். இந்தத் திட்டத்தை வெளி மாநிலத்தவரும், ஏன், பல வெளிநாட்டவரும் வரவேற்று, பின்பற்ற முயற்சி செய்து வருகிறார்கள் என்பதை எண்ணிட வேண்டும். இதில் 84,375 மகளிர் பணிபுரிந்து வருகின்றனர். இது மகளிர்க்கு ஒரு பெரிய வாய்ப்பாக ஆகும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

உடல் ஊனமுற்றோர் நலத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் சுமார் 40,000 உடல் ஊனமுற்றோர் பயன் அடைந்து வருகிறார்கள் என்பதை அறியும்பொழுது புரட்சித் தலைவரின் அரசைத் தமிழக மக்கள் வாழ்க, வளர்க என்று சொல்வார்களேயல்லாமல் தேய்க என்றா சொல்லப்போகிறார்கள்?

"உறுபசியும் ஓவாப் பிணியுஞ் செறுபகையுஞ்
சேரா தியல்வது நாடு"

என்பது வள்ளுவர் வாக்கு. தமிழகத்தில் பசி, பிணி, பகை இல்லாமல் இருக்க புரட்சித் தலைவரின் அரசு அரும் பாடுபட்டு வருகிறது. குறிப்பாக ஏழை எளிய, நடுத்தர மக்களுக்காக நல்ல பல திட்டங்களைத் தீட்டி அவர்களின் வாழ்வு வளம் பெற இந்த அரசு பல உதவிகளைச் செய்து வருகிறது. ஆனால் சத்துணவு மையங்களில் திருட்டுப் போகவில்லையா என்று கேட்டால், உடனடியாக போகிறது என்றுதான் பதில் சொல்ல வேண்டி யுள்ளது. யாராயிருந்தாலும், புரட்சித் தலைவர் அரும்பாடு பட்டு நடத்துகின்ற இந்தத் திட்டத்தின்கீழ் தவறு செய்தால் கடுந்தண்டனைக்கு உரியவர்கள்தான். அவர்களைத் தட்டிக் கேட்க ஒவ்வொரு கிராமத்திலும் மகளிர் குழுக்களை அமைத்து கண்காணிப்பு செய்து குற்றங்கள் குறைவதற்கு வாய்ப்பு ஏற்படுத்தித் தர வேண்டுமென்று இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், வருகைப் பதிவேட்டில் அதிகமான அனைத்துப் பெயர்களை எழுதிக் காட்டி, மாதாமாதம் அதிகத் தொகையினைக் கள்ளத்தனமாக எடுத்துக்கொள்ளும் தனியார் பள்ளிகளை

[திரு. பூ. பாண்டுரங்கன்] [1987 ஏப்ரல் 21

நடத்தும் தலைமை ஆசிரியர்களும், தனியார் பள்ளிகளை நடத்தும் நிர்வாகிகளும் கண்காணிக்கப்பட வேண்டியவர்கள். ஆங்காங்கே இருக்கின்ற அதிகாரிகள் இதைக் கண்ணுற்று, அவ்வப்பொழுது உரிய நடவடிக்கைகளை எடுக்குமாறு இந்த மாமன்றத்தின் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த அரசு ஏழை எளிய, பாட்டாளி மக்களின் அரசு, நடுத்தர மக்களின் அரசு. புரட்சித் தலைவரவர்கள் எந்தத் திட்டத்தைத் தீட்டினாலும் ஏழை மக்களுக்குப் பயன் செல் கிறதா என்பதை ஆராய்ந்துதான் திட்டங்களைத் தீட்டுகிறார்கள். தமிழகத்து மக்கள் புரட்சித் தலைவர் பக்கம்தான் இருந்து வருகி றார்கள். புரட்சித் தலைவரவர்களை மக்களிடமிருந்து பொய்க் காரணங்களைக் கூறி, பிரிக்க எத்தனிப்பது முடியாத காரியம் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

People of Tamil Nadu, Unite. There is nothing to fear but the loss of the chain. The whole of Tamil Nadu is at M.G.R.'s feet.

என்று சொல்லி என் தொகுதியிலே ஒரு சர்க்கரை ஆலையை நிறுவித் தர வழிவகை செய்யுமாறு வேண்டிக் கேட்டுக்கொண்டு அமைகின்றேன். நன்றி, வணக்கம்.

* திரு. எம். செல்லமுத்து: மாண்புமிகு பேரவையின் மாற்றுத் தலைவர் அவர்களே, சமூக நலம், கதர் வாரியத் துறையின் சார் பிலே கொண்டு வரப்பட்டிருக்கின்ற மானியக் கோரிக்கைகளின் மீது நான் சார்ந்துள்ள மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் ஒருசில கருத்துக்களைக் கூற விரும்புகிறேன். இந்தச் சமூக நலத்துறை குறிப்பேடுகளைப் படித்துப் பார்த்தால் ஏராளமான புள்ளி விவரங்களை அள்ளித் தந்திருக்கிறார்கள். குறிப்பாகப் பெண்களுக்காக பல்வேறு திட்டங்களை அவர்கள் சொல்லியிருக்கின்றார்கள். அதிலே பல புள்ளி விவரங்களெல்லாம் இருக்கின்றன. இந்த ஒரு இடத்தில் இருந்து அமர்ந்து



1987 ஏப்ரல் 21] [திரு. எம். செல்லமுத்து]

படித்துப் பார்ப்போமேயானால் உள்ளபடியே இவ்வளவு சலுகை களைச் செய்திருக்கிறார்களா என்று ஒரு மலைப்புகூடத் தோன்றக்கூடும். ஆனால், நடைமுறையில் கிராமப்புறங்களிலே அல்லது நகரங்களிலே பார்க்கின்றபொழுது, இவைகளெல்லாம் அந்த மக்களுக்குப் போதுமானவையா என்றால் நிச்சயமாக இருக்காது. அதற்காக ஒதுக்கியிருக்கக்கூடிய பணம் கூட போதுமானது அல்ல என்பதை நான் முதலிலேயே சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

இன்றைக்குப் பெண்களுடைய முன்னேற்றத்திற்கு அவர் களைப் பொருளாதார ரீதியில் சமப்படுத்துவதற்கு, சரிப்படுத்து வதற்கு உயர்த்துவதற்கு இதில் பல்வேறு திட்டங்களைக் கூறியிருந் தாலும் அந்தத் திட்டங்களெல்லாம் நீங்கள் சொல்லியிருக்கின்ற அந்த ஏழை எளிய தாய்மார்களுக்குப் போய்ச் சேர்கின்றனவா என்றால் நிச்சயமாக அவை போய்ச் சேரவில்லை. எங்கோ ஓரிரு இடங்களில் நடைபெறுகின்றன. அப்படி நடைபெறுகின்ற திட் டங்கள்கூட முறையாக அமல்படுத்தப்பட முடியாத அளவிற்கு பல்வேறு சிக்கல்கள் இன்றைக்கு நிகழ்ந்து கொண்டிருக்கின்றன.

குறிப்பாகப் பெண்கள் என்று சொன்னாலே இன்றைக்குத் தமிழகத்தில் ஒரு இரண்டாந்தர பிரஜையாக நினைக்கக்கூடிய ஒரு போக்காக இருக்கிறது. சமூகக் கொடுமைகளின் காரணமாக, இலாபத்திற்காக இயங்குகின்ற ஒரு சமூக அமைப்பின் காரண மாக, முதலாளித்துவ சமூகச் சுரண்டல் அமைப்பு இருக்கின்ற காரணத்தினாலே, எல்லாம் இலாபத்திற்கு என்ற அளவிற்கு நிலைமை மாற்றப்பட்டதற்குப் பின்னாலே பெண்களும் ஒரு வர்த்தகப் பொருளாக, ஒரு வியாபாரப் பொருளாக மாற்றப்பட் டிருக்கின்ற ஒரு சூழ்நிலையில் இன்றைக்குச் சமுதாயத்திலே பெண்கள் மிகப் பெரிய கொடுமைகளுக்கு ஆளாக்கப்பட்டு, துன்ப துயரங்களுக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். அவர்களுக்காகக் கொண்டுவரப்படக்கூடிய சட்டங்களெல்லாம் ஏட்டளவில் இருக்கின்றனவே தவிர, அந்தப் பெண்கள் அவைகளைப் புரிந்து கொள்வதற்கான வாய்ப்பு வசதிகளையும், சூழ்நிலைகளையும் உருவாக்கித் தர முடியாத ஒரு இக்கட்டான நெருக்கடி இன்றைக்கு

[திரு. எம். செல்லமுத்து] [1987 ஏப்ரல் 21

(பிற்பகல் 12-50)

இருக்கிறது. அப்படிக் கொண்டுவர வேண்டும் என்பதுதான் நோக்கம் என்று சொன்னாலும் நடைமுறைக்கு வராமல் இருக்கிறது.

அடுத்தபடியாக இன்றைக்கு வரதட்சணைக் கொடுமை மிகவும் கடுமையாக இருக்கிறது. பல பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் சாகடிக்கப்படுகிறார்கள். வரதட்சணைக் கொடுமையால் எந்த மாமியாரும் சாகடிக்கப்படவில்லை; சாவது எல்லாம் மருமகளாகவே இருக்கிறார்கள். இப்படிச் சாகடிக்கக் கூடிய சூழ்நிலை தமிழ்நாட்டில் பரவலாக இருக்கிறது. இந்த நிலைமையை மாற்ற வேண்டும். ஆகவே, வரதட்சணைக் கொடுமையை ஒழிக்க, பெண்கள் வரதட்சணைக் கொடுமையால் சாகடிக்கப்படுவதைத் தடுக்க, கடுமையான சட்ட திட்டங்களைக் கொண்டுவந்து நிறைவேற்ற வேண்டும். வரதட்சணை காரணமாக பெண்கள் இறந்ததாகத் தெரிய வந்தால் தகுந்த முறையில் விசாரணை நடத்தி, உரியவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுத்து, அவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்பட வேண்டும். அதற்கு ஏற்ற வகையில் சட்ட திட்டங்களைக் கொண்டுவர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வரதட்சணைக் கொடுமைகளைத் தடுக்க தாலுகாவிற்கு ஒரு வழிகாட்டும் நிலையத்தை அமைக்க வேண்டும். மனோதத்துவ நிபுணர்கள், சமூக சேவையில் ஈடுபட்டுள்ளவர்கள், வழக்கறிஞர்கள் ஆகியவர்களைக் கொண்ட குழுக்களை அமைக்க வேண்டும். அந்தக் குழுக்கள் மூலமாக நேரடியான விசாரணை நடத்தி, வரதட்சணைக் கொடுமையால் சாகடிக்கப்பட்டார் அல்லது இறந்துபோனார் என்று தெரிந்தால் அதற்குக் காரணமாக இருந்தவர்களைக் கடுமையாகத் தண்டிக்க வழிவகை செய்ய வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

இன்றைக்குப் பெண்களுக்காகக் கொண்டுவரப்பட்டுள்ள பல சட்டங்கள் வெறும் ஏட்டளவிலேதான் இருக்கின்றன. அந்தச் சட்டங்களை எல்லாம் பெண்கள் நலனுக்காக, நல்ல முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. எம். செல்லமுத்து]

அடுத்து, பெண்களை இன்றைக்கு வியாபாரத்திற்குப் பயன் படும் விளம்பரப் பொருளாக மாற்றியிருக்கிறார்கள். இன்றைக்கு ஏற்பட்டிருக்கக்கூடிய கலாச்சார சீர்கேடுகளின் காரணமாக சினிமாத் துறையில்கூட பெண்களை மிகவும் மோசமாக வர்ணிக்கக் கூடிய நிலைமை, பெண்கள் தரக்குறைவாகத் தாழ்த்தப்படும் நிலைமை இருக்கிறது. அது மட்டுமல்லாமல் 'ஒருவனுக்கு ஒருத்தி' என்ற நிலைமை மாற்றப்பட்டு, ஒரு ஆண் எத்தனை பெண்களை வேண்டுமானாலும் மணம் செய்துகொள்ளலாம் என்ற கருத்தை சினிமா மூலம் போதிக்கிறார்கள். இவற்றை எல்லாம் கட்டுப்படுத்த அரசு உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

வியாபாரமானாலும் சரி, விளம்பரம் ஆனாலும் சரி; பெண்களை சித்தரமாக நடத்தக்கூடிய சூழ்நிலை உருவாகியிருக்கிறது. அதைத் தடுப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்கவில்லை. அதை எல்லாம் தடுப்பதற்கு அரசாங்கம் தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போன்று, கருவுற்ற தாய்மார்களுக்கு எல்லாம் மாதம் 50 ரூபாய் விதம் 3 மாதங்களுக்குத் தரப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையிலும் சொன்னார்கள். அது இன்றைக்கு அமுல்படுத்தப்படவில்லை. அறிவித்தபடி அதை அமல்படுத்த வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

சமத்துவம், சமத்துவம் என்று பேசுகிறோம். ஆனால் நடைமுறையில் நிலைமை எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும். இன்றைக்கு ஆண்களுக்கும் பெண்களுக்கும் கூலி வழங்குவதிலே வித்தியாசம் இருக்கிறது. விவசாயத் துறையில் ஈடுபட்டிருக்கிற பெண்களுக்கும் ஆண்களுக்கும் கூட கூலி வித்தியாசம் இருக்கிறது. அதைப்போன்று மற்ற துறைகளிலும் இருக்கிறது. நெசவுத் தொழிலில் ஈடுபட்டிருப்பவர்களுக்கும் இந்த வித்தியாசம் இருக்கிறது. சமத்துவம் பற்றிப் பேசுகிறோம். நேர்மையாகப் பேசுகிறோம், தாய்க்குலம் பற்றிப் பேசுகிறோம். ஆனால்

[திரு. எம். செல்லமுத்து]  [1987 ஏப்ரல் 21

பெண்களுக்குப் பாதுகாப்பு, வேலை செய்கின்ற பெண்களுக்குப் பாதுகாப்புக்கான உத்தரவாதம், சம வேலை வாய்ப்புக்கு உத்தரவாதம் இருக்கிறதா என்று பார்த்தால் நிச்சயமாக இல்லை. குறிப்பாக திருவாரூர் ஒன்றியத்தில் சுமார் 410-க்கு அதிகமான ஆசிரியர்கள் வேலை செய்கிறார்கள். அதிலே ஏறத்தாழ 100 பெண்கள்தான் இடம் பெற்றிருக்கிறார்கள். அதைப்போன்று கோடாச்சேரி ஒன்றியத்தில் சுமார் 300-க்கு அதிகமான ஆசிரியர்கள் இருக்கிறார்கள். அதில் 100 பேர்கள் அளவுக்குத் தான் பெண்கள் இடம் பெற்றிருக்கிறார்கள். சமுதாய விடுதலைக்கு பெண்கள் விடுதலை முக்கியம் என்று சொல்கிறோம். ஆனால் பெண்களுக்கு வேலைவாய்ப்பில் சமஉரிமை இல்லை; கூலி வழங்குவதில் சம வாய்ப்பு இல்லை; சமூகத்தில் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு இல்லை. ஆண்களுக்குச் சமமாகப் பெண்கள் நடத்தப்படவில்லை. அந்தச் சமநிலையை உருவாக்க உடனடியாக தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சமநிலை இல்லை என்பதற்கு உதாரணமாகச் சொல்ல வேண்டும் என்றால், சட்டமன்ற உறுப்பினர்களானாலும் சரி, அமைச்சர்களானாலும் சரி, இங்கேயே அந்த நிலை இல்லை. சமுதாயத்தில் ஆணுக்கு இருக்கிற உயர்ந்த நிலை பெண்களுக்கு இல்லை; சமத்துவம் கிடைக்கவில்லை. அந்தச் சமத்துவத்தை உருவாக்க இந்தச் சமூக நலத்துறையும் அரசும் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

நான் அடுத்தபடியாக குறிப்பிட விரும்புவது சத்துணவு மையம் பற்றி. சத்துணவு என்று சொல்லும்போது நாங்கள் அதை வெறுப்பதாக அர்த்தமில்லை. அமைச்சரிடமே இதுபற்றிப் பல முறை பேசியிருக்கிறேன். சத்துணவு வரவேற்கக்கூடிய ஒன்று. சத்துணவு என்றால் சமூகச் சீர்கேடு காரணமாக, முதலாளித்துவ அமைப்பு காரணமாக, நாட்டு மக்களைப் பிச்சைக்காரர்களாக்கி, அவர்களுக்குப் பிச்சை போடுவதைப்போல அமைந்திருந்தாலும் இந்தத் திட்டத்தை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால் இந்தச் சத்துணவுத் திட்டத்திற்காகச் செலவிடுகிற பணத்தை, இதற்காக ஒதுக்கக்கூடிய நிதியை எப்படிச் செலவழிக்கிறார்கள் என்று



1987 ஏப்ரல் 21]  [திரு. எம். செல்லமுத்து]

எண்ணிப் பார்க்கும்போது உண்மையிலேயே வருந்தத்தக்கதாக
இருக்கிறது. சத்துணவு மையங்கள் எல்லாம் இன்றைக்குச் சீராக,
செம்மையாக நடைபெறுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள்
என்னுடைய தொகுதிக்கு வந்திருந்தபோது சிறப்பாக எடுத்துச்
சொன்னார்கள். ஆனால் இன்றைக்கு அதிலே போடக்கூடிய
உணவு சத்தான உணவாக இருக்கிறதா என்பதை எண்ணிப்
பாருங்கள். கோவை மனையியல் கல்லூரியின் சார்பில் ஒரு
குறிப்பினைத் தயார் செய்து எல்லோருக்கும் கொடுத்தார்கள்.
அப்படி எங்கேயாவது சத்துணவு போடப்படுகிறதா என்று தயவு
செய்து எண்ணிப் பாருங்கள். இன்றைக்குச் சத்துணவு மையங்
களில் எல்லாம் சாம்பார் சாதத்தையும், வெறும் ரசம் சாதத்
தையும் போட்டுவிட்டு கணக்கை எழுதி முடித்துவிடுகிறார்கள்.
சத்தான உணவாகக் காப்பட[?]வில்லை. சத்தான உணவாக—
கோவை மனையியல் கல்லூரியில் என்ன கைட்லைன்ஸ் கொடுக்கப்
பட்டிருக்கிறதோ அந்த முறையில்—கொடுக்க ஏற்பாடு செய்ய
வேண்டும். அந்த வகையில் அமல் நடத்த வேண்டுமென்று நான்
கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து அதிலே பணி புரியக்கூடிய ஊழியர்களுக்கு ஏராள
மான கோரிக்கை இருக்கிறது. 12 கோரிக்கைகளை முதலமைச்ச
ரிடம் தந்ததாகச் சொல்கிறார்கள். அந்தச் சத்துணவு அமைப்
பாளர்களின் கூலி விகிதம் மிகவும் குறைவாக இருக்கிறது.
அதற்குக் காரணம் அவர்கள் பகுதி நேர ஊழியர்கள்தானே
என்று சொல்கிற நிலைமை இருக்கிறது. ஆனால் அவர்கள்
காலை 9-00 மணிக்கு வரவேண்டும். அவ்வாறு வந்து ஏறத்தாழ
2 மணி வரையில் வேலை செய்ய வேண்டி இருக்கிறது.
அதற்குப் பின்னர் வேறு எங்கே போய் வேலை செய்வது?
எனவே 150 ரூபாய், 60 ரூபாய் என்று கொடுப்பது உள்ளபடியே
அவர்களுக்குப் போதுமானதாக இல்லை. இன்றைக்குச் சமுதாயத்
திலே மற்ற துறைகளில் எல்லாம் எவ்வளவோ சம்பளங்கள்
வழங்கப்படுகின்றன. இவர்களும் மனிதர்கள்தான். எனவே
அவர்களுடைய கூலியை உயர்த்தித் தந்து அவர்களை நிரந்தர
மாக்கி, சகல வசதிகளைச் செய்து கொடுக்கவேண்டும் என்று [illegible]
கேட்டுக்கொள்கிறேன்.

136521

[திரு. மு. பாண்டுரங்கன்] [1987 ஏப்ரல் 21

அடுத்து அவர்களுக்கு ஒதுக்கக்கூடிய பருப்பு, அரிசி போன்றவற்றைப் பற்றி எல்லாம் சொல்கிறார்கள். இந்தத் திட்டத்தைப் பொறுத்தவரையில் ஆரம்ப காலத்தில் இருந்த அந்தப் பொருட்களின் விலையோடு இன்றைய விலையை ஒப்பிட்டுப் பாருங்கள். புளி என்ன விலை? பூண்டு என்ன விலை? கடுகு என்ன விலை? எரிபொருள் விலை என்ன? இதை எல்லாம் எண்ணிப் பார்த்து தற்போதைய விலைவாசிக்கேற்ப உயர்த்தித் தந்து, அவர்கள் தரமான உணவைச் சமைத்துக் கொடுக்கக்கூடிய சூழ்நிலைகளை அவர்களுக்கு உருவாக்கிக் கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படிப்பட்ட சூழ்நிலைகளை சத்துணவு அமைப்பாளர்களுக்கு உருவாக்கிக் கொடுத்தால்தான் நல்ல வகையில் சத்துணவு கொடுக்கின்ற சாத்தியம் ஏற்படும் என்று நான் கூற விரும்புகிறேன்.

அடுத்து இன்றைக்குச் சத்துணவு அமைப்பாளர்கள் எல்லாம் மிகப் பெரிய கெடுபிடிக்கு உள்ளாக்கப்படுகிறார்கள். அவர்கள் ஒவ்வொருவரும் இத்தனை குடும்பக் கட்டுப்பாடு கேஸ் கொண்டு வரவேண்டுமென்று வற்புறுத்தப்படுகிறார்கள். D.D.O. வானாலும் சரி, B.D.O. வானாலும் சரி என்ன சொல்கிறார்கள்? இரண்டு கேஸ், மூன்று கேஸ், நான்கு கேஸ் கட்டாயமாகக் கொண்டுவர வேண்டுமென்று சொல்கிறார்கள். எனவே அவர்கள் குழந்தைகள் சத்துணவு மையத்தை விட்டுவிட்டு, தாய்மார்களைத் தேடி அல்லது ஊரிலே இருக்கின்ற முக்கியமானவர்களைத் தேடி அலைந்து குடும்பக் கட்டுப்பாட்டுக்காக ஆட்களைக் கொண்டு வரவேண்டிய அவல நிலை இருக்கிறது. நீங்கள் சொல்கின்றபடி வளமான குழந்தை சமுதாயத்தை உருவாக்கக்கூடிய அந்த அமைப்பாளர்களுக்குக் குடும்பக் கட்டுப்பாடு வேலை கொடுப்பதைத் தயவுசெய்து நிறுத்த வேண்டும் என்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து இன்றைக்குப் பெண்களுக்கு இருக்கக்கூடிய கஷ்டங்களை எல்லாம் தீர்க்க வேண்டுமென்றால் ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒரு சட்ட ஆலோசனைக் குழுவை அமைக்க வேண்டும். அதேபோல் நிராதரவாக, கணவனால் கைவிடப்பட்ட, பல்வேறு பிரச்சினைகளுக்கு ஆட்பட்ட அந்தப் பெண்கள் தங்



1987 ஏப்ரல் 21] [திரு. எம். செல்லமுத்து]

தங்களுடைய குறைகளை நிவர்த்தி செய்து கொள்வதற்கும் ஒரு அமைப்பை உருவாக்குவதற்கு நம்முடைய அரசு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து உழைக்கும் பெண்கள். சமூக நலத்துறையின் மூலம் மானியம் பெற்று எக்மோரில் விமன்ஸ் வாலண்டரி சர்வீஸ் பிரிவினர் உழைக்கும் பெண்கள் விடுதியினை நடத்தி வருகிறார்கள். அங்கே 42 பெண்கள் இருக்கிறார்கள். அப்படி 42 பேர்கள் உள்ள இடத்தில் இரண்டு கழிப்பறைகள்தான் இருக்கின்றன. இவ்வாறு இருந்தால் அவர்களால் எப்படி அவற்றைப் பயன்படுத்த முடியும்? அதுபோல் குளிப்பதற்கும் இரண்டு இடம்தான் வைத்திருக்கிறார்கள். இதன் காரணத்தால் அவர்கள் மிகவும் கஷ்டத்தில் இருக்கிறார்கள். அதுமட்டுமின்றி வீட்டிலே அவர்கள் போனால் கூட மெஸ் ஃபீஸ் வாங்கி விடுகிறார்கள். இப்படிப்பட்ட நிலைமையில் அந்த தனியார்கள் நடத்துகிற இடங்கள் இருக்கின்றன. அவை இலாப நோக்கத்தோடு நடத்தப்படுகின்றன. அவற்றை எல்லாம் கட்டுப்படுத்தி, சமூக நலனுக்காக நடத்தப்படக்கூடியதை, அதாவது தொண்டு செய்ய வந்தவர்கள் இலாப நோக்கம் இல்லாமல் நடத்துவதற்கான சூழ்நிலையை உருவாக்கித் தரவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து கதர் வாரியத்துறையின் சார்பில் நடத்தப்படக்கூடிய தொழிற்கூடங்கள் எல்லாம் எங்கோ ஓரிடத்தில் இருக்கின்றன. அவை சாதாரண மக்களுக்கு நன்மை செய்யக்கூடிய அளவில் இல்லை. எனவே ஒவ்வொரு ஒன்றியத்திலும், தாலுக்காவிலும் அதற்கான இயக்குநர்களை நியமித்து எல்லோருக்கும் பயிற்சி தந்து கதர்த்துறை மூலம் எல்லா மக்களுக்கும் நன்மை கிடைக்கக்கூடிய ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-00)

அடுத்து முதியோருக்கும், ஊனமுற்றோருக்கும் உதவி நிதி வழங்கப்படுகிறது. இங்கே ஆளும் கட்சியைச் சார்ந்த சில உறுப்பினர்கள் கூடச் சொன்னார்கள். முதியோர் உதவித் தொகை எல்லோருக்கும் கொடுக்க வேண்டும் என்று சொன்னார்கள். திருக்கோவிலூர் தாலுக்கா ஆபீஸில் 500 பேர்கள் மனுச் செய்திருந்தால் குறிப்பிட்ட

[1987 ஏப்ரல் 21

எண்ணிக்கைத் வரையில் கொடுத்துவிட்டு, மீதி உள்ளவர்களுக்கு யாராவது இறந்தால் கொடுக்கப்படும் என்று சொல்லுகிறார்கள். அப்படி இல்லாமல் எவ்வளவு பேர்கள் மனுச் செய்து கேட்டிருந்தாலும் அவ்வளவு பேர்களுக்கும் உதவித் தொகை வழங்க ஏற்பாடு செய்ய வேண்டும். அதேபோல ஊனம் உற்றவர்கள் மனுச் செய்தால் அந்த மனுவை உரிய முறையில் பரிசீலித்து அவர்களுக்கு உடனடியாக நிவாரணத் தொகை வழங்க வேண்டும்.

அதேபோல விவசாயத் தொழிலாளர்கள். நாமெல்லாம் சொல்வோம். உழவன் சேற்றில் கை வைக்கவில்லை என்றால் இங்கே ஒருவரும் சோற்றில் கை வைக்க முடியாது, உணவு உண்ண முடியாது என்று. அப்படி உணவு உற்பத்தியைப் பெருக்கி நாட்டிற்காக உழைத்து கடைசிக் காலத்தில் தத்தளித்துக் கொண்டிருக்கக்கூடிய விவசாயத் தொழிலாளி, வாழ்விழந்து நிற்கக் கூடிய நேரத்தில், அவர்கள் எத்தனை பேர்கள் இருந்தாலும் அவ்வளவு பேர்களுக்கும், மனுச் செய்யக்கூடிய அத்தனை பேர்களுக்கும், அவர்கள் முதியோர்கள் என்ற தகுதி பெற்றுவிட்டால், அவ்வளவு பேர்களுக்கும் அந்த முதியோர் உதவித் தொகையைக் கொடுக்க வேண்டும். 35 ரூபாய் என்றோ 50 ரூபாய் என்றோ வைத்திருக்கிறார்கள். இவ்வளவு கஷ்டமான விலைவாசி நேரத்தில் (மணியடிக்கப் பெற்றது) அந்தத் தொகையை உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று கேட்டு முடித்துக் கொள்கிறேன்.

டாக்டர், தே. குமாரதாஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று நடைபெறக்கூடிய கதர் கிராமத் தொழில், சமூக நலம், சத்துணவு ஆகியவற்றின் மீது ஜனதா பெரியக்கத்தின் சார்பில் பேசுவதற்கு வாய்ப்பு அளித்தமைக்காக முதலாவதாக நன்றி தெரிவித்துக் கொள்கிறேன். கதர் வாரியத்



1987 ஏப்ரல் 21] டாக்டர் தே. குமாரதாஸ்]

தில் முதலாவதாக பனை ஏறும் தொழிலாளர் மானியமாக கருதி தான் அவர்களுடைய பிரச்சினைகளை உங்கள் முன்னால் எடுத்துக் காட்டி உங்கள் நினைவுக்கு கொண்டு வரலாம் என்று கருதுகிறேன்.

பனை ஏறும் தொழிலாளர்களுக்கு பனை ஏறும் தொழிலுக்கும் பனைப் பொருள் உற்பத்திக்கும் ஊக்கம் அளிக்கிற விதத்தில் பனை வாரியம் ஒன்றை அரசு அமைக்க வேண்டும் என்று கோருகிறேன். அதேபோல் குத்தகை கொடுக்கப்படும் அரசு பனை மரங்கள் பனைத் தொழிலாளர்களுக்கே கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பனைத் தொழிலாளர்களுக்கான இன்ஷ்யூரன்ஸ் திட்டத்தில் அவர்களின் பிரீமியத்தை அரசே செலுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பனைத் தொழிலாளர்களுக்குத் தொழில் செய்ய இயலாத காலத்தில் ஓய்வு ஊதியம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பனைத் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலைச் சரியான முறையில் செய்வதற்கான ஆராய்ச்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். கரும்புக்கு, சர்க்கரைக்கு, வெல்லத்திற்கு எல்லாம் அரசு விலை நிர்ணயம் செய்வதுபோல கருப்புக் கட்டிக்கும் விலை நிர்ணயம் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். பனை ஏறும் தொழிலாளர்களின் குடும்பங்களுக்குக் கல்வி, மருத்துவம், வீட்டு வசதி, வேலை வாய்ப்பு போன்றவற்றில் தனிச் சலுகைகள் வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பனைத் தொழில் செய்யும்போது உயரத்திலிருந்து விழுந்து இறந்தால் பிரேத பரிசோதனை இன்றி உடனடியாக நிவாரணம் வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல விபத்தில் மரணம் அடையும் தொழிலாளிக்கு ரூபாய் 15 ஆயிரம் உதவித் தொகையும் விபத்தில் தொழில் செய்ய இயலாது காயம் அடையும் தொழிலாளிக்கு 7,500 ரூபாயும் உடனடியாக வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அரசின் கடன் உதவி

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 ஏப்ரல் 21

கள் அனைத்தும் பனைத் தொழிலாளர்களுக்கு பனைத் தொழிலாளர்களின் அமைப்புகள் மூலம் கொடுக்கப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதேபோல் பனைத் தொழிலாளர்கள் விபத்தில் மரணம் அடைகிற நேரத்திலே உயரமான பகுதியிலிருந்து விழுந்தால்தான் அவர்களுக்கு அந்த உதவித் தொகை வழங்கக்கூடிய வகையில் ஒரு ஏற்பாடு இருக்கிறது. மரணம் ஏற்படுகிறது என்று சொன்னால் பனைத் தொழிலாளர்கள் மட்டுமல்ல, சாதாரணமானவர்களுக்குக் கூட தடுக்கி விழுந்து மரணம் ஏற்பட முடியும்.

ஆகவே டாக்டர் சர்டிபிகேட்டிலே உயரமான பகுதியிலிருந்து விழுந்தாரா என்று குறிப்பாகக் கேட்டு, அப்படி விழுந்து இறந்தால் மாத்திரம்தான் உதவித் தொகை என்ற சூழ்நிலை இருக்கிறது. அது மாற்றப்பட வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். மில்லை சகோதரர்கள் தொழிலுக்கு செல்லுகிற நேரத்திலே இங்கே விபத்து ஏற்பட்டு மரணம் அடைந்தால் அவர்களுக்கு போஸ்ட் மார்ட்டம் இல்லாமல் அந்த உதவித் தொகை வழங்குகிறார்கள். அதேபோல பனை ஏறும் தொழிலாளர்கள் விழுந்து இறந்தாலும் போஸ்ட் மார்ட்டம் வேண்டும் என்ற நிர்ப்பந்தம் இல்லாமல் அதை மாற்றி அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

அதேபோல எங்களுடைய மாவட்டத்தைப் பொறுத்த வரைக்கும் பனை ஏறும் தொழிலாளர்கள் இருக்கிறார்கள். அவர்களுடைய பிரச்சினையை சொல்லுகிற நேரத்திலே பனையிலிருந்து விழுந்து அரசு ஆஸ்பத்திரிக்குச் செல்லுகிற நேரத்திலே அங்கே உள்ள மருத்துவ வசதிகளை விட தனியார் மருத்துவமனைகளில் சரியானபடி மருத்துவ வசதிகள் உள்ளன. அங்கே செல்லுகிற சந்தர்ப்பத்தில் அதை ஒரு சான்றாக எடுத்து அவர்களுக்கு உதவித் தொகை வழங்க அரசு தயக்கம் காட்டுகிறது. அவர்கள் எந்த மருத்துவர்களிடம் சென்றாலும், எங்கே மருத்துவம் பார்த்தாலும் அதற்கான உதவித் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

1987 ஏப்ரல் 21] [டாக்டர் தே. குமாரதாஸ்]

பனையேறும் தொழிலாளர்களுக்கு இந்த அரசு மதுவிலக்கைக் கொண்டு வந்ததால் 2 ஆயிரம் ரூபாய் வழங்குகிறது. ரொக்கம் ஆயிரம் ரூபாயும் பொருள்கள் ஆயிரம் ரூபாய்க்கும் கொடுப்பதாக அறிவித்து இருக்கிறீர்கள். அந்த இரண்டாயிரம் ரூபாய் முழுவதும் பணமாகக் கொடுத்து விடுவது நல்லது என்று கருதுகிறேன். காரணம் என்னவென்றால் நீங்கள் கொடுக்கிற பொருட்கள் தரமுள்ளதாக இருக்குமா என்றால் இருக்காது. காரணம் நீங்கள் ஒருவருக்கு டெண்டர் கொடுத்து அவர் இன்னொருவரைச் சொல்லிச் சொல்லி அவற்றை வணங்கி வழங்குகிற போது ஆயிரம் ரூபாய்க்கு கொடுக்கப்படும் பொருள்களின் மதிப்பு 400 ரூபாய்க்குள்ளாக அடங்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. இதனால் 600 ரூபாயை அவர்கள் இழக்கக்கூடிய சூழ்நிலை ஏற்படுகிறது. எனவே 2,000 ரூபாயை பணமாகக் கொடுத்து விட்டால் அவர்கள் தரமான பொருள்களைப் பெற்றுக் கொள்ள முடியும்.

அடுத்து கன்னியாகுமரி மாவட்டத்தில் பதநீர் இறக்கும் தொழிலாளர் 16 ஆயிரத்திற்கு அதிகமான பேர்கள் இருக்கிறார்கள். அவர்கள் கள் இறக்குவது கிடையாது. பதநீரை இறக்கி கள்ளாகப் பதப்படுத்திப் பிரிக்கிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே பாதிக்கப்பட்டிருக்கிறவர்கள் கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையிலும் 16 ஆயிரத்திற்கும் அதிகமானவர்கள் இருக்கிறார்கள். இந்த இரண்டாயிரம் ரூபாய் வழங்குவது என்றால் 16 ஆயிரம் பேர்களுக்கும் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். அதற்கு மாறாக ரெவின்யூ அதிகாரியிடம் கேட்டு 100 பேர்கள் ஏறினார்கள், 25 பேர்கள் ஏறினார்கள் என்று அறிக்கை பெற்று அவர்களுக்குத் தான் உதவியென்று சொன்னால் பாக்கியுள்ள ஆயிரக்கணக்கான தொழிலாளர்கள் பாதிக்கப்படுகிற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே இதனைக் கருத்தில் கொண்டு அங்கே பனையேறும் தொழிலாளர்கள் அனைவருக்கும் இரண்டாயிரம் ரூபாய் மானியத் தொகை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பனையேறும் தொழிலாளர்கள் அவர்களுடைய சேர்ந்த பணத்தில் ஜனதா இன்சூரன்ஸ் கட்டி வருகிறார்கள் என்பதை நினைத்துக் கொள்ளுங்கள். அவர்கள் மரணமடைந்தால் அவர்களுக்கு வழங்கப்படக்கூடிய தொகையில் ஜனதா இன்சூ

ரன்சிலிருந்து வரும் தொகையைக் கழித்து மீதியை வழங்குகிறார்கள். இதன் மூலம் அரசு வழங்கவேண்டிய பணத்தை நிறுத்தி வைத்துக் கொள்கிறீர்கள். அவர்கள் பணத்திலிருந்து கட்டியதைப் பெறுகிறபோது நீங்கள் ஏன் தடுக்க வேண்டும்? அவர்கள் கட்டிய ஜனதா இன்சூரன்ஸ் அல்லது வேறு எந்த பாலிசி மூலமோ பணம் கிடைக்கிறதென்றாலும் அதைத் தவிர அரசு வழங்க வேண்டிய ஐந்தாயிரம் ரூபாயும் நீங்கள் வழங்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கடலில் சென்று மீன் பிடிக்கக்கூடிய மீனவர்கள் மரணமடைந்தால் அவர்களுக்குப் பத்தாயிரம் ரூபாய் என்று நிர்ணயித்து இருக்கிறீர்கள். பனையேறும் தொழிலாளர்கள் மரணமடைந்தால் ஐந்தாயிரம் என்று வைத்திருக்கிறீர்கள். தயவுசெய்து உயிருக்கு வித்தியாசமான மதிப்பை நிர்ணயிக்காதீர்கள் என்று கேட்டுக் கொள்கிறேன். யாருடைய உயிராக இருந்தாலும் அது மதிக்கத் தக்கது. இப்படி மாறுபட்ட தொகை நிர்ணயித்திருப்பது வேதனைக்குரிய விஷயம். பத்தாயிரமோ, பதினைந்தாயிரமோ, யாராக இருந்தாலும் எல்லோருக்கும் ஒரே நிர்ணயமாக செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பனையிலிருந்து விழுந்து காயமடைந்து வேலை செய்ய முடியாத சூழ்நிலையில் இருக்கக்கூடியவர்களுக்கு நிவாரணமாக வழங்கக்கூடிய தொகையைக் கணிசமான தொகையாக வழங்க வேண்டும். அப்பாதிப்பட்டவர்களுடைய குழந்தைகளுக்கு படிப்பதற்கு வேண்டிய எல்லாவிதமான சலுகைகளையும் அரசு ஏற்றுச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தில் கிராமத் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. அவைகள் இப்போது நலிந்து தீர்க்கக்கூடிய சூழ்நிலையில் இருக்கின்றன. பெரும்பாலான பனைவெல்லக் கூட்டுறவுச் சங்கங்கள் செயலிழந்து மூடக்கூடிய நிலையில் இருக்கின்றன. இதனைக் கருத்தில் கொண்டு அவைகளுக்கு வேண்டிய உதவிகளை அரசு செய்து காப்பாற்ற வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

வாழை நார், கற்றாழை நாரிலிருந்து செய்யக்கூடிய பொருள்கள் கன்னியாகுமரி மாவட்டத்தில் குறிப்பாக என்னுடைய தேர்ந்தெடுக்கப்பட்ட பகுதிகளில்தான் பெருவாரியாகக் கிடைக்கின்றன. குறிப்பாகச் சொல்லவேண்டுமென்றால், தொலையாவட்டம், மா[illegible]



புரம், புதுக்கடை, வள்ளியம்பலம், பாலப்பள்ளம் ஆகிய இடப்படிப்பட்ட பகுதிகளில் அந்தப் பொருள்கள் பெருவாரியாக உற்பத்தியாகின்றன. ஆகவே, அந்தப் பொருள்களைத் தயாரிக்கும் தொழிற்சாலையை, அங்கே ஆரம்பிப்பதற்கு வாய்ப்புகள் உண்டு. இந்தத் துறைக்கு முன்பு பொறுப்பேற்றிருந்த அமைச்சர் அவர்கள் கட்டாயம் அந்தத் தொழிற்சாலையை அங்கே ஏற்படுத்தித் தருகிறேன் என்று சொல்லியிருந்தார்கள். ஆனால் அது முடியாமல் போய்விட்டது. இதை நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு மீண்டும் கொண்டு வருகிறேன். இதை நீங்கள் கருத்திலே கொண்டு அந்தப் பகுதியிலே வாழை நார் மூலம் பொருள்கள் உற்பத்தி செய்யும் தொழிற்சாலைகளை ஆரம்பித்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக் கொள்கிறேன்.

(பிற்பகல் 1-10)

அடுத்தபடியாக, கதர் நூற்பு நிலையங்கள் குன்றக்குடியிலே மற்றும் மாந்துறை என்கிற பகுதிகளிலே இருக்கின்றன. என்னுடைய மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் ஒட்டுமொத்தமாக எந்தவிதமான தொழிற்சாலையும் இல்லாமல், எந்தவிதமான பணிகளும் இல்லாமல் மக்கள் பாதிக்கப்பட்டு இருக்கிற சூழ்நிலையைக் கருத்தில் கொண்டு, அங்கே உள்ள ஏழை எளிய மக்களுக்கு சிறிது வேலைவாய்ப்பைக் கொடுக்க வேண்டும் என்ற வகையில் புதிதாக இன்னும் பல கதர் நூற்பு நிலையங்களை அமைத்துத் தரவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரைக்கும் நான் ஏற்கெனவே குறிப்பிட்டதைப் போல, எந்தவிதமான முன்னேற்றமும் இல்லாத நிலைமை இருக்கிற காரணத்தால், கதர்த் துறை அமைச்சர் அவர்கள் கொஞ்சம் கருணை காட்டி—நீங்கள் தந்திருக்கிற புத்தகத்தில் உள்ள குறிப்புகளைப் பார்த்தால் கிட்டத்தட்ட 50 ஆயிரம் பேர்களுக்கு வேலைவாய்ப்பைக் கொடுத்திருப்பதாகச் சொல்லியிருக்கிறீர்கள்—இந்த மாவட்டத்தின்மீது கொஞ்சம் கருணை காட்டி, அதிகமான மையங்களை ஆரம்பித்துக் கொடுத்தால், இன்னும் குறைந்தபட்சம் 5 ஆயிரம் பேர்களுக்காவது வேலை கொடுத்த புண்ணியம் உங்களுக்கு கிடைக்கும்.

[டாக்டர் தே. குமாரதாஸ்] [1987 ஏப்ரல் 21

எனவே இதை நீங்கள் கருத்திலே கொண்டு, அதிகமான மையங்களை ஆரம்பித்துத் தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, 19,146 சத்துணவு மையங்களை நர்சரி பள்ளிகளாக மாற்றியிருப்பதாக குறிப்பிட்டு இருக்கிறீர்கள். பாராட்டுக்குரிய விஷயம்தான். ஆனால் அதிலே பணியாற்றுகிற அமைப்பாளர்களுக்கு இதுவரையில் பதவி உயர்வு கொடுத்திருக்கிறீர்களா என்று கேட்க ஆசைப்படுகிறேன். நர்சரி பள்ளிகள் என்று வருகிற நேரத்திலே, குறைந்தபட்சம் அந்த அமைப்பாளர்களுக்கு ஆசிரியர்களுடைய அந்தஸ்தைக் கொடுத்து, சம்பளத்தை அதிகப்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்னும் சொல்லப்போனால், தமிழக முதலமைச்சர் அவர்கள் பொங்கல் பரிசாக 300 ரூபாயை அரசு ஊழியர்கள் அனைவருக்கும் வழங்கினார்கள். என்னுடைய மாவட்டத்தில் உள்ள பெருவாரியான சத்துணவு அமைப்பாளர்களுக்கு அந்தப் பணம் இதுவரையில் கிடைக்கவில்லை என்பதை உங்களுடைய நினைவிற்குக் கொண்டுவரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போல் இந்த சத்துணவு மையங்களை அதிகாரிகள் பார்வையிடச் செல்கிறார்கள். அப்படிப் பார்வையிடச் செல்லுகின்ற நேரத்திலே—நீங்கள் கொடுக்கக்கூடிய பணத்தை அவர்கள் பாங்கிலே வைத்துத்தான் செலவு செய்யவேண்டும் என்ற நிர்ப்பந்தம் இருக்கிறது—அவர்கள் பணம் எடுப்பதற்காக பாங்கிற்குச் சென்று இருக்கும்போது, அதிகாரிகள் வருகிற நேரத்திலே சத்துணவு அமைப்பாளர்கள் இல்லை என்று சொல்லி, உடனடியாக அவர்களை தற்காலிக வேலைநீக்கம் செய்கிறார்கள், நிரந்தர வேலை நீக்கமும் செய்கிறார்கள். இப்படி மிகவும் கொடுமையான நிலைமை ஏற்பட்டிருக்கிறது. இதை நான் மாண்புமிகு அமைச்சர் பெருமகனாருடைய கவனத்திற்குக் கொண்டுவரக் காரணம் என்னவென்று கேட்டால், கன்னியாகுமரி மாவட்டத்தை எடுத்துப்பார்த்தால், தினசரி இரண்டு அமைப்பாளர்கள் வேலை நீக்கம், என்கிற புள்ளிவிவரத்தை, செய்தியை நீங்கள் பார்க்கலாம். அவ்வளவு தூரம் கீழ்த்தரமாக நடத்தப்படுகிற அமைப்பாளர்களுக்கு நீங்கள் பாதுகாப்பு கொடுக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [டாக்டர் தே. குமாரதாஸ்]

அடுத்து, சத்துணவு அமைப்பாளர்கள், குடும்ப நலத்திட்டத்திற்கு ஆள் பிடித்து வரவேண்டிய ஒரு துர்பாக்கியமான நிலைமை இருக்கிறது. இந்த நிலைமையும் நீங்கள் மாற்றவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, பெண்கள் தங்குவதற்கான விடுதிகள் கட்டப்படுவதைப் பற்றி நீங்கள் குறிப்பிட்டு இருக்கிறீர்கள். அது பாராட்டுக்குரிய விஷயம்தான். ஒவ்வொரு தாலுக்காவிற்கும் ஒரு பெண்கள் விடுதி என்கிற விதத்தில் நீங்கள் இவற்றைக் கட்டித்தர வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல், பனைத்தொழில், நார்த் தொழில்களைச் செய்கின்றவர்களுக்கு, அது கூட்டுறவுச் சங்கமாக இருந்தாலும், குறைந்த சம்பளமாக 3 ரூபாய் தரப்படுகிறது. 3 ரூபாயிலிருந்து அதிகபட்சமாக அவர்களுக்கு 5 ரூபாய், 4.75 ரூபாய கொடுக்கப்படுகிறது. இதுதான் சம்பளம். இப்படி அரசாங்கமே நடத்தக்கூடிய கூட்டுறவுச் சங்கங்களில், பனைப் பொருட்களை கச்சாப் பொருட்களாக வைத்து செய்யப்படுகின்ற நிறுவனங்களில் 5 ரூபாய் சம்பளம் என்று சொன்னால், இது மிக மிக மோசமான சம்பளமாக இருக்கிறது. எனவே, குறைந்தபட்ச சம்பளமாக 15 ரூபாய் நிர்ணயிக்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்று அமைக்கப்பட்டு இருப்பதாகவும், அதற்கான பணிகள் ஆரம்பிக்கப்பட்டு, 1,600 துணை சுகாதார நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்டு, இதுவரையில் 1,528 நிலையங்களைக் கட்டியிருப்பதாகவும் சொல்லியிருக்கிறீர்கள். 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் கட்டும் இந்த நல்ல திட்டத்தை நான் வரவேற்கிறேன். ஆனால் இந்த துணை சுகாதார நிலயங்களுக்கு மருத்துவ அதிகாரிகளை நியமித்து, அவைகள் உண்மையிலேயே துணை சுகாதார நிலையங்களாகச்

செயல்பட்டால்தான் பொதுமக்களுக்கு பயனுள்ளதாக இருக்கும். எனவே 5 ஆயிரம் மக்கள் தொகைக்கு ஒரு துணை சுகாதார நிலையம் என்று ஆரம்பித்து, அங்கே மருத்துவர்களை நியமித்துத் தரவேண்டும் என்று கேட்டு, பேச வாய்ப்பு அளித்தமைக்கு நன்றி தெரிவித்து முடித்துக்கொள்கிறேன், நன்றி, வணக்கம்.

திரு. க. சோலைராசு : மாண்புமிகு பேரவையினுடைய துணைத் தலைவர் அவர்களே, சமூகநலத்துறை அமைச்சர் அவர்கள் கொண்டு வந்திருக்கிற சமூக நலன், கதர்த் துறை மானியக் கோரிக்கையை வரவேற்று ஒருசில கருத்துக்களைச் சொல்லி விடைபெற எண்ணுகிறேன். இன்றைக்குக் கதர்த் துறை பார்ப்பதற்கு மிக எளிமையான துறையாக இருந்தாலும் கூட அது ஆற்றுகின்ற பணிகள் மிகவும் பாராட்டத்தக்க அளவிலே இருக்கின்ற பாங்கினை முதலிலே நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு கதர்த் துறை மூலம் பல்வேறு நல்ல பணிகள் கிராமப்புறத்திலே நடைபெறுவதைப் பார்க்கிறபோது உள்ளபடியே மகிழ்ச்சி மேலிடுகிறது.

என்னுடைய தொகுதியிலே பெண்களைப் பொறுத்தவரையிலே, 10 ஆவது படித்த பெண்கள்கூட லாரிகளிலே சென்று செங்கற்களை இறக்குகின்ற, ஏற்றுகின்ற வேலையைப் பார்த்துக் கொண்டிருந்த கொடுமையான சூழ்நிலைகளையெல்லாம் மாற்றி இந்தக் கதர்த் துறை மூலம் ஏறக்குறைய 15 மையங்களைத் தொடங்கி இருக்கிறோம். அப்படித் தொடங்கி இருக்கின்ற காரணத்தினாலே அந்த மையங்களிலே பணிபுரியக்கூடிய சகோதரிகளுக்கு நாள் ஒன்றுக்கு 8 ரூபாயிலிருந்து 10 ரூபாய் வரை சம்பளம் கிடைக்கக்கூடிய ஒரு நல்ல சூழ்நிலை அங்கே உருவாகிக்கொண்டு இருக்கிறது. அந்தப் பெண்கள் மகிழ்ச்சியோடு இருந்தாலும்கூட, அங்கே தொடங்கப்பட்டிருக்கிற கட்டிடங்கள் அனைத்துமே வாடகைக் கட்டிடங்களாக இருக்கின்ற காரணத்தினாலே அந்தப் பகுதியிலே இருக்கிற பெரியவர்கள் இப்பகுதிப் பெண்களுடைய துயரம் தணிந்தால் போதும் என்கின்ற தொண்டுள்ளத்தோடு மிகமிகக் குறைந்த வாடகைக்குத் தருகிறோம் என்று ஒப்புதல் அளித்திருந்தாலும் கூட—ஆரம்பித்து இரண்டு ஆண்டுகள் ஆகியும் பல்வேறு கட்டிடங்





களுக்கு இன்னும் வாடகை தர இயலாத சூழ்நிலை இருக்கிறது. சில மையங்களிலே பெண்களை பயிற்றுவிக்கக்கூடிய சீனியர் ஸ்பின்னர்ஸ் என்று சொல்வார்களே அத்தகைய பயிற்சியாளர்கள் கிடைக்காத சூழ்நிலை இருக்கிறது.

அதைப்போல சில மையங்களிலே 50 ராட்டைகள் 12 ஸ்பிண்டில் மெஷின்ஸ்—என்று சொல்லக்கூடியவை இருந்தாலும்கூட, அதை சில இடங்களில் பழுதுபார்க்கிறபோது அந்தப் பழையதை நீக்குவதற்குரிய இயந்திரங்கள், கருவிகள் உடனடியாகக் கிடைக்கக்கூடிய சூழ்நிலை அங்கே உருவாகவில்லை. மணப்பாறை பகுதியிலே மட்டும் ஏறக்குறைய 15 மையங்கள் இருக்கின்றன. இந்த மையங்களுக்கு ஒரு தொடர்பு வேண்டுமென்றால், சாதாரணமாக ஒரு கருவி பழுதுபட்டு விட்டது என்றால் கரூரிலுள்ள அதிகாரியைப் பார்க்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. எனவே, நானும் மற்றவர்களும் கேட்டுக்கொண்டதற்கிணங்க மணப்பாறையிலே ஒரு கிளை நிலையத்தை ஆரம்பித்து அதிலே அதிகாரியை அமைக்க வேண்டுமென நானும் கேட்டுக் கொள்வதோடு, அப்படி ஆரம்பிக்கின்ற பட்சத்தில் மணப்பாறையிலேகூட மிகக் குறைந்த வாடகைக்கு ஒரு கட்டிடம் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம். மணப்பாறையிலே ஒரு அலுவலகம் இருக்கிறது என்று சொன்னால், சுற்றுவட்டார கிராமத்திலே இருக்கிற அந்த மையங்களுக்கு எளிதாக பஞ்சு எடுத்துச் செல்வதற்கும், யந்திரங்கள் பாதுபட்டால் அதை மாற்றுவதற்கும் ஏதுவாக இருக்கும். எனவே இதைப் பரிசீலிக்கவேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன். அதைப்போல இன்னொன்றை நான் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ச்சியாக கேட்டுக்கொண்டிருக்கிறேன். என்னுடைய தொகுதியிலே இருக்கிற வையம்பட்டி, அரசு நிலப்பாளையம் என்கின்ற ஊர்களிலே அதிகமாக ஆதிதிராவிட மக்கள் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். அங்கே இலவசமாக ஒரு கட்டிடம் கட்டுவதற்குக்கூட நிலத்தைத் தருவதற்கு அந்தப் பகுதி மக்கள் தயாராக இருக்கிறார்கள். எனவே, அங்கே கையால் காகிதம் செய்யும் அளவுக்கு அலகுகள் ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 21

அதைப்போல சென்ற ஆண்டு ஏறக்குறைய 15 லிருந்து 25
கையால காகிதம் செய்யும் அலகுகள் தொடங்கப்பட்டிருக்
கின்றன. அப்படித் தொடங்கப்பட்ட அலகுகளுக்கு பல்வேறு
பகுதிகளில் கட்டிடங்கள் கட்டிமுடிக்கப்பட்டிருக்கின்றன. சில
பகுதிகளில் கட்டிடங்கள் கட்டப்படவில்லை. ஆனால் கட்டி
முடிக்கப்பட்ட கட்டிடங்களிலேகூட இன்னும் இயந்திரங்கள்
பொருத்தப்படவில்லை. நேற்றுகூட மாண்புமிகு உறுப்பினர்
திரு. சின்னராசு போன்றவர்கள் கொண்டுவந்த கவன ஈர்ப்புக்கு
பதில் சொன்னபோது அது அவ்வளவு திருப்திகரமான பதிலாக
இல்லை. எனவே கட்டி முடிக்கப்பட்ட அந்த மையங்களில்
விரைவாக இயந்திரங்களைப் பொருத்தினோம் என்றால்,
அந்தப் பகுதியில் இருக்கிற மக்களுக்கு அதிகமாக நாம் உதவி
செய்வதற்கு உறுதுணை புரிகிற வாய்ப்பு நமக்கு ஏற்படும்.
அதைப்போல சென்ற ஆண்டு கதர்த் துறை தன்னுடைய வெள்ளி
விழாவை மிகச் சிறப்பான முறையிலே நம்முடைய முன்னாள்
அமைச்சர் அவர்கள் தலைமையிலே கொண்டாடியது. அப்படிக்
கொண்டாடுகிறபோது என்னுடைய தொகுதியிலே இருக்கிற வட
நாடு என்கிற கிராமம்கூட அந்த 25 மையங்களில் 1 மையமாகத்
தேர்ந்தெடுக்கப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்டு ஏறக்குறைய 1½
வருடம் முடிந்தபிறகுங்கூட அந்தப் பகுதியில் 30 பெண்களுக்கு
மட்டுமே வேலைவாய்ப்பு கிடைக்கக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்
கிறது. மற்ற தொழிற்சாலைகளோ, மற்ற உதவிகளோ, திட்டங்
களோ இல்லை. இதை அமைச்சர் அவர்களின் கனிவான கவனத்
திற்குக் கொண்டுவர விரும்புகிறேன்.

அதைப்போல இன்றைக்கு ஊராட்சி ஒன்றியங்களிலே E.O.
இண்டஸ்ட்ரிஸ் என்று ஒரு அதிகாரி இருக்கிறார். அவருக்கு
அந்த ஒன்றியப் பகுதியிலே அதிகப்படியான வேலையே கிடை
யாது. எனவே இந்த கதர்த் துறையையும் அவரோடு இணைத்து
இந்தப் பணியினை மேற்கொள்ள முயற்சிகளை மேற்கொள்ள
வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல், கள் இறக்கும் தொழிலாளிகளுக்கு அவர்
களுடைய வளர்ச்சிக்கு, அவர்களிடையே மறுமலர்ச்சி உண்டு
பண்ணுவதற்காக ஏறக்குறைய 30 ஆயிரம் தொழிலாளிகளுக்கு
ஆயிரம் ரூபாய் கடனாகவும், ஆயிரம் ரூபாய் மானியமாகவும்



1987 ஏப்ரல் 21] [திரு. க. சோலைராசு]

வழங்கி இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.
அதைப்போல, என்னுடைய நண்பர் ஞானசுந்தரம் தொகுதியிலே
இருக்கிற சுந்தரக்கோட்டை என்ற பகுதியிலே அதிகப்படியான
ஆதிதிராவிட மக்கள் வாழ்கிறார்கள். அந்தப் பகுதியில் அதிகப்
படியான பனை மரங்களும் இருக்கின்றன. இதையெல்லாம்
ஆய்விலே ஏற்றுக்கொண்டு அங்கே ஒரு பனைப் பொருள் கேந்திரம்
32 லட்சம் ரூபாய் செலவில் தொடங்குவதற்கான திட்டங்கள்
தீட்டப்பட்டன. அந்தத் திட்டத்தை விரைவிலே தொடங்கு
வதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்யவேண்டுமென்று
கேட்டுக்கொள்கிறேன்.

(பிற்பகல் 1-20)

இந்தக் கதர்த் துறையைப் பொறுத்தவரையில் நல்ல சாதனை
களைச் செய்தாலும்கூட அந்தச் சாதனைகள் மக்களுக்குச்
சென்று சேரவில்லை. இன்னும் சொல்லப்போனால் கதர்க்
கடைகள் இருக்கின்றன. அந்தக் கடைகளில் பெரிய அளவில் கதர்
பொருட்களை விற்கிறபோது அவை சிறந்த மருத்துவமனைகளாக
இருக்கின்றன. அங்கே விற்கப்படுகின்ற பல்வேறு பொருட்கள்
மூலிகையைப் போல் சிறப்பான வகையில் உதவி செய்யக்கூடிய
மக்களின் நோயைத் தீர்க்கின்ற வகையில் இருக்கக்கூடிய—இத்
தகைய கடைகளை ஒன்றிய அளவில் அதிகமான அளவில்
ஆரம்பிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, சமூகநலத் துறையைப் பொறுத்தவரையில் ஒரு சில
கருத்துக்களைச் சொல்லுகிறபோது இங்கே பேசி இருக்கிற
மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் இந்த மகளிர் மன்றங்கள்
இருக்கின்றனவே அவை பெயர் அளவில் இருக்கின்றதே ஒழிய
சிறப்பான பணியினை மேற்கொள்ளவில்லை என்று சொன்
னார்கள். அந்தக் கருத்தோடு நான் உடன்படுகிறேன் என்ற
வகையில் சில கருத்துக்களைத் தெரிவித்துச் சொல்கிறேன்.

என்னுடைய தொகுதியைப் பொறுத்தவரையில் அதிகமான
மகளிர் மன்றங்கள் இருப்பதாகக் கணக்கில் இருக்கிறது. ஆனால்
மகளிர் மன்றங்களைப் பொறுத்தவரையில் ஆண்டுக்கு ஒரு
விழாவை நடத்துகிறார்கள். ஒரு ஒன்றியத்தில் இதுவரை [illegible]

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 21

விழாக்கள் நடந்து இருக்கின்றன. அந்த 6 விழாக்களிலும் நானும் கலந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றேன். அந்த ஒரு விழாவில் என்ன செய்கிறார்கள் என்று சொன்னால் அந்த ஒன்றியத்தில் இருக்கிற நல்ல குழந்தைகளைப் பார்த்து அதற்கு பரிசு அளிக்கிற ஒரு விழாவும் அந்த விழாவுக்கு முன் காலையில் அந்த மகளிருக்கு எப்படி சமையல் செய்வது என்பதைப் பற்றி சொல்லிக் கொடுத்துக் கொண்டு இருக்கிறார்கள். நான் அந்த விழாவுக்கு செல்கிறபோது அந்த மகளிரை அழைத்து உங்களுக்கு குடும்பக் கட்டுப்பாடு பற்றி சொல்லிக் கொடுத்து இருக்கிறார்களா, சுகாதாரத்தைப் பற்றி சொல்லிக் கொடுத்து இருக்கிறார்களா, என்று கேட்டால் அவர்கள் இல்லை என்று சொல்கிறார்கள். இவைகளைப் பார்க்கிறபோது எங்களுக்கு மிகவும் வருத்தமாக இருக்கிறது. ஒன்றியத்தில் அதிகமான கிராம சேவிகாக்கள் என்று சொல்லக்கூடிய பெண்கள் பணிபுரிகிறார்கள். அவர்களுக்கு என்ன பணி கொடுக்கப்படுகிறது என்பது எங்களுக்கு புரியாத புதிராக இருக்கிறது. மேலும் இந்த மகளிர் மன்றங்கள் அனைத்தும் செயல்படுகின்ற மன்றங்களாக இருக்கின்றன என்று சொன்னாலே போதும் நம்முடைய அரசினுடைய தூய்மையான திட்டங்கள் அனைத்தும் செயல்படுவதற்கு ஒரு நல்ல வாய்ப்பு ஏற்படும். மகளிர் மன்றங்கள் நிச்சயமாக மாதத்தில் 2 முறை கூட்டப்படவேண்டும். கூட்டப்படுகின்ற மன்றத்திற்கு அந்தப் பகுதியில் இருக்கின்ற தொண்டு உள்ளம் கொண்டவர்களை அழைக்கவேண்டும். ஆற்றல் உள்ளவர்களை அழைக்கவேண்டும். சேவை மனப்பான்மை உள்ளவர்களை அழைக்கவேண்டும். குடும்பக் கட்டுப்பாடு, சிறு சேமிப்பு போன்ற பல்வேறு கருத்துக்களை அவர்களை வைத்துப் பேச வைக்கவேண்டும். அப்படிப்பட்ட உணர்வினை உண்டு பண்ணுகிறோம் என்று சொன்னால் நிச்சயமாக அரசினுடைய திட்டங்கள் அந்தப் பகுதியில் உள்ளவர்களுக்குத் தெரிவதற்கு வாய்ப்பு வரும். எனவே மகளிர் மன்றங்கள் செயல்படுகின்ற மன்றங்களாக இருக்கவேண்டும். ஆண்டுக்கு ஒரு முறை கூடிக் கலைக்கின்ற மன்றங்களாக இருக்கக் கூடாது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. க. சோலைராசு]

அதேபோல இந்த சட்டமன்றத்தில் பலமுறை நம்முடைய சட்டமன்ற பேரவைத் துணைத் தலைவர் அவர்களாலும் மற்றைய போன்றவர்களாலும் பேசப்படுகின்ற விஷயம் திருமணத்தை நாம பதிவு செய்யவேண்டும் என்பது. இன்றைக்கு சாதாரணமாக ஒரு கிராமத்தில் ஒரு கடை வைக்க வேண்டும் என்று சொன்னாலும் கூட அந்த ஊராட்சி மன்றத் தலைவரிடம் அனுமதி பெற்று வைக்கவேண்டும். நகரத்தில் ஒருவர் கடை வைக்கவேண்டும் என்று சொன்னால் அந்த நகராட்சித் தலைவரிடம் அனுமதி பெறவேண்டும். தொழில் வரி கட்டவேண்டும் என்று பல்வேறு சிக்கல்கள் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் ஒரு திருமணத்திற்கு மைக் செட் வைக்கவேண்டும் என்று சொன்னால் கூட அங்குள்ள காவல் நிலையத்திற்கு சென்று இத்தனை மணியிலிருந்து இத்தனை மணி வரை நான் மைக் செட் வைக்கப்போகிறேன், எனக்கு அனுமதி தாருங்கள் என்று சொல்லி எழுதிக் கொடுத்து அனுமதியைப் பெறவேண்டும்.

இப்படி எளிய காரியங்களுக்கு எல்லாம் அனுமதி வாங்க வேண்டும் என்று சொல்லிக்கொண்டு இருக்கிறோம். ஒருவர் திருமணம் புரிகிறார் என்றால் அது வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு நிகழ்ச்சி. அவனுடைய வாழ்க்கைக்கு இணையை சேர்க்கக்கூடிய ஒரு நிகழ்ச்சியை ஏன் பதிவு செய்யக்கூடாது? அப்படிப் பதிவு செய்கிறபோது சகோதரி திருமதி வளர்மதி அவர்கள் சொன்னதைப்போல திருமணத்தன்று அவர்கள் இருவரும் மனம் ஒத்து நாங்கள் திருமணத்தை ஏற்றுக்கொண்டோம் என்ற உறுதிமொழியைப் பதிவு செய்ததற்குப் பிறகு அந்தத் திருமணத்திற்கு வழங்கப்படுகின்ற அத்தனை பொருட்களும் அந்தப் பதிவினுடைய அடிப்படையில் சாத்துக்களாக சேர்க்கப்படும் என்று வைத்தால் அந்தத் திருமணங்களில் பல்வேறு சிக்கல்கள் வர வாய்ப்பு இல்லை. அப்படி சிக்கல்கள் வருகிறபோது அந்தச் சிக்கல்களைத் தீர்ப்பதற்கு அது வாய்ப்பாக இருக்கும். ஆகவே ஆண் மகன் பல்வேறு திருமணங்களை புரிந்துகொள்கிற வாய்ப்பு இல்லாமல் போய்விடும். காரணம் திருமணப்பாறையில் ஒருவன் திருமணம் புரிகிறான் என்று சொன்னால் அந்தப் பட்டியல் அனைத்துப் பகுதிகளிலும் இருக்கிறது

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 21

என்று சொல்லாமல் அவனை மனைவியை விட்டு வேறு ஒருவரைத் திருமணம் செய்ய முடியாது. ஏப்பயால் பார்த்துக்கொண்டு இருக்கிறோம். பல பெண்களை மணந்த கணவனுடைய புகைப்படங்கள், அவனை மணந்த மகளுடைய புகைப் படங்கள் என்று பல பெயர் ஏதோ பெரிய கின்னஸ் புத்தகத்தில் இடம் பெறுபவர்களைப் போல் மிகப் பெரிய சாதனையைச் செய்த வர்களைப் போல் இன்றைக்கு பத்திரிகையில் கூட புகைப்படங் களைப் போட்டுக் காட்டிக்கொண்டு இருக்கிறார்கள். எனவே ஒரு புறத்தில் திருமணம் புரிந்துவிட்டார் என்று சொன்னால் அவன் வேறு ஒரு இடத்தில் சென்று திருமணம் புரிகிறபோது அந்தப் பதிவுத் துறையைச் சேர்ந்தவர்கள் அவன் சொந்த ஊரில் இருக் கின்ற அந்தப் பதிவு அலுவலகத்திற்கு எழுதி இவனுக்கு ஏற்கெனவே திருமணம் ஆகி இருக்கிறதா, இல்லையா, என்று கேட்டு ஒரு சான்றிதழைப் பெற்ற பிறகு அவன் மணம் புரிய வேண்டும் என்று ஒரு சூழ்நிலை வருகிறது என்று வைத்தால் நிச்சயமாக நாட்டில் இப்படிப்பட்ட ஏமாற்றுக்காரர்கள் வரமாட் டார்கள். இப்படிப் பல்வேறு திருமணங்களைப் புரிகிற சகலகலா மன்னர்கள் புறக்கணிக்கப்படுவார்கள். எனவே திருமணம் பதிவு செய்யப்பட வேண்டும் என்பதைச் சட்டம் ஆக்கவேண்டும் என்று மாண்புமிகு அமைச்சருடைய சீரிய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

இன்றைக்கு பால்வாடி மையங்கள், சத்துணவுக் கூடங்கள் இயங்கி வருகின்றன. போற்றத்தக்க அளவில் எதிர்காலத்தை உருவாக்கக்கூடிய இளம் குழந்தைகள், ஆற்றல் மிக்க குழந்தை களாக, அறிவு மிக்க குழந்தைகளாக வரவேண்டும் என்பதற்காக இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் தீட்டியிருக்கின்ற இந்த சத்துணவுத் திட்டம் சிறப்பான முறையில் பணிகளைச் செய்துகொண்டு இருந்தாலும் கூட இன்றைக்கு எங்களைப் போன்ற சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு கிராமத்திற்கு சென் றோம் என்று சொன்னால் அந்த கிராமத்தில் இருக்கின்ற மக்கள் குடிப்பதற்குத் தண்ணீர் கேட்பதற்கு முன்னால், போவதற்கு

** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவரின் ஆணைக் கிணங்க அகற்றப் பெற்றது.



1987 ஏப்ரல் 21] [திரு. க. சோலைராசு]

சாலை வசதி கேட்பதற்கு முன்னால், நாங்கள் சாலை வசதி கேட்கவில்லை இந்த * * ஒன்றியத்திலே இருக்கிற ஓரே யொரு மையத்தைத் தேர்வு செய்து, அந்த மையத்திலேயே சமையல் செய்து, அங்கிருந்து ஏனைய மையங்களுக்கு எடுத்துச் செல்கின்ற அளவிற்கு ஒரு ஏற்பாட்டைச் செய்யவேண்டும். அப்போதுதான் ஒன்றிய அமைப்பாளர் கல்வி கற்பிக்கக்கூடிய ஒரு வாய்ப்பு வரும்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** குற்றச்சாட்டு சொல்லும்போது Sweeping ஆக சொல்வது கூடாது. எந்த ஊரில் நடந்தது என்று சொல்லவேண்டும். ஆகவே அதை நீக்கு கிறேன்.

திரு. க. சோலைராசு: நம்முடைய அரசினுடைய நோக்கம் குழந்தைகளுக்குச் சத்துணவு தரவேண்டும் என்பதுதான். அந்த நோக்கத்திற்கு மாசு கற்பிக்க வேண்டுமென்று ஒருசிலர் நடந்து கொள்கிற முறையில் அந்தத் திட்டம் குறைபடக்கூடிய சூழ் நிலைக்கு வந்துவிடக் கூடும் என்ற காரணத்தினால்தான் சொல் கிறேன். அரசு வழங்குகின்ற அந்தப் பொருள்கள் வீணாக்கப் படுவதில்லை. அப்படியே அந்தக் குழந்தைகளுக்கான உணவுப் பொருள் போய்ச் சேரக்கூடிய அளவிற்கு இருக்கிறது. ஒரு மையத்திலே சமைக்கப்பட்ட உணவை எடுத்துச் சென்று எல்லா மையங்களுக்கும் தரவேண்டும். அப்படிப்பட்ட ஒரு நிலை வரு மென்று சொன்னால், அந்த மையத்திலே பணி புரியக்கூடிய அமைப்பாளர்கள் அந்த மையத்திலிருக்கிற குழந்தைகளுக்குச் சொல்லிக் கொடுக்கிற பணி மட்டுமே அவர்களுக்கு இருக்கு மானால்; அவர்கள் நல்ல முறையில் குழந்தைகளுக்கு, நர்சரி பள்ளி போன்று கல்வியைத் தரமுடியும். அந்த எதிர்பார்ப்பு நிச்சயமாக நிறைவேறும். நீயே சமையலையும் பார்த்துக்கொள்ள வேண்டும், குழந்தைகளுக்கும் சொல்லிக் கொடுக்கவேண்டும், என்று சொன்னால், நிச்சயமாக நாம் எதிர்பார்ப்பதை நிறை வேற்றக்கூடிய திறமை, அக்கறை அந்த அமைப்பாளர்களுக்கு இருக்காது. ஆயாக்கள் வேலைகளைக் கண்காணிக்க வேண்டும். நல்ல முறையில் பழக்க வழக்கங்களைச் சொல்லித் தருவதற்கு உதவியாக இருக்கவேண்டும் என்கிற பணிகள்

[திரு. க. சோலைராசு] [1987 ஏப்ரல் 21

மட்டுமே ஆயாக்களுக்கும், அமைப்பாளர்களுக்கும் இருக்க வேண்டும். நூற்றுக்கு நூறு தாம் மிக்க உணவு குழந்தைகளுக்கு அப்படியே செல்ல வேண்டுமென்று சொன்னால், அதை ஓர் இடத்திலிருந்து சமைத்து எடுத்துக்கொண்டு செல்லக்கூடிய அளவிற்கு இருக்க வேண்டுமென்பதைத்தான் மாண்புமிகு அமைச்சரவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அமைப்பாளர்களுக்கு ஓரளவிற்கு ஊதியத்தைக் கூட்டிக் கொடுக்கக்கூடிய அளவிற்கு அதிகப்படுத்துகின்ற நிலையில் நடவடிக்கைகள் எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறோம்.

அடுத்து மகளிரைப் பொறுத்தவரையில் பல்வேறு பகுதிகளில் மாவட்டங்களில் தங்குவதற்கு இடம் இல்லாமல் திண்டாடிக் கொண்டிருக்கிறார்கள். எனவே என்னைப் பொறுத்தமட்டில், மாவட்டம் முழுதும், தாலுக்காத் தலைநகர் முழுதும் இப்படி மகளிர் தங்கிக் கொள்கிற விடுதிகளை ஏற்படுத்தித் தரவேண்டுமென்று எல்லா சட்டமன்ற உறுப்பினர்கள்போல் நானும் கேட்க விரும்பவில்லை. ஆங்காங்கே இருக்கின்ற மாணவியர் தங்கிப் படிக்கின்ற விடுதிகள் இருக்கின்றன. பள்ளிக்கூடங்களில் படிப்பவர்கள் தங்கிப் படிக்கின்ற விடுதிகள் இருக்கின்றன. கல்லூரி மாணவியர்கள் தங்கிப் படிக்கின்ற விடுதிகள் இருக்கின்றன. அத்தகைய விடுதிகளிலாவது இவர்கள் சென்று தங்கிக் கொள்கின்ற ஒரு வாய்ப்பினை, பாங்கினை, வசதியினை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சமூக நல வாரியத்தைப் பொறுத்தவரையில் அது சிறப்பான திட்டங்களை கொண்டு வந்திருக்கின்றது என்று சொன்னாலும் கூட, சீரிய பணிகளை முடுக்கி விட வேண்டும், அப்படி முடுக்கி விடவேண்டுமென்று உள்ளபடியே நாம் விரும்பினால், சமூக நலனில் எண்ணம் கொண்டிருக்கிற தனியார் ஒருவரை அத்துறைக்குத் தலைவராக நியமிக்க வேண்டும். அப்படி அவர்களைத் தலைவராக பொறுப்பாளராக நியமித்தோம் என்றால் தான் அத்துறை சிறப்பாக பணியாற்றக்கூடிய வாய்ப்பிருக்கும் என்று சொல்லி, இறுதியாக ஒரு கருத்தை மட்டும் சொல்லி, நான் விடை பெறலாம் என்று நினைக்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. க. சோலைராசு]

பேசிய உறுப்பினர்கள் அத்தனை பேருடைய பேச்சையும் கவனித்தால் அங்கே பல்வேறு பகுதிகளில் பென்ஷன் பெறுவதற்காக விண்ணப்பித்து, காலதாமதமாகிறது; கணவனை இழந்து, மறுமணம் புரிந்துகொண்டிருப்பவர்களுக்கு வாய்ப்பு குறைகிறது; விதவைகளின் மகள் திருமணத்திற்கு விண்ணப்பிக்கிறபோது பல்வேறு சிக்கல் ஏற்படுகிறது; ஓய்வூதியம் பெறுகிற முதியவர்கள் அந்த விண்ணப்பத்தினை அனுப்புவதற்கு மிகவும் சிரமப்படுகிறார்கள் என்றெல்லாம் புகார்கள் சொல்லிக்கொண்டிருந்தார்கள். அந்தப் புகார்களை எல்லாம் நீக்குகிற அளவிற்கு அந்தக் கிராமத்திலே இருக்கிற கிராம நல அலுவலர் அவர்களும், அனைத்துத் துறையைச் சார்ந்தவர்களும், அந்தந்த கிராமங்களுக்குச் சென்று, அந்தந்த ஊராட்சிமன்றத் தலைவர்களைப் பார்த்து, அந்தக் கிராமத்திலே எத்தனை பேர்கள் உடல் ஊனமுற்றவர்களாக இருக்கிறார்கள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் எத்தனை பேர்கள், விதவைகளின் மகள்கள் திருமண வயதில் இருப்பவர்கள் எத்தனை பேர்கள், எத்தனை பேர் வயதிலே முதிர்ந்தவர்கள் இருக்கிறார்கள் என்ற கணக்கினை அரசே எடுக்க வேண்டும். அனாதை என்று சொல்லிக் கொண்டிருப்பவன், 60, 70 வயதைத் தொட்டுக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில் அவன் எப்படி விண்ணப்பம் எழுதுவான், அவன் வட்டாட்சியரைப் பார்க்க வேண்டும். ரெவின்யூ இன்ஸ்பெக்டரைப் பார்க்கவேண்டும். கிராம நல அலுவலரைப் பார்க்கவேண்டும் என்று சொல்கிறபோது அவன் எப்படியும் அலையக்கூடிய வாய்ப்பு வருகிறது. எனவே அந்தத் தொல்லைகளைத் தீர்க்கின்ற அளவிற்கு வட்டார நிர்வாக அலுவலகமோ அல்லது ஒன்றிய நிர்வாகமோ அவன் வாழ்கின்ற கிராமப் பகுதிக்குச் சென்று அந்தப் பட்டியலைத் தேர்ந்தெடுக்கின்ற ஒரு சிறப்பான பணியினைச் செய்தால் நாம் செய்கிற உதவியானது மேலும் பலனளிக்கக் கூடிய அளவிற்கு இருக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். சில பேருக்கு, ஆண் மகன் இருக்கக்கூடிய பெற்றோர்களுக்கு, அந்த முதியவர்களுக்கு உதவி கிடையாது என்று ஒரு விதி இருக்கிறது. சில பேர்களைப் பார்க்கிறோம். பெற்றவர்களை அவன் திருமணம் முடிந்தவுடன் மறந்து விடுகிறான். ஆக அந்தப் பெற்றவர்கள், பிள்ளையைப் பெற்றதற்கு என்ன

[திரு. க. சோலைராஜ்] [1987 ஏப்ரல் 21

பாவம் செய்தோமோ என்று வெம்பி, வெதும்பக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. எனவே அது போன்றவர்களுக்கு, தங்கள் மகன் கவனிக்கவில்லை என்று புகார் வருமேயானால், அதை விசாரித்து, ஓய்வூதியம் வழங்குகின்ற ஒரு சூழ்நிலையை ஏற்படுத்தித் தர வேண்டுமென்று கூறி, இந்த மானியக் கோரிக்கையை வரவேற்று, அமைகிறேன்.

(பிற்பகல் 1-30)

*திரு. வை. பாலச்சந்திரன்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சத்துணவு, சமூகநலம், மற்றும் கதர்த் துறை அமைச்சர் அவர்களால் இந்த மாமன்றத்தில் வைக்கப்பட்டிருக்கின்ற 27 மற்றும் 30 ஆகிய மானியக் கோரிக்கைகளை வரவேற்று அதை வழிமொழிந்து ஒரு சில கருத்துக்களை நான் சொல்ல விரும்புகிறேன். இந்த சமூக நலத் துறையைப் பொறுத்தவரை அது புறக்கணிக்கப்பட்ட நம்முடைய மகளிருக்கும், குழந்தைகளுக்கும், அங்கஹீனர்களுக்கும் பல்வேறு பாதுகாப்புகளைச் செய்து வருகிறது என்று சொல்லப்பட்டிருக்கிறது. அவர்களுக்கெல்லாம் இந்தத் துறை ஒரு பாதுகாவலாக இருந்து அவர்களுக்குப் பயன்பட்டு வருகிறது என்பது மறுக்க முடியாத ஒரு உண்மையாக இருந்தாலும்கூட அவர்களுக்கு பாதிப்பு வருகின்றபோது, அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற பாதிப்புக்கு எதிராக ஒரு குரல் எழுப்ப வேண்டிய கடமையும் இந்தத் துறைக்கு உண்டு என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பல்வேறு உதவிகளை நாம் இன்றைக்கு கைவிடப்பட்ட பெண்களுக்கெல்லாம் செய்து கொண்டிருக்கிறோம் என்று சொல்லப்பட்டாலும், சட்டத்தால் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற உரிமைகள் கூட சில நேரங்களில் பறிக்கப்படுகின்றபோது நாம் கண் மூடி, வாய் மூடி மௌனிகளாக இருந்து கொண்டிருக்கிறோம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர் தலைமை.)

நம்முடைய பண்பாட்டைப் பொறுத்தவரையில், இந்தியத் திருநாட்டினுடைய பண்பாட்டிற்கு ஒரு சிறப்பு உண்டு. பெண்ணை தாயாகக் கருதி, தாயை தெய்வமாக வணங்க வேண்டும் என்பது நம்முடைய பண்பாட்டினுடைய ஜீவநாடி. அப்படிப் பெண்ணை



1987 ஏப்ரல் 21] [திரு. வை. பாலச்சந்திரன்]

தாயாகக் கருதி, தாயை தெய்வமாக வணங்க வேண்டும் என்ற பண்பாடு கொண்ட நம்முடைய நாட்டில் பெண்களுக்கு இழைக்கப்படுகின்ற கொடுமைகள், அவர்களுக்கு இழைக்கப்படுகின்ற அவமானங்கள், நாள்தோறும் அவர்கள் அடைந்து வருகின்ற அல்லல்கள் இவைகளை எண்ணிப் பார்க்கின்றபோது நம்முடைய தாய்மார்கள் எந்த அளவிற்கு இந்தச் சமுதாயத்தால் புறக்கணிக்கப்பட்டு அல்லது அங்கீகரிக்கப்படாத ஒரு நிலைமை இருக்கிறது என எண்ணிப் பார்க்கின்ற நேரத்தில் நம்முடைய மத்திய அரசாங்கமும் அல்லது ஒரு சில மாநில அரசாங்களும் கூட அவர்களுடைய உணர்வை மதிக்காத நிலைமை இன்று உருவாகியிருப்பதை நான் நம்முடைய அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறேன். இன்றைக்கு நம்முடைய Criminal Procedure Code என்னும் குற்ற விசாரணை முறைச் சட்டத்தின் 125 ஆவது பிரிவின்படி கணவனால் கைவிடப்பட்ட இந்து பெண்களும், கிருஸ்துவ பெண்களும், முஸ்லிம் பெண்களும் Maintenance Allowance என்று சொல்லப்படுகின்ற அவர்களுடைய ஜீவனாம்சத் தொகையை வாங்கலாம் என்ற நிலைமை இருந்துகொண்டிருந்தது. ஆனால் அண்மைக் காலத்தில் நம்முடைய பாராளுமன்றத்தில் ஒரு திருத்த சட்ட முன்வடிவைக் கொண்டுவந்து அதைச் சட்டமாக ஆக்கியதன் காரணமாக இந்து பெண்களும், கிருஸ்தவ பெண்களும் தங்களைக் கைவிட்ட கணவனிடமிருந்து உதவித் தொகையை வாங்குகின்ற அந்த உரிமை அவர்களுக்கு இருக்கின்றபோது, இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த பெண்கள் மட்டும் அந்த உரிமை பெற முடியாது என்ற நிலைமை இன்றைக்கு உருவாகியிருக்கிறது.

பெண்கள் என்றால் இந்துக்கள் என்றாலும், முஸ்லீம்கள் என்றாலும், கிருஸ்துவர்கள் என்றாலும் வேறுபாடு கருதாது, சட்டத்தால் அவர்களுக்கு சதி செய்யாமல் நாம் எல்லாப் பாதுகாப்பையும் அவர்களுக்குச் செய்ய வேண்டும். ஆனால் இன்றைக்குத் தமிழகத்தில் இருக்கின்ற இஸ்லாமியப் பெண்கள் எல்லாம் கணவனால் கைவிடப்பட்டால், கைவிட்ட கணவனிடமிருந்து நீதிமன்றம் சென்று உதவித்தொகை, ஜீவனாம்சத் தொகை வாங்க முடியாத

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 21

நிலைமை உருவாகியிருக்கிறது. அப்படி ஒரு சட்டத் திருத்தத்தைக் கொண்டுவந்தது நம்முடைய இந்தியப் பேரரசாக இருந்தாலும், அந்தச் சட்ட திருத்தம் கொண்டு வந்தபோது பாதிக்கப்பட்ட பெண்களுக்காகப் போராட வேண்டிய கடமை கொண்ட சமூக நலத்துறை அதை எதிர்த்திருக்க வேண்டும்; கண்டித்திருக்கவேண்டும். ஆனால் இப்போதும் காலம் கடந்துவிடவில்லை. ஆகவே Cr. P. C. 125-வது பிரிவின்படி இஸ்லாமியப் பெண்கள் கணவனால் கைவிடப்பட்டால் அவர்களுக்கும் உதவித்தொகை வழங்கப்பட வேண்டும் என்ற அளவிற்கு மீண்டும் அந்தச் சட்டம் திருத்தப்பட வேண்டும் என்ற வேண்டுகோளை சமூக நலத்துறை நம்முடைய அரசின் மூலமாக மத்திய அரசின் கவனத்திற்கு கொண்டுவர வேண்டும். கொண்டு வருவது மட்டுமல்ல. கடிதங்கள் எழுதுவது மட்டுமல்ல. அதற்கான குரலை நம்முடைய அரசாங்கம் ஓங்கி ஒலிக்க வேண்டும் என்ற வேண்டுகோளை நான் வைக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இப்படி நம்முடைய அரசாங்கம் செய்யுமேயானால், இது தமிழகத்தில் இருக்கின்ற முஸ்லிம் பெண்களுக்கு மட்டும் அல்ல, அகில இந்தியாவில் இருக்கின்ற இஸ்லாமிய மதத்தைச் சார்ந்த பெண்களுக்கும், தாய்மார்களுக்கும், இது மிகப் பெரிய பாதுகாப்பைக் கொடுத்ததாக அமையும். அந்த மிகப் பெரிய பாதுகாப்பைக் கொடுக்கின்ற அந்தக் குரல் தமிழகத்திலிருந்து வந்தது என்ற பெருமை நம்முடைய அரசாங்கத்திற்கும் மாண்புமிகு முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவர் அவர்களுக்கும் கிடைக்கவேண்டும் என்ற வேண்டுகோளை நான் வலியுறுத்த விரும்புகிறேன்.

அதுபோன்று இன்றைக்கு குழந்தைகள் தெய்வமாக கருதப்பட வேண்டும் என்று நாம் சொல்லிக் கொண்டிருக்கிறோம். தெய்வமாக பாவிக்கப்படவேண்டும் என்று நாம் சொல்லிக்கொண்டிருக்கிறோம். அந்த **Dependents** எல்லாம் கூட Cr.P C 125 ஆவது பிரிவில் அவர்கள் புறக்கணிக்கப்பட்டால் அல்லது கவனிக்கப்படாமல், பராமரிக்கப்படாமல் விடப்பட்டால், அவர்களைப் பாதுகாக்கவேண்டிய கடமை கொண்டவர்கள் பராமரிப்புத் தொகை கொடுக்க வேண்டும் என்று அந்தச் சட்டத்திலே சொல்லப்பட்டு இருக்கிறது. ஆனால் அதற்காக நீதிமன்றத்திற்கு வருங்கால், அல்லது இந்துப் பெண்கள், அல்லது கிறிஸ்துவப் பெண்கள் கண



1987 ஏப்ரல் 21] [திரு. வை. பாலச்சந்திரன்]

வனால் கைவிடப்பட்டு 'எங்களை கணவன் கைவிட்டுவிட்டான், ஆகவே உதவித் தொகை, ஜீவனாம்சத் தொகை வேண்டும்' என்று நீதிமன்றத்திற்கு வந்தால்—என்னைப் பொறுத்தவரையில் அனுபவத்தில் சொல்கிறேன்—அவர்கள் வழக்கறிஞர்களுக்கு ஏகப்பட்ட தொகை கொடுக்க வேண்டியிருக்கிறது. இந்தச் சட்டப் பிரிவில் கூட சமூக நலனை மனதிலே கொண்டுதான் உடனடியாக நிவாரணம் வழங்கப்பட வேண்டும் என்று உரிமையியல் நீதிமன்றத்திற்கு அந்த உரிமையைக் கொடுக்காமல், குற்றவியல் நீதிமன்றங்களுக்கு அந்த உரிமையைக் கொடுத்தார்கள்.

ஆனால் இங்கே **Maintenance Allowance** வேண்டும் என்று **Cr. P. C.** 125-லே மனு போட்டுவிட்டு பல ஆண்டுகள் நீதிமன்றத்தின் நெடிய படிக்கட்டுக்களில் ஏறி இறங்க வேண்டிய நிலை இருக்கிறது. ஆகவே, நீதிமன்றங்களுக்கு கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் வருகிறபோது பல்வேறு அவப் பெயர்களுக்கு ஆளாகிறார்கள். வழக்கறிஞர்கள் அறைகளுக்கு வருகிறபோது பல்வேறு களங்கம் அவர்கள் மீது சுமத்தப்படுகிறது. இது சமூகத்தில் மீண்டும் ஒரு 'சிலை' சமூகத் தீங்கை உருவாக்கிக் கொண்டிருக்கிறது. ஆகவே, சமூகநலத் துறை அமைச்சர் அவர்கள் அருள் கூர்ந்து, நம்முடைய சட்டத்துறை அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு வேண்டுகோளை வைக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். என்னவென்றால், இப்படி 125-வது பிரிவின்படி இந்துப் பெண்களோ, கிறிஸ்தவப் பெண்களோ அல்லது வேறு பெண்களோ எங்களுக்கு ஜீவனாம்சத் தொகை வேண்டும் என்று நீதிமன்றத்திலே வழக்குத் தொடர்ந்தால் அல்லது மனுப் போட்டால் அந்த மனு, ஒரு அதிகபட்ச காலக் கெடுவாக முப்பது நாட்களுக்குள் முடிக்கப்பட வேண்டும் என்ற ஒரு அறிவுறுத்தலை நீதிமன்றங்களுக்கு வழங்குவதற்கு சட்டத்துறை மூலமாக நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன்.

அதுபோல், சிறு குழந்தைகள்—அந்தக் குழந்தைகளுக்குக் கூட, இந்தச் சட்டத்திலே வழியிருக்கிறது. ஆனால் அந்தக் குழந்தைகள் நீதிமன்றத்திற்கு வருகிறபோது, சிறு சிறு குழந்தைகள்—7 வயதான குழந்தைகள், 8 வயதான குழந்தைகள்

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 21

**Represented by mother or father** என்று வந்து, அந்தக் குழந்தைகளுக்கு நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல முடியாத நிலை இருக்கிறது. சிறு குழந்தைகள் எல்லாம் நீதிமன்றத்திலே வந்து நின்று, சாராய வியாபாரிகள், வேறுபல சமூகத் தீங்கு செய்தவர்கள், குற்றங்கள் செய்தவர்களோடு வந்து நின்று பல ஆண்டுகள் இருந்து, படிப்பைக் கெடுத்து, வாழ்வைக் கெடுத்து, அங்கே தங்களுடைய ஒழுக்கத்தையே கெடுக்கிற வகையான பழக்கவழக்கங்களுக்கு ஆளாகிற நிலை உருவாகியிருக்கிறது. ஆகவே, நாம் எத்தனைதான் உதவிகளை அந்த மக்களுக்குச் செய்துகொண்டிருந்தாலும் சட்டத்தால் அவர்களுக்கு இருக்கிற உரிமையைப் பாதுகாப்பதுகூட இந்தத் துறையினுடைய ஒரு கடமையாக இருக்கவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்துக்கொள்வதோடு சட்டத்தால் கிடைக்கிற உரிமையை அவர்கள் விரைவாகப் பெறுவதற்கான ஆக்கபூர்வமான சில வழிமுறைகளை நாம் கையாள வேண்டும் என்ற வேண்டுகோளை வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை)

அதுபோல், இன்றைக்கு சத்துணவு கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். பசித்தவன் வயிற்றுக்கு பால் வார்த்தவன் ஆண்டவனாகக் கருதப்படுவான் என்ற பழமொழி ஒன்றுண்டு. அதுபோல் கிராமங்களில், குக்கிராமங்களில் வாழ்கிற ஏழைக் குழந்தைகளுக்கும், வயோதிகர்களுக்கும் இன்றைக்கு கால் வயிற்றுக் கஞ்சியாவது கொடுக்கிற அளவுக்கு நாம் திட்டங்களை எல்லாம் கொண்டு வந்திருக்கிறோம். ஆகவே, நாட்டுப்புறத்திலே வாழுகிற ஏழை எளிய மக்கள் இந்த ஆட்சியை, இந்த அரசைப் போற்றுகிறார்கள், புகழ்கிறார்கள் என்ற நிலைமை இருக்கிறது. இந்தத் திட்டங்கள் மிகச் சிறப்பாக செயல்படுகின்றன. நான் குறை சொல்லவில்லை. ஆனால், இந்தத் திட்டங்கள் சிறப்பாகச் செயல்படுகிறபோது, பசித்தவன் வயிற்றுக்கு கால் வயிறு உணவு கொடுக்கவேண்டும் என்பதற்காகக் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டத்தை நடத்துகிறவர்கள் ஊழல் செய்யாதவர்களாக இருக்கிற அளவுக்கு மிகச் சிறப்பான கண்காணிப்பு இருக்க வேண்டும்.



1987 ஏப்ரல் 21] [திரு வை. பாலச்சந்திரன்]

இதை நான் சொல்கிறபோது, நான் இந்தத் திட்டத்தைச் செயல்படுத்துகிற ஊழியர்களைக் குறை சொல்வதாகக் கருத வேண்டாம். ஆனால் எல்லா மையங்களிலும் இன்றைக்கு ஊழல் பெருகி இருக்கிறது என்பதை நான் ஸ்வீப்பிங்காகச் சொல்கிறேன் என்று கருதிவிடக்கூடாது. அந்த அளவுக்கு இன்றைக்கு அங்கே லஞ்சம் தலை விரித்தாடுகிறது. அங்கே பணியாற்றுகிற பணியாளர்களும் இன்றைக்கு ஏழை எளியவர்களாக இருக்கிற காரணத்தால் வாழ்க்கை வசதிகளை அவர்கள் மேம்படுத்திக் கொள்வதற்கு வாய்ப்பு வசதி அந்த ஊதியம் மூலமாக, துறையில் கிடைக்காத காரணத்தால் தவறு செய்ய நேருகிறது. ஆகவே, தவறு செய்கிறார்கள் என்று அவர்களைக் குறை சொல்கிறபோது, அந்தத் தவறு செய்வதற்கு அவர்களை சமுதாயத்தில் கட்டாயப்படுத்துகிற சூழ்நிலையை ஆய்ந்தறிந்து அவர்களுடைய குறையைப் போக்க நாம் முன்வர வேண்டும்.

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் சொன்னார்கள்—மகப்பேறு காலக்கட்டத்திலாவது அவர்களுக்கு ஊதியத்தோடு கூடிய அந்த விடுப்பு கொடுக்கப்படவேண்டும் என்று சொல்லப்பட்டது. இப்படி இவைகளை எல்லாம் நம்முடைய அரசாங்கம் தன்னுடைய தாயுள்ளத்தோடு பரிசீலனை செய்யவேண்டும் என்ற வேண்டுகோளை வைக்க விரும்புகிறேன். அப்படிச் சொல்கிறபோது, ஒரு பதிலை நீங்கள் சொல்லக்கூடும். அதாவது, அந்த சத்துணவுத் திட்டத்தில் பணியாற்றக் கூடிய ஊழியர்கள் எல்லாம் அரசு ஊழியர்கள் அல்ல, அவர்கள் சேவை செய்கிறார்கள்; ஆகவே, அதற்குரிய அந்தத் தொகையைக் கொடுக்கிறோம்; அது சம்பளம் கூட அல்ல என்று சொல்லக்கூடும்.

இவை எல்லாம் வாதத்திற்கு ஏற்றுக்கொள்ளக்கூடியனவாக இருந்தாலும்கூட, நடைமுறைக்கு ஒத்துவராது. சத்துணவு மையங்களில் படிக்கிற குழந்தைகள் கூட, சுகாதாரமான அமைப்பில் எல்லா இடங்களிலும் இருக்கிறார்களா என்றால் இல்லை. என்னுடைய பத்மநாபபுரம் தொகுதிக்குட்பட்ட இரணியல் பேரூராட்சியில் ஒரு சத்துணவுக் கூடம் கண்ணாட்டிவிளை என்ற பகுதியிலே இருக்கிறது. அங்கே சென்று பார்த்தால், ஓலையும் இல்லை, ஓடும் இல்லை. நான்கு

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 21

புறங்களிலும் சுவர் இருக்கிறது. அங்கே ஓடும் இல்லாமல் ஓலையும் இல்லாமல் சுடுகிற நெருப்பில் குழந்தைகள் அமர்ந்து இருக்கிற நிலையைப் பார்த்தால் இவ்வளவு பெரிய சிறப்பான ஒரு திட்டத்தைச் செயல்படுத்துகிற இடம் பழுதுபட்டுப் போன காரணத்தால், அதைப் பார்க்கிற போது இத்திட்டத்தின் மீதே கூட நமக்கு வெறுப்பு வருகிறது என்பதை உணர முடிந்தது. ஆகவே, அந்த கண்ணாட்டிவிளை பகுதியில் இருக்கிற சத்துணவுக் கூடத்தை வேறு ஒரு பகுதிக்கு மாற்றித் தரவேண்டும் என்ற வேண்டுகோளை வைத்து இருக்கிறோம். அதை மாற்றித்தரவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதற்கான இடத்தை இரணியல் பேரூராட்சி காந்தி நகர் காலனி அருகில் தருவதற்கு தயாராக இருக்கின்றது.

(பிற்பகல் 1-40)

அதுபோல், கன்னியாகுமரி மாவட்டத்தினுடைய பல்வேறு கடற்கரைப் பகுதிகளைப் பார்த்தால், அந்தக் கடற்கரைப் பகுதியிலே வாழுகிற இந்து மீனவர்கள்—பரவர் என்று சொல்லப்படுகிற, நுளையர் என்று சொல்லப்படுகிற இந்து மீனவர்கள் கடலுக்குச் சென்றால், மீன் பிடிப்பதற்கு, அங்கே இருக்கின்ற கிறிஸ்துவர்களால் அனுமதிக்கப்படுவதில்லை. மத வேறுபாட்டால் சொல்லவில்லை. ஆனால் அவர்கள் அனுமதிப்பதில்லை. கிறிஸ்துவ மதத்தைத் தழுவிய மீனவர்களுக்கு மட்டும்தான் கடலுக்குச் சென்று மீன் பிடிக்கிற உரிமை உண்டு என்று சொல்லப்பட்டு, இந்து மீனவர்களுக்கு அந்த உரிமை வழங்கப் படவில்லை. வாரத்தில் என்றாவது ஒரு நாள் பொதுவாக ஞாயிற்றுக்கிழமைகளில் மட்டும் கடலுக்குச் சென்று மீன்பிடித்து வந்தாலும் கடற்கரையில் இருப்பவர்களுக்கு அந்த மீன்களையெல்லாம் தாரை வார்த்துவிட்டு வெறும் கையோடு திரும்புகிற காரணத்தால் கயிறு செய்கிற வேலையை மட்டும் அவர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கெல்லாம் பயன்படும் ஒரு திட்டத்தை இந்த அரசு தயாரித்து செயல்படுத்த வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன். அதையும் சமூக நலத்துறை மூலமாகச் செய்ய வேண்டுமென்றும் இந்த நேரத்தில் ஒரு வேண்டுகோளாக அதை வைக்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. வை. பாலச்சந்திரன்]

அடுத்து என்னுடைய தொகுதியில் தாய்-சேய் நல விடுதிகள் நான்கு பல ஆண்டுகளுக்கு முன்னாலேயே கட்டப்பட்டும் மூடிய நிலையிலேயே விடப்பட்டிருக்கின்றன. அவற்றைத் திறக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கைகளில் ஒன்று. இன்றையதினம் அவ்வாறு அவற்றைத் திறக்காமல் இருப்பதால் அங்கே என்ன விபரீதம் நடக்கிறது என்றால் அந்தக் கட்டிடங்களில் சமூக நலத்திற்கு விரோதமான குற்றங்கள் செய்யப்படுகின்றன. கள்ளச் சாராயம் போன்றவை அங்கு விற்கப்படுகின்றது: இன்னும் சொல்லப்போனால் வேறு சில ஒழுக்கக் கேடான குற்றங்களும்கூட அங்கே நடைபெறுகின்றன. ஆகவே நான் கேட்டுக் கொள்வதெல்லாம்—இவ்வாறு கட்டி முடித்த கட்டிடங்களைத் திறக்காமல் இருப்பதால் சமுதாயத்திற்கு எதிரான குற்றங்களைச் சிலர் செய்வதற்கான ஒரு வாய்ப்பை நாம் உருவாக்கிக் கொடுக்கிறோம். எனவே முத்தளக்குறிச்சி, குமாரபுரம், இராதாகிருஷ்ணபுரம் மற்றும் ஒரு இடத்தில் இருக்கிற மொத்தம் 4 தாய்சேய் நல விடுதிக் கட்டிடங்களையும் உடனடியாகத் திறப்பதற்கான ஏற்பாட்டை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று நான் இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து முதியோருக்கு ஓய்வூதியம் கொடுப்பதில்கூட சில பிரச்சினைகள் இருக்கின்றன. இத்தனை பேருக்குத்தான் அதைக் கொடுக்க வேண்டும் என்று சீலிங் வைத்திருக்கிறார்கள்—சட்ட மன்றத்தில் சொல்லப்படுவதோ இப்படிப்பட்ட சீலிங் எதுவும் இல்லை என்பதாகும்—இருந்தாலும் எல்லோருக்கும் வழங்கப்படும் என்று கூறப்படுவதால் அத்தனை பேரும் ஓய்வூதியம் கோரி மனுப்போட்டுவிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலகத்திற்கும் சட்டப் பேரவை உறுப்பினர் வீட்டிற்கும் அலுவலகத்திற்கும் நடப்பதற்கே கடன் வாங்கி, கடன் வாங்கி கடைசியில் கடன்காரர்களாகவே மாறிவிட்டிருக்கிறார்கள். அது மட்டுமல்ல. முதியோர் ஊதியம் பெறுகிறவர்கள் உடல் நலமின்றி ஒரு மாதம் மருத்துவ மனையிலிருந்தால் அதன் காரணமாக அவர்கள் அந்த மாதத்திற்கான ஓய்வூதியத்தை வாங்கவில்லை என்றால் அதைப்பற்றி எந்த விசாரணையும் இல்லாமல் அதிகாரிகள் பணம் வழங்குவதையே ரத்து செய்துவிடுகிறார்கள்.

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 21

இந்த நிலைமை உடனடியாக மாற்றப்பட வேண்டும். காரணம் இவ்வாறு ரத்து செய்துவிட்டால் அதற்குப் பிறகு அதைத் திருப்பிப் பெறுவதற்கு மிகுந்த கஷ்டத்தை அவர்கள் அடைய வேண்டியிருக்கிறது.

அடுத்து மகளிர் மன்றம் அமைப்பதைப்பற்றி இங்கே சொல்லப்பட்டது. என்னுடைய தொகுதியில் திட்டை என்ற ஒரு ஊரில் இருக்கிற பல்வேறு மதங்களைச் சார்ந்த ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த பெண்கள்—நமது சகோதரிகள்—“திட்டை மகளிர் மன்றம்” என்று ஒன்றை ஆரம்பித்து அந்தத் திட்டை மகளிர் மன்றம் மூலமாக நாங்கள் அச்சுத் தொழிலில் பயிற்சி பெற்றிருக்கிறோம், எனவே ஒரு பிரஸ் வைக்க விரும்புகிறோம், அதற்குக் கடன் தந்து உதவிட வேண்டும்—நபருக்கு ரூ. 20,000 என்று கொடுத்தால் அதை எல்லாம் ஒரே இடத்தில் வைத்து ஒரு பிரஸ் ஆரம்பித்துவிடுவோம் என்று கேட்டார்கள். இப்படிக் கேட்டு வருஷம் 1½ ஆகியும்கூட அவர்கள் இன்னும் பணம் கிடைக்காமல் போராடிக் கொண்டிருக்கிறார்கள். இப்படி திட்டையில் மகளிர் மன்றத்தை உருவாக்கச் சொல்லிவிட்டு—அதை நம்பி நமது சகோதரிகள் உருவாக்கிவிட்டு—அதன் மூலம் தொழில் தொடங்க உதவிட வேண்டும் என்று அனுமதி கேட்டு சட்ட மன்ற உறுப்பினர் அலுவலகத்திற்கு பல்வேறு நேரங்களில் காலையில் இருந்து மாலை வரை சென்று பார்ப்பதால் பல்வேறு பிரச்சினைகள் உருவாகின்றன என்பதை மனதில் கொண்டு அரசு அவர்களுக்கு விரைவில் உதவிட முன்வர வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். இப்படி பெண்களை மன்றம் ஆரம்பிக்கச் சொல்லி விட்டு தொடர்பில்லாத ஆடவர்களிடம் சென்று காத்திருந்து நியாயம் வேண்டும் என்று கேட்கிற நிலைமை வந்தால் அதன் காரணமாக சமூகச் சீரழிவு உண்டாகும் என்பதை மனதில் கொண்டு இப்படிப்பட்ட நிலைமைகளுக்குப் பரிகாரம் காண அரசு முன்வர வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து பனை ஏறும் தொழிலாளர்கள் பனை மரத்திலிருந்து விழுந்து இறந்தால்தான் உதவிப் பணம் கொடுக்கப்படும் என்று சொல்லப்படுகிறது. ஆனால் பெரும்பாலும் பனை ஏறும் தொழிலாளர்கள் பலர் நச்சுப் பாம்பு கடித்துக்கூட இறந்து விடுகிறார்கள் என்ற செய்தி வருகிறது. ஒரு பனை ஏறும் தொழிலாளி



1987 ஏப்ரல் 21] [திரு. வை. பாலச்சந்திரன்]

வீட்டிலிருந்து கிளம்பி பனை ஏறி, வேலையை முடித்துவிட்டு திரும்ப வீட்டுக்கு வருகிற வரையில் அவன் அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாகத்தான் கருத வேண்டும். எனவே அப்படி வீட்டை விட்டுக் கிளம்பிய நேரத்திலிருந்து மீண்டும் வீட்டிற்குத் திரும்ப வருகிற காலத்திற்குள்ளாக எந்த விபத்து நடந்தாலும் எப்படி நடந்தாலும் பனை ஏறும்போது நடைபெற்ற விபத்தாகக் கொண்டு அவர்களுக்கு அந்த உதவித் தொகையை வழங்க வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

பனைப் பொருள்களுக்கு ஒரு வாரியம் கன்னியாகுமரி மாவட்டத்தில் அமைத்துக் கொடுத்தால் பனையையும், பனைப் பொருட்களையும் நம்பி வாழ்கிற மக்களுக்கு உதவியாக இருக்கும்—எங்கள் மாவட்டத்தில்தான் பனை அதிகமாக இருக்கிறது. தற்போது என்னுடைய மாவட்டத்தில் வயல்களெல்லாம் வாழைத் தோட்டமாக மாறியிருக்கின்றன. வாழை நார் ஏராளமாகக் கிடைக்கிறது. எனவே அதைப் பயன்படுத்தி அழகு சாதனங்களை செய்வது சாத்தியக் கூறான ஒன்றாக இருக்கிறது. ஏற்கெனவே இவை அங்கே செய்யப்பட்டாலும்கூட அதற்கென்று தனிக்கவனம் செலுத்தினால் வீடு வீடாக ஒவ்வொருவரும் அந்த வேலையில் ஈடுபடுகிற வாய்ப்பு இருக்கிறது. அந்த வாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்தால் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கிற சாதாரணத் தொழிலாளர்கள் காலையிலும், மாலையிலும் விவசாய வேலைகளைப் பார்த்துவிட்டு எஞ்சிய நேரத்தில் இந்த வேலையைப் பார்ப்பதற்கு வாய்ப்பாக இருக்கும் என்பதால் அதைச் செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அனாதை ஆசிரமத்திலிருந்து வெளியே வரும் குழந்தைகளுக்கு எந்த சாதி என்று எழுதப்படுவதில்லை. இது ஒரு நல்ல ஏற்பாடாக இருக்கிறது. சாதியில்லாத சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்ற சித்தாந்தத்திற்கு ஒரு நல்ல வாய்ப்பாக இருக்கிறது. ஆனால் இந்த சித்தாந்தத்தைச் சொல்லுகிற நாம் நடைமுறையில் எதிர்மறையாக விதி முறைகள் வைத்திருக்கின்ற காரணத்தால் அனாதை விடுதியிலிருந்து வெளியே வருகிற குழந்தைகள் வளர்ந்து வேலைக்குச் செல்லுகிறபோது, என்ன

[திரு. வை. பாலச்சந்திரன்] [1987 ஏப்ரல் 21

சாதியைச் சேர்ந்தவன் என்று சான்றிதழ் கேட்கிறார்கள். தன்னுடைய தாய், தந்தையைத் தெரியாதவன் எப்படி தன்னுடைய சாதியைச் சொல்லுவான்? அவனுக்கே அவனுடைய சாதியைப் பற்றித் தெரியாதபோது வட்டாட்சித் தலைவரிடமிருந்து சாதிச் சான்றிதழ் கொண்டுவர வேண்டுமென்றால் எந்தச் சாதி என்று வட்டாட்சியர் எப்படிச் சொல்ல முடியும்? ஆகவே இவர்களுக்கு ஒரு மாற்று ஏற்பாட்டைச் செய்ய வேண்டும். இந்த ஏற்பாடு இல்லாத காரணத்தால் கடந்த மாதம் தொள்ளாயிரம் ரூபாய் மாத ஊதியம் கிடைக்கும் வேலை ஒருவருக்குக் கிடைக்காமல் போய்விட்டது. நானே நேரிடையாகக் கண்ட அனுபவம் இது. இதற்காக ஒரு சாதியை, அவர்கள் எந்தச் சாதி என்று சொல்லுங்கள்—எதையாவது ஒன்றைப் போட்டுக் கொடுத்து அதை அரசாங்கம் அங்கீகரிக்க வேண்டும் என்ற ஆணையைப் பிறப்பிக்க வேண்டும் என்று கேட்டு இந்த மானியக் கோரிக்கைகளை மனமுவந்து வரவேற்று அமர்கிறேன். நன்றி.

## 5. அறிவிப்பு:

### பேரவை அலுவல்:

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு. இன்று கூடிய அலுவல் ஆய்வுக் குழுவில் எடுக்கப்பட்ட முடிவுகளுக்கிணங்க பேரவையின் அலுவல்கள் கீழ்க் கண்டவாறு நடைபெறும்.

| | | |
|---|---|---|
| 22–4–1987 (புதன்கிழமை) முதல் 25–4–1987 (சனிக்கிழமை) வரை | — | ஏற்கெனவே அறிவித்தபடி நடைபெறும். |
| 26–4–1987 (ஞாயிற்றுக்கிழமை) | — | விடுமுறை. |
| 27–4–1987 (திங்கட்கிழமை) | — | மானிய கோரிக்கை எண் 48 —ஊரகத் தொழில்கள். மானிய கோரிக்கை எண் 57 — ஊரகத் தொழில்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 28–4–1987 (செவ்வாய்க்கிழமை) | — | மானிய கோரிக்கை எண் 28 —சமுதாய நல வளர்ச்சித் திட்டங்களும் நகராட்சி நிர்வாகமும். |



1987 ஏப்ரல் 21]

[பேரவைத் துணைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| 29–4–1987 (புதன்கிழமை) | — | மானிய கோரிக்கை எண் 36 —பாசனம். மானிய கோரிக்கை எண் 37 — பொதுப் பணிகள்—கட்டிடங்கள். மானிய கோரிக்கை எண் 38 —பொதுப் பணிகள்—பணியாளரமைப்பும் கருவிகளும் தளவாடமும். மானிய கோரிக்கை எண் 52 — பாசனம் குறித்த மூலதனச் செலவு. மானிய கோரிக்கை எண் 53 —பொதுப் பணிகள் கட்டிடங்கள் குறித்த மூலதனச் செலவு. |
| 30–4–1987 வியாழக்கிழமை | — | மானிய கோரிக்கை எண் 12 —தமிழ்நாடு 1959 ஆம் ஆண்டு இந்து சமய அறக் கட்டளைகள் சட்ட நிர்வாகம். மானிய கோரிக்கை எண் 25 —சின்கோனா. மானிய கோரிக்கை எண் 45 —காட்டு வளத் துறை. மானிய கோரிக்கை எண் 47 —செய்தி, சுற்றுலா, திரைப்படத் தொழில் நுட்பவியல். மானிய கோரிக்கை எண் 56 —காட்டு வளம் குறித்த மூலதனச் செலவு. |
| 1–5–1987 (வெள்ளிக்கிழமை) | — | மே தினம்—விடுமுறை. |
| 2–5–1987 (சனிக்கிழமை) | — | விடுமுறை. |
| 3–5–1987 (ஞாயிற்றுக்கிழமை) | — | விடுமுறை. |
| 4–5–1987 (திங்கட்கிழமை) மற்றும் 5–5–1987 (செவ்வாய்க்கிழமை) | — | மானிய கோரிக்கை எண் 15 —காவல் துறை. மானிய கோரிக்கை எண் 16 —தீயணைப்புப் பணிகள். |

[பேரவைத் துணைத் தலைவர்]

| | | |
|---|---|---|
| 6–5–1987 (புதன்கிழமை) | — | மானிய கோரிக்கை எண் 26 —கைத்தறியும் நெசவுத் தொழிலும்.<br>மானிய கோரிக்கை எண் 33 — வீட்டு வசதி.<br>மானிய கோரிக்கை எண் 34 — நகர்ப்பகுதி வளர்ச்சி. |
| 7–5–1987 (வியாழக்கிழமை) | — | மானிய கோரிக்கை எண் 7 —மாநிலச் சட்டமன்றம்.<br>மானிய கோரிக்கை எண் 8 —தேர்தல்கள்.<br>மானிய கோரிக்கை எண் 42 —ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுகால நன்மைகளும்.<br>மானிய கோரிக்கை எண் 43 —பல்வகை.<br>மானிவு கோரிக்கை எண் 58 —பல்வகை மூலதனச் செலவு.<br>மானிய கோரிக்கை எண் 59 —மாநில அரசு வழங்கும் கடன்களும் முன்பணங்களும்.<br>1. 1987-88ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் மற்றும் முடிவு பெறாத மானியக் கோரிக்கைகள் பொறுத்தவரை விவாதமின்றி 1 மணிக்கு வாக்கெடுப்பு.<br>2. வாக்கெடுப்பிற்குப் பின் 1987-88ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு — அறிமுகம் செய்தல். |
| 8–5–1987 (வெள்ளிக்கிழமை) | — | (1) 1987-88ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளுக்கான நிதி ஒதுக்கச் சட்ட முன்வடிவு ஆய்வு செய்தலும், நிறைவேற்றுதலும்.<br>(2) அரசினர் சட்டமுன்வடிவுகள்—ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |



| | | |
|---|---|---|
| 9–5–1987 (சனிக்கிழமை) | — | அரசினர் சட்டமுன்வடிவுகள் —ஆய்வு செய்தலும் நிறைவேற்றுதலும். |

4. வரவு-செலவுத் திட்டம் 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 27—கதர்த் தொழில்—தொடர்ச்சி.

கோரிக்கை எண் 30—சமூக நலன்—தொடர்ச்சி.

**திரு. எஸ். என். இராமசாமி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களால் கொண்டு வரப்பட்டுள்ள கதர்த் தொழில் மற்றும் சமூகநலன் மானிய கோரிக்கைகள் மீது நான் சார்ந்திருக்கின்ற இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பிலே சில கருத்துக்களைச் சொல்ல விழைகிறேன்.

இன்றைக்கு கிராமங்களில் அதிக பனை மரங்கள் இருக்கக் கூடிய இடங்களைக் கண்டறிந்து அந்த ஊராட்சி ஒன்றியங்களின் மூலமாக, ஊராட்சியில் ஒரு பனை வாரியத்தைத் தனியாக ஏற்படுத்தித் தர வேண்டும் என்று முதன் முதலில் கேட்டுக் கொள்கிறேன்.

கதர்த் துறையின் பணி இவ்வறட்சிக் காலத்தில் மிகவும் தேவை. நாடெங்கும் வறட்சி மிகுந்து வேலையில்லாத் திண்டாட்டம் கிராமங்களை ஆட்டிப் படைத்துக் கொண்டிருக்கிறது. இந்த நிலையில் கதர்த் துறையின் மூலமும் சமூக நலத்துறையின் மூலமும் ஏழை கிராம மக்களின் வாழ்வுக்கு வழி செய்ய வேண்டும். குறிப்பாக எனது தொகுதியில் பனைமரங்கள் அதிகம். பனை மரங்களை மட்டுமே நம்பி ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கின்றன.

(பிற்பகல் 1-50)

பனங்கற்கண்டு, கருப்புக் கட்டி தமிழகத்திற்கு மட்டுமே உரித்தானது. பனை மரத்திலிருந்து கிடைக்கும் பதனீரிலிருந்து ஏழை மக்களால் குடிசைத் தொழிலாக பெரும்பாலும் கன்னியாகுமரி, திருநெல்வேலி, சிதம்பரனார் மாவட்டத்திலுள்ள மிகவும் பின்தங்கிய வறட்சியான கிராமங்களில் தயார் செய்யப்படுகிறது. இன்று தமிழகத்தில் மட்டுமே உற்பத்தி செய்யப்படுவதாலும் இங்கு மட்டுமே உபயோகத்தில் உள்ளதாலும் அவைகளைப்

பற்றி சரிவரத் தெரியாத காரணத்தாலும் மத்திய அரசு உணவு கலப்படத் தடைச் சட்டத்தில் இவற்றிற்கான தனி தர நிர்ணயம் செய்யாது கரும்பு வெல்லத்துக்கு விதிக்கப்பட்டுள்ள தர நிர்ணயத்துக்கு உட்படுத்தி உள்ளது. இதனால் உற்பத்தியாளர்கள், விற்பனையாளர்கள் தேவையற்ற வீணான சிரமங்களுக்கு உள்ளாவதால் உற்பத்தி குறைந்து வருவதோடு இக்குடிசைத் தொழில் நசித்துக்கொண்டே வருகிறது. இந்நிலை நீடித்தால ஆயிரக்கணக்கான ஏழைக் குடும்பங்கள் பட்டினி கிடக்க நேரிடும். கருப்புக் கட்டியையும், கரும்பு வெல்லத்தையும் ஓரே தரத்தில் கொண்டு வர முடியாது. இரண்டுக்கும் மூலப் பொருள் வேறு, தயாரிக்கும் முறை வேறு. அடிப்படை குணங்கள் வேறு. பனங்கற்கண்டு குடிசைத் தொழிலாக மிகமிக ஏழை மக்களால் மிகுந்த சிரமத்துடன் நுணுக்கமான முறையில் தயாரிக்கப் படுகிறது. பனங்கற்கண்டு மருந்தாக மிகச் சிறிய அளவில் பயன்படுத்தப்படுகிறது. கருப்புக் கட்டி விலை குறைவான தால் பெரும்பாலும் ஏழை மக்களால் பயன்படுத்தப்படுகிறது. இது முக்கியமான உணவுப்பொருள் அல்ல. ஆனால் இதில் இயற்கையான மருத்துவப் பொருட்கள் உள்ளன. சத்துக்கள் நிறைந்தது. உடலுக்கு நன்மை பயப்பது. எனவே கலப்படத் தடைச் சட்டத்தில் கரும்பு வெல்லத்திலிருந்து பிரித்து விதிகள் இயற்ற மத்திய அரசைக் கேட்டுக்கொள்ள வேண்டும். அதுவரை தமிழகத்தில் ஏழை மக்களின் உயிருக்கு ஆதாரமாக உள்ள பனைத் தொழில் அழிந்துவிடாமல் காப்பாற்ற தற்போது உள்ள முரணான தர நிர்ணயத்தின் அடிப்படையில் பனங்கற்கண்டு, கருப்புக் கட்டி உற்பத்தி செய்பவர்கள், விற்பனை செய்பவர்கள் மீது நடவடிக்கை ஏதும் எடுக்காமல் இருக்க அரசு சுகாதார அதிகாரிகளுக்கு உடனடியாக உத்தரவுகள் பிறப்பிக்க வேண்டுகிறேன்.

பனங்கற்கண்டின் உயர்வை அறிந்த வெளி நாட்டினர் தரம் மிகுந்த நவீன கற்கண்டை விரும்புகின்றனர். ஆனால் இவை தயாரிப்பு மிகக் குறைவு. எனவே நவீன முறை கற்கண்டு தயாரிக்க சாத்தான்குளம், திருச்செந்தூர் தாலூக்காக்களில் பயிற்சி அளிக்க ஆவன செய்ய வேண்டும்.





பனையிலிருந்து விழுந்து இறப்பவர்கள் கள் குடித்திருந்தால் நிவாரணத் தொகை வழங்கப்படுவதில்லை. ஆனால் பதனீர் அருந்தி இரண்டு மணி நேரத்திற்குப் பின்னர் இறந்தாலும்கூட, வயிற்றுள் பதனீர் ஆசிட் கலப்பினால் கள்ளாகத்தான் இருக்கும். எனவே இவ்விதியைத் தளர்த்தி இறந்தவர் குடும்பத்துக்கு நிவாரணம் வழங்க வேண்டும்.

பனை ஓலையைப் பயன்படுத்தி பாய் முடையும் வேலை எனது தொகுதியில் பரவலாக நடைபெறுகிறது. இது முழுதும் ஏழைப் பெண்களின் வாழ்வுக்காக அமைந்த தொழில். எனவே பாய் முடையும் தொழில் உள்ள எல்லா கிராமங்களிலும் பாய் முடைவோர் கூட்டுறவுச் சங்கம் அமைத்து அவர்களுக்குக் கடன் வழங்கி பிழைப்புக்கு வழி செய்ய வேண்டும்.

பனை ஈர்க்கிலிருந்து பிரஷ் தயாரிக்கும் தொழில் பிரிவு ஒன்றை எனது தொகுதியில் அரசூர் ஊராட்சி அல்லது சாஸ்தாவி-நல்லூர் ஊராட்சி அல்லது நடுவக்குறிச்சி ஊராட்சி பகுதியில் அமைக்க வேண்டும். அது போலவே பனந்தும்பை பதப் படுத்தி பிரஷ் தயாரிக்கும் தொழில் பிரிவு ஒன்றையும் மேற்கண்ட ஏதாவது ஊராட்சிப் பகுதியில் அமைக்க வேண்டும்.

தற்போது ஐ.ஆர்.டி.பி. லோன்கள் வழங்குவதில் பல பனை வெல்ல உற்பத்தி கூட்டுறவு விற்பனைச் சங்கங்கள் பெருந் தவறிழைத்துள்ளன. அதன் சில தலைவர்கள் உறவினர்களையும் தனக்கு வேண்டியவர்களையும் சேர்த்து ஒரே குடும்பத்தில் பலருக்கு கடன் வழங்கி ஊழல் புரிந்து வருகின்றனர். திருச் செந்தூர், சாத்தான்குளம் தாலூக்காக்களில் இது பரவலாக நடை பெற்று வருகிறது. புதிய உறுப்பினர்களை சேர்க்கவும் மறுத்து வருகின்றனர். பனைத் தொழிலுக்கு சம்பந்தமில்லாதவர் களுக்கு கருப்புக் கட்டி உற்பத்தி கடன் வழங்கியுள்ளனர். எனவே புதிய உறுப்பினர்களைச் சேர்த்து பழைய தலைவர்களை மாற்றி நிர்வாகத்துக்கு புத்துயிர் வழங்கி ஏழை மக்களுக்கு கடன் வழங்கி தொழிலில் முன்னேற வழிவகை செய்ய வேண்டும்.

ஏழைப் பெண்களின் வாழ்வுக்கு வகை செய்ய அம்பர் சர்க்கா நிலையங்களை எனது தொகுதியில் திறக்க வேண்டும். எனது தொகுதியில் கருங்குளம் வட்டாரத்தில் இரு இடங் களிலும், ஆழ்வார்திருநகரி வட்டாரம் பேய்க்குளம் பகுதியில்

[திரு. எஸ். என். இராமசாமி] [1987 ஏப்ரல் 21

இரு கிராமங்களிலும் சாத்தான்குளம் வட்டாரத்தில் இரு கிராமங் களிலும் அம்பர் சர்க்கா பயிற்சி உற்பத்தி நிலையங்கள் துவங்க வேண்டும் என்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

அரசூர் பகுதியில் ஓலையிலிருந்து வண்ணப் பெட்டிகள், பாய்கள், கூடைகள், அலங்காரப் பொருட்கள் ஆகியவை தயாரித்து வெளி நாடுகளுக்கு அனுப்ப வசதியாக ஓர் கதர் கிராமத் தொழில் நிலையம் அமைக்க வேண்டும்.

கதர்த் துணிகளுக்கு வருடம் முழுவதும் 30 காசு தள்ளுபடி வழங்க வேண்டும்.

சமூகநலன் குறித்த மானியக் கோரிக்கையின்மீது சில விஷயங்களை இந்த நேரத்திலே நான் எடுத்து வைக்க விரும்பு கிறேன். வறட்சியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் ஏழை முதியோருக்கு வேட்டி சேலை வழங்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. எனது தொகுதி மழை எதுமின்றி வறட்சியினால் பாதிக்கப்பட்டு மிகுந்த துன்பத்தை மக்களுக்கு அளித்துள்ளது. இங்குள்ள ஏழை முதியவர்கள் அனைவருக்கும் வேட்டி, சேலை வழங்க வேண்டும்.

அனாதை இல்லங்களில் வளர்ந்து, பின் மணமுடித்து, குழந்தைகள் பிறந்தபின் அக்குழந்தைகள் ஜாதிச் சான்றிதழ் பெற இயலாத நிலையில் அனாதை இல்லங்களில் மட்டுமே கல்வி பயிலவும், உயர்கல்வி பெற இயலாமலும், வேலை வாய்ப்பின்றியும் வாடுகின்றனர். அவர்களுக்கு எந்த ஜாதியைச் சேர்ந்தவர் என்ற ஜாதிச் சான்றிதழ் வழங்க முடியவில்லை. எனவே அவர் களை பிற்பட்டோர் வகுப்பில் சேர்த்து சான்றிதழ் வழங்க விசேஷ சட்டப் பிரிவு ஒன்றை இயற்ற வேண்டும்.

இத்தகைய எந்த ஜாதியிலும் சேராதவர்கள் பலர் எந்த வேலையிலும் சேரமுடியாமலும் தங்கள் குழந்தைகளை அனாதை இல்லங்கள் தவிர வேறு எந்தப் பள்ளியிலும் சேர்க்க இயலாமல் உள்ளனர்.

சத்துணவுக் கூடங்களுக்கு காய்கறி வழங்கும் கூட்டுறவு சங்கங் களில் மார்க்கெட் விலையைவிட மிகுதியாக உள்ளது. எனவே சத்துணவு அமைப்பாளர்களே காய்கறிகளை வாங்க அனு மதிக்கப்பட வேண்டும்.



1987 ஏப்ரல் 21] [திரு. எஸ். என். இராமசாமி]

கிராமங்களில் சத்துணவு மையங்கள் அமைந்த இடம் சுகாதாரக் கேடுள்ள இடங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட இடங்களிலே பல சத்துணவுக்கூடங்கள் கட்டப்பட்டுள்ளன. எனவே சுகாதார வசதியற்ற இடங்களில் கட்டுவதை உடனடி யாக நிறுத்தி நல்ல சுகாதார வசதியுள்ள இடங்களில் சத்துணவு மையங்களை அமைக்கவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

முதியோர் உதவித் தொகை பெறும் வயதைக் குறைக்க வேண்டும். அதேபோல் ஊனமுற்றோர் உதவித் தொகை வழங்குவதிலும் சலுகை காட்டப்படவேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

தாசில்தார் அலுவலகங்களில் முதியோர் பென்ஷன்கள் தேக்கம் பெற்றுள்ளன. ஆகவே உடனடியாக முதியோர்கள் அவர் களுடைய பென்ஷன்களை பெறவேண்டும். அதை வேகப் படுத்தி அவர்கள் உடனடியாக பணம் வாங்க வகைசெய்ய வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, எனக்கு வாய்ப்பளித்தமைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு முடிக்கிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :** பேரவையின் காலை அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, மாலை 4-30 மணிக்கு பேரவை மீண்டும் கூடும்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-56 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

மாலை 4-30 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வேடசந்தார் வி. பி. பாலசுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

**4. வரவு-செலவுத் திட்டம் 1987-88, வாக்கெடுப்பு—தொடர்ச்சி.**
**கோரிக்கை எண் 27 கதர்த் தொழில்—தொடர்ச்சி.**
**கோரிக்கை எண் 30. சமூக நலன்—தொடர்ச்சி.**

**திரு. பொ. உத்திராபதி :** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சமூக நலன், கதர்த் தொழில் மற்றும் கதர்த் துறை ஆகிய மானியக் கோரிக்கைகளின்மீது சில கருத்துக் களைச் சொல்ல விழைகிறேன். காதி போர்டு [illegible]

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 21

கூடிய ஊழியர்களுக்கு அரசு ஊழியர்களைப் போன்று சலுகைகள், சம்பளங்கள், படிகள் வழங்கப்படுவதில்லை, அவர்களுக்கு அவையெல்லாம் மிகக் குறைவாக இருக்கிறது. காதி போர்டு மூலமாக தமிழ்நாடு முழுவதும் இன்றைக்கு நல்ல திட்டங்கள் உருவாக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, அமைச்சர் அவர்களுக்கும் அந்தச் சலுகைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

காதி போர்டிலே ஒரு குறிப்பிட்ட அதிகாரிக்காக ஒரு இயக்குநர் பதவி உருவாக்கப்பட்டதாகவும் அது விதிகளுக்கு முரணாக ஏற்படுத்தப்பட்டிருப்பதாகவும் அந்த அதிகாரி பதவியில் இருக்கிற வரையில்தான் அந்தப் பதவி இருக்கும்; அவர் விடுப்பிலோ அல்லது ஓய்விலோ சென்றுவிட்டால் அந்தப் பதவியும் ரத்தாகிவிடும் என்று ஒரு உத்திரவிடப்பட்டிருப்பதாகவும் தகவல் வந்து இருக்கிறது. ஒரு இலாகாவிலே இருக்கக் கூடிய ஒரு அதிகாரிக்காக ஒரு பதவியை உருவாக்குவதும் அவர் ஓய்வு பெற்றுவிட்டால் அந்தப் பதவியும் காலியாகும் என்பது ஒரு நபருக்காக பதவியை உருவாக்குவது போலாகும். ஆகவே, அது உண்மையாக இருக்குமானால் அமைச்சர் அவர்கள் அந்த இடத்தில் உடனடியாக தகுதியுள்ளவர்களை நியமிக்கும் வகையில் நிரந்தரமாகவே அந்தப் பதவியை இருக்கக்கூடிய முறையில் நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலன் என்பது ஒரு மிகப் பெரிய துறை. பல்வேறு இலாக்காக்கள் இதிலே அடங்கியிருக்கக்கூடிய நிலை இருக்கிறது. குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்கப்படுகின்றன. இப்படி சீருடைகள் வழங்கப்படுவதை நாங்கள் வரவேற்கிறோம், குழந்தைகளுக்கு அதுவும் ஏழை எளிய குழந்தைகளுக்கு, சீருடைகள் அவர்கள் வாங்கிக் கொள்ள முடியாத நிலையைப் போக்குவது நல்லது. இப்போது சீருடைகள் கொடுப்பதற்காக துணிகளை வாங்கி தையற் கடைகளில் கொடுத்து பாவாடையோ அல்லது ஷர்ட்டோ தைக்கச் சொல்லி, ஒவ்வொரு பள்ளியிலும் எத்தனை ஆண் பெண் பிள்ளைகள் படிக்கிறார்கள் என்பதைக் கணக்கெடுத்து அதன்படி அந்தத் துணிகளை அப்படியே கட்டி அனுப்பிவிடுகிறார்கள். ஆனால் சீருடைகளைக் கொடுக்கிற போது பிரச்சினைகள் வருகின்றன. 8 வயதுப் பெண்ணுக்கு



[1987 ஏப்ரல் 21 [திரு. பொ. உத்திராபதி]

பாவாடை என்று கொடுத்தால் அது 3 வயது பெண் குழந்தை போடக்கூடிய பாவாடையாகத்தான் இருக்கிறது. இதனால் கொடுக்கக் கூடிய அந்த ஆடைகளைப் பெரும்பாலான குழந்தைகளுக்குப் போட முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது.

(மாலை 4-40)

அதேபோல் தைத்துக் கொடுக்கிற தையலும் கொடுத்த ஒரு மாதம் ஆவதற்குள் பிரிந்து போகிறது; அப்படிப் பிரிந்து விட்டால் தைக்க முடியவில்லை; அதனால் துணி வீணாகிறது. யாராவது விவரம் தெரிந்தவர்கள் தைத்துக் கொடுத்தால்தான் கொஞ்ச நாளைக்கு இருக்கும். பிரிந்தவுடனே அவர்கள் தைக்கிறார்கள். அதனால், துணி வீணாகிறது. எந்த நோக்கத்திற்காக சீருடை வழங்குகிறோமோ, அந்த நோக்கத்தில் நிரந்தரமாகப் போட்டுக் கொள்கிற சூழ்நிலை அமையவில்லை. நான் அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, பள்ளிகள் திறந்தவுடனே, ஆண் குழந்தைகளுக்கும் பெண் குழந்தைகளுக்கும் தனித்தனியாகக் கணக்கெடுத்து, தையற்காரரை வைத்து அளவெடுத்து, தைத்து 10 நாள், 20 நாள் கடந்து கொடுத்தால்கூட, துணியையும் நன்றாகப் போட முடியும்; நீண்ட காலத்திற்கும் போட முடியும். நடைமுறையிலே இருக்கக்கூடிய சிக்கலைப் போக்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

---

குழந்தைகளுக்குக் காப்பகம் ஏற்படுத்த வேண்டும். இப்பொழுது அதை நாம் வரவேற்கிறோம். சாதாரணமாக, தஞ்சாவூரிலே, விவசாயத் துறையிலே, பெரும்பகுதி. தாய்மார்கள் ஆதி திராவிடர்கள். அவர்கள் ஒரு குழந்தை பிறந்தால் வேலைக்குப் போக முடியவில்லை. இன்னொரு குழந்தை பிறந்தால் அந்தக் குழந்தையைப் பார்த்துக் கொள்ள பெரிய குழந்தை தேவைப்படுகிறது. ஆகவே, பள்ளிக்கூடத்திற்கு அனுப்ப முடியவில்லை. இந்தக் குழந்தையை அந்தக் குழந்தை வைத்துக் கொள்ளக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஒரு குழந்தையைப் பார்த்துக் கொள்ள வேண்டுமென்றால், தாய் வேலைக்குச் செல்ல முடியாது; அல்லது ஒரு குழந்தையை இன்னொரு குழந்தையிடம் ஒப்படைத்தால், பள்ளிக்கூடம்

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 21

அனுப்ப முடியாத சூழ்நிலை ஏற்படும். குழந்தைகள் காப்பகம் ஒரு பஞ்சாயத்துக்கு ஒன்று ஏற்படுத்தப்படப் போவதாக அறிவிக்கப்பட்டது. இனிமேலும் குழந்தைகள் நலனைக் கருதி, அந்தக் குழந்தைகள் காப்பகம் உருவாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, குழந்தைகளுக்கு வைத்தியம் செய்ய டாக்டர்களை அனுப்புகிறார்கள். அந்த மாதிரி திட்டம் இருக்கிறதே, தவிர, பெரும்பகுதி டாக்டர்கள் கிராமங்களுக்குப் போனாலுங்கூட, எப்பொழுது வருகிறார்கள் என்பது தெரிவதில்லை. இருக்கிற குழந்தைகளைப் பரிசோதிக்கிறார்கள். தாய்மார்கள் வேலைக்கு சென்றுவிட்டால், அந்தக் குழந்தைகள் பரிசோதிக்கப்பட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, எந்த தேதியில் டாக்டர்கள் வருவார்கள் என்பது முன் கூட்டியே தெரிந்தால், குழந்தைகளை அந்த டாக்டர்களிடம் கொண்டு போய் பரிசோதிக்க முடியும். எந்தத் தேதியில் டாக்டர்கள் எந்த இடத்திற்குப் போகிறார்கள் என்று அந்தக் கிராமத்தில் உள்ளவர்களுக்குத் தெரிகிற மாதிரி ஏற்பாடு செய்தால்தான், குழந்தைகளுக்கு வியாதி தீர்க்க முடியும். ஏன் என்றால், இப்பொழுது எல்லாம் கலப்படமாக இருப்பதால், எவ்வளவு பேருக்கு என்ன வியாதி இருக்கிறது என்று தெரியவில்லை. டாக்டரிடம் போனால் ஒரு குழந்தைக்கு ஒரு நாளைக்கு சர்க்கரை நோய் இருக்கிறது என்கிறார்; இன்னொரு நாளைக்குப் போனால் வேறொரு நோய் இருக்கிறது என்று சொல்கிறார். நாளுக்கு நாள் வியாதிகள் வருவதால், குழந்தைப் பருவத்திலேயே பரிசோதிப்பது நல்லதாக இருக்கும் என்று கருதுகிறேன். ஆகவே, அமைச்சர் அவர்கள் எதிர்காலத்தில் அதைச் செய்ய வேண்டும்.

சத்துணவு, நல்ல திட்டம் என்பதை யாரும் மறுக்கவில்லை. சத்துணவு போடுகிற பொழுது சரியான பாதுகாப்போடு போட முடியாத சூழ்நிலை இருக்கிறது. ஒவ்வொரு மாதமும் இரண்டு மாவட்டங்களிலே பல்லி விழுந்து விட்டது; 50 பிள்ளைகள், 40 பிள்ளைகள் ஆஸ்பத்திரிக்கு அழைத்துச் செல்லப்பட்டார்கள் என்பது தொடர் கதையாக இருக்கிறது. தஞ்சை ஜில்லாவிலே ஒரே மாதத்திலே இரண்டு பள்ளிகளிலே பல்லி விழுந்து



1987 ஏப்ரல் 21] [திரு. பொ. உத்திராபதி]

குழந்தைகளை மருத்துவ மனைக்கு அழைத்துச்செல்ல பஸ் கிடைக்காமல் அவதிப்பட்டார்கள். இது தொடர்ந்து நடக்கிறது. அந்த மாதிரி பல்லி விழாமல் குழந்தைகளுக்கு உணவு கொடுப்பதற்கு ஏற்பாடு செய்ய வேண்டும்.

சத்துணவிற்காக அரிசி, பருப்பு, எண்ணெய், காய்கறி எல்லாம் கொடுக்கிறோம். ஆனால், எப்பொழுதும் அந்தக் குழந்தைகளுக்கு முழுமையாகப் போய்ச் சேரவில்லை. ஏனென்றால், அதை வைத்துக்கொள்ள இடம் இல்லை. பள்ளிக்கூடம் எங்கோ இருக்கிறது, பக்கத்திலே பாதுகாத்து வைக்க இடம் கிடையாது; பொருள்கள் பூராவும் அமைப்பாளர் யார் இருக்கிறாரோ அவர்கள் வீட்டிலே இருக்கிறது. அவர் வீடு இரண்டு மைல், மூன்று மைல் தூரத்தில் இருக்கிறது. அங்கேயிருந்து சைக்கிளில் வைத்து கொண்டு வருகிறார். அவர் கொண்டு வரும் போது எவ்வளவு கொண்டு வருகிறார், என்ன கொண்டு வருகிறார் என்பதைத் தினந்தோறும் பார்த்துக் கொண்டிருக்க முடியாது; அதிலே தவறு நடக்கிறது. காரணம், அவர்களுக்குக் கொடுக்கிற சம்பளம் குறைவு. அமைச்சரைக் கேட்டால், வேலையே இல்லாதவர்களுக்கு ஓரளவு சம்பளம் கொடுக்கிறோம் என்று சொல்கிறார். ஆனால், இதை நம்பி கல்யாணம் செய்து கொண்டு, குழந்தை பிறந்தால், இந்தச் சம்பளம் போதவில்லை. உண்மையிலேயே தவறு நடக்கிறது.

ஆகவே, அதைத் தடுப்பதற்கு இயற்கையிலேயே பொருள்களைப் பாதுகாத்து, அன்றாடம் சமைக்கிற அளவுக்கு ஏற்பாடு செய்யவேண்டும். பெரும்பாலான பள்ளிகளில் இடமே கிடையாது. அதற்கான ஏற்பாடுகளை அமைச்சர் அவர்கள் செய்யவேண்டும். முன்பு காய்கறிகளை அமைப்பாளர்கள் வாங்கிப் போட்டு வந்தார்கள். ஊருக்குப் பயந்து கொண்டு இரண்டு நாளைக்கு ஒரு தடவை, காய்கறி, பருப்பு போன்றவற்றை வாங்கிக்கொண்டு வந்து, சமையல் செய்தார்கள். இப்பொழுது ஊராட்சி ஒன்றியத்திலே இதற்கென்று ஒரு தனி அதிகாரி போட்டு, இவற்றை கான்ட்ராக்டிலே விட்டிருப்பதால், காய்கறிகள் முறையாகப் போய்ச் சேரவில்லை. தனியார் வியாபாரிகளிடம் விடுகிறார்கள். மார்க்கெட் ரேட்டுக்கும் இவர்கள் நிர்ணயிக்கிற ரேட்டுக்கும் வித்தியாசம்

[திரு. பொ. உத்திராபதி] 1987 ஏப்ரல் 21]

இருக்கிறது. இவர்கள் கூடுதலான ரேட் போடுகிறார்கள். எடுத்துப் போடுற ஆளுக்கு மாதச் சம்பளம் ரூ. 100, சைக்கிள் வாடகை என்ற வகையில். இதையெல்லாம் பார்த்தால் சாப்பாடு கூட அந்தக் குழந்தைகளுக்குப் போய்ச் சேராத நிலைமையிருக்கிறது. ஆகவே, எதிர்காலத்தில், நல்ல காய்கறி கொடுக்க வேண்டுமென்றால், அமைப்பாளர்களே அந்தக் காய்கறிகளை வாங்கிச் சமைத்துப் போட ஏற்பாடு செய்ய வேண்டும். இல்லையென்றால் அன்றாடம் எந்தக் கடையிலே விலை குறைச்சலாக இருக்கிறதோ அந்தக் கடையிலிருந்து காய் கறிகளை வாங்கலாம் என்கிற வகையில் ஏற்பாடு செய்ய வேண்டும். எனக்குத் தெரிந்த வரையில் ஒன்று அல்லது இரண்டு கடைகளிலிருந்து தான் இதனை வாங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதுகுறித்து ஒருநாள் எங்கள் யூனியனில் ஏன் அவ்வாறு செய்கிறார்கள் என்று கேட்டேன். அவர்களும் போக்குவரத்து, இன்னும் இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் பார்க்க வேண்டிய நிலைமை இருக்கிறது என்று அப்போது சொன்னார்கள். இதுபற்றி நான் ஏற்கெனவே இங்கே சொல்லியிருக்கிறேன். அந்த வகையில் குழந்தைகளுக்கு நல்லது செய்யும்போது உள்ளபடியே அவர்களுக்கு அது சரியாக போய் கிடைக்கவில்லை. ஆகவே சம்பந்தப்பட்ட அதிகாரிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அழைத்துப் பேசி இனிமேல் இவ்வாறு நடைபெறாமல் பார்த்துக் கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, விதவைகளின் பெண்களுக்கு திருமணம் நடைகிறார்கள். ஆனால் அவர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கவில்லை. ரொம்ப பேர் படித்தும் வேலையில்லாமல் இருக்கிறார்கள். இண்டர்வியூக்கு எல்லாம் போய் வருகிறார்கள், ஆனாலும் வேலை கிடைப்பதில்லை. உடல் ஊனமுற்றவர்கள் படித்து முடித்துவிட்டால் மற்றவர்களை விட முன்னுரிமை, சலுகை அளிக்க வேண்டும், அந்த வகையில் அவர்களுடைய கல்வித் தகுதிக்கேற்ப வேலைவாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, இன்றையதினம் உடல் ஊனமுற்றவர்கள் படித்திருப்பவர்களை திருமணம் செய்து ... பெற்றால் ஆயிரம் ரூபாய் அளிக்கப்படுவது உள்ளபடியே கிடைப்பதில்லை. தஞ்சாவூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் வருடத்திற்கு 7 பேர்களுக்குத்தான் இதனைக் கொடுக்கிறார்கள்



1987 ஏப்ரல் 21] [திரு. பொ. உத்திராபதி]

என்று சொல்கிறார்கள். இரண்டு குழந்தைகள் பிறந்து, குடும்பக் கட்டுப்பாடு பண்ணிய பிறகு தான் அதையும் கொடுக்கிறார்கள். நானே ஒரு விதவைக்கு சிபாரிசு பண்ணினேன். 3 வருடமாகியும் இன்னும் இந்த ஆயிரம் ரூபாய் அந்தப் பெண்மணிக்கு கிடைக்கவில்லை. ஆயிரம் ரூபாய் கொடுப்பது திருமணத்திற்காக. ஆனால் இரண்டு குழந்தைகள் பெற்ற பிறகு, குடும்பக் கட்டுப்பாடு செய்த பிறகு கொடுப்பது என்றால் அது பிரயோஜனம் இல்லை. ஆகவே, திருமணம் நடைபெற்றதற்கு பிறகு, 15 தினங்களுக்குள்ளாக அந்தப் பணம் கிடைக்கும் வகையில் இதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, கலப்புத் திருமணம் செய்பவர்களுக்கு 7 ஆயிரம் ரூபாய் கொடுப்பது என்பது நல்ல திட்டம். ஆனால் அது கிடைக்க வேண்டுமென்றால், 5 வருடம், 6 வருடம் அலைந்ததற்கு பிறகு தான் அது அவர்களுக்குக் கிடைக்கிறது. அலைவதிலேயே கிட்டத்தட்ட பாதி பணம் செலவாகிவிடுகிறது. மேலும் பத்திரத்தில் எல்லாம் 7 வருடம் என்று நிபந்தனை எல்லாம் போடுவதால் அவர்கள் உடனே பாங்கிலிருந்து பணத்தை எடுக்கவும் முடியாது. கலப்பு மணம் செய்பவர்களை பாராட்ட வேண்டும். அவர்களை இழுத்தடிக்காமல் குறைந்தபட்சம் 5 அல்லது 6 மாதத்திற்குள்ளாவது அவர்களுக்கு அந்தப் பணம் கிடைக்க அரசு உத்தரவாதம் அவசியம் இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கலப்புத் திருமணம் செய்பவர்கள் விண்ணப்பம் செய்து அதன் மூலம் இந்த சலுகையை அனுபவிக்கும் நிலை இருக்கிறது. இதில் எந்த ஒரு குறையும் இல்லாமல் நல்ல முறையில் நடைமுறைப்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்த்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, தாலி செய்து கொடுப்பதாக அறிவித்தார்கள். எனக்குத் தெரிந்தவரையில் இரண்டு பேர் மனு கொடுத்தார்கள். அந்த இரண்டு பேருக்குமே அது கிடைக்கவில்லை. திட்டம் அறிவிப்போடு நின்றிருக்கிறது. எதிர்காலத்திலாவது தாலி கொடுக்கிற திட்டத்தைப் பொறுத்தவரையில் அறிவிப்போடு நின்றுவிடாமல் தாலியைப் பெற தகுதியுடையவர்கள் மனு

[திரு. பெ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 21

கொடுத்துவிட்டால் உடனடியாக விசாரணையை நடத்தி, விசாரணை முடிந்துவிட்டால் அதை கொடுக்கின்ற ஒரு நிலையை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, முதியோர்க்கு உதவித் திட்டத்தைப் பொறுத்த வரையில் அதுவும் நல்ல திட்டம்தான். ஆனால் 50 பேருக்கு இந்த உதவியைத் தருகிறார்கள் என்றால் இன்றையதினம் 100 மனுக்கள் வந்திருக்கின்றன. கிடைக்க வேண்டிய தகுதியுடையவர்கள் தான் விண்ணப்பிக்கிறார்கள். உடனே, அவர்களை போட்டோ எல்லாம் எடுக்கிறார்கள். ஆனால் யாராவது இரண்டு பேர் செத்தால்தான் மற்ற இரண்டு பேர்களுக்கு அது கிடைக்கின்ற நிலை இருக்கிறது. இந்தமாதிரி நிலைமை இனிமேலும் இருக்கக் கூடாது. இன்றையதினம் விவசாய தொழிலாளிகள் கிராமப்புறத்தில் இருக்கிறார்களே, அவர்களுக்கு 5 குழந்தைகள் இருந்தாலும் கூட வயதான காலத்தில் பாதுகாப்பு இல்லை. வயதான காலத்தில் அவர்கள் வேலை செய்து சாப்பிட முடியாதவாறு வேலையில்லாத் திண்டாட்டம் வேறு நாட்டிலே இன்றையதினம் இருக்கிறது. காரணம், இரண்டு போகம் சாகுபடி செய்கிறபோதே விவசாய தொழிலாளர்களுக்கு வருடத்திற்கு கிட்டத்தட்ட 100 நாட்கள் தான் வேலை கிடைக்கும். இப்போது ஒரு போகம் சாகுபடி செய்கிற நிலையில் அதுவும் கிடைக்க வாய்ப்பில்லை. ஆகவே 60 வயதுக்கு மேல் ஆகிவிட்டால், வறுமைக் கோட்டுக்குக் கீழே இருக்கின்ற விவசாயத் தொழிலாளி என்றால் எந்தவிதமான நிபந்தனையும் இல்லாமல் அனைவருக்கும் மாதந்தோறும் 50 ரூபாய் உதவித் தொகை வழங்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து, சமூக நலத் துறை மூலமாக தையல் மெஷின் வழங்குகிறார்கள். பயிற்சியும் கொடுக்கிறார்கள். பயிற்சி கொடுத்த பிறகு அவசியம் மெஷின் கொடுத்தாக வேண்டும். சர்க்கார் இனாமாக தான் இதனை கொடுக்கிறது. அதுபோல் பாங்க் மூலமாக கடன் வாங்கி கடையில் வைத்துக் கொள்ளலாம் என்பதுதான் திட்டம். ஆனால் பயிற்சி முடித்ததற்கு பிறகு, பாங்கிலே லோன் வேண்டி அப்ளிகேஷன் போட்டால் பாங்கில் பல கேள்விகளைக் கேட்டு அவர்களுக்கு லோன் கொடுப்பதில்லை.



1987 ஏப்ரல் 21] [திரு. பெ. உத்திராபதி]

ஆகவே, அரசு பயிற்சி கொடுத்தும், 6 மாதம் பயிற்சி பெற்றும் அவர்களுக்கு அதன் பலன் கிடைக்கவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து நடவடிக்கை எடுக்க வேண்டும். தையல் மெஷின் கொடுக்கிறார்கள் என்றால், யாருக்குக் கொடுக்கிறார்கள் என்று நான் தஞ்சையில் பார்த்தேன். உண்மையிலே யார் தகுதி படைத்தவர்களோ அவர்களுக்கு அது கிடைக்கவில்லை. ஒருவரை நானே போய் நேரில் கேட்டால்கூட, அங்கே என்ன நடக்கிறது என்று கேட்டால், யாரெல்லாம் அவர்களை முந்திப் போய் பார்க்கிறார்களோ அவர்களுக்கு அந்தத் தையல் மெஷின்களை அங்குள்ள அந்த அதிகாரிகள் கொடுக்கிறார்கள். அதை நான் ஊழல் என்று சொன்னால் நீங்கள் மறுத்தீர்கள். அந்த மாதிரி இருக்கக் கூடாது. யார் யாருக்கு அந்தத் தையல் மெஷினை வாங்கக்கூடிய அல்லது கொடுக்க கூடிய தகுதி இருக்கிறதோ அவர்களுக்கு எந்தத் தடங்கலும் இல்லாமல் கொடுக்க வேண்டுமே தவிர, தகுதியில்லாதவர்களுக்குக் கொடுப்பதும், தகுதியுள்ளவர்களுக்குக் கொடுக்காமல் அதைவிடுவதும் என்ற போக்கு தஞ்சாவூரிலே இருப்பது நான் நேரிலே கண்ணால் பார்த்துவிட்டு வந்த விஷயம். ஆகவே, இந்த மாதிரி குறைபாடுகள் இல்லாமல் அமைச்சரவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

(மாலை 4-50)

தென்னை நார் கயிறு தொழிற்சாலையைப் பற்றி சொல்ல வேண்டுமென்றால், தஞ்சாவூர் ஜில்லாவிலே பெரும்பகுதியில் இடும்பவனம் சம்பாநோடை, தம்பிக்கோட்டை, பட்டுக்கோட்டை போன்ற இந்தப் பகுதிகளைப் பார்த்தீர்கள் என்றால் நிறையத் தென்னை மட்டைகள் கிடைக்கின்றன. கயிறு தொழிற்சாலை ஒன்று இருக்கின்றது. இப்பொழுது இருப்பது போதாது. இன்னும் அதிகமாக கயிறு தொழிற்சாலைகளை உருவாக்க வேண்டும். அந்தக் கயிறு தொழிற்சாலையை உருவாக்குகின்ற பொழுது தென்னை மட்டை நாரும் வீணாகாமல் கயிறு திரிப்பதற்கும் வாய்ப்பு கிடைக்கும். கயிறு பின்னக்கூடிய, கூடை பின்னக் கூடிய ஒரு இனத்தார் இருக்கிறார்கள். கிராமத்திலே, பார்த்தீர்கள் என்றால் பத்து பேர், நான்கு பேர் குடிசை கூரையாகப் போட்டுக்கொண்டு கூடை பின்னுகிறார்கள். கயிற்றை தென்னை மரத்திலே கட்டிக் கொண்டு இன்னமும் அந்தப் பழைய முறையிலேயே கயிறு திரித்துக் கொண்டு

[திரு. பொ. உத்திராபதி] [1987 ஏப்ரல் 21

இருக்கிறார்கள். அந்தமாதிரி தொழிலில் ஈடுபடுபவர்களுக்குப் பாதுகாப்பு இல்லாமலிருக்கிறது. அந்த மாதிரி உள்ளவர்களை, மாவட்டம் முழுவதும் இருக்கக் கூடியவர்களை ஒருங்கிணைத்து அவர்களுக்கு இந்த வேலைக்கு உத்தரவாதம் அளிக்கக்கூடிய அளவிற்கும், இந்தத் தொழிற்சாலைகள் மூலமாக கயிறுகள், கூடைகள் முடைந்து குறைந்த விலையில் வாங்குபவர்களுக்குக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அடுத்து, கள் இறக்கும் தொழிலாளர்களுக்கு முப்பதாயிரம் பேர்களுக்குத்தான் உதவி என்று சொல்லி இன்றைக்கு குறிப்பிட்டிருக்கிறீர்கள். நான் பட்ஜெட்டிலே கூடக் குறிப்பிட்டேன். ஆனால் மரப்பாஸ் உள்ளவர்களுக்கு மட்டும்தான் இந்தக் கணக்கு சேர்ந்திருக்கிறது. ஆனால் ஒரு கள்ளுக்கடை முதலாளி இருபது தொழிலாளர்களை வைத்து மரம் ஏறியிருந்தால் ஐந்து பேர்களுக்குத்தான் மர பாஸ் வாங்கிக் கொடுத்திருக்கிறார்கள். பதினைந்து பேர்களுக்கு மரப்பாஸ் கிடையாது. இப்பொழுது சர்க்கார் கொடுத்து இருக்கின்ற கணக்குப்படி, சம்பந்தப்பட்ட அதிகாரி கொடுத்திருப்பதெல்லாம், மரப்பாஸ் யார் யாருக்கெல்லாம் வாங்கிக்கொடுத்து இருக்கிறார்களோ அவர்கள்தான் அந்த முப்பதாயிரம் பேர். மரப்பாஸ் வாங்கிக் கொடுக்காமலேயே மரம் ஏறிக்கொண்டிருந்தார்களே அவர்கள் பூராவுக்கும் இந்தச் சலுகை கிடையாது. தாசில்தார்கள் பூராபேரும் முன்கூட்டியே தேதியைப் போட்டு மர பாஸ் வாங்கித் தருகிறோம் என்று சொல்லி வகைவேறு மோசம் நடந்து பலபேர் பணமெல்லாம் கொண்டுவந்து கொடுத்தார்கள். அவர்கள் லட்சக்கணக்கான பேர் ஏமாற்றப்பட்டிருக்கிறார்கள். ஆகவே உண்மையாக மரம் ஏறும் அந்தத் தொழிலாளர்களுக்கு இந்த சர்க்கார் கொடுக்கக்கூடிய சலுகைகள், 1000 ரூபாய் மானியம். 1000 ரூபாய் பொருள் என்பதற்குப் பதிலாக அவர்களுக்குக் குறைந்தபட்சம் ஐயாயிரம் ரூபாய் கொடுத்து அவர்கள் தொழில் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

பனை ஏறுவதற்கு லைசென்ஸ் வேண்டியதில்லை என்று சொல்லப்பட்டிருக்கிறது. எங்கே பார்த்தாலும் பனை மரம் ஏறும் தொழிலாளர்கள் பதநீர் இறக்குகிறார்கள்; பனங்கற்கண்டு செய்கிறார்கள். இந்த நாடு பூராவிலேயும் செய்யக்கூடிய இந்தப் பொருள் கலப்படம் இல்லாமல் செய்யப்படுகிறது.



1987 ஏப்ரல் 21] [திரு. பொ. உத்திராபதி]

இப்பொழுது அது மக்களுக்குத் தேவைப்படுகிறது. அப்படிப்பட்ட அந்த மரம் ஏறுபவர்களுக்கெல்லாம் இவறைக்கு இருக்கக் கூடிய அந்தச் சலுகைகளை விட, இன்னும் அந்த மரம் ஏறுபவர்கள் சங்கத்தின் பிரதிநிதிகளை அழைத்து அவர்களுக்குக் கிடைக்கக்கூடிய சலுகைகள் கிடைப்பதற்கு அமைச்சரவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நான் இறுதியாகச் சொல்லிக்கொள்வதெல்லாம் திட்டங்கள் நல்ல திட்டங்கள். அதை யாரும் நல்ல திட்டம் அல்ல, அரசு கொண்டு வந்திருக்கிறது என்கிற மாதிரி குறை சொல்ல அல்லது குற்றம் சொல்ல, அப்படித்தான் எதிர்க்கட்சியிலே பேச வேண்டும் என்ற முடிவிலே பேசவில்லை. ஆனால் திட்டம் முழுமையாக இல்லை. நல்ல திட்டங்கள், இந்தத் திட்டங்களுக்குச் சர்க்காரால் ஒதுக்கப்படக் கூடிய பணம் முழுமையும் யாருக்குப் போய்ச் சேரவேண்டுமோ அவர்களுக்குச் சேர்கிறதா என்று சொன்னால் சேரவில்லை. அமைச்சரவர்களே வெளியிலே போகின்றபொழுது எப்படியும் நான்கைந்து சத்துணவு மையங்களைப் போய்ப் பார்க்கிறார்கள்; பார்த்துவிட்டு அந்த இடத்திலேயே மூன்று பேரை, இரண்டு பேரை சஸ்பெண்ட் செய்துவிட்டு வருகிறார்கள். ஏன் சஸ்பெண்ட் பண்ணுகிறீர்கள்? தவறு இருக்கிறது. இப்பொழுது அந்தத் தவறு தமிழ்நாடு முழுவதும் இருக்கிறது. தவறு நடக்காது இருக்க வேண்டுமென்று சொன்னால், அந்தச் சத்துணவு மையங்களிலே சத்துணவு போடுவது என்பது நிரந்தரம் என்று வந்தாகிவிட்டது. இதை நாம் இனிமேல் இல்லை என்று செய்யப் போவது கிடையாது. சத்துணவு நிரந்தரம் என்கிறபொழுது, சத்துணவிலே பணியாற்றுகின்றவர்கள் ஒரு அமைப்பிலே மூன்று பேர்கள் இருக்கிறார்கள். சமைக்கின்றவர் ஒருவர், குழந்தைகளை அழைத்துக் கொண்டு வருபவர் ஒருவர்; அதையெல்லாம் பராமரிக்கின்றவர் ஒருவர். ஆகவே, சத்துணவு நிரந்தரம் என்கிறபொழுது அவர்களையும் நிரந்தரப் பணியாளர்களாக ஏற்படுத்தி சர்க்கார் கொடுக்கக்கூடிய சலுகைகளை அவர்களுக்கும் கொடுத்து, நாம் கொடுக்கக்கூடிய பொருளுக்குத் தவறு ஏற்படாமல் அதையும் தடுத்தால்தான், எந்தச் சத்தை குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டுமென்று அரசு விரும்புகிறதோ அந்தச் சத்து கிடைக்குமே தவிர, இல்லாவிட்டால் நாம் எவ்வளவுதான் கொடுத்தாலும்,

உண்மையிலேயே அந்தச் சத்து குழந்தைகளுக்குப் போய்ச் சேராது; குழந்தைகளைப் பராமரிக்கக் கூடியவர்களுக்குத்தான் அந்தச் சத்து போய்ச் சேருமே தவிர, சர்க்காரின் நோக்கம் நிறைவேறாது என்று சொல்லிக்கொள்கிறேன்.

பெண்கள் இன்றைக்கு எங்கு பார்த்தாலும் இழிவுபடுத்தப் படுகிறார்கள். யாரும் இல்லை என்று சொல்ல முடியாது. இன்றைக்கு உழைக்கும் பெண்கள்தான் உற்பத்தியைப் பெருக்குகிறார்கள். அவர்களுக்கு என்ன ஊதியம் கிடைக்கிறது? அவர்களுக்கு என்ன பாதுகாப்பு இருக்கிறது? எந்த பாதுகாப்பும் இல்லை. ஆணுக்கு பெண் சமம் என்ற நிலை வந்துவிட்டது என்று சொல்கிறார்கள். ஆண்களுக்கு சமமாக கார் ஓட்டுகிறார்கள்; சைக்கிள் ஓட்டுகிறார்கள்; உத்தியோகம் பார்க்கிறார்கள். இன்னும் சொல்லப்போனால் உத்தியோகத்தில் எங்கே நம்மை மிஞ்சிவிடுவார்களோ என்று ஆண்கள் அஞ்சக்கூடிய அளவுக்கு பெண்கள் போட்டிபோட்டு வருவதாகச் சொல்கிறார்கள். அந்த அளவுக்கு பெண்கள் வர, வர அதிகமாகி, இரண்டு பங்குக்குமேல் பெண்கள் படித்துவிட்டு வருவதாகச் சொல்கிறார்கள். அதனால் சிலருக்கு பொறாமையாக இருக்கிறது; சிலருக்கு கஷ்டமாக இருக்கிறது. அப்படி இருக்கின்றவர்களுக்கு போதுமான பாதுகாப்பு இந்த ஆட்சியில் அளிக்கப்பட வேண்டும். இப்போது பாதுகாப்பு குறைவாக இருக்கிறது. எப்படி பாதுகாப்பு குறைவாக இருக்கிறது. ஏன் குறைவாக இருக்கிறது என்று நான் சொல்ல விரும்பவில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றாகத் தெரியும்.

உழைக்கின்ற பெண்களுக்கு சம ஊதியம் கொடுக்க வேண்டும். ஆண்களும் உழைக்கிறார்கள், பெண்களும் உழைக்கிறார்கள். ஆனால் ஆண்களுக்கு ஒரு வேலைக்கு 12 ரூபாய் கூலி கொடுத்தால் பெண்களுக்கு அதே வேலைக்கு 5 ரூபாய் கொடுத்தால் போதும் என்று நினைக்கிறார்கள். அப்படி இருக்கக்கூடாது. சம உழைப்புக்கு சம ஊதியம் என்ற அளவுக்கு ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென்று கேட்டு, என்னுடைய உரையை முடித்துக் கொள்கிறேன். வணக்கம்.

1987 ஏப்ரல் 21]

**டாக்டர் கே. சமரசம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 'பணக்காரர்கள் மாளிகையைவிட ஏழை எளியவர்களுடைய குடிசைகளில்தான் அன்பு மிகுந்திருக்கிறது' என்பதை இந்த அரசு மிகத் தெளிவாக உணர்ந்துகொண்டு இருப்பதன் காரணத்தால்தான் சமூக நலத்துறைக்கு 92,18,97,000 ரூபாய்க்குமேல் ஒதுக்கி, இந்த மானியக் கோரிக்கையை கொண்டு வந்து நிறைவேற்றக்கூடிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வந்திருக்கிறார்கள்.

கதர்த் துறை, சமூக நலத்துறைபற்றி பல்வேறு உணர்வுகளை இங்கே வெளியிடுவதற்கு முன்பாக இந்தத் திட்டங்களின் நோக்கம், சமூகநலத்தின் நோக்கம் என்ன என்று எண்ணிப் பார்க்கின்றபோது 'காலாகாலங்களுக்கும் அழிந்துபடாது நிலைத்து நிற்பவவே காலத்தின் பிரதிநிதி' என்று சொல்வார்கள். இருக்கிற காலத்திலே நாம் போடுகின்ற சட்டம், திட்டம் எந்தக் காலத்திலும் அழியாத எண்ணத்தை, உணர்வை ஏற்படுத்துகின்ற வகையில், நிலைத்து நிற்கின்ற வகையில் இருக்க வேண்டுமென்று இந்த நாட்டின் முதலமைச்சர் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள் என்பதை இந்த கோரிக்கை மிகத் தெளிவாக எடுத்துக்காட்டுகிறது என்பதைச் சொல்லிக்கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன்.

அதே நேரத்தில் என்னென்ன திட்டங்களைப் போட்டிருக்கிறோம் என்பது கொள்கை விளக்கக் குறிப்பில் தெளிவாக இருக்கின்ற காரணத்தால் அவைபற்றி விரிவாகச் சொல்லாமல் ஒருசில கருத்துக்களை மட்டும் அரசாங்கத்தின் பரிசிலனைக்கு வைக்கிறேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்லும்போது தகுந்த விளக்கத்தை அளிப்பதற்காக சில கோரிக்கைகளை முன்வைக்கிறேன்.

கதர்த் துறை இருக்கிறது. கதர்த் துறையிலே பல்லாண்டுகளாக ஊழியர்கள் பணியாற்றிக்கொண்டிருக்கிறார்கள். ஆனால் பணியாற்றிக் கொண்டிருக்கிற ஊழியர்கள் அவர்கள் கதர் வாரிய ஊழியர்களா அல்லது அரசு ஊழியர்களா என்பது இன்னும் திரிசங்கு சொர்க்கமாக இருக்கிறது. அரசுப் பணியாளர்கள் என்ற நிலையில் கோரிக்கை வைத்தால் வாரியப் பணியாளர்கள் என்று

[டாக்டர் கே. சமரசம்] [1987 ஏப்ரல் 21

நழுவிவிடுகிறார்கள். அவர்கள் வாரியப் பணியாளர்கள் என்று கோரிக்கை வைத்தால் அரசுப் பணியாளர்கள் என்று சொல்லி விடுகிறார்கள். இப்படி அவர்கள் அரசுப் பணியாளர்களாகவும் இல்லாமல், வாரியப் பணியாளர்களாகவும் இல்லாமல் திரிசங்கு சொர்க்கத்தில் இருக்கின்ற காரணத்தால் இதற்கு ஒரு முடிவு கட்டி, அவர்களுடைய வாழ்க்கை சிறப்படைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதற்கு சரியான விளக்கத்தைக் கொடுத்து, நல்லமுறையிலே அவர்களுடைய பணியைப் பயன்படுத்துகின்ற வகையில் முறைப்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்தபடியாக, ஏதுமற்றவர்கள், அநாதைகள், ஒடுக்கப்பட்டவர்கள், ஒதுக்கப்பட்டவர்கள், இல்லாதவர்கள் என்று சொல்லக்கூடிய எத்தனையோ பேர் இருக்கிறார்கள் என்று சொல்கிறபோது ஒருவர் இறந்துவிட்டால் மிச்சமாகின்ற அந்தத் தொகை இன்னொருவருக்குக் கிடைக்கும் என்று சொல்வது நாம் கடைபிடித்து வருகின்ற மனிதாபிமானத்தை அழித்துவிடும். அநாதை என்று இருந்தால், திக்கற்றவர் என்று இருந்தால், வாழ வழியற்ற நிலையில் இருந்தால், அவர்கள் எத்தனை ஆயிரம், இலட்சம் என்று சொன்னாலும் கூட, உண்மையிலே அவர்கள் நலிந்து சீரழிந்துகொண்டிருக்கிற சூழ்நிலையில் இருந்தால் அந்த மனுக்களை எல்லாம் முழுமையாகப் பரிசீலனை செய்து, அவர்கள் நல்வாழ்வு வாழ வழிகாட்டி, நல்ல முறையிலே உதவிகளை அளிக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்ள நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாலை 5-00)

நாம் ஆட்சி அமைத்த காலத்திலிருந்து போட்டிருக்கின்ற பல்வேறு திட்டங்கள், சமுதாய நலத்திட்டங்களாகவே இருக்கின்றன. இப்படி பல்வேறு சமுதாய நலத்திட்டங்களைப் போட்டிருக்கக்கூடிய நிலையில், நாம் போட்டிருக்கக்கூடிய திட்டங்களைத் தாண்டி மேலும் சில சிக்கல்களிலே இருப்பவர்கள் இருக்கிறார்கள் அவர்கள் கவனிப்பாரற்று இருக்கிறார்கள் என்ற நிலைமை இருப்பது நம்முடைய உணர்வுக்கு விரோதமாக இருக்கும் என்பதால் அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பரிசீலனை செய்து அவர்களுக்கு நல்வாழ்வு கொடுக்கக்கூடிய வகையில் நல்ல அறிவிப்பு தரவேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டு இருக்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [டாக்டர் கே. சமரசம்]

அதுமட்டுமல்ல, உடல் ஊனமுற்றோர், காது கேளாதோர், பார்வையற்றோர் என்றெல்லாம் இருக்கிறார்கள். பார்வையற்றோர் எங்கேயாவது போக்குவரத்தில் நசுங்கிச் செத்தார்கள், பாதிக்கப் பட்டார்கள், ஆக்சிடெண்டில் இறந்தார்கள் என்று யாரையாவது சொல்ல முடியுமா? குருடன் அப்படி இறந்தான் என்று யாராவது சொல்ல முடியுமா? கருத்துக் குருடர்கள்தான் மாட்டிக்கொண்டு அவ்வாறு இறந்து இருக்கிறார்களே தவிர கண்ணை இழந்தவர்கள் தவித்ததாக எங்கேயும் நான் படித்ததே இல்லை. பார்வை இல்லாவிட்டாலும் கூட உலகை உணர்ந்து செல்லக்கூடிய நல்ல பாதையை அவர்கள் வகுத்துக்கொண்டிருக்கிற காரணத்தால் இப்படிப்பட்ட கஷ்டம் இல்லை என்பது என்னுடைய துணிவான கருத்தாகும். அதுபோல் காது கேளாதவர்கள் உலகத்திலே பல்வேறு வசந்திகளைப் பரப்பி, வாதங்களை உருவாக்கி, வாதங்களை எதிர்பார்க்கக்கூடிய நிலையை உருவாக்கிக்கொண்டிருக்கிறார்களா என்று பார்த்தால், மெத்தப் படித்தவர்கள் பல்வேறு நிலைகளில் முன்னணியில் இருக்கக் கூடியவர்கள்தான் இந்த நிலையில் ஈடுபட்டிருக்கிறார்களே தவிர காது கேளாதவர்கள் நல்ல கருத்தை உருவாக்கி உலகுக்கு பல வகைகளில் எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அந்த வகையில் அறிஞர் பெருமக்கள் கூட இருக்கிறார்கள். அவர்கள் வசந்திக்கு அப்பாற்பட்டவர்கள். ஆகவே அப்படிப் பட்டவர்களுக்கு புனர்வாழ்வு கொடுக்க வேண்டிய அவசியம் அரசாங்கத்திற்கு இருக்கிறது. அவர்களுக்கெல்லாம் நல்ல வகையில் உதவி செய்து அவர்களுடைய அறிவை, ஆற்றலை, திறமையை, மறைந்து கிடக்கிற அவர்களுடைய பல்வேறுபட்ட உணர்வுகளைப் பயன்படுத்திக்கொள்ளக்கூடிய வகையில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நல்லதொரு திட்டத்தைத் தீட்ட வேண்டும். அந்த வகையில் இந்த அரசு முன்வரவேண்டும்.

அதுமட்டுமல்லாமல் இப்போது இரைச்சல் காரணத்தாலோ, உணவு காரணத்தாலோ, தண்ணீர் காரணத்தாலோ, இடையிடையே வருகிற சொல்ல முடியாத புதிரான நோய்கள் காரணத்தாலோ காது கேளாதோர் பட்டியல் என்பது அதிகரித்துக் கொண்டே போய்க் கொண்டிருக்கிறது. உடல் ஊனமுற்றோர் ஏராளமாக உலகெங்கும் இருக்கிறார்கள். நான் தமிழ்நாட்டை

[டாக்டர் கே. சமரசம்] [1987 ஏப்ரல் 21

மட்டும் சொல்லவில்லை. உலகெங்கும் இப்படிப்பட்ட நிலைமை வளர்ந்துகொண்டிருக்கிறது. பிறந்தவுடன் வளர, வளர காது கேளாதோர் எண்ணிக்கையும் கூட கூடி இருக்கிறது என்று நான் சொல்வேன். அப்படிப்பட்டவர்கள் தனியார் துறையிலே சென்று, தனியார் கல்விக் கூடத்தில் படிக்க வேண்டுமென்றால் அவர்கள் மிகவும் சிரமப்படுகிற நிலைமை இருக்கிறது. இது மிகப்பெரிய பிரச்சினையாக இருப்பதன் காரணத்தால் காது கேளாதோர் எவ்வளவு பேர் தமிழகத்தில் இருக்கிறார்கள் என்ற கணக்கை எடுத்துப் பார்த்து அந்த அளவுக்கு கல்விக் கூடங்களை உருவாக்க இந்தச் சமூகநல வாரியம் முன்வர வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவையெல்லாம் மனிதாபிமான அடிப்படையில் எடுக்கப்படுகிற முடிவு. அதுமட்டுமல்ல. இங்கே சமூகநலன் என்று சொன்னாலே அது பெரும்பாலும் தாய்க்குலத்தைத்தான் குறிக்கும். பெண்கள் இந்த நாட்டின் கண்கள் என்று சொல்கிறார்கள். சரிநிகர் சமானம் என்று சொல்கிறார்கள். ஆனால் அவர்களுடைய சொத்து மதிப்பு இந்த நாட்டில் எத்தனை பெர்சன்ட் என்று பார்த்தால் கேள்விக்குறியாக இல்லை. கேலிக்குரியதாக இருக்கிறது. பெண்ணைப் பற்றி வானளாவ, வாயளாவ நாம் பேசிக்கொண்டிருக்கிறோமே தவிர அவர்களுடைய பொருளாதார வளர்ச்சி என்ன என்பதைப் பார்ப்பதில்லை. பெண்களால்தான் உலகமே இருக்கிறது, அவர்களால்தான் இன்பம் இருக்கிறது, அவர்களால்தான் சுகம் இருக்கிறது, வாழ்வு இருக்கிறது, நானே அந்தப் பெண்ணால்தான் வாழ்ந்து கொண்டிருக்கிறேன் என்று சொல்லக் கூடியவர்கள் சொல்லிக் கொண்டிருக்கிறார்களே தவிர அவர்களுக்குரிய உரிமையைக் கொடுத்திருக்கிறார்களா என்று பார்த்தால் இல்லை. ஆகவே இந்த சமுதாயத்தின் அடிப்படை நிலைமையிலே இருக்கக்கூடிய பெண்களின் வாழ்வு மலரக்கூடிய வகையில், வருமானம் பெருகி அவர்களால் தொழில் பெருகி, அவர்களால் அடிப்படை சொத்துக்கள் உருவாக வழிவகை செய்யவேண்டும். கிராமங்களிலே இருக்கக்கூடிய தாய்மார்களுடைய பொருளாதார வளர்ச்சி எந்த அளவுக்கு பெருகுகிறதோ அந்த அளவுக்குத்தான் நாட்டின் முன்னேற்றம் இருக்கும். வருமானம் பெருகுவது என்று சொன்னால்



1987 ஏப்ரல் 21] [டாக்டர் கே. சமரசம்]

ஆண்கள் கையிலே இருக்கிற பணத்தால் அல்ல; வங்கியிலே இருக்கிற டிராப்ட் செக்கால் அல்ல; பெண்கள் கையில் எந்த அளவுக்குப் பணம் பெருகுகிறதோ, குடும்பத்தை நடத்துகிற பெண்கள் கையில் எந்த அளவுக்கு பணப்புழக்கம் இருக்கிறதோ அந்த அளவுக்குத்தான் நல்ல நிலைமையும், நாட்டின் மறுமலர்ச்சியும் உருவாகும் என்பது என்னுடைய திட்டவட்டமான கணக்கீடு.

சிறு தொழில் ரா மெட்டீரியல்ஸ் என்பதைப் பொறுத்த வரையில் ஒவ்வொரு மாவட்டமாகப் பார்த்து, எந்தெந்த மாவட்டத்தில் என்னென்ன மூலப்பொருட்கள் இருக்கிறதோ அந்த மூலப்பொருட்களைப் பயன்படுத்தி இந்தச் சமூக நல வாரியம் இந்தப் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து தொழில்களை உருவாக்கி, பொருட்களை உற்பத்தி செய்து விற்பனைக்குக் கொடுக்கக்கூடிய வகையில் முன்வந்தால்தான் பிரச்சினைகளை எளிதாகத் தீர்த்து வைக்க முடியும் என்பது என்னுடைய தெளிவான கருத்தாகும். அந்த அடிப்படையில் எந்த மாவட்டத்தில் எந்த மூலப்பொருட்கள் மிக அதிக அளவில் கிடைக்கிறதோ அவற்றை எல்லாம் தாய்மார்கள் கையில் ஒப்படைத்து, அதைப் பெருக்கி வணிகத்திற்கு, வியாபாரத்திற்கு அனுப்பி வைப்போமானால் நஷ்டம் இல்லாமல் நல்ல முறையில் வாழக்கூடிய நிலை உருவாகும். அப்படிப்பட்ட வகையில் பெண்களுக்கென்று தனித் திட்டங்களைத் தீட்ட வேண்டுமென்று நான் இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அது மட்டும் அல்ல இப்போது நாம் காலணி திட்டத்தை அறிவித்திருக்கிறோம். ஏற்கெனவே நான் சொன்னேன், புரட்சித் தலைவர் அவர்கள் இந்த திட்டத்தை புகுத்துகின்ற போதே, எதிர்காலத்தில் இளைஞர்கள் எப்படி வர வேண்டும் என்று யோசித்து புகுத்தியிருக்கிறார்கள், என்று. தமிழன் என்றொரு இனம் உண்டு தனியே அவர்க்கொரு குணம் உண்டு என்று சொல்வார்கள். ஏதோ ஒரு காலத்தில் பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் இருந்ததன் காரணமாகவோ இடையில் யார் யாரோ நம்மை அடிமை கொண்டு ஆண்டு வந்ததன் காரணமாகவோ

தமிழன் என்றொரு இனம் உண்டு, தனியே அவர்க்கொரு குணம் உண்டு என்ற தனித்தன்மை எங்கோ போய் ஏதோ ஒரு சூழ் நிலை உருவாகியிருக்கிற காரணத்தால்தான், நாம் அந்த நிலைக்கு வரவேண்டும் என்ற நல்ல உணர்வோடுதான் குழந்தை களை நல்ல முறையில் வளர்த்து 15 ஆண்டுக்காலம் கழித்து பார்க்கிறபோது, தமிழகத்தில் நெஞ்சுரம் மிக்கவர்கள், வீரம் மிக்கவர்கள், ஒழுக்கம் உள்ளவர்கள், மிக அருமையான தனித் தன்மை கொண்டவர்கள் எதிர்காலத்திற்கு வழிகாட்டியாகக் இருக்கக் கூடியவர்கள் இருப்பார்கள் என்ற உணர்வை உணரக் கூடிய வகையில் நல்ல வழக்கத்தை விதைத்து ஒழுக்கத்தை அறுவடை செய்யக்கூடிய வகையில்தான் இந்தக் காலணி திட்டத்தை புரட்சித் தலைவர் அவர்கள் புகுத்தினார்கள் என்பது என்னுடைய கருத்தாகும்.

காலணிகளைப் பற்றி சொல்லும்போது பலர் இங்கே பல கருத்துக்களைச் சொன்னார்கள். முற்றும் துறந்த முனிவன் கூட பாதுகுறடு இல்லாமல் நடக்கவில்லை. அவர்களும்கூட பாத குறடுகள் வைத்துக் கொண்டுதான் இருக்கிறார்கள். காலணி திட்டத்தை யார் எதிர்க்கிறார்கள் என்றால், வீட்டிலே பெட் ரூமிற்கு ஒரு செப்பல், அங்கேயிருந்து பாத்ரூமுக்கு போனால் அதற்கு தனியே ஒரு செருப்பு, வெளியே போய் பலரோடு பேசு வதற்கு ஒரு வகை செருப்பு. உள்ளே இருந்து கார் வரையில் வருவதற்கு ஒரு செருப்பு கார் போர்ட்டிகோவில் நிற்கும். அது வரையில் ஒரு செருப்பு. வெளியிலே போக கலர் கலரான உடை களுக்கு ஏற்றவாறு செருப்பு என்று வைத்திருப்பவர்கள்தான் காலணி திட்டத்தைப் பற்றி நையாண்டி செய்ய முடியும். ஆனால் எதுவுமே இல்லாமல் காலணி எப்படி இருக்கும் என்று கூட தெரியாமல் வலது காலிலே குத்திய முள்ளை இடது கையினால் எடுத்து எறிந்து விட்டு வாழ்க்கை நடத்தக்கூடிய விவசாயிகள். தொழிலாளர்கள் பற்றி புரட்சித் தலைவர் எண்ணிய காரணத்தி னால்தான், அவர் சாசாரண நிலையில் இருந்து படிப்படியாக உயர்ந்து முதல்வர் என்ற அந்தஸ்தைப் பெற்றிருக்கக்கூடிய நிலையில், அவரைச் சுற்றிலும் எப்படிப்பட்ட இரும்பு வளையம் இருந்தாலும் எப்படிப்பட்ட உயர் அதிகாரிகள் இருந்தாலும் சரி, எப்படிப்பட்ட பணக்காரர்கள் இருந்தாலும் சரி, அவர் கண்ணோட்டம், பார்வை அத்தனை பேர்களையும் மீறி ஏழைகளே



பார்வை என்று சொல்லுவார்களே அப்படி தொழிலாளர்கள் மீது இல்லாதவர்கள் மீது படுகிறது என்பதற்கு முன் உதாரணமாகத் தான் இந்த திட்டமே உருவாகியிருக்கிறது என்பதை தான் இங்கே கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

ஆகவே இப்படிப்பட்ட ஒரு புனிதமான திட்டம் களங்கப் படாமல் இருப்பதற்கு இவைகளையெல்லாம் பாட்டா போன்ற கம்பெனிகளுக்கு கொடுத்து விடக் கூடாது. மிகப் பெரிய கம்பெனிகளுக்கு ஏஜென்சி முறையில் கொடுத்து விடக் கூடாது. பணக்கார கம்பெனிகளுக்கு கொடுத்து சப்ளை செய்யுங்கள் என்று கேட்டுவிடக்கூடாது. கூட்டுறவு குடிசைத் தொழில் மூலம் உருவாக்கி அந்தந்த ரோடுக்கு அவர்களுடைய காலுக்கு ஏற்ப செய்யக்கூடிய வகையில் கொண்டு வர வேண்டும். அப்போது தான் தரம் நல்லதாக இருக்கும். இல்லையென்றால் நாகரிகத்தின் பிடியிலே சிக்கி நசுங்கிவிடக் கூடும். ஆகவே இதை அப்படிப் பட்ட நிலைக்கு, குடிசைத் தொழிலாக கொண்டுவர வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக் கிறேன். அந்த அடிப்படையிலே குடிசைத் தொழிற் சங்கத்தை உருவாக்கி அவர்கள் மூலமாக காலணிகள் தயாரித்து சின்னஞ் சிறார்களுக்கு தொழிலாளர்களுக்கு பெண்களுக்கு விவசாயத் தொழிலாளர்களுக்கு கொடுக்கக் கூடிய வகையில் நடைமுறைப் படுத்த முயற்சி செய்ய வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

அது மட்டும் அல்ல, பிச்சைக்காரர்கள் பிரச்னை இருக்கிறது. நாம் சத்துணவு திட்டம் போட்டு, தன்னிறைவுத் திட்டம் போட்டு, ஓய்வு ஊதியம் கொடுத்து, இவைகள் எல்லாம் செய்தும் கூட பிச்சைக்காரர்கள் இருக்கிறார்கள் என்று சொன்னால் அவர்கள் உண்மையிலேயே பிச்சைக்காரர்களா என்று பார்க்க வேண்டும். முதலில் உண்மையான பிச்சைக்காரர்களை கணக்கு எடுக்க வேண்டும். மியூசிக் அக்காடமி பக்கம் போனால் போதும், மயிலாப்பூரிலேயிருந்து வரும்போது அந்தப்பக்கம் போனால் சின்னப் பையன் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு பிச்சை எடுக்கிறான். பெரிய மனிதன் ஒரு குழந்தையை வைத்துக் கொண்டு பிச்சை எடுக்கிறான். குழந்தை யாருடையது என்னவென்று தெரியாது. குழந்தை

பாலுக்கு அழுகிறது, குழந்தை கஞ்சிக்கு அழுகிறது என்று பிச்சை கேட்கிறார்கள். 5 பைசா கொடுத்தால் திரும்ப நம் முகத்திலேயே எறிந்துவிடுகிறார்கள். 'யார் ஐயா அது, பெரிதாக காரில் வருகிறாய் 5 பைசா போடுகிறாயா' என்று திருப்பி நம்மீதே எறிந்து விடுகிறார்கள். 4 அணா, 8 அணா 1 ரூபாய் என்று கேட்கிறார்கள். இதைப் பார்க்கும் போது, திட்டம் போட்டு திருடுற கூட்டம் திருடிக் கொண்டே இருக்குது சட்டம் போட்டு தடுக்கிற கூட்டம் தடுத்துக் கொண்டே இருக்குது என்ற பாடல் தான் நினைவு வருகிறது. ஆகவே இந்தப் பிச்சைக்காரர்களை ஒழிக்கக் கூடிய வகையில் அவர்களுக்கெல்லாம் குடிசைத் தொழில்களின் மூலம் பாதுகாக்கக் கூடிய வகையிலே மாற்றி அமைக்க வேண்டும். பிச்சைக்காரர்கள் ஒழிப்பு என்பது அவசியம் தேவை. அது இந்த நாட்டிற்கு அத்தியாவசியமானது என்பதை இந்த நேரத்தில் சொல்லிக் கொள்ள கடமைப் பட்டிருக்கிறேன்.

(மாலை 5-10)

அடுத்து ஒன்றைச் சொல்ல விரும்புகிறேன். அநாதை இல்லம் என்று இருக்கிறது. அதிலே ஆஸ்பத்திரியிலிருந்து ஒரு பையனைக் கொண்டு போய் சேர்க்கிறார்கள். அதைப்போல ஒரு பெண்ணை ரோட்டிலே கண்டெடுத்து அதிலே சேர்க்கிறார்கள். இரண்டு பேரும் அந்த இல்லத்தில் வளர்கிறார்கள். ஏதோ அங்கே படித்துவிட்டு வெளியே வந்து இரண்டு பேரும் கல்யாணம் செய்து கொள்கிறார்கள். வேலைக்குப் போகிற போது கவர்ன்மெண்டில் கேட்கிறார்கள். உங்களுடைய பர்த் சர்டிபிகேட் எங்கே? ஜாதிச் சான்றிதழ் எங்கே? நேட்டிவ் சர்டிபிகேட் எங்கே? இப்படியெல்லாம் கேட்கிறபோது அவர்களிடம் அந்த சர்டிபிகேட்டுகள் எல்லாம் கிடையாது. பர்த் சர்டிபிகேட் கேட்டால் யார் கொடுப்பது? நேட்டிவிட்டி சர்டிபிகேட் எதை வைத்து கொடுப்பது? ஜாதிச் சான்றிதழ் எங்கேயிருந்து கொண்டு வருவது? காரணம் அவர்கள் எல்லாம் அநாதைகள், கண்டெடுக்கப்பட்டவர்கள். அவர்களிடம் பர்த் சர்டிபிகேட் கேட்டால் அவர்கள் என்றைக்கு அந்த இல்லத்தில் அட்மிஷன் ஆனார்களோ அதைத்தான் சொல்வார்கள். பாலமந்திரில் இப்படி 5, 6 கேஸ்கள் நடந்தன. வியாசர்பாடியில் ஒருவர் இருக்கிறார். அநாதைகளாக இருந்து கல்யாணம் செய்து கொண்டவர்கள். அவர்களுக்கு குழந்தை பிறந்து விட்டது.





மாண்புமிகு பேரவைத் தலைவர்: கதை சொல்கிற இடம் அல்ல இது.

டாக்டர் கே. சமரசம்: தலைவர் அவர்களே, கதையல்ல, நடந்த நிகழ்ச்சியைத் தான் குறிப்பிடுகிறேன். ஆகவே அங்கே இருக்கக்கூடியவர்கள் அநாதைகள் என்ற நிலையில் கவர்ன்மெண்ட் பள்ளிக்கூடங்களில் கூட படிக்க முடியாமல், அநாதைப் பள்ளிக்கூடங்களில் அந்தக் குழந்தைகளை அனுப்பிவைக்கக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. என்னிடத்தில் அதுபற்றி புகார் வந்திருக்கிறது. ஆகவே இந்த நிலையை மாற்றியமைக்கக்கூடிய வகையில் ஒரு சட்ட முன்வடிவை கொண்டு வந்து நிறைவேற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்த வகையில் அவர்கள் கடன் பெற, தொழில் செய்ய, உத்தியோகம் பெறுகிற வகையில் அரசாங்கம் வழிவகை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து சத்துணவுத் திட்டத்தை நவீனப்படுத்த வேண்டும். நாளைக்கு பண்டிகை என்றால் இரண்டு நாள் சாப்பாட்டை இன்றைக்கே போட்டு விடுகிறோம் என்று சொல்கிறார்கள். இரண்டு நாள் சாப்பாட்டை ஒருநாளில் சாப்பிட முடியுமா? ரொம்ப சங்கடம். நாம் நல்ல எண்ணத்தோடு ஒன்றைச் சொல்கிற போது அங்கே இருப்பவர்கள் தப்புக் கணக்குப் போட்டு கொள்ளையடித்து விடுகிறார்கள். அதற்கு நாம் வழிவகை செய்யக்கூடாது. நல்ல நோக்கத்தோடு அரசாங்கம் எடுக்கிற முடிவை அவர்கள் வேறுவகையில் திருப்பிக் கொள்கிற காரணத்தால், அதனால் பாதிக்கப்படுகிறவர்கள் குழந்தைகள் என்பதால், அதுபோன்ற நிலைமைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அதைப்போல நான்கைந்து சத்துணவுக் கூடங்களை இணைத்து ஒரே இடத்தில் வைக்கலாம். காரணம் சத்துணவுக் கூடங்களில் சாமான்களை வைப்பதற்கு சரியான இடம் இருக்காது. திருடு போயிற்று என்று சொல்வதற்கு இடமிருக்கிறது. ஏமாற்ற இடமிருக்கிறது. அப்படிப்பட்ட நிலைமைகள் வாராமல் தடுக்கக் கூடிய வகையில் அரசு இதனை மறு பரிசீலனை செய்ய வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

அடுத்து அவர்கள் அறிவிக்கக்கூடிய அந்த திட்டத்திற்கு, ஒரு சிட்டத்திற்கு 36 பைசாதான் நாம் கொடுக்கிறோம். இது ரொம்ப பற்றாது. 36 பைசா கொடுப்பது ரொம்ப போறாது. இதை 40 பைசாவாக உயர்த்திக் கொடுப்போமேயானால், அந்த ஏழைகளுக்கு அது உதவியாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், இன்றைக்கு இருக்கக்கூடிய நிலைமையிலே காதி மூலமாக பல வேலைகளை பெண்களுக்கு நாம் கொடுக்க முடியும். காதித்துறையின் மூலமாக பல தொழில்களை நாம் ஏற்படுத்திக் கொடுக்க முடியும். இதற்கு எவ்வளவு பணம் செலவழித்தாலும் கூட பரவாயில்லை. பணம் செலவு செய்து, பழம் உற்பத்தி செய்வது, நார்த் தொழில், பிரம்பு, பாலியஸ்டர் துணி, ஊதுபத்தி, மெழுகுவர்த்தி, சோப்பு போன்ற பொருட்களை எல்லாம் செய்வதற்கு, ஆங்காங்கு கூட்டுறவுத் துறையிலே பெண்களை இணைத்து, அவர்களுக்கு நாம் இந்தத் தொழிலைச் சொல்லிக் கொடுப்போமேயானால், அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அடுத்து, இந்தக் கதரிலே 50 இன்ச் என்று வைத்தால் உண்மையிலேயே அது ரொம்ப பெரியதாக இருக்கிறது. அதுவும் பெண்களுக்கு 48 இன்ச் என்று இருந்தால் நன்றாக இருக்கும். 50 இன்ச் என்று வைத்து போட்டு விடுகிறார்கள். அதைக் கட்டிக் கொள்வதற்கு மிகவும் சிரமமாக இருக்கிறது. மேலும் பெண்கள் கட்டிக்கொள்ளக்கூடிய அந்த துணிகள் எல்லாம், சேலைகள் எல்லாம் சாயம் போகாமல் இருக்க வேண்டும். சாயம் போனால் ரொம்ப அசிங்கமாக இருக்கிறது. சாயம் போனால் அதைத் திருப்பிக் கட்ட முடியவில்லை, அது கிழிந்து போனாலும் அதைத் தைப்பதற்கு முடியவில்லை. ஆகையினாலே, 48 இன்ச் என்று பெண்களுக்கு வைக்க வேண்டும். ஏன் என்றால் நாங்கள் எல்லாம் கதர்த் துணியை காலம் காலமாக கட்டிக்கொண்டு வருகிறோம். அதிலே அனுபவசாலிகள். ஆகையினால்தான் இதைப்பற்றி நான் சொல்கிறேன். எனவே அந்த மாதிரியான ஒரு நிலைமையை உருவாக்கினால் மிகவும் நன்றாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.





அடுத்து இந்த பாலியஸ்டர் ரொம்ப நன்றாக இருக்கிறது. பாலியஸ்டர் விலை பட்டு விலை மாதிரி இருக்கிறது. ஒரு பாலியஸ்டர் துணியை எடுத்துக்கொண்டால் இன்றைக்கு 28 ரூபாய், 30 ரூபாய் என்று வருகிறது. இதைக்கூட கொஞ்சம் குறைக்கலாம். அப்படிக் குறைத்தால் நன்றாக இருக்கும்.

பெண்கள் அணிகிற இந்த பட்டு ரோல் என்று சொல்கிறோமே அதற்குக் கூட 4 மாதம் ரிபேட் இல்லை. இவைகளை டீச்சர்ஸ் வாங்கிக்கொண்டு இருக்கிறார்கள். டாக்டர்கள் வாங்கிக் கொண்டு இருக்கிறார்கள். இந்த கதர் பட்டுச் சேலைகள் தரமாக இருக்கின்றன. எனவே இதற்கும் 6 மாதத்திற்கு ரிபேட் கொடுத்து, இப்போது 10 பைசா என்று இருப்பதை 15 பைசாவாகக் கொடுக்க வேண்டும். நமக்கு காதி கமிஷனிலிருந்து கொடுக்கக் கூடிய அந்த ரிபேட் பணத்தையும் வாங்கி, இதையும் சேர்த்து, வாங்கி அனுபவிக்கின்றவர்கள்,—அதாவது பெனிபிசியரிஸ்—யார் யார் வாங்கி அனுபவிக்கிறார்களோ அவர்களுக்கு சற்று குறைத்துக் கொடுப்போமானால், அது சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

அதுமாத்திரமல்லாமல், கதர்த் திட்டம். இன்றைக்கு நாம் கிளஸ்டர் வைக்கிறோமே, அதிலே ஒவ்வொரு ஆண்டுக்கும் ஒரு யூனியனை எடுத்துக்கொண்டிருக்கிறோம். இதை மாற்றி, ஒவ்வொரு ஆண்டுக்கும் 2, 3 யூனியன்கள் என்று ஒவ்வொரு ஜில்லாவிலும் எடுத்து, இந்த கிளஸ்டர் திட்டத்தைக் கொண்டு வர வேண்டும். இதற்கு மத்திய அரசின் பணம் நமக்கு அதிகமாகக் கிடைக்கிறது. அந்த அடிப்படையிலே செய்து கொடுத்தால் அது இன்னும் சற்று சாலச் சிறந்ததாக இருக்கும் என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-20)

அடுத்தது அடுத்தது சமுதாய வளர்ச்சி. இந்த சமுதாய வளர்ச்சி 1947-லே அதாவது வளர்ச்சி துறையிலே ஒரு அங்கமாக ஏற்படுத்தியது. இன்றைக்கு அதற்கென்றே ஒரு வாரியம் அமைக்கப்பட்டு சிறப்பான முறையிலே பணியாற்றக்கூடிய நிலையிலே நாம் இருந்துகொண்டிருக்கிறோம். இங்கே இருக்கக்கூடியவர்கள் சென்ற காலங்களிலேயெல்லாம் 5 ஆண்டுக்கு ஒரு முறை இந்த போர்டு மாற்றப்பட்டது. ஆனால் இப்பொழுது இருக்கின்ற

[திருமதி எ. எல். பொன்னம்மாள்] [1987 ஏப்ரல் 21

நிலைமையில் 1977-லே போடப்பட்ட போர்ட் அப்படியே 10 ஆண்டுகாலமாக மாற்றப்படாமல் இருக்கிறது. கிராமப்புறங்களில் இருப்பவர்களுக்கு சற்று வாய்ப்பு கொடுத்து, ஏனென்றால், கிராமத்தில் இருக்கக்கூடிய பால்வாடிகள் சென்று பார்ப்பதற்கான ஆட்சிநிலை உருவாக இந்த போர்டுகளையும் மாற்றி போட்டால் தான் நன்றாக இருக்கும். அதுமாத்திரம் அல்லாமல், இதிலே பணியாற்றக் கூடியவர்கள், பாவம், ஒரே துறையிலே இருந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு சற்று மாறுதல் கொடுத்து, கிராமங்களுக்கு ஒரு வாய்ப்பு கொடுக்கும் அளவிலே, சிறுபோர் களுக்கு, அதிக நாட்களாக இருக்கக் கூடியவர்களுக்கு பர்[illegible] [illegible] கொடுக்க வேண்டும்.

அடுத்து, அரிஜனங்களுக்கு உண்மையிலேயே, இதிலே கூட இந்த 18 சதவிகிதம் நிறைவேற்றப்படவில்லை. இந்த 18 சதவிகிதத்தை ஒவ்வொரு துறையிலும், அதிலும் பெண்களுக்காக [illegible] ஒதுக்கிக் கொடுப்போமேயானால் பல பெண்களுக்கு வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய நல்ல சூழ்நிலை [illegible] என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட ஆசைப்படு கிறேன்.

அடுத்து பெண்கள் நிலைமை. பெண்கள் நிலைமையைப்பற்றி நீங்கள் எல்லோரும், அமைச்சர்களும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இங்கே இருக்கக்கூடிய அத்தனை அங்கத்தினர்களும் [illegible] ஒன்றுதான். எம்.ஏ. படிக்கிறான். பி.ஏ. படிக்கிறான் [illegible], எம்.எட்., எம்.பில்., என்று படிக்கும் [illegible] வேலையில்லாமல் அந்தப் பெண்கள் அலைவதைப் பார்த்தால் மிகவும் பரிதாபமாக இருக்கிறது. அதுமாத்திரம் அல்ல, கல்யாணம் செய்து கொள்கிறார்கள். கல்யாணம் செய்து [illegible] வரதட்சணை கொடுமையால் படித்த பெண்ணைக் [illegible] பார்த்து அதிகமாகச் சம்பாதித்து [illegible] [illegible] கொடுக்கும் பெண்ணைக்கூட கொடுமைப்படுத்தி, அவர்கள் தங்களுடைய குழந்தைகளையெல்லாம் விட்டுவிட்டு [illegible] செய்து கொள்ளும் நிலைமை இருந்து கொண்டு இருக்கிறது. நான் பலமுறை பேசும்போது சொல்லியிருக் கிறேன். பெண்களுக்கு எப்படி அரிஜனங்களுக்கு [illegible] [illegible] 18 சதவிகிதம் வேலைவாய்ப்பு [illegible]

புநிலைமையை உருவாக்கி இருக்கிறோமோ அதேபோன்று இந்த நாட்டில், இந்த சமுதாயத்தில் பெண்கள் தலை நிமிர்ந்து வாழவேண்டுமென்றால், அவர்களுக்கு குறைந்தது 25 சதவிகிதமாவது ஒவ்வொரு துறையிலேயும் வேலை வாய்ப்பு அளிக்க வேண்டும். இப்போது செகரட்டேரியட்டிலே இருக்கிறதா? செகரியல் லெவலில் போட்டிகூட இல்லை; இந்த சர்க்காரிலே இருக்கிற சோசியல் வெல்பேர் இலாக்காவிலே, செக்ரடேரியட்டிலே இருக்கிறதா? இங்கே அசெம்பிளி டிபார்ட்மெண்டிலே இருக்கிறதா? எந்தத் துறையிலும் பெண்களுக்கு நாம் சலுகை காட்டவில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பெண்கள் மீது அக்கறை கொண்டவர்கள். பெண்களுடைய அன்பைப் பெற்றிருக்கிறார். பெண்கள் அவர்மீது பக்தியுள்ளவர்களாக இருக்கிறார்கள். ஆகையால் பெண்களுடைய விழிப்புணர்வை நன்றாக உருவாக்கிக் கொண்டுவரவேண்டுமானால், பெண்கள் சமுதாயத்திலே நல்ல சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்றால், அதற்காக இரண்டு மூன்று ஆண்டுகால் திட்டத்தை போட்டு, எங்கெல்லாம் படித்த பெண்கள் இருக்கிறார்களோ, அத்தனை பேர்களுக்கும் வேலை வாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய ஒரு நிலைமையை கொண்டுவர வேண்டுமென்று நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

சத்துணவு மையங்களிலே, எனக்கு முன்னாலே பேசிய நண்பர்கள் சொன்னார்கள். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்த திட்டம், நாங்களெல்லாம்கூட என்ன திட்டம், எவ்வளவு பணம் செலவாகிறது, இதை தொடர்ந்து செய்ய முடியுமா என்றெல்லாம் கேட்டோம். ஆனால் இனிமேல் இந்தத் திட்டத்தை யாராலும் மாற்ற முடியாது. அப்படி மாற்றினால், யார் மாற்றுகிறார்களோ அவர்களுக்கு கடுமையான கெட்ட பெயர் வரும். அதிலே ஆயிரக்கணக்கான பெண்களுக்கு இதிலே வேலைவாய்ப்பு கொடுத்து இருக்கிறார்கள். அவர்களுக்கு ஒரு மாதத்திற்கு 190 ரூபாய் சம்பளமாகக் கொடுக்கிறார்கள். இந்த 190 ரூபாயில் கொடுப்பதால் திருடக்கூடிய பழக்கம் வருகிறது. இதையெல்லாம் பார்க்கிறபோதும், அதிலே குறை இதிலே குறை என்று சொல்கிறோம். 350 ரூபாய் 400 ரூபாய் என்று சம்பளத்தை உயர்த்திப் போட்டு, நிரந்தரமாக்கி, அவர்களை மாறுதல் செய்ய

செய்யாமல் அந்தந்த ஊர்க்காரர்களைப் போட்டால் சற்று பயப்படுவார்கள். அவர்கள் அரிசி திருடிக்கொண்டோ, பருப்பு எடுத்துக்கொண்டோ போனாலும்; ஊர்க்காரர்கள் பிடித்துவிடுவார்கள்; ஊர்க்காரர்கள் கோபித்துக் கொள்வார்கள்; அவர்களுக்கு வெட்கம் ஏற்படும். ஆகையால் அந்தப் பழக்கத்தை மாற்ற வேண்டுமென்றால், அவர்களுடைய பணியை நிரந்தரமாக்கி, சம்பளத்தை உயர்த்திக் கொடுத்து, அதோடு அந்தந்த ஊர்க்காரர்களையே வேலைக்கு அமர்த்தினால் இந்தத் திட்டம் சிறப்பான முறையிலே இருக்கும் என்பதை இந்த நேரத்திலே நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அதற்கு அடுத்து, பள்ளிக் குழந்தைகளுக்கு துணிகள் கொடுக்க தொழில் செய்வதற்கு நாம் தையல் மெசின் கொடுத்து இருக்கிறோம். தையல் பயிற்சியை சிறப்பான முறையிலே அளித்து கிட்டத்தட்ட 35 ஆயிரம் பேர்களுக்கு அதிலே வேலைவாய்ப்பை ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறோம். 60 லட்சம் பேர்களுக்கு துணிகள் தைத்து கொடுக்கப்பட்டிருக்கிறது. இதிலே ஒவ்வொரு ஜில்லாவிலும் கட்டிங் சென்டர் என்ற நிலைமையை உருவாக்கி துணிகளைக் கட் பண்ணி பெண்களுக்குக் கொடுக்கும்போது, அவர்களும் எப்படி கட் பண்ணி கொடுத்திருக்கிறார்களோ அதை சேர்த்துத் தைப்பதற்கு ஒரு நல்ல சூழ்நிலை அமைக்கப்பட்டிருக்கிறது. ஆகையால் இன்னும் அதிகப்படியான முறையிலே இந்தத் தையல் மிசின்களை, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி அவர்கள் சொன்னதைப்போல தையல் மிசின் கொடுப்பதிலேகூட அவர்கள் இந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்திலே கொடுப்பதாக இல்லை. அதை அந்த ஐ.ஆர்.டி.பி. திட்டத்தில் கொடுப்போமானால் இல்லாத பெண்களுக்கு அவர்களுடைய நிலைமைக்கு தகுந்தாற்போல் 3-ல் ஒரு பங்கு இனாம், 4-ல் ஒரு பங்கு இனாம் என்று கொடுத்து இந்த தையல் மிசின் கொடுப்போமானால் எல்லோருக்கும் வேலைவாய்ப்பு ஏற்படுத்தக் கூடிய ஒரு நல்ல சூழ்நிலை உருவாகும் என்பதை இந்த நேரத்தில் நான் கூறிக்கொள்ள விரும்புகிறேன். அவர்களும் பலவிடங்களில் தையல் மிசின்களோடு கம்பளி நெசவு பனை ஓலை பின்னுவது மூங்கில் பின்னுவது—இந்த மாதிரி பல தாத்து பெண்கள்—எல்லாம் அழகான முறையில் செய்து வருகிறார்கள். ஆகவே இவர்களுக்கு எல்லாம் இந்தக் கூட்டுறவு சங்கங்களின் மூலம்





உதவ வேண்டும். முக்கிய சேவிகாக்கள் இருக்கிறார்கள், 10 பேர் கிராம சேவிகாக்கள் இருக்கிறார்கள் ஒவ்வொரு யூனியனிலும். அந்த முக்கிய சேவிகாக்கள், கிராம சேவிகாக்களுக்கு எல்லாம் அதிகமான வேலை இல்லை. அவர்களை இந்த மாதர் சங்கம் என்று இருக்கிறதே நாம் என்றைக்கு இந்த கிராம ராஜ்யமன்ற இராம ராஜ்யத்தை உருவாக்க வேண்டும் என்று பஞ்சாயத்து ராஜ்யத்தை உண்டாக்கினார்களோ அன்றைக்கு வழி வகுத்த எங்கள் தலைவர் காமராஜ் அவர்கள், நம் தலைவர் காமராஜ் அவர்கள் ஒவ்வொரு யூனியனிலும் 30 மாதர் மன்றங்கள் வேண்டும் என்று 30 மாதர் மன்றங்களை பதிவு செய்து அவர்கள் மூலமாக பல வேலைகள் செய்யக்கூடிய ஒரு நிலைமையை அன்றைக்கு உருவாக்கிக் கொடுத்தார்கள். அந்த அடிப்படையில் அவர்களுக்கு எல்லாம்—மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி அவர்கள்கூட சொன்னார்கள்—3 மாதத்திற்கு 15 ரூபாய் என்று இருந்தது இப்போது அதை 90 ரூபாயாக கொடுக்கிறோம். அவர்களுக்குப் போக்குவரத்து செலவுக்கு என்று தனியாக எதுவும் கொடுக்கவில்லை. இந்த மாதர் சங்கங்கள் கூடி பலகாரம் செய்வது, தெரியாதவர்களுக்கு சொல்லிக் கொடுப்பது, இப்படி செய்த பலகாரத்தை ஊர் மக்களுக்கு கொடுப்பது, இதை எப்படி செய்து இருக்கிறோம், கிராமத்தில் இருக்கிற நாங்கள் அல்வா செய்து இருக்கிறோம், ரவா உருண்டை செய்து இருக்கிறோம் லட்டு செய்து இருக்கிறோம் என்று இதை மற்றவர்களுக்கு காட்டி அவர்கள் வீட்டிலே செய்வதற்கான ஒரு சூழ்நிலையை உருவாக்கத்தான் இந்த 90 ரூபாய் நாம் கொடுத்துக்கொண்டு இருக்கிறோம். இந்த 90 ரூபாயை கூட. அதுவும் 3 மாதத்திற்கு கொடுக்கிறோம். அதை இன்னும் 10 ரூபாய் அதிகமாக்கி 100 ரூபாயாக கொடுத்தால் நன்றாக இருக்கும். அவர்களுக்கு போக்குவரத்து செலவுக்கு என்று தனியாக கொடுப்பது இல்லை. ஆகவே அதிலிருந்து தான் பலகாரம் செய்து கற்றுக் கொள்வதற்காகத்தான் இந்தப் பணத்தை பயன்படுத்துகிறார்களே தவிர வேறு ஒன்றும் இல்லை என்பதை நான் இந்த நேரத்தில் கூறிக் கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)

நேரந்தான் நமக்கு இருக்கிறது. இது எல்லாம் பெண்கள் பற்றிய விஷயம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் தயவுசெய்து கொஞ்சம் நேரம் கொடுத்தால் நன்றாக இருக்கும். ஏன் என்றால் நாங்கள் எல்லாம் கஷ்டத்தை அனுபவிப்பவர்கள், ஆகவே சொல்லுகிறேன்.

சேவை இல்லங்களில் படிக்கக்கூடியவர்கள் அதாவது அவர்களை 18 வயதிலிருந்து 40 வயது உள்ளவர்களை நாம் எடுக்கிறோம். இந்த சேவை இல்லங்களுக்கு எடுக்கக்கூடியவர்கள் Deserted, Destitutes and Widows ஆவார்கள். விதவைகள், கணவனால் கைவிடப்பட்டவர்கள் யாருமே அற்ற அனாதைகள் இப்படிப்பட்டவர்களை நாம் அந்த சேவை இல்லங்களில் எடுக்கிறோம். நான் கூட 1966-ல் இந்த ஆட்சிக்கு முன்பு ஒரு Condensed Course I.C.D.S. என்ற பெயர் அந்த Condensed Course-ஐ நான் கூட நடத்தினேன். அதாவது எங்கள் காங்கிரஸ் ஆட்சியிலே அன்றைக்கு நடந்தது உண்டு. அதில் 40 பெண்களை எடுத்து அவர்களுக்கு ஒரு மாதம் ஒன்றுக்கு ஒருவருக்கு 50 ரூபாய் கொடுத்துக்கொண்டு வந்தோம். இப்போது 75 ரூபாயாக அதை உயர்த்தி இருக்கிறோம். இந்த 75 ரூபாயை வைத்துத்தான் அவர்களுக்கு துணிகள் வாங்குவது, அதிலே ஆசிரியர்களுக்கு சம்பளம் கொடுப்பது, அதிலே வாடகை கொடுப்பது அதிலே இத்தனையும் இருக்கிற காரணத்தாலே அந்த பணம் போதாது. எனவே தயவுசெய்து அதையும் சற்று உயர்த்திக் கொடுத்தால் சிறந்ததாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டும் அல்லாமல் இந்த தனியார் தொண்டு நிறுவனங்கள், கணவனால் கைவிடப்பட்டவர்களை நடத்துகிறார்கள். அவர்களுக்கும் அந்தப் பணம் தான் கொடுக்கிறோம். அதையும் சற்று உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று இந்த நேரத்தில் நான் கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, இந்த விதவைகளுடைய குழந்தைகளுக்கு கல்யாணத்திற்கு ஆயிரம் ரூபாய் கொடுக்கிறோம். அப்படி கொடுக்கும்போது அந்தப் பணத்தை காலாகாலத்தில் கொடுத்தால் நன்றாக இருக்கும். அவர்கள் பத்திரிக்கை அடித்துக் கொடுத்தால், அந்த முக்கிய [illegible] கொடுத்தால் அவர்கள்





உடனே கல்யாணம் நடக்கிறதா என்ன என்று பார்த்துவிட்டு திருமணத்திற்கு முன்பாகவே அந்தப் பணத்தைக் கொடுத்து விட்டால் ஏதாவது செலவுக்கு அவர்களுக்கு அது உபயோகமாக இருக்கும். அந்த காலம் கடந்து கொடுப்பது சரியாக இல்லை. ஆகவே அந்த காலா காலத்தில் கொடுப்பதற்கு ஒரு ஏற்பாட்டை செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

இன்றைக்கு உண்மையிலேயே பல லட்சக்கணக்கான குழந்தைகள் 60, 65 லட்சம் குழந்தைகள் இந்த மதிய உணவை சாப்பிட்டுக் கொண்டு இருந்தாலும் கூட அதில் இருக்கிற சில குறைபாடுகளை எல்லாம் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. குமாரசாமி அவர்கள் சிறப்பான முறையில் மிகவும் தெள்ளத் தெளிவாக எடுத்துக் கூறிவிட்டார்கள். இந்த குறைபாடுகள் இல்லாமல் நடக்க வேண்டும். அதோடு எமர்ஜென்சி பீரியடு என்று நினைக்கிறேன், 1975—76-ல் Integrated child development scheme என்று நிலக்கோட்டை, தளி, சென்னை ஆகிய 3 இடங்களில் கொண்டு வந்தார்கள். இந்த 3 இடங்களில் நிலக்கோட்டை என்னுடைய பழைய தொகுதி. என்னுடைய சொந்த தொகுதிக்கு கொண்டு வந்து அதில் 100 இடங்களிலே இந்த Integrated child development Scheme குழந்தைகள் வளர்ச்சி ஒருங்கிணைப்புத் திட்டம் என்று கொண்டு வந்து அதில் 40 குழந்தைகள், 30 பால் ஊட்டும் தாய்மார்கள், 30 கர்ப்பிணிப் பெண்கள் இவர்களுக்கு எல்லாம் ஆகாரம் கொடுத்து அவர்களை டாக்டர் பரிசோதனை செய்யக் கூடிய ஒரு நிலைமையை அன்றைக்கு உருவாக்கி இருந்தோம். அதைப் பார்த்தால் இன்றைக்கு நாம் பலயிடங்களில் மேற்கொண்டு 9 இடங்களில் ஆரம்பித்து இருக்கிறோம். சென்ற ஆண்டு கூட சொன்னேன். இந்த ஐ.சி.டி. எஸ். திட்டம் இருக்கிறது. இந்தத் திட்டத்தை இந்த மாநிலம் முழுவதும், ஒவ்வொரு யூனியனிலும் கொண்டு வந்தால் மிகவும் நல்லது. இதற்கு முழுக்க முழுக்க மத்திய அரசின் உதவி கிடைக்கிறது. மத்திய அரசின் உதவியை அதிகமாக வாங்கி, நாமும் கொஞ்சம் பணம் போட்டு, இந்தத் திட்டத்தை சிறப்பான முறையில் செயல்படுத்தக்கூடிய அதிகாரிகளைப் பெருக்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

(மாலை 5-30)

அது மாத்திரமல்ல. இந்த அரசை நான் முழுக்க முழுக்க பாராட்டுகிறேன். முதியோர் பென்ஷன் வழங்குவதில், 100, 150 பேர் என்றில்லாமல், அதை மாற்றியமைத்த மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என் நன்றியைச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த ஏழை முதியவர்கள் ரூ. 35-ஐ பெற, மிகவும் அலைந்து கடைசியில் அது கிடைக்காமல் செத்துப் போயிருக்கிறார்கள். அந்த நிலைமை இல்லாமல், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆங்காங்குள்ள அதிகாரிகளுக்கு உத்தரவு போட்டு, யார் யார் மனு செய்கிறார்களோ, அவர்கள் உண்மையிலேயே அநாதைகளாக இருக்கிறார்களா என்பதைப் பார்த்து, அவர்களுக்கு வேண்டிய அந்தப் பணத்தை 3 மாதங்களுக்குள் அவர்களுக்கு கிடைக்கச் செய்ய வேண்டும். இதை மாண்புமிகு திருமதி இராசாம்பாள் அவர்களும் சொன்னார்கள். 3 மாதங்களுக்குள் கிடைக்க வேண்டிய சூழ்நிலையை உருவாக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அத்தோடு ஊனமுற்றவர்கள் இருக்கின்றார்கள். நானே உடல் ஊனமுற்ற ஒரு பையனை விடுதியில் சேர்த்தேன். அவர் அந்த பள்ளியில் படித்து முடித்துவிட்டு, அக்கா, நான் படித்து முடித்து விட்டேன், நீங்கள் என்னை சேர்த்து வைத்தீர்கள், இப்போது வேலையில்லாமல் இருக்கிறேன், இப்போது என்ன செய்யப் போகிறீர்கள் என்று என்னைப் பரிதாபமாகக் கேட்டான். ஆகவே, நான் சொல்வது, ஊனம் உற்றவர்களுக்கு நாம் பயிற்சி அளித்தாலும், அவர்கள் பயிற்சி முடித்தவுடன், அவர்களுக்கு உடனடியாக வேலைவாய்ப்பு கொடுக்கக்கூடிய நிலைமையையும் உருவாக்கித் தரவேண்டும் என்று நான் இந்த நேரத்திலே கேட்டுக் கொள்கிறேன்.

பல பேர் இந்த மன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். தாயும் இல்லாமல். தகப்பனும் இல்லாமல் இருக்கும் குழந்தைகளை போன்ற துரதிருஷ்டசாலிகள் இந்த நாட்டிலே எத்தனையோ பேர்கள் இருக்கிறார்கள், அவர்களைப் பற்றிச் சொல்ல விரும்புகிறேன். தாயும் இல்லாத, தகப்பனும் இல்லாத ஏழைக் குழந்தைகள் ஜாதி சான்றிதழ் கொடுக்க வேண்டிய அவசியமில்லை; கேட்க வேண்டிய அவசியமும் இல்லை. அதேபோல் அவர்களுக்கு பிறந்த நாள் சான்றிதழும் தேவையில்லை.

முதன்மையான அந்தக் குழந்தை படித்து வெளியே வந்தவுடனே, கண்டிப்பாக வேலைவாய்ப்பு கொடுக்கக் கூடிய ஒரு நல்ல நிலைமையை உருவாக்க வேண்டுமென்று நான் கேட்டுக் கொள்கிறேன். அத்தோடு அந்தக் குழந்தைக்கு தாய் வழியாகவோ, தகப்பன் வழியாகவோ சொத்து இருக்குமானால், அந்தச் சொத்தை அரசாங்கமே எடுத்துக்கொண்டு, அந்தக் குழந்தையைப் பராமரிக்கும் பொறுப்பை அரசாங்கமே பொறுப்பேற்றுக் கொள்ளவேண்டும். அதிலே ஒரு தனி கவனம் செலுத்தி, ஒரு திட்டத்தை தீட்டி இப்படி எங்கெங்கு அநாதை குழந்தைகள் சொத்து இருக்கின்றதோ, அந்த சொத்தை அரசாங்கமே ஏற்று, அந்தக் குழந்தைக்கு கார்டியனாக இருந்து, அவர்கள் வாழ்க்கையை வளம்பெறச் செய்தால், தமிழகத்திலே அநாதைகளே இல்லாத அளவிற்கு ஓர் நிலைமையை உருவாக்க முடியும் என்று கூறிக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பெண்களுக்கான பல நல்ல திட்டங்களை குறிப்பிட்டு குறிப்பிட்டிருக்கிறார்கள். அதை நான் வரவேற்கிறேன். மகளிர் மேம்பாட்டுக் கழகத்திற்கு ஒரு கோடி ரூபாய் ஒதுக்கி, அதன் மூலம் பல பணிகளைப் பெண்களுக்காகச் செய்கிறோம். அப்படிச் செய்யும்போது மதுரை, இராமநாதபுரம் போன்ற இடங்களில் 200 ஜோடி மாடுகள் வாங்க, ஜோடி ஒன்றுக்கு ரூ. 2000 என்றும், அதிலே ரூ. 1000 மானியம் என்று நினைக்கிறேன்—ரூ. 2000 என்று சொல்லும்போது 100 பேர்களுக்கு கொடுக்கப்படுகிறது. அந்தமாதிரி, ஆடுகள் என்று வருகின்ற போது 200 பேர்களுக்குக் கொடுக்கப்படுகிறது. இப்படி கறவை மாடுகள் வாங்குவதற்கும், ஆடுகள் வாங்குவதற்கும் உதவி செய்வதால் நல்ல வருமானம் பெண்களுக்கு கிடைக்கும். ஆகவே, அவர்களுக்கு இன்னும் அதிகப்படியான கறவை மாடுகளும், ஆடுகளும் கொடுப்பதில் சற்று அதிகமான கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

[illegible]

அது [illegible] கோழி [illegible] நானே [illegible] 100 [illegible] வைத்துப் [illegible] 95 [illegible] குட்டிகளை [illegible] வாங்கிக் கொண்டு போய்விடுகிறது. தமிழ்நாட்டிலே 378 புலிப்பன் [illegible]

[திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்] [1987 ஏப்ரல் 21

இருக்கின்றன. ஒவ்வொரு யூனியனிலும் 30 மகளிர் மன்றங்கள் இருக்கின்றன. கறவை மாடுகள், ஆடுகள் கொடுப்பதுபோல், இந்த மன்றங்களின் மூலமாக தாய்மார்களுக்கு கறிக்கோழிகளையும், முட்டைக் கோழிகளையும் வளர்ப்பதற்கு உதவி செய்தால் அவர்கள் வாழ்க்கையிலே மேலும் முன்னுக்கு வரமுடியும் என்பதைச் சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

தலைவர் அவர்கள் அமைதியாக இருக்கிறார்கள். ஒன்றை மட்டும் சொல்லி முடித்துக் கொள்ளலாம் என்றிருக்கிறேன். மகளிர் மன்றத்திலே உள்ள முக்கிய சேவிகா மூலம், இன்ஸ்ட்ரக்ஷன்ஸ் கொடுத்து—அந்த மன்றத்திலே எத்தனையோ பேர்கள் அங்கத்தினர்களாக இருக்கின்றார்கள், விதவைகளாகவும், நங்கைமார்களாகவும், தாய்மார்களாகவும், இருக்கின்றார்கள்—இவர்களுக்கு வாழ்வளிக்க காய்கறிகள், கீரைகள் போன்றவற்றை உற்பத்தி செய்யக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்கிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன். கறிகாய் விற்பது போன்ற பல வேலைகளையும் செய்வதற்கும் பல்வேறு சாமான்களை வாங்குவதற்கும் வாங்கி விற்பதற்கும், சேவை கூட்டுறவுச் சங்கங்கள் என்ற அமைப்புகளுக்கு பாங்கிடம் இருந்து கடன் வாங்கிக் கொடுத்து உதவி செய்கிறோம். பெண்களுக்கு பயிற்சி கொடுத்து, சொந்த வீடுகளிலே உற்பத்தி செய்ய இந்த மாதர் சங்கங்கள் பயிற்சி கொடுத்தால் இன்னும் சாலச் சிறந்ததாக இருக்கும். இதனால் எல்லாம் பெண்களுக்கும் நல்ல வழி பிறக்கும் என்பதை சொல்லிக் கொண்டு பேரவைத் தலைவருக்கு நன்றியைக் கூறி உரையை முடித்துக் கொள்கிறேன்.

*மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலத் துறை மானியக் கோரிக்கையின் மீதும், கதர்த்துறை மானியக் கோரிக்கை மீதும், மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் தங்களுடைய சீரிய கருத்துக்களையும், பாராட்டுகளையும் எடுத்துத் தெரிவித்ததற்கு நான் நன்றியை முதலில் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். நல்லவைகளைப் பாராட்டுகின்ற மனப்பான்மையோடும், குற்றம் குறைகளைக் காண்கின்றபோது அவைகளை எடுத்துச் சொல்லி அவைகளைத் திருத்திக் கொள்



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

வதற்கும், இருக்கிற குறைபாடுகளை நீக்குவதற்கும் ஒரு வழிவகை செய்வதுதான் நல்ல எதிர்க்கட்சிகளுடைய பண்பாகும் என்று பேரறிஞர் பெருந்தகை அண்ணா அவர்கள் சொன்ன அந்தக் கருத்துக்கு இணங்க பலரும் பல நல்ல கருத்துக்களைத் தந்திருக்கிறார்கள்.

(மாண்புமிகு மாற்றுத் தலைவர்—தலைமை)

குறிப்பாக நம்முடைய நாட்டில் படிப்பறிவு என்பது குறைவாக இருக்கிறது. படித்தவர்கள் எண்ணிக்கை அதிகப்படுத்தப் படவேண்டும். பள்ளிக்குச் செல்பவர்கள் எண்ணிக்கையை அதிகப்படுத்த வேண்டுமென்று நீண்டகாலமாக பல்வேறு அரசியல் தலைவர்கள் குரல் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். பல வேறு வாய்ப்புகள் தரப்பட்டும், பள்ளிகளுக்கு முறையாக வருவதற்கு பலர் முன்வராத காரணத்தைபற்றிப் பலர் எண்ண முன்வரவில்லை. ஆனால் இன்றைய தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்கள் இவ்வளவு வாய்ப்புகள், வசதிகள் தரப்பட்டதற்குப் பின்னாலும் பள்ளி செல்கின்றவர்கள் எண்ணிக்கை குறைவதற்கு என்ன காரணம் என்பதை எண்ணிப் பார்த்து அந்தக் காரணத்திற்கான அடிவாரத்தை நாம் தகர்த்து விடுவோமானால் அதனால் படித்தவர்கள் எண்ணிக்கை பெருகி விடும் என்ற எண்ணத்தைக் கருத்திலே கொண்டுதான் இந்த மிகப்பெரிய திட்டமான சத்துணவுத் திட்டத்தை நம்முடைய தமிழகத்தினுடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள்—இந்த நாட்டிலே இருக்கிற வளருகிற எதிர்கால சமுதாயம், நல்ல அறிவு வளர்ச்சி பெற்ற சமுதாயமாக மலர வேண்டுமென்ற எண்ணத்திலே இந்தத் திட்டத்தை—கொண்டு வந்தார்கள். நேரு பெருமான் அவர்கள் கூறினார்களே, "The students are the backbones of the country the children are the back bones of the country."

என்று, அந்த நல்ல எண்ணங்கள் எல்லாம் முழு வடிவம் பெற வேண்டுமென்பதற்காகத் நான் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இந்த சீரிய திட்டத்தை இவ்வளவு கோடி ரூபாய் செலவிலே கொண்டு வந்தார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். இன்றைக்கு இந்தத் திட்டத்தின் வாயிலாக எவ்வளவு இடங்களிலே சத்துணவுக் கூடங்கள் அமைக்கப்பட்டு, அதன் காரணமாக எவ்வளவு பேர் இன்றைக்கு எழுத்தறிவு பெறுகின்ற வாய்ப்புப் பெறுகின்றார்கள் என்பதை எல்லாம் இங்கே பேசிய பலரும் எடுத்துச் சொன்னார்கள்.

[திரு. ஆர். சௌந்தரராஜன்] [1987 ஏப்ரல் 21

குறிப்பாக 2 முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு பள்ளி செல்கின்ற உணர்வை ஏற்படுத்த வேண்டும். அந்த உணர்வை மட்டும் ஏற்படுத்தாமல், அந்த வயதில் அவர்கள் ஓரளவு கல்வியின் தரத்தையும், தகுதியையும் உயர்த்திக் கொள்வார்களானால் முதல் வகுப்புக்குச் செல்கின்ற போது அவர்களுக்குப் படிக்க வேண்டும் என்ற ஆர்வம் மட்டும் இல்லாமல் சிறு இடங்களிலே படித்துவிட்டு வருகின்ற மற்ற பணக்கார வீட்டுக் குழந்தைகளோடு இந்த ஏழை வீட்டு குழந்தைகளும் படிக்க முடியும் என்ற நிலை ஏற்படும். இந்தச் சூழ்நிலை ஏற்படுவதற்கு முன்னால் பள்ளியிலே சேர்ந்து விட்டு நின்று விடுகின்ற குழந்தைகளின் எண்ணிக்கை எந்த அளவிற்கு இருந்தது என்பதையும், சத்துணவுத் திட்டம் செயல்படுத்தப்பட்டதற்குப் பின்னால் இன்றைக்கு பள்ளியிலே இருந்து பாதியில் நிற்கிற, 'ட்ராப் அவுட்ஸ்' என்று சொல்வார்களே அந்த எண்ணிக்கை எந்த அளவிற்கு குறைந்து இருக்கிறது என்பதையும் நாமும் உணர்வோம், நாடும் உணரும். நான் இதைச் சொல்வதற்குக் காரணம், பணக்கார வீட்டுப் பிள்ளைகள் நர்சரி பள்ளிக்கூடங்களில் படித்துவிட்டு வருகின்றபோது, ஏழை வீட்டுக் குழந்தைகள் படிக்காமல் திடீரென்று பள்ளிக்கூடத்திற்குப் போகிறபோது அவர்கள் எல்லாம் (பணக்கார வீட்டுப் பிள்ளைகள்) ஓரளவிற்கு புரிந்த நிலையில் பரிட்சையில் நல்ல மார்க்குகள் வாங்குகின்ற நிலை ஏற்படுகிறது. ஆனால் ஏழை வீட்டுக் குழந்தைகள் அந்த அளவிற்கு மார்க்குகள் வாங்க முடியாத சூழ்நிலை வருகின்றபோது, அந்தக் குழந்தை அதிகமான மார்க் வாங்குகிறதே, நாம் குறைவான மார்க் வாங்குகிறோமே என்ற அந்த ஒரு தாழ்வு மனப்பான்மை, Inferiority Complex ஏற்பட்டு விடுகிறது.

(மாலை 5-40)

அதுமட்டுமல்லாமல், பெற்றோர்களே கூட சில நேரங்களில் 'போதும், போதும், நீ படித்துக் கிழித்தது போதும்' என்று பிள்ளைகளுடைய படிப்பை பாதியிலேயே நிறுத்துகின்ற சூழ்நிலையைத்தான் கிராமங்களிலே பார்த்துக்கொண்டிருந்தோம். அந்த நிலை எல்லாம் மாற்றப்பட வேண்டும் என்ற நிலையிலே தான் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் நீண்டகாலத்திற்கு முன்னாலே ஒரு கருத்தைச் சொன்னார்கள்.



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்தரராஜன்]

அவர் நினைத்த ஒரு பட்டறையின் மூலமாக, ஆண், பெண் இருபாலாரும் அறுபதாயிரம் அங்கன்வாடி பணியாளர்களும், தமது குறிப்பிட்ட காரியங்களை ஆக்கபூர்வமாக வளர்ச்சி உடலோடு மட்டுமல்லாமல் அறிவிலும் வளர்ச்சி இருக்க வேண்டும் என்பதை அவர்கள் குறிப்பிட்டார்கள். அவர்கள் செயல்பட வேண்டும் என்று எண்ணிக்கொண்டிருந்த அந்த வாய்ப்பினை தமிழக மக்களுக்கு இன்றைக்கு உருவாக்கும் தருண நேரத்திலே, ஆறாம் வளர், அங்கன்வாடி முயற்சிகளை உருவாக்குகின்ற விதத்தில், சத்துணவுத் திட்டத்தை வெற்றிகரமாக இன்றைக்கு தமிழகத்தில் செயல்படுத்திக்கொண்டிருக்கிறார்கள் என்பதை நான் இங்கே எடுத்துச் சொல்ல விழைகிறேன். இந்தச் சத்துணவுத் திட்டத்தின் மூலமாக இன்றைக்கு வேலை வாய்ப்பு பெற்றிருப்பவர்களுடைய எண்ணிக்கையை மட்டும் நாம் கொஞ்சம் எண்ணிப் பார்த்திட வேண்டும். எத்தனையோ திட்டங்களை இந்த அரசு எத்தனையோ கோடி கட்டங்களில் போட்டிருக்கிறது. ஆனால் அப்படி போடப்பட்ட திட்டங்களிலே, வேலைவாய்ப்பு பெற்றவர்களுடைய எண்ணிக்கையை கணக்கிலெடுத்துப் பார்ப்போமானால், எத்தனையோ கோடிக்கணக்கில் செலவிட்டு வைக்கப்படுகின்ற தொழிற்சாலைகளில் எல்லாம்கூட, 1000 அல்லது 500 பேர்கள்தான் வேலை வாய்ப்பு பெறுவார்கள். ஆனால் இன்றைய நம்முடைய சத்துணவுத் திட்டத்தில் தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் எத்தனை பேருக்கு வேலை வாய்ப்பினை வழங்கியிருக்கிறார்கள் என்று கேட்டால், 1,98,990 பேர்களுக்கு வேலைவாய்ப்பு கிடைக்கிற சூழ்நிலையை உருவாக்கியிருக்கிறார்கள். இந்த இந்திய நாட்டிலேயே நாம் எடுத்துக் கொண்டு பார்த்தால், ஒரு திட்டத்தின் மூலமாக இவ்வளவு அதிகம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்த ஒரு மாநிலம் இருக்கிறது என்றால் அது தமிழ் மாநிலம் தான். இத்தனை பேருக்கு வேலைவாய்ப்பு கொடுத்திருக்கின்ற ஒரு முதலமைச்சர் இருக்கிறார் என்று சொன்னால், அது நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவர் அவர்கள் தான் என்பதை இந்த அவையில் பெருமையோடு எடுத்துச் சொல்வேன். சுமார் 66,000-த்திற்கும் மேற்பட்ட மையங்கள் பள்ளி மையங்களாகவும், குழந்தைகளுக்கான மையங்களாகவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுவும் குறிப்பாக 2 முதல் 5 வயது வரை

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

உள்ள குழந்தைகளுக்காக 28,125 மையங்கள் இன்றைக்கு செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. அதுமட்டுமல்லாமல இன்றைக்கு மலைவாழ் மக்களுக்காக 216 மையங்கள் செயற் பட்டுக்கொண்டிருக்கின்றன. அந்த மையங்களிலே 2 வயது முதல் 5 வயது வரை உள்ள குழந்தைகளைச் சேர்த்து அவர் களுக்கு உணவு மட்டும் வழங்குவதோடு அல்லாமல், அந்த உணவு சமைக்கப்படுகிற நேரத்திற்குள் அவர்களுக்கு அறிவுள்ள போதனைகளைச் செய்ய வேண்டுமென்பது தான் இந்த அரசினுடைய திட்டவட்டமான முடிவும், அறிவுறுத்தலுமாகும். அந்த வகையிலேதான் இங்கே இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

இங்கேகூட மாண்புமிகு உறுப்பினர் சோலைராஜ அவர்கள் பேசும்போது ஒன்றைக் குறிப்பிட்டார்கள். படிப்பு சொல்லித் தருகிற வேலையும், சமைக்கிற வேலையும் ஒரே நேரத்தில் சுமத்தப்படுவதால், படிப்பு சொல்லிக் கொடுக்க முடியவில்லை என்று சொன்னார்கள். நான் அவர்களுக்கு ஒன்றைச் சொல்லிக் கொள்ளவிரும்புகிறேன். படிப்பு சொல்லிக் கொடுப்பதற்கு இன்றைக்கு அமைப்பாளர்கள் இருக்கிறார்கள். சமைப்பதற்காக ஆயாக்கள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். ஆகவே எல்லா பொறுப்புகளும் ஒருவரிடத்திலேயே சுமத்தப் படவில்லை. பள்ளிக்கு மாணவர்களை அழைத்து வருவது ஆயாக்களுடைய பொறுப்பு. 10 மணிக்குள் குழந்தைகளை அழைத்து வந்து பிறகு, அந்தக் குழந்தைகளுக்குத் தேவையான அரிசி, பருப்பு, எண்ணெய் இவைகளை எடுத்துக் கொடுத்துவிட்டு, அந்தக் குழந்தைகளுக்கு 12 மணி வரை பாடம் நடத்த வேண்டும். பிறகு 12 மணிக்குள் ஆயாக்கள் சமைத்த அந்தச் சோற்றை அவர்களுக்கு வழங்க ஏற்பாடு செய்து கொண்டிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். தனித்தனியாக மையங்களில் சமைப்பதை விட்டு, ஒரு நடுநாயகமான இடத்திலே சமைத்து அந்த உணவை அங்கே கொண்டுபோய் வழங்கக்கூடிய ஒரு சூழ்நிலையை உரு வாக்கலாமே என்று இங்கே ஒரு கருத்தைத் தெரிவித்தார்கள். அதிலே பல்வேறு சிக்கல்கள் ஏற்பட வாய்ப்புண்டு. ஒரே இடத்தில் சமைத்து, அவற்றை எடுத்துச்செல்லும்போது, கொண்டு போவதில் காலதாமதம் ஏற்படலாம். அல்லது வெளியூரான



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

தவறுகள் நிகழ்வதற்கு வாய்ப்புகள் உள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மற்றொன்று சூடாக, சமைத்தவை களை குழந்தைகள் உண்ணக்கூடிய நிலை இல்லாமல் கொஞ்ச தூரத்தில் உள்ள இடத்திலே சமைத்து, அந்த உணவை எடுத்துச் செல்வார்களேயானால், அந்த உணவு ஆறிப் போகின்ற சூழ்நிலை உருவாகும் என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்பு கிறேன். இன்றைக்கு நம்முடைய கோவையிலே இருக்கின்ற அவினாசிலிங்கம் மகளிர் கல்லூரி மூலமாக ஒரு ஆய்வு செய்து 2 லிருந்து 5 வயது குழந்தைகளுக்கு எந்த அளவிற்கு சத்து தேவை. அந்த சத்து எந்த அளவு உணவிலிருந்து நாம் பெற முடியும் என்பதை எல்லாம் ஆய்வு செய்து 80 கிராம் அரிசியும், 10 கிராம் பருப்பும், 3 கிராம் எண்ணெயும், 50 கிராம் காய்கறியும் இன்றைக்கு அந்த குழந்தைகளுக்கு வழங்குவதற்கு நடவடிக் கைகள் மேற்கொள்ளப்பட்டு அதன் மூலமாக அந்த குழந்தை களுக்கு 410 கலோரி இன்றைக்கு சக்தி கிடைக்கும் என்பதை கணக்கிட்டுத் தான் இவைகள் வழங்கப்பட்டு வருகின்றன. நல்ல காய்கறிகள், நல்ல கீரைகள் கிடைக்க வேண்டும் என்பதற் காகத்தான் கூட்டுறவுச் சங்கங்கள் மூலமாக காய்கறியும், கீரையும் வழங்கப்படவேண்டும் என்ற ஒரு நல்ல திட்டம் இந்த அரசினால் வரையறுக்கப்பட்டது. பல இடங்களில் இவைகள் நல்ல முறையிலே செயல்படுகின்றன. ஆனால் எங்கோ ஒரு சில இடங்களில் சிலர் புகுந்துகொண்டு இந்தத் திட்டத்திற்கு ஒரு தீய பெயரை ஏற்படுத்த வேண்டும் என்ற முறையிலே கூட்டுறவு முறையிலே காய்கறி வழங்குகின்றோம் என்று வெளிச் சந்தையிலே விற்பதைவிட அதிகமான விலைக்கு விற்கின்ற, அவ்வப்போது ஏற்படுகின்ற அந்தத் தவறுகளை அரசினுடைய கவனத்திற்கு கொண்டுவருகின்றபோது, அவைகளை உடனுக் குடன் களைந்து, தேவையான உரிய நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு, இன்றைக்கு அதற்குரிய உத்திரவுகள் எல்லாம் வழங்கப்பட்டு இருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்கள் இன்னொரு கருத்தைச் சொன் னார்கள். பெரும்பான்மையான இடங்களில் பண வசதி படைத்தவர்கள் எல்லாம் கூட தங்கள் பெயரை இந்த பட்டியலிலே சேர்த்திருக்கிறார்கள் என்று. அப்படி இல்லை.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

...யாளருக்கு இன்றைக்கு பண உச்சவரம்பு எந்த அளவுக்கு வைத்திருக்கிறோமோ, அந்த அளவை வைத்துத்தான் சத்துணவுக் கூடங்களிலே உணவு உண்பதற்கான குழந்தைகளை நாம் தேர்ந்தெடுக்கின்ற வழிவகைகளைச் செய்து, அப்படிப்பட்ட குழந்தைகள் தான் இன்றைக்கு உணவு [illegible] பெறுகிறார்கள் என்பதும், குறிப்பாக தவறுகள் நடைபெறுகிறது என்று [illegible] நடைபெறுகின்ற மையங்கள் ஆங்காங்கே சோதனை செய்யப்பட வேண்டும் என்பதற்காகத்தான் [illegible] அவர்கள் மாவட்ட ஆட்சித் தலைவர்கள் கூட்டம் நடைபெற்ற போது, மாவட்ட ஆட்சித் தலைவர்கள் இந்தத் திட்டத்தின் மீது கவனத்தைச் செலுத்த வேண்டும் என்று கூறியுள்ளதால் ஒரு மாதத்திற்கு 10 மையங்களையாவது ஒரு அதிகாரி பார்க்க வேண்டும் என்று சொல்லி இன்றைக்கு அதற்குரிய நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டுள்ளன. மாவட்டங்களில் இருக்கின்ற பல்வேறு துறையைச் சார்ந்த அதிகாரிகள் இன்றைக்கு சத்துணவு மையங்களை பார்வையிட்டு, சத்துணவு மையங்கள் செம்மையாக நடைபெறுவதற்கான வாய்ப்பை ஏற்படுத்தி தந்திருக்கிறார்கள் என்பதை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தற்போது நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் பாலூட்டும் தாய்மார்களுக்கும், அதே போல் [illegible] வயது வரையுள்ள அத்தனை குழந்தைகளுக்கும் இன்றைக்கு நல்ல சத்துணவு வழங்கப்பட வேண்டும் என்ற திட்டத்தை உருவாக்கி, [illegible] அரசினுடைய துணையோடு அதை செயல்படுத்து வதற்கான வழிவகைகளைச் செய்திருக்கிறார். அதைச் செயல் படுத்துவதற்கான வழிவகைகளை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விரும்பு கிறேன்.

அடுத்து நம்முடைய தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் 1980-ம் ஆண்டு துவக்கப்பட்டது. இது 7 மாவட்டங் களிலே முதலில் துவக்கப்பட்டு, [illegible] இன்றைக்கு செயல்பட்டுக் கொண்டு வருகிறது. இந்தத் திட்டமும் செம்மையாக செயல்படுவ தற்குரிய நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் பொன்னம்மாள் அவர்கள் பேசுகின்ற போது இதைப் பற்றி ஒன்றைச் சொன்னார்கள். ஒருங்கிணைந்த



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

குழந்தை வளர்ச்சி திட்டத்தை மேலும் எல்லா இடங்களிலும் விரிவுபடுத்த வேண்டும் என்று அவர்கள் குறிப்பிட்டார்கள். அப்படி செய்கின்றபோது மத்திய அரசினுடைய உதவி கிடைக்கும் என்று சொன்னார்கள். அந்த வகையிலேதான் 52 இடங்களிலே அந்தத் திட்டம் செயல்பட்டு வந்தது. தற்போது இன்னும் 13 இடங்களில், பகுதிகளில் அந்தத் திட்டம் விரிவுபடுத்தப்பட இருக் கின்றது என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அடுத்து இங்கே பேசுகின்றபோது இந்தத் திட்டம் செம்மை யாக நடைபெறுவதற்கு தகுந்த நடவடிக்கைகளை அரசு மேற் கொள்ள வேண்டும் என்று சொன்னார்கள். அரசு நிச்சயமாக இந்தத் திட்டம் செம்மையாக நடைபெறுவதற்குரிய நடவடிக்கை களை மேற்கொள்ளும்.

மற்றொன்று. இங்கே பேசிய பெரும்பான்மையான உறுப் பினர்கள் குறிப்பாக மாண்புமிகு உறுப்பினர் இராசாம்பாள் அவர்கள் பேசும்போது ஒரு கருத்தைச் சொன்னார்கள். சத்துணவுத் திட்டத்திலே இருக்கின்ற அமைப்பாளர்களை குடும்பநலத் திட்டத்திலே பயன்படுத்தி அவர்களை தொல்லைப் படுத்துகிறார்கள் என்று சொன்னார்கள். ஏற்கனவே அரசு தெளிவாக அவர்களுக்கு ஒரு உத்திரவு வழங்கியிருக்கிறது. எந்தக் காரணத்தை முன்னிட்டும் அவர்களை குடும்ப நலத் திட்டத்திற்கு பயன்படுத்தக் கூடாது. ஆள் பிடித்து வருவதற்கு நம்முடைய சத்துணவுக் கூடத்திலே இருக்கின்ற அமைப்பாளர்களை பயன்படுத்தக்கூடாது என்று திட்டவட்டமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

(மாலை 5-50)

ஆனால் இன்னொன்று. குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு சத் துணவுக் கூடங்களுக்கு வருகின்ற தாய்மார்களுக்கு தகுந்த அறி வுரைகளை குடும்ப நலத் திட்டத்தின் சார்பாக எடுத்துச் சொல்ல லாம் என்று அவர்களை ஒரு 'மோட்டிவேஷன் மீடியா'—இன்னும் சொல்ல வேண்டுமானால், எடுத்துச் சொல்கிற வழியிலே அவர் களை பயன்படுத்திக் கொள்ளவேண்டும் என்று முறையாக எல் லோருக்கும் அறிவுறுத்தப்பட்டு இருக்கிறது. உரிய ஆணைகளும் அவர்களுக்கு அனுப்பப்பட்டிருக்கின்றன.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

மேலும், அவர்கள் இதற்காக, இப்படி துன்புறுத்தப்படுகிறார்கள் என்று எந்தெந்தப் பகுதியிலே எல்லாம் இப்படி நடைபெறுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர்கள் எழுதித் தருவார்களானால், அவர்களின் மீது உரிய கவனத்தைச் செலுத்தி, அப்படித் தவறு செய்கிறவர்கள் யாரோ அவர்கள் மீது உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள இந்த அரசு தகுந்த வழிவகைகளைச் செய்யும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அடுத்து, இங்கே மகளிர் மேம்பாட்டைப் பற்றி பலரும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். வரதட்சணைக் கொடுமையினாலே இன்றைக்கு எத்தனை பேர் திடீரென்று பல்வேறுவிதமான நிலைகளுக்கு ஆளாக்கப்படுகிறார்கள்; உயிரையே இழக்க வேண்டிய கட்டாயத்திற்கு எல்லாம் ஆட்படுகிறார்கள் என்று இங்கே சொன்னார்கள். நம்முடைய மாண்புமிகு பாலச்சந்திரன் அவர்கள் சொல்கிறபோது தெய்வத் தன்மையாக நாம் கருதவேண்டிய ஒரு பெண்மை இன்றைக்கு எந்த அளவுக்கு—அந்தப் பெண்மை சின்னாபின்னப்படுத்தப்படுகிறது, சிதைக்கப்படுகிறது என்பதை எல்லாம் எடுத்துச் சொன்னார்கள். நான் இன்னொரு கருத்தையும் இங்கே தெரிவிப்பது சாலப் பொருத்தமாக இருக்கும் என்று கருதுகிறேன்.

ஒரு கவிஞன் சொன்னான்: "சித்திரத்தில் பெண் எழுதி சீர்படுத்தும் மானிடனே, ஜீவனுள்ள பெண்ணினத்தை வாழ விடமாட்டாயா?" என்று ஒரு கவிஞன் பாடிய பாடல் எனக்கு ஞாபகத்திற்கு வருகிறது. அது கூட நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நடித்த படத்திலே தான் அந்தப் பாடல் வந்திருக்கிறது என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

ஆக, நம்முடைய முதலமைச்சர் அவர்கள் அந்தக் காலத்திலேயிருந்து இத்தகைய திட்டங்கள் செயல்படுத்தப்பட வேண்டும் அரசினால் இவைகள் கொண்டு வரப்படவேண்டும் என்பதிலே மிகுந்த கவனத்தோடு இருந்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே உங்களுக்குத் தெரிக்க விரும்புகிறேன். அந்த எண்ணத்தினுடைய காரணத்தினாலேதான், இன்றைக்கு மகளிர் மேம்பாட்டுக் கழகம்—உமன் டெவலப்மென்ட் கார்ப்பரேஷன் என்ற ஒரு நல்ல திட்டத்தை 1983 ஆம் ஆண்டு அமைத்து



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இத்தகைய அமைப்பு உருவாவதற்கு முன்னாலேயே நாம் உருவாக்கியிருக்கிறோம் என்று பெருமை மட்டுமல்ல; அதற்கான பாராட்டையும் இந்த அரசு பெற்றிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விழைகிறேன்.

சமீபத்திலே நடைபெற்ற நம்முடைய சமூக நல வாரியத்தினுடைய கூட்டத்தில், டெல்லியிலே கலந்துகொண்டபோது ராஜ்குமாரி பாஜ்பாய் அவர்கள் பேசிக் கொண்டிருக்கிறபோது சொன்னார்கள்:—"சமூக நலத் திட்டங்கள்—

'In implementing the Social Welfare Schemes, Tamil Nadu stands as pioneer to all States.'

என்று குறிப்பிட்டார்கள். 'தமிழ்நாடு முன்னிலையிலே இருக்கிறது. எந்தத் திட்டங்களையும் செயல்படுத்துவதிலே, என்று குறிப்பிட்டுவிட்டு இன்னொரு வார்த்தையை அவர்கள் சொன்னார்கள். இப்படி திட்டங்கள் செம்மையாக செயல்படுவதற்குக் காரணம், 'Your Chief Minister is more generous' என்று குறிப்பிட்டார்கள். உங்களுடைய முதலமைச்சர் மிகுந்த இரக்கத்தன்மைக்கு தன்னுடைய இதயத்திலே இடம் தந்திருக்கிறார்கள், எனவேதான் இத்தகைய திட்டங்கள் எல்லாம் செம்மையாக, வேகமாக, மற்ற மாநிலங்களுக்கு முன்னோடி திட்டமாக இருப்பதற்கு வாய்ப்பை உருவாக்கித் தந்து கொண்டிருக்கிறது என்பதை அங்கே எடுத்துச் சொன்னார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல், மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக மகளிருடைய வேலை வாய்ப்பிற்காக, அவர்களுடைய வாழ்க்கைத் தரம் உயர்வதற்காக இன்றைக்கு செங்கல்பட்டு, காமராஜ் மாவட்டங்களில் பணிகள் துவங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக 53 இலட்சம் ரூபாயில் 150 மகளிர் வேலைவாய்ப்பு பெறுவதற்கு வழிவகைகளை இன்றைக்கு நாம் செய்துகொண்டு இருக்கிறோம்.

கதர் கிராமத் தொழிலிலே நூற்பு ஆலைகளையும், துணைப் போல நெய்கின்ற கூடங்களையும் அமைத்து, 1.62 கோடி ரூபாய் செலவில் 1,400 மகளிர் இன்றைக்கு வேலைவாய்ப்பு பெறுவதற்கு மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு இருக்கின்றன என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

அதைப்போலவே, பெரியார் மாவட்டத்திலும், தர்மபுரியிலும் இன்றைக்கு ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் மூலமாக, மைய, மாநில அரசுகளினுடைய துணையோடு 1985-86 ஆகிய ஆண்டுகளில் 440 குழுக்கள் மூலமாக 8,000 மகளிர் இன்றைக்கு வேலை வாய்ப்பு பெறுவதற்கு, நாள் ஒன்றுக்கு 7 ரூபாய் முதல் 10 ரூபாய் வரை வருமானம் பெறுகின்ற வழிவகைகளைச் செய்வதற்கு இன்றைக்கு வாய்ப்புகள் உருவாக்கப்பட்டிருக்கின்றன.

அதைப்போலவே, 1986-87-ல் 150 குழுக்கள் திருச்சி மாவட்டத்திலே அமைத்து, அதன் மூலமாக 6,000 பெண்கள் வேலைவாய்ப்பு பெறுவதற்கும், அவர்கள் 7 முதல் 10 ரூபாய் வருமானம் பெறுவதற்கும் இன்றைக்கு வாய்ப்புக்கள் உருவாக்கப்பட்டு இருக்கின்றன.

மற்றொன்று, மிகப் பெரிய திட்டமாக இங்கே பேசியவர்கள் எல்லாம் குறிப்பிட்டார்கள். மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சமரசம் அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள் "பெண்களுடைய மேம்பாட்டைப் பற்றிப் பேசுகிறோம், சமத்துவம் வழங்கப்படவேண்டும் என்று பேசுகிறோம். ஆனால் அந்தப் பெண்களுக்கு சொத்துரிமை எந்த அளவுக்கு இருக்கிறது? எவ்வளவு நிலம் அவர்கள் பெயரில் இருக்கிறது? அவர்கள் எவ்வளவு சொத்து வைத்திருக்கிறார்கள்?" என்றெல்லாம் கேட்டார்கள். உண்மையிலேயே நாம் எண்ணிப் பார்த்தால் இந்த நிலைமைக்காகத் தலைகுனிய வேண்டும். 1 சதவிகிதம் பேர்தான் இந்த நாட்டிலே சொத்துரிமையோடு வாழ்கிறார்கள். உலகத்திலே ஒரு கணக்கு போட்டார்கள். அதாவது அதிகமாக வேலை செய்வது யார் என்று பார்க்கிறபோது—அது ஆணா பெண்ணா என்று கணக்கிடுகிறபோது—வீட்டிலும் சரி, வெளியிலும் சரி எல்லா நேரத்திலும் வேலை செய்வதைக் கணக்கிட்டுப் பார்த்தால் 75 சதவிகிதம் வேலை செய்வது பெண்கள்தான் என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஆனால் அவர்களுக்குப் போதுமான கூலி மட்டும் வழங்கப்படவில்லை. அவர்களுக்கு சொத்துரிமை வழங்க இந்த நாடு முன்வரவில்லை என்று உலக நாடுகளே எடுத்துச் சொல்லியிருப்பதை நான் இந்த நேரத்தில் உங்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருவது சாலச் சிறந்ததாக இருக்கும் என்று கருதுகிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

எனவே அப்படிப்பட்ட நிலைமையை மாற்றி பெண்களுக்கும் சொத்துரிமை வர வேண்டும் என்பதைக் கருத்தில் கொண்டு தர்மபுரி மாவட்டத்தில் கடத்தூரில் விவசாய நீர்ப்பாசன முன்னேற்ற திட்டத்தை—ஸ்விஸ் நாட்டு உதவி மூலமாக—மகளிர் மேம்பாட்டுக் கழகம் செயல்படுத்தி, 1,000 பெண்கள் அதன் மூலம் வேலை வாய்ப்பு பெறும் நிலை ஏற்பட்டிருக்கிறது. அதில் நிலம் கிடைக்க ரூ. 85.72 லட்சம் இதற்காகச் செலவிடப்பட இருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப் போலவே 5 மாவட்டங்களில் 1,500 பெண்கள் ஆடு வளர்ப்பதன் மூலமாக நல்ல வாய்ப்பைப் பெற ரூ. 103.16 லட்சம் செலவிட மகளிர் மேம்பாட்டுக் கழகத்தின் மூலமாகத் திட்டமிடப்பட்டிருப்பதோடு விரைவில் அதைச் செயல்படுத்த தயார் நிலையில் இருக்கின்றது. இது குறித்து ஆணைகள் பிறப்பிக்கப்பட்ட பிறகு இத்திட்டம் செயல்படுத்தப்படும் என்று இந்த நேரத்தில் நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

மேலும், தமிழ்நாட்டில் கூட்டுறவுப் பயிற்சி மூலமாக பல்வேறு இடங்களில் வேலைவாய்ப்பு உருவாக்கப்பட ரூ. 99.70 லட்சம் வகை செய்யப்பட்டிருக்கிறது என்பதையும் தெரிவிக்க விரும்புகிறேன்.

மற்றொன்று, கதர் கிராமத் தொழில் வாரியத்தின் மூலமாக இதுவரை 50 நூற்பு மையங்கள் உருவாக்கப்பட்டு 1,164 பேர் வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள். இதற்காக ரூ. 145.05 லட்சம் செலவாகும் என்பதையும் குறிப்பிட்டு அதற்குரிய ஆணையைப் பிறப்பிப்பதற்கு இந்தத் துறை முயன்று கொண்டிருக்கிறது என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

ஊனமுற்றோர் நலத்தைப்பற்றி இங்கே எடுத்துச் சொன்னார்கள். அவர்களுடைய நலத்தில் மிகுந்த அக்கறையை இந்த அரசு கொண்டிருக்கிறது என்பதை நான் இங்கே சொல்லியாக வேண்டும். இங்கே பேசிய பல உறுப்பினர்களும் ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் முன்னுரிமை வழங்கப்பட வேண்டுமென்று கேட்டார்கள். நான் பெருமைக்காக அல்ல மகிழ்ச்சிக்காக ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். ஊனமுற்றவர்களுக்கு என்று 3 சதவிகிதம் இடத்தை ஒதுக்கீடு செய்ய வேண்டும் என்ற அரசாணையை முதன் முதலாக

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

வெளியிட்டதே நம்முடைய தமிழக அரசு—இதய தெய்வம் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசுதான் என்பதைத் தெரிவிக்க விழைகிறேன். ஊனமுற்றவர்களுக்குப் பல்வேறு விதமான சலுகைகளை இந்த அரசு வழங்கிக் கொண்டிருக்கிறது. குறிப்பாக, காது கேளாதவர்கள், வாய் பேசாதவர்கள் இவர்களுக்காக பள்ளிகள் அரசு சார்பில் துவக்கப்பட வேண்டும், தனியார் பள்ளியில் சேர்ப்பதற்கு நிறையப் பணம் செலவு செய்ய வேண்டியிருக்கிறது என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். இதை உணர்ந்த நமது தமிழக முதலமைச்சர் அவர்கள் இப்போது ஒரு ஆணையை வெளியிட்டிருக்கிறார்கள். அதாவது தமிழகத்தில் எவ்வளவு பேர் காது கேளாதவர்கள் இருக்கிறார்கள்—எவ்வளவு பேர் வாய் பேசாதவர்கள் இருக்கிறார்கள் என்று கணக்கெடுத்து அதற்குப் பிறகு 10 பேருக்கு ஒரு வகுப்பு வீதம் எந்தெந்த மாவட்டத்திற்கு எந்தெந்தப் பள்ளிகள் தேவை என்று கண்டுபிடித்து அந்த அளவுக்கு பள்ளிகளைத் துவக்க வழிவகை செய்ய வேண்டும் என்று ஆணையிட்டிருக்கிறார்கள். சமூக நலத்துறை இன்றைக்கு தமிழகத்தில் எவ்வளவு பேர் அப்படி இருக்கிறார்கள் என்று ஆய்வு நடத்திக் கொண்டிருக்கிறது. 15 தினங்களுக்குள் நாம் அவைகளைச் சமர்ப்பித்து விடுவோம் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்—தலைமை.)

அடுத்து பெண்களுக்கு வேலைவாய்ப்பு வழங்க வேண்டும் என்பதற்காகத்தான் தையல் கூட்டுறவுச் சங்கங்களை நிறுவி பெண்களுக்கு வேலை வாய்ப்பைத் தந்து கொண்டிருக்கிறோம்.

இப்படிப்பட்ட வகையில் 32 உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களும் 4 தையல் பயிற்சி நிலையங்களும் மலைவாழ் மக்களுக்காகச் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இதன் மூலமாக சுமார் 11,229 மகளிர் வேலை வாய்ப்பு பெற்றிருக்கிறார்கள் என்று தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

மற்றும் தட்டச்சு, சுருக்கெழுத்து போன்றவைகளைக் கற்றுக் கொள்வதற்காகத் தனியார் பயிற்சி நிலையங்கள் மூலமாக 16,459 மகளிர் இன்றைக்குப் பயிற்சி பெறுகிறார்கள் என்பதையும் நான் இங்கே தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

இப்படி பல்வேறு நலப் பணிகளை மகளிருக்காக இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன்.

(இரவு 6-00)

இங்கே பேசுகின்றபோது மாண்புமிகு உறுப்பினர்கள், தையல் இயந்திரங்கள் வழங்கப்படுவதில் தவறுகள் நடைபெற்று வருகின்றன, யாருக்கு தேவையோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை என்று சொன்னார்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. உத்திராபதி பேசுகின்றபோது இதைக் குறிப்பிட்டு, குறிப்பாக தஞ்சை மாவட்டத்திலேதான் இப்படிப்பட்ட தவறுகள் ஏற்படுகின்றன என்பதை இங்கே எடுத்துச் சொன்னார்கள். நான் இந்தப் பொறுப்பை ஏற்றுக் கொண்டதற்குப் பிறகு எல்லா மாவட்டங்களிலும் இப்படி எந்தெந்த இடங்களில் தையல் இயந்திரம் வழங்கப்பட வேண்டும் என்று தேர்ந்தெடுக்கிறார்களோ, அது முறையாக கண்டுபிடிக்கப்பட்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள் சரியானவர்கள்தானா என்பதை சமூக நலத் துறையின் மூலமாக அனுமதி பெற்றதற்குப் பிறகுதான் அவைகளை விநியோகிக்க வேண்டும் என்று சமீபத்திலே உரிய உத்தரவுகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விழைகிறேன்.

அனாதை குழந்தைகள் இல்லங்களிலிருந்து படிக்கின்றவர்கள் படித்து முடித்துவிட்டு வெளியே வந்த பிறகு, அவர்களுடைய சாதி என்னவென்று கேட்கப்படுகிறது, இவைகள் எல்லாம் தேவைதானா என்று இங்கே கேட்டிருக்கிறார்கள். ஆனால் ஒன்றே ஒன்றை நான் உங்களுக்குத் தெரிவிப்பேன். அனாதை இல்லத்திலிருந்து படித்துவிட்டு வருகிறார்கள் என்று தெரிந்த பிறகும் உன்னுடைய சாதி என்னவென்று கேட்கிறார் என்றால் அவர்களுடைய மனநிலையைப் பற்றி நாம் எண்ணிப் பார்க்க வேண்டும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விழைகிறேன். அத்தகைய தவறுகள் நேராத நிலையை உருவாக்க சட்டத்திலே என்ன மாறுதலைச் செய்ய வேண்டுமோ அந்த மாறுதலைக் கொண்டு வருவதற்கு வழிவகையை இந்த அரசு மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

விதவைகள் மறுமணம் செய்கின்றபோது அவர்களுக்கு வழங்கப்படுகிற பணம் முறையாக வழங்கப்படவில்லை என்று தெரிவித்தார்கள். முறையாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எங்கேயாவது தவறுகள் நடந்து முறையாக நடைபெறாமல் இருந்திருந்தால் மாண்புமிகு உறுப்பினர்கள்

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

அதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவார்களேயானால் அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு. அதைச் செம்மையாகச் செய்வதற்கு வழி கோல முடியும் என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

இன்றைக்கு தனியார் தொண்டு நிறுவனங்கள் பல நல்ல பணிகளைச் செய்து கொண்டிருக்கின்றன. அப்படி செய்கின்ற தொண்டு நிறுவனங்களுக்கு அரசு நல்ல உதவிகளை அளித்து வருகிறது. சில இடங்களில் எங்கேயோ சில தனியார் நிறுவனங்கள் தவறு செய்வதை கோடிட்டுக் காட்டினார்கள். அப்படி எங்கேயோ ஒன்றிரண்டு தொண்டு நிறுவனங்கள் நடப்பதற்காக எல்லா தனியார் தொண்டு நிறுவனங்களையும் நாம் குற்றம் சாட்ட முடியாது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க விழைகிறேன். அப்படிப்பட்ட தவறு நடைபெறுகிற இடங்களைச் சுட்டிக்காட்டினால் அவர்களை நாம் அறிவுறுத்தி அந்தத் தவறுகளிலிருந்து அவர்கள் தங்களை விடுவித்துக் கொள்ள வாய்ப்பை உருவாக்கித் தரலாம் என்பதைத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

அதைப் போலவே ஊனமுற்றவர்கள் தொழில் பயிற்சி பெற்றதற்குப் பிறகு அவர்களுக்கு வேலை வாய்ப்பை வாங்கித் தர சமூக நலத்துறை உரிய முயற்சிகளை மேற்கொள்ளுவதற்கு தக்க நடவடிக்கையை மேற்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப் போலவே பார்வையற்றவர்கள் தொழிற் கூடம். மறுவாழ்வு நிலையம் இன்றைக்குச் சென்னையிலே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. இதிலே 40 பெண்கள் அனுமதிக்கப்படுகிறார்கள். இதுவரை 294 பேர் பயிற்சி அளிக்கப்பட்டிருக்கிறார்கள். அதிலே மெழுகுவர்த்தி போன்றவைகள் செய்வதற்கு வாய்ப்புகள் தரப்படுகின்றன என்பதை உங்களுக்கு எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

அதைப் போலவே சுய வேலை வாய்ப்புத் திட்டம். சுய வேலை வாய்ப்புத் திட்டத்தின் மூலமாக ரூபாய் 250-ல் இருந்து ரூபாய் 500 வரை மானியம் வழங்க சமூக நலத் துறை தேவையான பெட்டிக் கடை வைக்க உரிய இடத்தை தேர்வு செய்ய இன்றைக்கு வழிவகை செய்து கொண்டிருக்கிறது. மேலும் சிறப்பாக இதைச் செய்வதற்கான வழிவகையை இந்த அரசு நிச்சயமாக செய்யும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இங்கே பேசியவர்கள் எல்லாம் பெண்களுக்கென்று தனியாக சட்டத்தின் மூலமாக பாதுகாப்பு வழங்க சட்ட நிபுணர் குழுவை அமைக்க வேண்டும் என்று சொன்னார்கள். தமிழக முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இலவச சட்ட உதவிக்கு உரிய ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பாதிக்கப்பட்ட பெண்கள் அவர்களின் உதவியை நாடுகிறபோது இந்த உதவியை அவர்கள் பெறுவதற்கு எந்தவிதமான தடையும் இருக்காது என்பதை எடுத்துக் கூற விரும்புகிறேன்.

மற்றொன்று. கதர் வாரியத் துறையின் மூலமாக இருக்கின்ற பல்வேறு பிரச்சினைகளை இங்கே எடுத்துச் சொன்னார்கள். இதன் மூலமாக நூற்பு மையங்கள், நெய்யும் நிலையங்கள் ஆங்காங்கு ஏற்படுத்தப்பட்டு அதன் மூலம் ஒவ்வொரு மையத்திலும் பதினைந்திலிருந்து முப்பது பேர் வரையில் வேலை வாய்ப்புக் கிடைக்கும் வழிவகை செய்யப்பட்டிருக்கிறது. அதைக் கூட மாற்றியமைத்து பாலியஸ்டர் நூல் நூற்க, பாலிஸ்டர் துணி நெய்ய உரிய முறையில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது என்பதை உங்களுக்குத் தெரிவிக்க ஆசைப்படுகிறேன்.

அதைப்போலவே நம்முடைய கதர் வாரியத் துறையில் இன்றைக்கு பட்டு உற்பத்தி மிகப் பெரிய ஒரு தேவையை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறது. காரணம், கதர் கடையிலே வாங்க வருகிறவர்கள், பட்டுப் புடவை இருக்கிறதா, பட்டுத் துணி இருக்கிறதா என்று கேட்கும் நிலையில் இருக்கிறார்கள். கதர்த் துறையிலே உற்பத்தி செய்யும் பட்டு நல்ல தரமாகவும், தரம் குறையாமலும் இருக்கிறது. அதிலே பயன்படுத்தப்படும் சரிகை நல்ல தரமுள்ளதாக இருக்கிறது. விலையும் குறைந்திருக்கிறது. புடவை அழகாக இருக்கிறது என்பதால் எல்லோரும் அந்த புடவையைத்தான் தேடி வருகிறார்கள். ஆகவே, அவர்களுடைய தேவைகளைச் சந்திக்கும் வகையிலே பட்டு உற்பத்தியைப் பெருக்க வேண்டுமென்பதைக் கருத்திலே கொண்டு, 1987-88 ஆம் ஆண்டு பட்டு உற்பத்தியைப் பெருக்குவதற்கு இன்றைக்கு 5 கோடிக்கு உற்பத்தி திட்டமிட்டு புதிய உற்பத்தி இலக்குகளை அடைய மேற்கண்ட திட்டங்களில் திறமை திட்டமிடப்பட்டுள்ளது.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை.)

திருச்சி ஜெயங்கொண்டம் பகுதியில் டி. பளூர், ஸ்ரீரங்கம், தர்மபுரி, மதுரை, பரமக்குடி, வீரவல்லூர் முதலிய இடங்களில் ஆரம்பிக்கப் பட இருக்கின்றன. திருச்சி மாவட்டத்தில் ஆண்டிமடம் என்ற பகுதியிலும் ஆரம்பிக்க உரியதொரு கருத்துரு இன்றைக்கு கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவிக்க கடமைப்பட்டிருக்கிறேன். ஆக இன்றைக்கு பெண்களுக்கு வேலைவாய்ப்பு உடனே தருவதற்கான வழிவகைகளை இந்த அரசு செய்துகொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிக்க ஆசை படுகிறேன்.

அதுமட்டுமல்லாமல், நெசவு செய்கின்றவர்களுக்கு பாதுகாப்பு வழங்க பல்வேறு நல்ல திட்டங்களை இந்த அரசு செய்து கொண்டிருக்கிறது என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்பு கிறேன். முன்பு சாதாரணமாக இருந்த தறியைப் பயன்படுத்தி வேலை செய்தபோது குறைந்த அளவுக்குத்தான் ஊதியம் கிடைக் கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்கள் தெரிவித்தார்கள். அவர்களுக்கு நிறைய ஊதியம் கிடைக்க வேண்டுமென்று நேபாளி தறி என்ற புதிய முறை தறியை இன்றைக்கு நம்முடைய தமிழ்நாட்டிலே அறிமுகப் படுத்தி, அந்தத் தறிஸ்ன் அலகுகளை அதிகப்படுத்த வாய்ப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தத் தறிகளைச் சுலபமாக இயக்குவதோடு, அதிக கூலி பெறவும் இது வாய்ப்பாக இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்து பல இடங்களில் இராட்டைகள் பழுதுபட்டிருக்கின்றன என்று எடுத்துச் சொன்னார்கள். அவைகளைப் பழுது பார்க்க உரிய வழிவகைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. அதற்காக நான்கு பழுது பார்க்கும் அலகுகளை இந்த அரசு உருவாக்க இருக்கிறது என்பதை இந்த நேரத்தில் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதைப்போல, கிராமத் தொழில்களில் நம்முடைய கதர்த் துறை மிகச் சிறப்பான இடத்தை வகித்துக் கொண்டிருக்கிறது. கிராம ராஜ்யம் மலர்ந்தால்தான் இராம ராஜ்யம் மலரும் என்று காந்தியடிகள் குறிப்பிட்டார்கள். அந்த கிராம ராஜ்யம் வர வேண்டு மென்றால் கிராமப் பொருளாதாரம் ஏற்றம் பெற வேண்டும். கிராமப் பொருளாதாரம் ஏற்றம் பெற வேண்டுமென்றால் கிராமங் களில் இருக்கிற மக்களுக்கு அந்த அளவுக்கு வாய்ப்புகள் வழங்க



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

வேண்டும். அந்த வாய்ப்புகளை எப்படி வழங்க வேண்டு மென்றால், அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து ஏதாவது தொழில் செய்து அந்தத் தொழில் மூலமாக தங்களுடைய வருமானத்தையும் ஈட்டி, அதே நேரத்தில் நாட்டுக்கும் அவர்கள் நல்லவர்களாக இருக்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டிருக்கின்றன என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவிப்பேன்.

1977-க்கு முன்னாலே இந்த வாரியத்தின் மூலமாக வேலை வாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை 3 இலட்சம் பேர்கள்தான். ஆனால் 1977-க்குப் பின்னாலே 1987 வரை, நம்முடைய மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களுடைய ஆட்சியிலே, 9 ஆண்டுக் காலத்தில் வேலை வாய்ப்பு பெற்றவர்கள் எண்ணிக்கை 7.20 இலட்சம் பேர்கள் என்பதை நான் மெத்தப் பெருமையோடு இங்கே தெரிவிக்க விழைகிறேன்.

அதைப்போல, இன்னும் ஒன்றை இங்கே சொல்வேன். 1987-88-லே மட்டும் கூடுதலாக 75,000 பேர்களுக்கு கிராம அளவிலே இருக்கிறவர்களுக்கு வேலை வாய்ப்பு உருவாக்கவும் அதிலும் குறிப்பாக பெண்களுக்கு வேலை வாய்ப்பை அதிகப் படுத்திக் கொடுக்க கதர் வாரியம் உரிய நடவடிக்கை மேற் கொண்டிருக்கிறது என்பதைத் தெரிவிப்பேன்.

மற்றும் ஒன்று. கதர் வாரியத்தின் மூலமாகத் தயாரிக்கப்படுகிற சோப் மிகுந்த நல்லாதரவைப் பெற்றிருக்கிறது என்று சொன் னால் அது மிகையாகாது. இதிலே உடம்புக்குப் போடுகிற சோப் பாக இருந்தாலும், அல்லது துணி வெளுக்கிற சோப்பாக இருந் தாலும் கதர் வாரிய சோப்புக்கு ஒரு தரம் இருக்கிறது என்பதை நாடு பூராவும் உணர்ந்திருக்கிறது. அதனால் கடந்த ஆண்டு ஒரு இலட்சம் ரூபாய்க்கு சோப் வேண்டுமென்று நமக்குச் சொன்ன பாதுகாப்புத் துறை, தற்போது 3 இலட்சம் ரூபாய்க்கு உத்தரவு வழங்கியிருக்கிறது என்றால் சோப்பின் தரத்தை எண்ணிப் பார்க்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(இரவு 6-10)

அது மட்டுமல்ல. இன்னொன்று நம்முடைய கதர் வாரியத் துறை யில் கைக்குத்தல் அரிசி அலகுகள் வைத்திருந்தோம். கைக்குத்தல் அரிசி தேவைகள் குறைந்துவிட்டதால், அந்த அலகுகளை எல்லாம் மாற்றி இன்றைக்கு அதிலேயிருந்து ரொட்டி, பிஸ்கட், பாப்கார்ன், பருப்பு வகைகளைத் தயாரிப்பதற்கென்று மாற்றி

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

யமைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும் நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். இதன் மூலமாக தனி நபர்கள் மட்டும் 1,187 பேர்கள் இன்றைக்கு நிதி உதவி பெற்று பலன் அடைந்து கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அடுத்தது மட்பாண்டத் தொழில். நம்முடைய நாட்டிலே இருந்து வருகின்ற பாரம்பரியம் மிக்க ஒரு புராதனமான தொழில் ஆகும் அது. அந்தத் தொழிலைச் செய்வதற்கு நம்முடைய வாரியத்தில் 66 மட்பாண்ட கூட்டுறவுச் சங்கங்களும், அது தவிர 8 அலகுகளும் செயல்பட்டு வருகின்றன. இது தவிர 6,625 மட்பாண்டத் தொழிலாளர்களுக்கு வாரியம் தனியாக நிதி உதவி அளித்து அந்த மட்பாண்டத் தொழிலாளர்கள் வளர்வதற்குரிய நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகின்றது என்பதை தெரிவித்துக் கொள்கிறேன். 1986-87-லே மட்பாண்டம் உற்பத்தி ரூ. 6,490-27 லட்சம் என்பதையும் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன். இதன் மூலமாக இதிலே பயிற்சி அளிக்க வேண்டும் என்று பல பேர்கள் கேட்டுக் கொண்டதற்கிணங்க, இன்றைக்கு ஒரு பயிற்சி நிலையம் இயங்கி வருகின்றது. அது செவ்வாய்ப் பேட்டையிலே இயங்குகின்றது. இதுவரையில், 1,012 பேர்கள் அந்த மட்பாண்டத் தொழிலிலே பயிற்சி பெற்றிருக்கின்றார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து கதர் வாரியத்திலே இருக்கின்ற மிகப் பெரிய தொழில் தேனீ வளர்ப்புத் தொழில். தேனீக்கள் சேகரிக்கின்ற அந்தத் தேன், மருத்துவத் துறைக்கும், நம்முடைய உடல் வளர்ச்சிக்கும் மிகுந்த நன்மையைத் தருகிறது. குறிப்பாக பிளட் பிரஷர் என்று சொல்லக்கூடிய ரத்த அழுத்தத்தைக் குறைப்பதற்கு நல்ல தேன் பயன்படுகிறது என்பதை இன்றைக்கு மருத்துவத் துறையிலே இருப்பவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். அத்தகைய தேனை நம்முடைய கதர் வாரியம் இன்றைக்கு உற்பத்தி செய்துகொண்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே நான் தெரிவித்துக் கொள்ள விழைகிறேன்.

4,236 கிராமங்களில் இன்றைக்கு 45 ஆயிரம் பேர்கள் இதன் மூலமாக ஈடுபட்டு இன்றைக்கு பணியாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இதுவரையில் இவர்களுக்கு நாம் வழங்கியிருக்கின்ற தேனீப் பெட்டிகள் கிட்டத்தட்ட ஒரு லட்சம் பெட்டிகள் ஆகும். தேனீ வளர்ப்பதற்கு என்று இவற்றை நாம் வழங்கியிருக்கிறோம்.



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

இன்றைக்கு அப்படி தந்திருக்கின்ற அந்த பெட்டிகள் மதிப்பு மட்டும் ரூ. 360 லட்சம் ஆகும். இதன் மூலம் தயாரிக்கப்பட்டிருக்கின்ற தேன் மதிப்பு 1987-88-ல் ரூ. 396 லட்சமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி உற்பத்தி ஆகின்ற தேனை நம்முடைய வாரியமே அந்த உற்பத்தி பருவ காலத்திலே ஒரு லட்சம் கிலோ அளவுக்கு கொள்முதல் செய்கிறது என்பதையும் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

அதுபோலவே, தச்சுத் தொழில் மற்றும் கொல்லர் தொழில் போன்றவைகளைச் செய்பவர்களுக்கு நம்முடைய கதர் வாரியத்தின் மூலமாக ஆங்காங்கு அலகுகள் ஏற்படுத்தப்பட்டது மட்டுமல்லாமல் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களும் ஏற்படுத்தப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இப்படிப்பட்டவைகள் மூலமாக இன்றைக்கும் பலர் நல்ல வேலை வாய்ப்புகளைப் பெற்று இருக்கின்றார்கள். 1987-88-லே மட்டும் மொத்த உற்பத்தி ரூ. 885.10 லட்சம் ஆகும். நம்முடைய தமிழக முதலமைச்சர் அவர்கள் இந்த துறையினுடைய முக்கியத்துவம் கருதி, இன்றைக்கு அரசுக்குத் தேவையான பல்வேறு நிறுவனங்களுக்குத் தேவையான, பல்வேறு துறைகளுக்குத் தேவையான மர, இரும்புச் சாமான்களையெல்லாம் இந்த கதர் வாரியத் துறையிலேயிருந்துதான் வாங்க வேண்டும் என்றுகூட உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து நம்முடைய கதர் வாரியத் துறையில் செய்யப்படுகின்ற மிகப் பெரிய இன்னொரு தொழில் கைமுறை காகித அலகுகள். இன்றைக்கு இந்த அலகுகளின் மூலமாகச் செய்யப்படுகின்ற இந்த காகிதம் குறிப்பாக கல்யாணப் பத்திரிகைகள் திருமணப் பத்திரிகைகள் அடிப்பதற்கு பெருவாரியாக விரும்பப்படுகிறது. நல்ல தாராளமாக மட்டுமல்லாமல் கண்ணைக் கவரக்கூடிய வண்ணங்களிலும் இன்றைக்குத் தயாரிக்கப்படுகிறது. 1987-88-ல் மட்டும் ரூ. 44.86 லட்சத்திற்கு இந்த கைமுறை காகிதம் உற்பத்தி செய்யப்பட்டிருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு மட்டுமல்லாமல், தோல் தொழிலில் கதர் வாரியத் துறை பெரிய ஈடுபாட்டோடு கிராமங்களில் இருக்கின்ற நம்முடைய தோல் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்றவர்களுக்கு

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

இன்றைக்கு ரூ. 7 ஆயிரத்திற்கும் அதிகமான மதிப்புள்ள உபகரணங்களை வழங்கி அவர்கள் தொழில் செய்வதற்கான வாய்ப்புகளை உருவாக்கிக் கொடுத்திருக்கிறது. இதுபோல் இன்றைக்கு கூட்டுறவுச் சங்கங்களின் மூலமாகவும் இந்தகைய மதால் தொழிலை வளர்க்க வேண்டிய முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. நம்முடைய மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் கொண்டுவந்திருக்கின்ற காலணித் திட்டத்திற்கு இந்த கதர் துறை மூலமாகவும், சமூக நலத் துறை மூலமாகவும் பெண்களை இதிலே ஈடுபடுத்தி, பெண்கள் கூட்டுறவு காலணிச் சங்கங்களை நிறுவி அவற்றின் மூலமாக காலணிகளைத் தயாரிக்கும் பணிகளையும் வழங்குவதற்கான ஏற்பாடுகளையும் இந்துறை மேற்கொள்ளும்.

அடுத்து, பனை மரத் தொழில் மிகவும் முக்கியமான ஒன்று. பனை மரம் என்று சொல்லப்படுவது ஒரு காலத்தில் கற்பக விருட்சமாக இருந்தது. இன்றைக்கு பனையிலிருந்து கிடைக்கிற எந்த ஒரு பொருளும் வீணாவதில்லை. இந்தத் தொழிலில் நிறைய பேர் ஈடுபட்டிருக்கிறார்கள். பல குடும்பங்கள் இதனை நம்பியிருக்கின்றன. இந்தியாவில் மொத்தம் 8 கோடி பனை மரங்கள் இருக்கின்றன என்றால், தமிழகத்தில் மட்டும் 5 கோடி பனை மரங்கள் இருக்கின்றன. இதுவரை நாம் ஒரு கோடி பனை மரங்களைத் தான் பயன்படுத்தியிருக்கிறோம். இன்னும் இருப்பவைகளையும் பயன்படுத்தினால் மிகப் பெரிய வெளிநாட்டு செலாவணியை நாம் பெருக்க முடியும். குறிப்பாக இன்றைக்கு பனை ஓலைப் பொருளிலிருந்து தயாரிக்கின்ற வண்ண வண்ணப் பொருள்களை வெளிநாட்டார் எல்லாம் ஆர்வத்தோடு கவனித்து வாங்கிச் செல்லும் காட்சியை நாம் பார்க்கிறோம். அதோடுகூட இன்றைக்கு பனை மரத் தும்பை வெளிநாட்டுக்கு ஏற்றுமதி செய்வதையும் நாம் பார்க்கிறோம். இந்தவகையில் சென்ற ஆண்டு மட்டும் நாம் 77 லட்சம் ரூபாய்க்கு இதனை வெளிநாடுகளுக்கு அனுப்பியிருக்கிறோம். இந்த ஆண்டு இதனை ஒரு கோடி ரூபாய் அளவுக்கு உயர்த்த அரசு திட்டமிட்டு செயலாற்றிக் கொண்டிருக்கிறது. இன்றைக்கு பனை மரத்திலிருந்து இப்படி பல்வேறு பொருள்களை வெளிநாடுகளில் செய்கிறார்கள் என்று நாம் அறிகிறோம். ஆகவே, அதுபற்றி நன்றாக ஆய்ந்து அறிந்து வந்து, அதுபோல இங்கே நாமே ஒரு தொழிற்சாலையை நிறுவி, அதன்



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

மூலம் வேலை வாய்ப்பைப் பெருக்கி, பலருக்கு வாய்ப்பளிக்கும் வகையில் இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கவனம் செலுத்திக் கொண்டு வருகிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து. இன்றைக்கு மதுவிலக்கை அமுல்படுத்துகின்ற காரணத்தால் பனை ஏறுகின்ற தொழிலாளிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இப்படிப்பட்ட தொழிலாளர்களுடைய எண்ணிக்கை கிட்டத்தட்ட 30 ஆயிரம் என்கிற கணக்கைப் போட்டு இன்றைக்கு அவர்களுக்கெல்லாம் உதவித் தொகை வழங்குவதற்கான வழிவகைகளை மேற்கொண்டிருக்கிறோம். இங்கே அதுபற்றி பேசிய மாண்புமிகு உறுப்பினர்களில் பலரும் அது ஒரு தவறான கணக்கு என்றும், அவ்வளவு தூரம் எண்ணிக்கையில் அவர்கள் குறைந்தவர்களாக இருக்க மாட்டார்கள் என்றும் இன்னும் நிறைய பேர் இருக்க வேண்டுமென்றும் கருத்துக்களை எடுத்துச் சொன்னார்கள். ஆனால் அதுகுறித்து இங்கே நான் ஒரு கணக்கைச் சொல்கிறேன். கள்ளுக்கடைகள் மூலமாக வந்த வருமானம் ரூபாய் 31 கோடியாக இருந்தது. 15 கோடி லிட்டர் கள் வியாபாரம் ஆனது. 20 லிட்டர், ஒரு நாளைக்கு ஒரு தொழிலாளி இறக்கினால் வருடத்திற்கு 7 ஆயிரம் லிட்டர் வருகிறது. அப்படி என்றால் 25 ஆயிரம் தொழிலாளர்கள் போதும். இன்னொரு கணக்கு என்னவென்றால், ஒரு கடைக்கு 4 பேர் என்கிற வீதத்தில் கள் இறக்கினால் தமிழ்நாட்டிலுள்ள சுமார் 6 ஆயிரம் கடைகளுக்கு மொத்தம் 25 ஆயிரம் தொழிலாளர்கள்தான் வருகின்றார்கள். ஆகவே, அதைச் சற்று உயர்த்தி நாம் 30 ஆயிரம் என்று அறிவித்தோம். அந்தக் கணக்குக்கூட சரியில்லை, தவறு என்று சொல்லுகின்ற நிலை வந்தபோது அதுபற்றி மீண்டும் கணக்கெடுக்கச் சொல்லி, இன்றைய தினம் அதற்கான ஆய்வு நடந்து கொண்டிருக்கிறது என்பதை நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் பேசியபோது அதிக நாட்களுக்கு ரிபேட் வழங்கினால் எல்லோரும் கதரை வாங்குகின்ற நிலைமை ஏற்படும் என்று எடுத்துச் சொன்னார்கள். முன்பு மாநில அரசு 90 நாட்களுக்கு ரிபேட் வழங்கிக் கொண்டிருந்தது. மத்திய அரசு இப்போது ரிபேட் வழங்குகின்ற காலத்தை 120 நாட்களாக உயர்த்தியிருக்கிறது. நமது அரசும் அதனை 120 நாட்களாக உயர்த்த வேண்டுமென்று கதர்த் துறை இப்போது கேட்டிருக்கிறது. விரைவில் அதற்கான அனுமதியை முறையாகப் பெற்று, அந்தச் சலுகை இங்கேயும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

அடுத்தபடியாக, இன்றைக்கு மகளிர் மன்றங்கள் செயல்படவில்லை, நல்ல முறையில் அவற்றை செயல்படுத்த வேண்டும் என்றெல்லாம் இங்கே குறிப்பிட்டார்கள். அதை மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் கண்டறிந்து, தமிழகத்தில் இன்றைக்கு இருக்கின்ற 11,520 மகளிர் மன்றங்களும் செம்மையாக செயல்பட வேண்டுமென்று கருதி 3 மாதத்திற்கு 15 ரூபாய் என்று அவைகளுக்கு தந்து கொண்டிருந்த நிலையை மாற்றி இப்போது மூன்று மாதத்திற்கு 90 ரூபாய் வழங்க வேண்டுமென்று உத்தரவை போட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதை நான் மாண்புமிகு உறுப்பினர் திருமதி பொன்னம்மாள் அவர்களின் கவனத்திற்குக் கொண்டுவர கடமைப்பட்டிருக்கிறேன். மூன்று மாதத்திற்கு ஒரு முறை, அதுவும் 15 ரூபாய் வழங்கப்பட்டு வந்தது. அப்படி என்றால் மாதத்திற்கு 5 ரூபாய் தான் வருகிறது. ஆனால் அதை இன்றைக்கு நாங்கள் மாதத்திற்கு 30 ரூபாயாக, ஆறு மடங்கு உயர்த்தியிருக்கிறோம் என்பதையும், போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதால் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இதை தன்னுடைய உள்ளத்தில் இருத்திக்கொள்ள வேண்டுமென்றும் கேட்டுக் கொள்கிறேன். அத்துடன் மகளிர் மன்றங்கள் நல்ல முறையில் செயல்படும் வகையில் அத்தனையையும் மாற்றியமைக்கும் நடவடிக்கையையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்பதையும் நான் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

(இரவு 6-20)

பனைத் தொழிலிலே ஈடுபட்டிருக்கின்ற பனைத் தொழிலாளர்களுக்கு வீடு கட்டுவதற்கான உதவியை இன்றைக்கு நம்முடைய கதர் வாரியத் துறை செய்வதற்கு முன் வந்திருக்கிறது. அதிலும் குறிப்பாக கைவினைஞர் ஒருவருக்கு 11,000 ரூபாய் வீதம்—அதிலே கடன் 8,000, மானியம் 3,000 என்று 320 நபர்களுக்கு இந்தத் தொகை 35.20 இலட்சம் ரூபாய் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது. மற்றும் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் அறிவித்திருக்கின்ற முப்பது இலட்சம் வீடுகள் கட்டுகின்ற அந்தத் திட்டத்திலேயும் இவர்களுக்கு ஒரு பகுதியை ஒதுக்குவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள நம்முடைய முதலமைச்சர் அவர்களை இந்தத் துறை கோரும் என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

இன்றைக்கு ஆண்டுக்கு சுமார் 20 முதல் 25 ஏக்கர்வரை அழிவு ஏற்படும் என்பதால் அதற்கான வழிவகைகளைச் செய்ய ஏக்கருக்கு ரூபாய் 500 வீதம் 88 ஏக்கர்களுக்கு மானியமாக ரூபாய் 44,000 ஒதுக்கிட நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

பனைபொருள் திட்டம் சுமார் ஏழு மாவட்டங்களில் இன்றைக்கு 63 இலட்சம் ரூபாய்—ஒரு மாவட்டத்திற்கு ஒன்பது இலட்சம் ரூபாய் வீதம் செயல்படுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருக்கிறது.

இன்னொன்று, பருவகால சேவை விஸ்தரிப்பு முகாம். சுமார் முகாம் ஒன்றுக்கு ஏழு அல்லது எட்டு நபர்கள் பயனடையும் வகையில் 44 முகாம் நடத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது. கைவினைஞர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 15 நபர்கள் பயன் அடையும் வகையில் 15 நிலையங்கள் ரூ. 1.39 இலட்சம் செலவில் நடத்த உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. ரூபாய் 10.60 இலட்சம் செலவில் 18 நீரா கேட்டரிங் நிலையம் அமைப்பதற்கு நம்முடைய வாரியம் எண்ணியிருக்கிறது.

மற்றொன்று, மொத்தத்தில் 16,475 நபர்கள் பயனடையும் வகையில் 4 கோடியே எட்டு இலட்சம் ரூபாய் செலவில் பனைத் திட்டத்திற்கான திட்டம் உத்தேசிக்கப்பட்டிருக்கிறது.

இன்னொன்று. நீண்ட காலமாகச் செயல்பட்டு வருகின்ற பல கூட்டுறவுச் சங்கங்கள் இன்றைக்கு வட்டி, அதைப்போலவே தவணை தவறுதல் வட்டியின் மூலமாக பாதிக்கப்பட்டிருக்கின்றன என்பதை நம்முடைய குமாரதாஸ் அவர்கள் பேசுகின்றபொழுது கவனத்திற்குக் கொண்டு வந்தார்கள். அதை நம்முடைய கதர் வாரியத்தினுடைய கவனத்திற்கு நான் கடந்த மாதம் கொண்டு சென்றபொழுது அவர்கள் அதைத் தள்ளுவதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். விரைவில் அவர்களிடத்திலே அந்த ஆணையைப் பெறுவதற்கு இந்த அரசு முயற்சியை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதன் மூலமாக ஏற்பட்டிருக்கின்ற வட்டி சுமார் 143.25 இலட்சம் வட்டியைத் தள்ளுபடி செய்வதற்கான நடவடிக்கையை இந்தக் கதர் வாரியம் மேற்கொள்ளும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விழைகிறேன்.

அதைப்போலவே மற்றொன்றையும் நான் உங்களுக்கு இங்கே தெரிவிக்க ஆசைப்படுகிறேன். இன்றைக்குப் பலபேர் இங்கே பேசுகின்றபொழுது, சீருடை வழங்குவதிலே சில சிக்கல்கள் இருக்கின்றன, குறிப்பாகத் தேவையான அளவிற்குச் சீருடைகள் வழங்கப்படவில்லை என்பதைக் குறிப்பிட்டார்கள். அந்தத் தவறு ஏற்பட்டு விடக் கூடாது என்பதற்காகத்தான் சென்ட்ரல் கட்டிங் என்ற ஒரு முறையைக் கொண்டு வந்து ஒரு மையத்திலே அந்த வெட்டி, அதைப் பலயிடங்களிலே தைப்பதற்கான வழி வகைகளைச் செய்தோம். அதிலேயும் தவறுகள் வந்திருக்கின் றன என்பதை இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள் பேசுகின்ற பொழுது எடுத்துச் சொன்னார்கள். அந்தத் தவறுகள் ஏற் படாவண்ணம் எதிர்காலத்தில் உரிய கவனத்தை சமூக நலத் துறை செலுத்தும் என்பதை நான் இங்கே உத்தரவாதம் அளிக்க கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே பேசுகின்றபொழுது மாண்புமிகு உறுப்பினர் திருமதி வளர்மதி அவர்கள் ஒரு கருத்தைச் சொன்னார்கள். Working Women Hostel சென்னையிலே ஒன்றுதான் இருக் கிறது. இன்னொன்று தேவை என்று இங்கே குறிப்பிட் டார்கள். நான் அவர்களுக்கு ஒன்றை சொல்வேன். இன்றைக்கு அப்படி ஒரு Working Women Hostel கட்டி முடிக்கப்பட்டு, மே மாதம் 1 ஆம் தேதி அது துவக்கப்பட இருக்கிறது நம்முடைய மாநகராட்சியினுடைய துணையோடு என்பதை இந்த நேரத்திலே நான் உங்களுக்கு எடுத்துச் சொல்ல விழைகிறேன்.

இங்கே பேசிய பல நண்பர்களும் இன்னொரு கருத்தைச் சொன்னார்கள். நிறைய முதியோர் உதவித் தொகை வழங்கப் படாமல் இருக்கிறது. அதிலே குறிப்பாக யாராவது ஒருவர் இறந் தால்தான் இன்னொருவருக்கு வாய்ப்பு கிடைக்கும். அண்ணன் எப்பொழுது சாவான், திண்ணை எப்பொழுது காலியாகும் என்ற பழமொழிதான் இன்றைக்கு நாட்டிலே நடந்து கொண் டிருக்கிறது என்றார்கள். நம்முடைய கொடுத்துச் சிவந்த கரத் திற்குச் சொந்தமான தமிழகத்தின் முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்களிடத்தில் இதைக் கவனத்திற்குக் கொண்டு போனவுடன் அவர்கள் இன்றைக்கு உத்தரவை வழங்கி யிருக்கிறார்கள். இதுவரையிலே நிலுவையிலே இருக்கின்ற 23,039 முதியோர்களுக்கும் உடனடியாகப் பணம் வழங்குவதற்கு 190 இலட்சம் ரூபாயை இன்றைக்கு வழங்கியிருக்கிறார்கள் என் பதை நான் மெத்தப் பெருமையோடு இங்கே எடுத்துச் சொல்ல விழைகிறேன்.





ஆகவே, இந்த அரசு நிச்சயமாக ஏழைகளுக்கு, எளியவர் களுக்கு, இயலாதவர்களுக்கு, இன்னும் சொல்ல வேண்டுமானால் சமுதாயத்தினுடைய அடித்தளத்திலே இருக்கின்றவர்களுக்குத் தன்னுடைய துணைக் கரத்தை இணைக் கரமாக, என்றைக்கும் நம்முடைய தமிழகத்தினுடைய அரசு புரட்சித் தலைவருடைய தலைமையிலே தந்து கொண்டிருக்கிறது என்பதைச் சொல்லி, இந்த மானியக் கோரிக்கைகளின் மீது தந்திருக்கின்ற வெட்டுத் தீர்மானங்களை மாண்புமிகு உறுப்பினர்கள் தாங்களே அதைப் பின்வாங்கிக் கொண்டு ஆதரிக்க வேண்டுமாய்க் கேட்டு அமை கிறேன், நன்றி, வணக்கம்.

**திருமதி. டி. யசோதா:** தலைவரவர்களே, சமூக சத்துணவுப் பணியாளர் பணியில் இருப்பவர்கள் ஊராட்சி மன்றத் தேர்தலில் நின்று வெற்றி பெற்றிருந்தால் அவர்கள் முன்போலவே சத்துணவுப் பணியாளர் பணியில் தொடர்ந்து இருக்கலாமா? ஒருவர் இரு பொறுப்புகளிலே இருக்கலாமா கூடாதா என்ற பிரச்சினை அநேகமாக எல்லா இடங்களிலும் இருப்பதால் அர சாங்கம் இதற்கு ஒரு வழிகாட்டுதலை அறிவிக்குமா என்று தெரிந்துகொள்ள விரும்புகிறேன்.

மேலும், ஊனமுற்றவர்களுக்கு வேலை வாய்ப்பில் 3 சதவீதம் என்று ஒதுக்கீடு இருப்பதை 5 சதவீதமாக உயர்த்தி, கண் தெரியா தவர்களுக்கு அதிலே இரண்டு சதவீதம் கொடுக்க அரசு முன் வருமா என்றும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இரண்டு கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள். ஊராட்சி மன்றத் தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் சத்துணவுப் பணியிடத்தில் பணி யாளராகத் தொடர முடியாது என்று ஏற்கெனவே தகுந்த தாக் கீது அனுப்பப்பட்டிருக்கிறது. அந்த அடிப்படையில் பல்வேறு இடங்களில் பணியில் இருந்தவர்கள் பணியிலிருந்து நீக்கப்பட் டிருக்கிறார்கள். தெரியாமல் வேறு எங்காவது இருந்தால் அவர் கள்மீது உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும்.

[திரு. ஆர். சௌந்திரராஜன்] [1987 ஏப்ரல் 21

அடுத்து, உடல் ஊனமுற்றவர்களுக்கு 3 சதவிதம் இருப்பதை 5 சதவீதமாக உயர்த்தி, அதில் 2 சதவீதத்தை பார்வையற்றவர்களுக்கு கொடுக்க முடியுமா என்று கேட்டார்கள். ஒட்டு மொத்தமாக ஊனமுற்றவர்களுக்கு 3 சதவீதம் என்று ஒதுக்கப்பட்டிருக்கிறதே தவிர இதில் கம்பார்ட்மென்ட் சிஸ்டமாக ஒவ்வொரு பிரிவுக்கும் ஒதுக்க முடியாது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி பா. வளர்மதி: தலைவரவர்களே, மகளிர் மன்றத் தலைவிக்கு 90 ரூபாய் ஊதியம் வழங்குவதையும், அதேமாதிரி 23,0000 பேர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதையும் தாய்க் குலத்தின் சார்பாக நான் பாராட்டுகிறேன். அது மட்டுமல்லாமல் இன்றைக்கு வரதட்சணைக் கொடுமைக்கு ஆளாகி, அதன் காரணமாக பலர் இறந்துவிடுகின்ற நிலைமைகளையும் பார்க்கிறோம். வரதட்சணைக் கொடுமையைப் பொறுத்தவரையில் மாமியார் தான் அதிகமாகக் கொடுமை செய்கிறார். அதனால் மாமனார் பெயர் வருவதில்லை; கணவன் பெயர் வருவதில்லை. ஆகவே, மாமியார்களை தண்டிக்க அரசாங்கம் அவசரமாக ஏதாவது சட்டம் கொண்டு வந்து, தகுந்த உத்தரவிடுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, இதற்கு சட்டம் போட வேண்டிய தேவை இல்லை. மாமியாரே எண்ணிப் பார்த்து, ஒரு காலத்தில் தானும் ஒரு மருமகள்தான் என்பதை உணர்ந்தாலே இந்தப் பிரச்சினை வராது.

திரு. பொ. உத்திராபதி: தலைவரவர்களே, சத்துணவு மையம் நமக்கு நிரந்தரமாகிவிட்டது. சத்துணவு மையத்தில் பணியாற்றுகின்றவர்கள் தங்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று கேட்டுக் கொண்டிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அது பற்றி இப்போது அறிவிக்காவிட்டாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைக் கலந்து, எதிர்காலத்தில் சத்துணவு மையத்தில் பணியாற்றுகின்றவர்களை நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பார்களா என்பது ஒன்று.

அடுத்து, தமிழ்நாடு கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தில் குறிப்பிட்ட ஒரு நபரை, இயக்குநர் இருக்கும்போது, கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு கொடுத்து நியமித்திருப்பது உண்மையா? அவர் இருக்கும் வரையில் அந்தப் பதவி இருக்கும்.



1987 ஏப்ரல் 21] [திரு. பொ. உத்திராபதி]

அதற்குப் பின்னால் இருக்காது என்று சொல்லப்படுகிறதே. அதனுடைய ஆணை நகல் என்னிடம் இருக்கிறது; வேண்டுமானால் காண்பிக்கிறேன். அந்தப் பதவி இடம் தொடர்ந்து நீடிக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: தலைவரவர்களே, கதர் கிராமக் கைத்தொழில் வாரியத்தில், நம்முடைய ஒரு நபர் குழு ஆய்வு செய்து, இப்போது இருக்கிற மூன்று இணை இயக்குநர்களில் ஒருவரை கூடுதல் இயக்குநராக்க வேண்டுமென்று நமக்கு ஒரு பரிந்துரையை அளித்திருக்கிறது. அந்தப் பரிந்துரையின் அடிப்படையில்தான் ஒரு கூடுதல் இயக்குநர் நியமிக்கப்பட்டிருக்கிறார்; இந்தப் பதவி தொடர்ந்து இருக்கும்.

சத்துணவுப் பணியாளர்களை நிரந்தரமாக்க வேண்டுமென்று சொன்னார்கள். சத்துணவுத் திட்டம் நிரந்தரம்தான். ஆகவே, பணியாளர்களும் நிரந்தரம்தான். அவர்கள் நிரந்தரம் என்று உத்தரவு வழங்கப்படவேண்டியதில்லை. திட்டம் நிரந்தரமாக இருப்பதால் அவர்களுக்கு அந்த சந்தேகம் எழவேண்டிய தேவை இல்லை.

திருமதி தா. இராசாம்பாள்: தலைவரவர்களே, விதவைத் தாய்மார் பெண்களுக்கு திருமணம் செய்வதற்கு உதவித் தொகையாக ஆயிரம் ரூபாய் வழங்கப்படுகிறது. ஆனால் அனாதைக் குழந்தை திருமணம் செய்கின்றபோது அந்தத் திட்டத்தை நாம் நடைமுறைப்படுத்தவில்லை. அதனால் அவர்கள் திருமணத்திற்கு இந்த ஆயிரம் ரூபாய் கொடுக்கின்ற வாய்ப்பு இல்லை. அவர்களுக்கும் ஆயிரம் ரூபாய் உதவித் தொகை வழங்க அரசு முன் வருமா?

அது மட்டுமல்ல, உடல் ஊனமுற்றவர்கள் ஆண்டு என்று அந்த ஆண்டில் மட்டும்தான் ஊனமுற்றவர்களுக்கு 3 சதவீதம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டது. இப்போது அது நடைமுறையில் இல்லை. அதைத் தொடர்ந்து அரசு நடைமுறைப்படுத்துமா? அதோடு 2 சதவீத வேலை வாய்ப்பு கண் பார்வையற்றவர்களுக்கு கொடுக்க அரசு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

(இரவு 6-30)

மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, விதவைக் குழந்தைகளுக்கு நாம் திருமணத்திற்குப் பணம் கொடுக்கிறோம். அனாதைக் குழந்தைகளை நாமே வளர்த்து ஆளாக்கி விடுகிறோம்.

[1987 ஏப்ரல் 21

**திரு. வை. பாலச்சந்திரன்:** தலைவர் அவர்களே, பனை பொருள் வாரியம் வேண்டுமென்று பல ஆண்டுகளாக இந்த மன்றத்தில் நாங்கள் கேட்டுக் கொண்டிருக்கிறோம். ஆகவே அதுபற்றி அரசாங்கம் என்ன செய்ய இருக்கிறது என்பதைத் தெரிவிக்க வேண்டும். அத்துடன் சி.ஆர்.பி.சி. 125 செக்ஷன்படி இந்துப் பெண்களும், கிறிஸ்தவப் பெண்களும் கணவனால் கைவிடப்பட்ட நிலைமையில் கைவிடப்பட்ட கணவனிடமிருந்து ஜீவனாம்சம் வாங்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறபோது இஸ்லாமிய சமுதாயத்தை சேர்ந்த சகோதரிகளுக்கு மட்டும் அந்த வாய்ப்பு இல்லாத நிலை இருக்கிறதே, அதை மாற்ற வேண்டுமென்று மத்திய அரசை மாநில அரசு சமூக நலத்துறையின் மூலமாகக் கேட்க முன்வருமா என்பதையும் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, பனை வாரியம் தனியாக அமைக்கிற திட்டம் அரசின் பரிசீலனையில் இருந்து வருகிறது. திருமணச் சட்டத்தைத் திருத்துவது என்பது அகில இந்திய அளவில் ஒன்றாகச் சேர்த்து மத்திய அரசால் செய்யப்பட வேண்டிய ஒன்றாகும்.

**திரு. எம். செல்லமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சத்துணவு மையத்தில் வேலை செய்பவர்கள் குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஆள் பிடிக்க வேண்டாம் என்று உத்தரவு போட்டிருப்பதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அது தற்போது நடைமுறையில் இல்லை. எனவே ஒரு விளம்பரத்தின் மூலமாக அதைத் தெரிவிக்கின்ற வகையில் பத்திரிகைகளில் விளம்பரம் செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா? மேலும் சம்பளம் மற்றும் பல கோரிக்கைகளை அவர்கள் வைத்திருக்கிறார்கள். அவற்றைப் பற்றி அரசு என்ன சொல்கிறது? அமைச்சர் அவர்கள் அவைகளை ஏற்றுக் கொள்வார்களா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவரவர்களே, இன்றைக்கு நான் பேசியது பத்திரிகையில் வரும். ஆகவே குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு அவர்கள் போக வேண்டாம் என்பது அதிலேயிருந்தே தெரியும். எனவே அதற்கு விளம்பரம் தரவேண்டிய தேவையில்லை. மற்றொன்று அவர்களுடைய



1987 ஏப்ரல் 21] [திரு. ஆர். சௌந்திரராஜன்]

சம்பளம் பற்றியது. சமீபத்தில் 4-வது பே கமிஷனில் எல்லோருக்கும் சம்பளம் உயர்த்தியபோது அவர்களுக்கு உயர்த்தவில்லை. ஆனால் நம்முடைய தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் இரக்க குணத்தோடு அவர்களுக்கு 20 ரூபாய் சம்பளத்தை ஏற்றி இருக்கிறார்கள்.

**டாக்டர் கே. சமரசம்:** தலைவர் அவர்களே. பாலமந்திரில் படித்த அனாதைக் குழந்தைகள் படித்து பட்டம் பெற்று வெளியே சென்று வேலை தேடும்போது அல்லது கடன் கேட்கிறபோது ஜாதிச் சான்றிதழ், பிறந்த நாள் சான்றிதழ் வேண்டுமென்று கேட்கிறார்கள். இதுபற்றிக் குறிப்பிடும்போது அவர்கள் படித்ததே அனாதை இல்லம், அவர்களிடத்தில் போய் ஜாதிச் சான்றிதழ் கேட்டால் அவர்களுடைய மனோநிலை எப்படி இருக்கும் என்பதைப் பார்க்க வேண்டும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் அப்படிப்பட்ட நிலைமை இருக்கின்ற காரணத்தால், சட்டம் இருக்கின்ற காரணத்தால், அவர்கள் வெரிஃபை பண்ண வேண்டிய அவசியம் இருக்கிறது. ஆகவே ஒரு சட்ட முன்வடிவு கொண்டு வந்து அதைத் தீர்த்து வைக்க அரசு முன்வருமா என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும்.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர்களே, திருமணங்களைப் பதிவு செய்ய வேண்டுமென்ற ஒரு சட்டத்தைக் கொண்டுவர அரசு உத்தேசித்துள்ளதா என்பதையும் என்னுடைய தொகுதியில் வையம்பட்டி ஒன்றியத்தில் அரசனடிப் பாளையத்தில் கையால் காகிதம் செய்யும் ஆலையையும் மன்னார் குடியைச் சேர்ந்திருக்கிற சுந்தரக்கோட்டையில் பனைபொருள் கேந்திரமும் அமைக்கிற செயற்குறிப்பு அரசாங்கத்திடம் இருக்கிறதா என்பதையும் நான் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** பேரவைத் தலைவர் அவர்களே, அது அரசின் பரிசீலனையில் இருக்கிறது.

**திரு. என். எஸ். வி. சித்தன்:** மாண்புமிக்க அவைத் தலைவர் அவர்களே, சமூக நல வாரியத்திற்கு உறுப்பினர்கள் இதற்கு முன்பு எந்த ஆண்டிலே நியமிக்கப்பட்டனர்? இப்போது அதனைத் திருத்தியமைக்க அரசுக்கு யோசனை இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆர். சௌந்திரராஜன்:** தலைவர் அவர்களே, சமூகநல வாரிய உறுப்பினர்களை மாற்றியமைப்பதற்கான நடவடிக்கையை அரசு மேற்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது; இப்போது வாக்கெடுப்பு.

### கோரிக்கை எண் 27—கதர்த் தொழில்.

திருவாளர்கள் கோ. வீரய்யன், எஸ். என். இராமசாமி, கே. சுப்பராயுன் ஆகியவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவர்களுடைய வெட்டுத் தீர்மானங்கள் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றனவாகக் கருதப் பெற்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி—

"மானியக் கோரிக்கை எண் 27—கதர்த் தொழில் என்ற தலைப்பின்கீழ் ரூ. 3,76,95,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்".

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

### கோரிக்கை எண் 30—சமூக நலன்கள்.

திரு. கோ. வீரய்யன் அவர்கள் இருப்பிடத்தில் இல்லாததால் அவருடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றதாக கருதப் பெற்றது.

திரு. கி. வெங்கடாசலம் அவர்களுடைய வெட்டுத் தீர்மானம் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெற்றுக் கொள்ளப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை முன்னுள்ள கேள்வி:



"மானியக் கோரிக்கை எண் 30—சமூக நலன் என்ற தலைப்பின் கீழ் 92,18,97,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

மானியக் கோரிக்கை பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, கோரிய தொகை அரசுக்கு வழங்கப் பெற்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய அலுவல்கள் இத்துடன் முடிவுற்று, நாளை 22—4—1987 காலை 10-00 மணிக்குப் பேரவை மீண்டும் கூடும்.

பின்னர் பேரவை இரவு 6-36 மணிக்கு ஒத்திவைக்கப் பெற்றது.

### 6. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

#### (அ) சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

75. 1957 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் துறையின் 20—8—1986 ஆம் நாளிட்ட 2307 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிக்கை. [1955 ஆம் ஆண்டு தமிழ்நாடு திரைப்படங்கள் (ஒழுங்குமுறை) சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 9/1985) 10 (3) பிரிவின்கீழ் பேரவை முன் வைக்கப்பெற்றது.]

76. விளம்பர வரியினை திருத்தி அமைப்பது குறித்து வணிக வரிகள்—சமய அறக்கட்டளைகள் துறையின் 28—1—1987 ஆம் நாளிட்ட 59 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1983 ஆம் ஆண்டு விளம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 22/1983) 7 (3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது.]

#### (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் ஏனைய தாள்கள்.

161. கோரிக்கை எண் 27—தமிழ்நாடு கதர்—கிராமத் தொழில் வாரியத்தின் கொள்கையும் திட்டங்களும், 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

162. கோரிக்கை எண் 30—சமூக நலம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88 (தமிழ், ஆங்கிலம்).

163. சமூக நலத் துறை பற்றிய சாதனைத் திட்டம் 1987-88 (ஆங்கிலம்).

[1987 ஏப்ரல் 21

164. இந்தியத் தணிக்கைத் துறைத் தலைவரின் 1981-82 மற்றும் 1983-84 ஆம் ஆண்டுகளுக்கான அறிக்கைகளில் (வணிகம்) செய்தி, சுற்றுலாத் துறை தொடர்பான பத்திகள் மீதான பொது நிறுவனங்கள் குழுவின் ஐம்பத்தி மூன்றாம் அறிக்கை.

165. கோரிக்கை எண் 29—தமிழ்நாட்டில் தொழிலாளர்கள் நிலைமை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்).

166. வேலை வாய்ப்பு—பயிற்சி பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (கோரிக்கை எண் 29-ன் துணை கோரிக்கை). (தமிழ், ஆங்கிலம்).

167. கோரிக்கை எண் 44—எழுதுபொருள் அச்சுத் துறையின் பணி குறித்த கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88. (தமிழ், ஆங்கிலம்).



1987 ஏப்ரல் 21]

## இணைப்பு I

298 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 426-க்கான விடையைக் காண்க).

(அ) சேலம் மாவட்டத்தில் உலக வங்கி நிதியுதவியுடன் நிறைவேற்றப்படும் மேட்டூர் ஆத்தூர் குடிநீர்த் திட்டப்பணி கடந்த ஜூன் 1985 முதல் தொடங்கப்பட்டுள்ளது.

(ஆ) இத்திட்டத்தின்கீழ் மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர் ஆகிய ஒன்றியங்களில் குடிநீர் வசதி பெறும் 23 கிராமங்களின் விவரம் கீழ்வருமாறு:—

**மேச்சேரி ஒன்றியம்:**

(1) பொட்டனேரி;
(2) விருதாசம்பட்டி;
(3) பனப்புரம்;

**தாரமங்கலம் ஒன்றியம்:**

(4) மல்லிக்குப்பம்;
(5) மனத்தால்;
(6) அமரகுந்தி;

**ஓமலூர் ஒன்றியம்:**

(7) தோலாசம்பட்டி;
(8) பெரியாப்பட்டி;
(9) திண்டமங்கலம்;
(10) பூ. மாரமங்கலம்;
(11) எம். செட்டிப்பட்டி;
(12) திண்டமங்கலம்;
(13) பச்சனம்பட்டி;
(14) கோட்டை மாரியம்மன்கோவில்;
(15) ஓக்கம்பட்டி;
(16) பாகல்பட்டி;
(17) செல்லப்பிள்ளைகுட்டை;
(18) முத்துநாயக்கன்பட்டி;
(19) பி. நல்லகவுண்டன்பட்டி;
(20) வெள்ளக்கால்பட்டி;
(21) மான்குப்பை;

[1987 ஏப்ரல் 21

(23) கோட்டை கவுண்டன்பட்டி;
(23) சாமிநாயக்கன்பட்டி,

(இ) மேற்கண்ட 23 கிராமங்களில் உள்ளடங்கிய 94 குடியிருப்புகள் குடிநீர் வசதி பெறுகின்றன. அவற்றின் விவரம், இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் தரப்பட்டுள்ளது.

(ஏ) மேட்டூர் ஆத்தூர் குடிநீர்த் திட்டம் 2011 ஆம் ஆண்டில் எதிர்பார்க்கப்படும் மக்கட் தொகை 13 லட்சம் பேர் பயன்பெறும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**மேச்சேரி, தாரமங்கலம், ஓமலூர் ஆகிய ஒன்றியங்களில் குடிநீர் வழங்கப்படவிருக்கும் கிராமங்கள் மற்றும் அதன் குடியிருப்புகளின் பட்டியல்.**

**1. மேச்சேரி ஒன்றியம்.**

| கிராமம் | குடியிருப்பு | உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை. |
|---|---|---|
| (1) பொட்டனேரி | 1. விருதாசம்பட்டி | 1,888 |
| | 2. குட்டப்பட்டி பலக்கானூர் | 750 |
| | 3. பலக்கானூர் கேவி கிழக்கு | 182 |
| | 4. பலக்கானூர் கேவி மேற்கு | 182 |
| | 5. சென்னரெட்டியூர் | 224 |
| | 6. கணக்கப்பட்டி | 793 |
| | 7. ஏலக்குட்டையூர் | 767 |
| | 8. மலையடிப்பட்டி | 884 |
| | 9. எருசக்கவுண்டனூர் | 391 |
| | 10. அம்மன்கோயிலூர் | 393 |
| | 11. ஊஞ்சப்பட்டி | 599 |
| | 12. குட்டப்பட்டி | 1,690 |
| | 13. தானிகுட்டப்பட்டி | 729 |
| | 14. தானிகுட்டப்பட்டி காலனி | 477 |
| | 15. மூத்துநாயக்கன்பட்டி | 686 |



1987 ஏப்ரல் 21]

| கிராமம். | குடியிருப்பு. | உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை. |
|---|---|---|
| (2) விருதாசம்பட்டி | 16. குப்பனூர் | 437 |
| | 17. மேலப்பனூர் | 410 |
| | 18. காட்டூர் | 428 |
| | 19. கண்டனூரான்கேவி | 299 |
| | 20. கந்தனூர் | 290 |
| (3) பனப்புரம் | 21. முத்தம்பட்டி | 410 |
| | 22. மூத்தம்பட்டி கேவி | 196 |

**2. தாரமங்கலம் ஒன்றியம்.**

| கிராமம். | குடியிருப்பு. | உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை. |
|---|---|---|
| (1) மல்லிக்குட்டை | 23. ஆரியக்கவுண்டன் வளவு | 234 |
| | 24. மல்லிக்குட்டை அருந்ததியர் காலனி | 546 |
| | 25. மல்லிக்குட்டை காலனி | 884 |
| | 26. திருவக்கவுண்டனூர் | 416 |
| | 27. மல்லிக்குட்டை | 975 |
| (5) மணத்தால் | 28. கனக்காணிப்பட்டி | 1,170 |
| | 29. நாடார் காலனி | 403 |
| | 30. நாடார் காலனி-காலனி | 338 |
| | 31. மூப்பர் தெரு | 442 |
| | 32. ஓலைப்பட்டி கேவி | 377 |
| | 33. ஓலைப்பட்டி | 1.060 |
| | 34. பண்டிதக்காரனூர் | 241 |
| | 35. ஊப்பரப்பட்டி | 792 |
| | 36. கூடைக்கல்லனூர் | 377 |

| கிராமம் | குடியிருப்பு | உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை. |
|---|---|---|
| (6) அமராகுந்தி | 37. ஆதிராப்பட்டி | 325 |
| | 38. ராஜனூர் | 358 |
| | 39. தானப்பன் கேவி | 195 |
| | 40. மாங்குட்டைபட்டி வளவு | 606 |
| | 41. மாங்குட்டைபட்டி கேவி | 260 |
| | 42. அமரகுந்தி | 1,820 |
| | 43. அமரகுந்தி காலனி | 325 |
| | **3. ஓமலூர் ஒன்றியம்.** | |
| (7) தோலாசம்பட்டி | 44. தோலாசம்பட்டி | 866 |
| | 45. ராமகிருஷ்ணன் புதூர் தோலாசம்பட்டி | 338 |
| | 46. அருந்ததியர் காலனி | 247 |
| | 47. ஹரிஜன் காலனி | 325 |
| | 48. ரெட்டிப்பட்டி | 273 |
| (8) பெரியரிப்பட்டி | 49. ரெட்டிப்பட்டி அருந்ததியார் | 143 |
| | 50. ரெட்டிப்பட்டி கேவி காலனி | 207 |
| | 51. தனபூசாரி வளவு | 302 |
| | 52. பெரியரிப்பட்டி | 494 |
| | 53. தண்டுமணியன் | 137 |
| | 54. வவுத்தனூர் | 517 |
| | 55. ரெட்டிப்பட்டி காலனி | 195 |
| | 56. தண்டனூர் | 326 |



1987 ஏப்ரல் 21]

| கிராமம் | குடியிருப்பு | உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை. |
|---|---|---|
| (9) திண்டமங்கலம் | 57. இலவமரத்தூர் | 780 |
| (10) யு. மாரமங்கலம் | 58. மாரமங்கலம் | 543 |
| | 59. மாரமங்கலம் காலனி ஏ | 468 |
| | 60. பல்லக்காடு | 420 |
| (11) எம். செட்டிபட்டி | 61. எம். செட்டிபட்டி | 1,702 |
| (12) திண்டமங்கலம் | 62. திண்டமங்கலம் | 403 |
| | 63. கலர்பட்டி | 325 |
| (13) பச்சனம்பட்டி | 64. பச்சனம்பட்டி | 459 |
| | 65. ஆட்டுகாரனூர் | 273 |
| | 66. அருந்ததியர் காலனி | 150 |
| | 67. மேட்டூர் | 150 |
| (14) கோட்டை மாரியம்மன் கோவில் | 68. பேரமேச்சூர் காலனி | 345 |
| | 69. பேரமேச்சூர் காட்டு வளவு | 364 |
| | 70. சேத்தியப்பனூர் | 364 |
| | 71. சேத்தியப்பனூர் அருந்ததியர் | 214 |
| | 72. சாத்தூர் | 280 |
| | 73. பனங்காட்டூர் அருந்ததியர் காலனி | 247 |

[1987 ஏப்ரல் 21

| கிராமம். | குடியிருப்பு. | உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை. |
| --- | --- | --- |
| 14. கோட்டை மாரியம்மன் கோவில்—தொடர்ச்சி. | | |
| | 74. வேலக்கவுண்டனூர் | 859 |
| | 75. வேலக்கவுண்டனூர் புதூர் காலனி | 416 |
| | 76. வேலக்கவுண்டனூர் புதூர் | 193 |
| (15) சிக்கம்பட்டி | 77. பெரியகாடம்பட்டி காலனி | 1,101 |
| | 78. பெரியக்காடம்பட்டி | 475 |
| | 79. மங்கனூர் | 260 |
| (16) பாவல்பட்டி | 80. பசியல்பட்டி | 1,800 |
| | 81. தோரூர் காலனி | 771 |
| (17) செல்லப்பிள்ளை குட்டை | 82. மல்லக்கவுண்டனூர் | 429 |
| | 83. மல்லக்கவுண்டனூர் காலனி | 724 |
| | 84. செல்லப்பிள்ளை குட்டை | 819 |
| | 85. குப்பாண்டியூர் | 403 |
| | 86. கவண்டப்பட்டி | 364 |
| (18) முத்து நாயக்கன் பட்டி | 87. முத்துநாயக்கன் பட்டி | 2,869 |



1987 ஏப்ரல் 21]

| கிராமம் | குடியிருப்பு | உச்ச கட்டத்தில் பயன் பெறும் மக்கட் தொகை. |
| --- | --- | --- |
| (19) பி. நல்லகவுண்டன் பட்டி | 88. பி. நல்லகவுண்டன் பட்டி | 555 |
| (20) வெள்ளக்கால்பட்டி | 89. வெள்ளக்கால் பட்டி | 728 |
| (21) மான்குப்பை | 90. மான்குப்பையார் காலனி | 289 |
| | 91. மான்குப்பை காலனி | 2340 |
| (22) கோட்டை கவுண்டன் பட்டி | 92. ஆணைக்கவுண்டன் பட்டி | 910 |
| (23) சாமிநாயக்கன் பட்டி | 93. சாமிநாயக்கன் பட்டியார் காலனி | 650 |
| | 94. சாமிநாயக்கன் பட்டியார் காலனி | 2,062 |

## இணைப்பு

(21 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 430-க்கான விடையைக் காண்க.)

நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பதவிகள் (முன்பு இப்பதவிகள் சப்-மாஜிஸ்டிரேட்டுகளின் பதவிகள் என்று அழைக்கப்பட்டன). 1966 ஆம் ஆண்டில் அரசிதழ் பதிவு பெற்ற பதவிகளாக ஆக்கப்பட்டன. அரசிதழ் பதிவுப் பெற்ற பதவிகளுக்குப் புதிதாக பணிவிதிகள் 1973 ஆம் ஆண்டு இயற்றப்பட்டன. இதற்கிடையில் சென்னை உயர்நீதி மன்றத்தின் முன்னாள் தலைமை நீதிபதியின் பரிந்துரைக்கு ஏற்ப, நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டு பதவிகள் நீதித்துறை முதல் வகுப்பு

மாஜிஸ்டிரேட்டு பதவிகளாக நிலை உயர்த்தப்பட வேண்டுமென்றும், அவ்வாறு நிலை உயர்த்தப்பட்ட பதவிகள் தமிழ்நாடு மாநில நீதித்துறை பணியின் கீழ் மாவட்ட முன்சீப் பதவித் தரத்துடன் ஒரே பதவித்தரமாக ஒருங்கிணைக்கப்பட வேண்டும் என்றும் 1976-ல் அரசு ஆணையிட்டது. பல்வேறு கட்டங்களில், தற்போதுள்ள நீதித்துறை முதல் வகுப்பு இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் இடத்தில் மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டுகள் என்று நீதித்துறை பதவிக்குப் புதிய பதவிப் பெயர் அளிப்பதற்கு சட்டப்படி வகை செய்வதற்கு சட்டமியற்றாமல் ஒருங்கிணைப்பு செயற்குறிப்புகளைச் செயல்படுத்த முடியாது என்ற காரணத்தினால், மத்திய அரசின் ஒப்புதலுடன், தமிழ்நாடு 1980 ஆம் ஆண்டு சட்டங்களில், மாஜிஸ்டிரேட்டு பற்றிய குறிப்புகள் (தனி விதித்துறைகள்) சட்டம் (சட்டம் எண் 33/1980) இயற்றப்பட்டது.

2. ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிகளைக் கொண்டுவரும் தமிழ்நாடு மாநில நீதித்துறை பணி விதிகளுக்கான வரைவுத் திருத்தங்கள், உயர் நீதிமன்றத்துடனும், தமிழ் நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்துடனும் கலந்தாலோசித்து இயற்றப்பட்டன. மேற்சொன்ன விதிகளின் வரைவுத் திருத்தத்தில் ஒருங்கிணைக்கப்பட்ட மாவட்ட முன்சீப்—நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவியில் முறையாக நியமிக்கப்படுவதற்குத் தெரிந்தெடுப்பதற்கான நீதித்துறை தற்காலிக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகள் அனைவரும், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் முன்வர வேண்டும் என்ற விதித்துறை உள்ளது.

3. தற்காலிக நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணியினை வரன்முறைப்படுத்த அரசு முடிவு செய்ததால் அவர்களின் பணியினை வரன்முறை செய்வதைப்பற்றி விதியில் தகுந்த திருத்தங்களை செய்த பின்னரே மாவட்ட முன்சீப்—நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிக்கான திருத்திய விதிகளை வெளியிட முடியும். எனவே மாவட்ட முன்சீப் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிக்கான விதியினை தற்போது வெளியிட இயலவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் டெல்லி உச்ச நீதிமன்றத்திலும் தாக்கல் செய்யப்பட்ட நீதிப் பேராணையின் விளைவாக உயர்நீதிமன்றத்தில் நடைமுறை இருந்ததால், அரசின் முடிவுப்படி தற்காலிக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்





டுகளின் பணியினை இதுவரை வரன்முறைப்படுத்த இயலவில்லை. அத்தடை ஆணை 9—12—1986 ஆம் நாள் டெல்லி உச்ச நீதிமன்றத்தால் அளிக்கப்பட்ட தீர்ப்பினையொட்டி நீங்கியுள்ளது. அத்தீர்ப்பின்படி தற்காலிக இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணியினை வரன்முறைப்படுத்துவதற்கு அரசு சென்னை உயர்நீதிமன்றத்தோடு தொடர்பு கொண்டு மேல்நடவடிக்கை எடுத்து வருகிறது. எனவே தற்காலிக நீதித்துறை இரண்டாம் வகுப்பு மாஜிஸ்டிரேட்டுகளின் பணியினை வரன்முறை செய்தபின் தகுந்த திருத்தங்கள் செய்யப்பட்டு மாவட்ட முன்சீப்—நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவிக்கான திருத்திய விதிகளை வெளியிட அரசு நடவடிக்கை எடுக்கும் அதன் பின்னரே மாவட்டமுன்சிப் மற்றும் நீதித்துறை மாஜிஸ்டிரேட்டு பதவியைக் கொண்டுவரும் ஒருங்கிணைப்புத் திட்டம் அமுல்படுத்தப்படும்.

## இணைப்பு III

(309 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### சமூக நலத் துறை.

### கோரிக்கை எண் 30.

### கொள்கை விளக்கக் குறிப்பு, 1987-88.

### அத்தியாயம் 1.

1.1. கோரிக்கை எண் 30-ன் கீழ் 1987-88 ஆம் ஆண்டிற்கு ரூ. 92,18,97,000 நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டுகிறேன்.

1.2. தமிழ் நாடு, நலப் பணிகளை செயல்படுத்துவதில் முன்னணியில் உள்ள மாநிலமாகும். அனைவரும் பயனடையும் வகையில் நலத் திட்டங்கள் நமது மாநிலத்தில் நன்கு விரிவான முறையில் நடத்தப்பட்டு வருகிறது. சமுதாயத்தில் மிகவும் முன்னேற வேண்டிய மூன்று பிரிவினராகிய மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர்களுக்கு அநேக நற்பணிகளை சமூக நல இயக்ககம் செயல்படுத்தி வருகிறது. சமுதாயத்தில் உள்ள இம்மூன்று பிரிவினருமே பொதுவாக பல்வேறு நலப் பணித் திட்டங்களில் முக்கியத்துவம் தரப்படாமல் புறக்கணிக்கப்பட்டு வருகின்றனர். இம்மூன்று பிரிவினர்களுக்கும் சேர வேண்டிய நலன்களுக்கெல்லாம் சமூக நலத் துறை ஒரு பாதுகாவலராக இயங்கி வருகிறது.

[1987 ஏப்ரல் 24

1.3. சமுதாய வளர்ச்சித் துறையின் ஒரு அங்கமாக 1947 ஆம் ஆண்டில் ஏற்படுத்தப்பட்ட மகளிர் நலப் பிரிவு, தனியாக சமூக நலத் துறை என்ற தனித் துறையின் கீழ் தற்போது மகளிர், குழந்தைகள் மற்றும் உடல் ஊனமுற்றோர் நலப் பணிகளில் அதிக பங்கேற்கும் மிகப் பெரிய இயக்கமாக செயல்பட்டு வருகிறது. இவ்வியக்கத்தின் முக்கிய நோக்கங்கள் (1) 5 வயதுக்குட்பட்ட குழந்தைகளுக்கு அளிக்க வேண்டிய சத்துணவு, உடல் நலம் மற்றும் கல்வி முதலியவைகளை அளித்தல்; (2) சமூக பொருளாதார வளர்ச்சியில் பெண்களுக்கு சம வாய்ப்பு அளித்தல்; (3) ஆதரவற்ற பெண்களுக்கும் விதவைகளுக்கும் அவர்களுக்குத் தேவையான நேரத்தில் சட்ட உதவி மற்றும் அவர்களுக்கென்றே ஏற்படுத்தப்பட்ட சமூக பொருளாதாரத் திட்டத்தின் கீழ் பல வகை உதவிகளைச் செய்தல் மற்றும் ஊனமுற்றோர் தங்கள் இயலாமையை மறந்து சமூகத்தில் மற்றோரைப் போல தகுந்த நிலையை அடைவதற்கு தேவையான உதவிகளைச் செய்தல்.

## அத்தியாயம் 2.

## மகளிர் நலம்.

### (1) சிறப்புத் திட்டங்கள் :

2.1. மகளிர்க்கென்றே பதிவு செய்யப்பட்ட தொழிற் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் உற்பத்தி நிலையங்கள் அமைத்து, அதன் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டத் துறைகளில் அவர்களுக்குப் பயிற்சியளித்து வேலை வாய்ப்பினை நல்கி, வருமானத்திற்காக வாய்ப்பினையும் கொடுத்து, அவர்களது பொருளாதார முன்னேற்றத்திற்கு அரசு உதவி வருகிறது. அவர்களுக்காக கூட்டுறவுத் துறையில் தொழில் நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டு, அவைகளுக்கு பங்கு மூலதனக் கடன் மற்றும் இயந்திரங்கள், தளவாடங்கள் ஆகியவை கொள்முதல் செய்வதற்கு மானியத் தொகை, நடப்பு மூலதனக் கடன் மற்றும் நிர்வாக மேற்பார்வை உதவி ஆகியவை அளிக்கப்பட்டு வருகின்றன. சில பெரிய தொழில் கூட்டுறவு சங்கங்களின் அமைப்பு பற்றிய விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

### எழுதுபொருள் உற்பத்தி:

2.2. 15 தொழில் கூட்டுறவு சங்கங்கள் ஏழை பெண்களின் வேலை வாய்ப்புக்காக நிறுவப்பட்டுள்ளது. 975 பெண்களுக்கு இதுவரை பயிற்சி அளிக்கப்பட்டு 700 பெண்கள் இத்திட்டத்தின்



1987 ஏப்ரல் 31]

கீழ் வேலைவாய்ப்பு பெற்றுள்ளனர். இச் சங்கங்கள் முதலமைச்சரின் சத்துணவுத் திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் ஆகியவற்றிற்கான பதிவேடுகளை தயாரித்து அளிக்கின்றன.

### பனைப்பொருள் தொழில்கள்.

2.3. பனைப் பொருள் தயாரிக்கும் தொழிலை அடிப்படையாகக் கொண்டு பனைநார் மற்றும் பனைப்பாய் ஆகியவைகளை உற்பத்தி செய்யும் 10 தொழில் கூட்டுறவு சங்கங்கள் தர்மபுரி மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டு 250 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. தர்மபுரியில் இந்த 10 கூட்டுறவு சங்கங்களும் இயங்கி வருகின்றன.

### கிராம நூற்பு மையம்:

2.4. மதுரை மாவட்டம், கண்ணோந்தல் கிராமத்தில் ஒரு கிராமப்புற நூற்பு மையம் தொடங்கப்பட்டு இதன் மூலம் 25 கிராமப்புற பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

### சாக்குக்கட்டி மற்றும் மெழுகுவர்த்தி உற்பத்திக்கூடம்

2.5. மதுரை, தஞ்சாவூர், கன்னியாகுமரி மற்றும் திருநெல்வேலி மாவட்டங்களில் இரண்டு சாக்குக்கட்டி மற்றும் மெழுகுவர்த்தி உற்பத்திக் கூடங்கள் ஆரம்பிக்கப்பட்டு, 60 கிராமப்புற மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. இவை அனைத்திலும் 1980-81 முதல் உற்பத்தி தொடங்கப்பட்டு விட்டது.

### கயிறு தொழில்:

2.6. தஞ்சாவூர் மாவட்டம், நல்லூர் கிராமத்தில் ரூபாய் 6.61 இலட்சம் செலவில் ஒரு கயிறு தயாரிக்கும் பயிற்சி நிலையம் தொடங்கப்பட்டுள்ளது. இதுவரை 346 மகளிர்க்கு கயிறு தயாரித்தலில் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. இப் பயிற்சி பெற்ற பெண்களைக் கொண்டு அங்கு கயிறு தயாரிக்கும் தொழில் கூட்டுறவு சங்கம் ஒன்று நிறுவப்பட்டு உற்பத்தியும் துவங்கப்பட்டு, 346 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது. விரிவாக்கத் திட்டத்தின் ஒரு பகுதியாக இச்சங்கம் தஞ்சை மாவட்டத்தில் மொட்டூர், அரித்துவாரமங்கலம், ஆலங்குடி, நீடாமங்கலம், கபிஸ்தலம் மற்றும் மன்னார்குடி ஆகிய ஆறு கிராமங்களில் கிளைகளை நிறுவியுள்ளது. தற்சமயம் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் மற்றும் சிறப்பு மத்திய உதவியின்கீழ் 75 ஆதி திராவிடர் மகளிர்க்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

பட்டு நூல் எடுத்தல்:

2.7. வீணாகும் கழிவுப் பட்டில் இருந்து பட்டு நூல் தயாரிக்கும் இரண்டு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் சேலம் மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளன. இரண்டிலும் உற்பத்தி தொடங்கப்பட்டு 50 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டு வருகிறது.

தையல் தொழில் கூட்டுறவுச் சங்கங்கள்:

2.8. ஆதரவற்ற மற்றும் விதவை மகளிர்க்கு இலவசமாக வழங்கப்பட்ட தையல் இயந்திரங்கள் மூலம் போதிய வேலை இன்மையால் அவர்களுக்கு வருமானம் இடைக்க, மாநிலம் முழுவதும் மண்டல ரீதியாக சென்னை, ஈரோடு, தஞ்சாவூர் மற்றும் மதுரையில் நான்கு தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் நிறுவப்பட்டுள்ளன. இச் சங்கங்கள் ஆதி திராவிடர், பழங்குடியினர் மற்றும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை பள்ளி மாணவர்களுக்கான சீருடைகளைத் தைத்து வழங்குவதோடு, இதர நிறுவனங்களில் தையல் வேலைகளையும் செய்கின்றன. 1985-86 ஆம் ஆண்டில் மேலும் மூன்று மகளிர் தையற் தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் முறையே வேலூர், கடலூர், சேலம் ஆகிய இடங்களில் தொடங்கப்பட்டுள்ளன. 1986-87-ல் மேலும் ஐந்து தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் திருச்சி, திருநெல்வேலி, புதுக்கோட்டை, காஞ்சிபுரம் மற்றும் தாம்பரத்தில் துவங்கப்பட்டன. மொத்தம் தற்போது 12 தையற் தொழிற் கூட்டுறவு சங்கங்கள் இயங்குகின்றன. இதுவரை 6,000 மகளிர் உறுப்பினர்களுக்கு இச் சங்கங்கள் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது.

பள்ளி குழந்தைகளுக்கு இலவச சீருடை:

2.9. மாண்புமிகு முதல்வரின் சத்துணவு திட்டத்தில் பயன் அடையும் 1 முதல் 8 ஆம் வகுப்பு வரை பயிலும் பள்ளி மாணவ மாணவியருக்கு இலவச சீருடை வழங்கும் திட்டம் முதல் முறையாக அரசாங்கத்தால் 1985-86 ஆம் ஆண்டில் அமுல்படுத்தப்பட்டது. இத் திட்டம், 1986-87 ஆம் ஆண்டு தொடர்ந்து நடைபெற அரசு உத்திரவிட்டுள்ளது. சமூக நலத் துறையின் கீழ் செயல்படும் மகளிர் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள் மற்றும் தொழில் கூட்டுறவுத் துறையின் கீழ் செயல்படும் தையல் தொழில் கூட்டுறவு சங்கங்கள், தொண்டு நிறுவனங்கள் மற்றும் மகளிர் மன்றங்களின் மூலமாக சீருடை தைக்கும் பணியினை



செய்து முடிக்கும் பொறுப்பினை அரசு சமூக நல இயக்ககத்திற்கு அளித்துள்ளது. ஒவ்வொரு மாவட்டத்திலும் அம்மாவட்ட சமூகநல அலுவலரின் முன்னிலையில் பொது மையமாகக் கொண்டு ஓரே இடத்தில் துணி வெட்டும் centralised cutting place பணி 1986-87-ல் மேற்கொள்ளப்பட்டது. வெட்டிய பிறகு எல்லா தையல் நிறுவனங்களுக்கும் துணிகளைத் தைக்கக் கொடுக்கும் வகையில் அரசு உத்தரவிட்டுள்ளது. இச் சீருடைகள் தைப்பதற்குத் தேவையான அனைத்துத் துணிகளையும், எல்லா மாவட்ட சமூக நல அலுவலர்களுக்கும் கைத்தறி மற்றும் துணி நூல் இயக்கத்தின் மூலமாக பின்னி கம்பெனி, தமிழ் நாடு டெக்ஸ்டைல்ஸ் கார்ப்பரேஷன், கதர் கிராமத் தொழில் நிறுவனம் மற்றும் கோ-ஆப்டெக்ஸ் முதலிய நிறுவனங்கள் வழங்கியுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் சுமார் 59.43 லட்சம் பள்ளிக் குழந்தைகள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்தனர். 1986-87-ம் ஆண்டில் 60 இலட்சம் பள்ளிக் குழந்தைகள் இத் திட்டத்தின் மூலம் பயனடைந்தனர். இத் திட்டத்தினால் சுமார் 45,000 மகளிர்க்கு வேலை வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளது. எல்லா மாவட்டங்களுக்கும் தேவையான எல்லா துணிகளும் விநியோகம் செய்யப்பட்டு, துணி வெட்டும் வேலை முடிவடைந்துள்ளது. தைத்து முடிக்கப்பட்ட சீருடைகள் கல்வித் துறைக்கு அவ்வப்போது ஒப்படைக்கப்படுகின்றன. தையல் கூலி வழங்குவதற்கும், 11 தானியங்கி துணி வெட்டும் இயந்திரங்கள் மீதமுள்ள 11 மாவட்டங்களுக்கும் வாங்குவதற்கு அரசு 1986-87-ல் ரூ. 3.70 கோடி ஒதுக்கியது. 1985-86 ஆம் ஆண்டில் 8 துணி வெட்டும் இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு வழங்கப்பட்டு விட்டன. 1986-87 ஆம் ஆண்டில் 11 இயந்திரங்கள் கொள்முதல் செய்யப்பட்டு மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளன. ஆக மொத்தம் 19 துணி வெட்டும் இயந்திரங்கள் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் இத் திட்டத்தின் கீழ் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு மாவட்டத்திற்கும் சீருடைத் துணிகளை குறித்த காலத்தில் வெட்டுவதற்கு ஒரு மாஸ்டர் கட்டர் என்ற மாதம் கணக்கு பணியில் அமர்த்திட அரசு உத்திரவிட்டுள்ளது. இவர்களுக்கு மாதம் ஒன்றுக்கு ரூ. 1,000 சம்பளமாக வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியினை மேற்பார்வையிடும் பொறுப்பினை அந்தந்த மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையின்கீழ் ஒரு மாவட்ட அளவிலான குழுவினை அமைத்து கண்காணிக்க அரசு ஆணையிட்டுள்ளது. [illegible] சதவீதம் தையல் கூலி முன்பணமாக சீருடை தைக்கும் மகளிர்க்கு கொடுக்கப்படுகிறது.

**(2) மகளிர்க்கான மற்ற தொழிலியல் பயிற்சிகள்:**

2.10. தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் கணக்கியல் துறைகளில், மகளிர்க்கு சுமார் 120 தனியார் நிறுவனங்கள் மூலம் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இத் திட்டத்தின்கீழ் ஆண்டுக்கு ரூ. 6,000க்கு குறைவாக வருவாய் பெறும் குடும்பத்தில் உள்ள 16 முதல் 30 வயதிற்கு உட்பட்ட மகளிர் பயனடைகிறார்கள்.

**தட்டச்சு:**

2.11. இத்திட்டத்தில் பயன் பெறும் மகளிர்க்கு மொத்தம், ரூ. 150 உதவித் தொகையாக, தட்டச்சு கற்றுக் கொள்வதற்காக பத்து மாதங்களுக்கு அளிக்கப்படுகிறது. இத் திட்டத்தின்கீழ் ஆண்டுதோறும் ரூ. 1.56 லட்சம் செலவில் 1,000 ஏழைப் பெண்கள் பயன் பெறுகிறார்கள். இதுவரை, இத்திட்டத்தின் கீழ் 8,975 பெண்கள் பயன் அடைந்துள்ளார்கள்.

**சுருக்கெழுத்து:**

2.12. இத்திட்டத்தின்படி பயிற்சி பெறும் மகளிர்க்கு மொத்தம் ரூ. 220 உதவித் தொகையாக ஒருவருக்கு அளிக்கப்படுகிறது. ஆண்டுதோறும் ரூ. 1.10 இலட்சம் செலவில் சுமார் 500 மகளிர் பயனடைகிறார்கள். இதுவரை [illegible] மகளிர் இத்திட்டத்தின் கீழ் பயனடைந்துள்ளனர்.

**(3) உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்கள்.**

2.13. தையல், கம்பளி நெசவு, பனை ஓலைப்பாய் பின்னுதல், ஜமுக்காளம் நெய்தல், மூங்கில் மற்றும் மெழுகுவர்த்தி வேலைகளுக்கான உற்பத்தி மற்றும் பயிற்சி நிலையங்களை ஏற்படுத்தி கிராமம் மற்றும் நகர்ப்புறங்களில் வசிக்கும் 18 லிருந்து 35 வயதிற்குட்பட்ட மகளிர்க்கு ஒரு வருடத்திற்கு பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சியானது அவர்களுக்கு வேலை வாய்ப்பினை அளிப்பதோடு, அவர்கள் குடும்பத்தின் வருமானத்தினை அதிகரிக்கவும் வகை செய்கிறது. இப்பயிற்சியின்போது பயிற்சியாளர்களின் போக்குவரத்து மற்றும் சில்லறைச் செலவினங்களுக்காக மாதம் ஒன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ரூ. 50 உதவித் தொகையாக அளிக்கப்படுகிறது.



2.14. தற்போது 33 உற்பத்தி மற்றும் பயிற்சி கூடங்களும் 4 உற்பத்திக் கூடங்களும் சமூக நலத் துறையின் கீழ் இயங்கி வருகின்றன. ஒவ்வொரு ஆண்டும் சுமார் 900 பெண்கள் இவ்வுற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடங்களில் பயிற்சி பெறுகிறார்கள். மேற்குறிப்பிட்ட 33 உற்பத்தி மற்றும் பயிற்சிக் கூடங்களில் 4 தையல் பயிற்சிக் கூடங்கள், பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டப் பகுதிகளில் உள்ள மகளிர்க்கென்றே ஆரம்பிக்கப்பட்டு முறையே காவனூர் (வட ஆற்காடு மாவட்டம்), பாப்பநாயக்கன் பட்டி, முண்டகம்பாட்டு, சோளக்காடு எல்லக்கரை (சேலம் மாவட்டம்) ஆகிய இடங்களில் நடைபெற்று வருகின்றன.

**(4) அரசால் நடத்தப்படும் சேவை இல்லங்கள்:**

2.15. சமூக நலத் துறையின்கீழ் 18 முதல் 40 வயது வரையுள்ள ஏழை விதவைகள், ஆதாரவற்றப் பெண்கள், கணவனால் கைவிடப்பட்ட மகளிர் ஆகியோர் நலனுக்காக ஆறு சேவை இல்லங்கள், தாம்பரம், கடலூர், தஞ்சாவூர், திருநெல்வேலி, சேலம், திருப்பத்தூர் ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன. இச்சேவை இல்லங்களில் பத்தாவது வகுப்பு வரை கல்வி பயிலவும், தையல், ஆடைகள் தைத்தல், எம்பிராய்டரி, துணி பொம்மைகள் செய்தல், பாய் நெய்தல், முதலியவைகளில் பயிற்சி பெறவும் வசதிகள் செய்யப்பட்டுள்ளன. தையல், எம்பிராய்டரி பயிற்சிகளில் ஒரு வருடம் பயிற்சி முடித்த இல்லவாசிகள், அரசால் நடத்தப்படும் தொழில் நுட்பத் தேர்வு எழுதவும் அனுமதிக்கப்படுகிறார்கள்.

2.16. இச்சேவை இல்லங்களில் தங்குவோர் தங்களது இரண்டு குழந்தைகளுடன் அதிக பட்சமாக மூன்றாண்டுகள் தங்கலாம். மாதமொன்றிற்கு மகளிருக்கு தலா ரூ. 75-ம், குழந்தைக்கு தலா ரூ. 60-ம் ஒரு மாத உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. அத்துடன் ஆண்டொன்றுக்கு பெரியவர்களுக்கு தலா ரூ. 100-ம் குழந்தைகளுக்கு தலா ரூ. 60-ம் உடைச் செலவினத்திற்காக வழங்கப்படுகிறது. பாடப் புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்க ஆறு முதல் எட்டாம் வகுப்பு வரை பயிலுவோருக்கு ரூ. 40-ம் ஒன்பது மற்றும் பத்தாம் வகுப்புகளில் பயிலுவோருக்கு ரூ. 60-ம் ஆண்டிற்கு ஒரு முறை ஒவ்வொருவருக்கும் வழங்கப்படுகிறது. 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அனைத்துக் குழந்தைகளுக்கும் புத்தகங்கள் வாங்குவதற்கு ரூ. 15 ஆண்டிற்கு ஒருமுறை வழங்கப்படுகிறது.

2.17. 1981-82 ஆம் ஆண்டு முதல் கலைப்பாடங்களுடன் (Arts Subjects) (அதாவது பிளஸ் 1 மற்றும் பிளஸ் 2 வகுப்புகள்) தாம்பரம் சேவை இல்லத்தில் 30 மாணவியர் என்ற குறியிட்டெண்ணிக்கையுடன் மேல்நிலை வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. 1985-86 ஆம் ஆண்டில் இதே பாடங்களுடன் கூடிய மேல்நிலை வகுப்புகள் கடலூர் சேவை இல்லத்திலும் துவங்கப் பெற்றுள்ளது. இங்கு தங்கி படிக்கும் மாணவியருக்கு மாதாந்திர உதவித் தொகையாக ரூ. 75 வழங்கப்படுகிறது. இத்துடன் உடைச் செலவினமாக ரூ. 100-ம் புத்தகம் வாங்கும் தொகையாக ரூ. 100-ம் ஆண்டிற்கொருமுறை வழங்கப்படுகிறது.

2.18. தாம்பரம் சேவை இல்லத்தில் உடல் ஊனமுற்ற பெண்கள் மற்றும் குழந்தைகளுக்காக தனியாக ஒரு பிரிவும் இயங்கி வருகிறது. 30 பெண்களும் 20 குழந்தைகளும் இதில் சேர்த்துக் கொள்ளப்படுகிறார்கள்.

2.19. தாம்பரம், கடலூர், தஞ்சாவூர் ஆகிய மூன்று சேவை இல்லங்களில் சுருக்கெழுத்து, தட்டச்சு போன்ற செயலகப் பணிக் கல்வியும் அளிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு இல்லத்திலும் 20 பெண்கள் வரை அனுமதிக்கப்படுகிறார்கள். இந்த வாய்ப்பினை பயன்படுத்திக் கொள்வதன் மூலம் உயர் கல்வி படிக்க இயலாத பெண்கள் பயனடைகிறார்கள். இப்பயிற்சியில் ஓராண்டு முடித்தவர்கள் அரசு தொழில் நுட்பத் தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுகிறார்கள். இதன் மூலம் அவர்கள் தங்கள் வாழ்க்கைக்குத் தேவையான வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ள முடிகிறது. பயிற்சி காலத்தில் அவர்களுக்கு மாதம் ரூ. 20 உதவித் தொகையாக வழங்கப்படுகிறது. இச் சேவை இல்லங்களில் நடத்தப்பட்டு வரும் தையல் பிரிவில் பயிற்சி பெறும் மகளிர் ஒவ்வொருவருக்கும் 1985-86-லிருந்து அவர்களது ஓராண்டு பயிற்சிக்கால செலவினங்களை மேற்கொள்ள ஆண்டுக்கு ரூ. 250 வழங்கப்படுகிறது.

2.20. அரசு சேவை இல்லங்கள் மற்றும் அரசு மானியம் பெறும் தொண்டு நிறுவனங்களில் பத்தாவது வகுப்பு தேர்ச்சி பெற்ற 467 மகளிர், குடும்ப நலத் துறையால் காஞ்சிபுரம், கடலூர், நாகப்பட்டினம், திருநெல்வேலி மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து இடங்களில் 1983-84 ஆண்டிலிருந்து நடத்தப்படும் பல்நோக்கு நலப்பணியாளர் (மகளிர்) ஒன்றரை ஆண்டு காலப் பயிற்சிக்குத் தேர்வு செய்யப்பட்டுள்ளார்கள். ஒவ்வொரு ஆண்



டும் பிப்ரவரி மற்றும் ஆகஸ்டு மாதங்களில் துவங்கும் அப் பயிற்சிக்கு மாணவியர் தேர்வு செய்யப்படுகிறார்கள். 1985 ஜனவரி வரை 1½ வருடக் காலப் பயிற்சி முடித்த 25 மகளிர் தற்பொழுது பல்நோக்கு நலப் பணியாளர்களாகப் பணியாற்றுகிறார்கள்.

2.21. தாம்பரம் சேவை இல்லவாசிகளுக்கு சிறந்த பாதுகாப்பளிக்க சேவை இல்லத்தின் மேற்குப் பகுதியில் ரூ. 1.70 இலட்சம் செலவில் 1987-88 ஆம் ஆண்டில் சுற்றுச் சுவர் கட்ட அரசு தீர்மானித்துள்ளது.

(5) தனியார் தொண்டு நிறுவனங்கள் மூலம் சேவை இல்லங்கள் நடத்துதல் (மாநில அரசு உதவியுடன்):

2.22. அரசு நிதியுதவியுடன் கஸ்தூரிபா சேவிகாஸ்ரமத்தினால் காந்தி கிராமத்திலும், ஈரோட்டிலும், மற்றும் மதுரை சேவாஸ்ரமம், மதுரையிலும் முறையே ஜூன் 1969லும் ஜூலை 1981லும் நவம்பர் 1981லும் 3 சேவை இல்லங்கள் ஆரம்பிக்கப்பட்டன.

2.23. காந்தி கிராமத்திலுள்ள சேவை இல்லத்தில் உள்ள 120 உள்ளுறுப்பினர்களுக்கும் ஈரோடு மற்றும் மதுரையில் உள்ள தலா 40 உள்ளுறுப்பினர்களுக்கும் இரண்டாண்டுகளுக்குக் குறுகிய கால 10 ஆம் வகுப்பு கல்விப் பயிற்சி அளிக்கப்படுகிறது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் மாதமொன்றுக்கு அளித்து வரும் உதவித் தொகை ரூ. 50-ஐ ரூ. 75 ஆக உயர்த்த அரசு உத்தேசித்துள்ளது.

2.24. ஒவ்வொரு இல்லத்திற்கும் ஓர் உயர்நிலை ஆசிரியை மற்றும் ஒரு தமிழாசிரியை ஆகியோரின் ஊதியத்திற்கான செலவுத் தொகை மானியமாக அளிக்கப்படுகிறது.

2.25. சமூகத்தில் பின்தங்கிய பெண்களுக்கு தட்டச்சு, சுருக்கெழுத்து மற்றும் செயலகப் பயிற்சியுடன் வாழ்க்கைக் கல்வி அளிப்பதற்காக சென்னையிலுள்ள ஸ்திரி சேவா மந்திர் என்னும் நிறுவனத்திற்கு உதவித் தொகை மானியமாக வழங்கப்படுகிறது.

**(6) வருடாந்திர மானியம் :**

2.26. பல்வேறு சமூக நலப் பணிகளில் ஈடுபட்டுள்ள தனியார் நிறுவனமான இந்திய சமூக நல சங்கத்தின் தமிழ்நாடு கிளைக்கு வருடாந்திர மான்யமாக ரூ. 2,000 ஒவ்வொரு வருடமும் வழங்கப்படுகிறது.

**(7) ஆசிரியர் பயிற்சிப் பள்ளி:**

2.27. அரசு சேவை இல்லங்களிலும், அரசு மான்யம் பெற்று நடைபெறும் தொண்டு நிறுவனங்களிலும் பத்தாவது வகுப்பு தேர்ச்சி பெற்ற மாணவிகள் அவர்களது வேலை வாய்ப்பைக் கருதி இத்துறையால், 1966-67-ல் துவங்கப்பட்டு, தற்பொழுது 40 குறியிட்டெண்ணிக்கை கொண்ட ஒரு முது நிலைப் பிரிவும், 50 குறியிட்டெண்ணிக்கை கொண்ட ஒரு இள நிலைப் பிரிவும், பல்லாவரத்தில் நடைபெறும் ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர். இங்கு பயிலும் ஒவ்வொரு பயிற்சியாளருக்கும் உதவித் தொகையாக ரூபாய் 75 ஒவ்வொரு மாதமும் வழங்கப்படுகிறது. இப்பயிற்சி இரண்டு ஆண்டுகளுக்கு நடைபெறுகிறது. இப்பயிற்சியை வெற்றிகரமாக முடித்த பின்பு அவர்கள் இடைநிலை ஆசிரியர்களாக இத்துறையால் நடத்தப்படும் நிறுவனங்களிலும், கல்வித் துறையால் நடத்தப்படும் பள்ளிகளிலும் தனியார் பள்ளிகளிலும் மாநகராட்சி மற்றும் நகராட்சி பள்ளிகளிலும் பணியமர்த்தப்படுகிறார்கள். இதற்காக இவர்கள் தங்கள் பெயரை வேலை வாய்ப்பகத்தில் பதிவு செய்திருந்தால் மட்டும் போதும். அவர்களது வேலை வாய்ப்பிற்கான வயது வரம்பு 40 ஆக உயர்த்தப்பட்டுள்ளது.

**(8) அரசால் நடத்தப்படும் பணிபுரியும் பெண்கள் விடுதிகள்:**

2.28. நகரங்களிலும் மாநகரங்களிலும் வேலை வாய்ப்பு பெறுகின்ற பெண்கள் குறைந்த செலவில் பாதுகாப்பான இருப்பிடத்தை தேடும் பிரச்சினையை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பணிபுரியும் மகளிர்க்கு பாதுகாப்பும், வசதியும் செய்து கொடுக்கும்பொருட்டு பணிபுரியும் மகளிர் விடுதி அமைக்கும் திட்டத்தை அரசு பல நகரங்களில் செயல்படுத்தி வருகிறது. அவை சென்னை (கிண்டி), மதுரை, திருச்சிராப்பள்ளி, ஓசூர், மற்றும் தூத்துக்குடி ஆகிய 5 இடங்களில் செயல்படுகின்றன. அனைத்து விடுதிகளிலும் 50 பெண்கள் வீதம் அனுமதிக்கப்படுகிறார்கள். பொதுவாக இவ்வில்லங்களில் 250 பணி





புரியும் மகளிர் தங்கியுள்ளனர். இவ்விடுதியை நடத்துவதற்கென நிர்வாகப் பணியாளர்கள், அதாவது ஒரு கண்காணிப்பாளர், இரண்டு சமையலாளர்கள், ஒரு அலுவலக உதவியாளர், ஒரு காவலர் மற்றும் ஒரு துப்புரவுப பணியாளர் ஆகியவர்களின் ஊதியம், விடுதிக் கட்டிட வாடகை ஆகிய செலவினங்களை அரசு மேற்கொள்கிறது. உணவுச் செலவு, மின் கட்டணம் மற்றும் இதர செலவுகளைப் பணிபுரியும் மகளிரிடமிருந்து சம அளவில் பிடித்தம் செய்து ஈடு செய்யப்படுகிறது. விடுதியில் வாடகைத் தொகையும் விகிதாச்சார முறைப்படி பணி புரியும் மகளிரிடமிருந்து பிடித்தம் செய்யப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டில் கடலூரில் 30 நபர்களுக்காக பணி புரியும் பெண்கள் விடுதி ஒன்று ரூ. 0.58 இலட்சம் செலவில் அமைக்க ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

**(9) பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுதல்:**

2.29. தொண்டு நிறுவனங்கள், உள்ளாட்சி மன்றங்கள் மற்றும் கூட்டுறவு நிறுவனங்களால் பணிபுரியும் பெண்கள் விடுதி கட்டுதற்பொருட்டு, மத்திய அரசு கட்டிடம் கட்டுவதற்கான மொத்த மதிப்பீட்டில் 75 சதவிதம் மான்யம் வழங்க முன் வந்துள்ளது. மாநில அரசுக்கு விண்ணப்பித்தலின் பேரில் மொத்த மதிப்பீட்டில் 15 சதவிதம் அல்லது ரூ. 35,000 இவற்றில் எது குறைவோ அந்தத் தொகை மாநில அரசால் மேற்படி நிறுவனங்களுக்கு வழங்கப்படுகிறது. மத்திய மற்றும் மாநில அரசின் மான்யங்களால் பயன் பெறும் நிறுவனங்கள் மீதமுள்ள 10 சதவிதம் செலவினத்தை மேற்கொள்ளுகின்றன. இத்திட்டத்தின் மூலம் பயன் பெற விரும்பும் நிறுவனங்கள் கட்டிடம் கட்டுவதற்கான சொந்த நிலம் உள்ளவராகவும், இருத்தல் வேண்டும். கட்டிடம் கட்டுவதற்கு மாநகராட்சி, நகராட்சியின் முன் அனுமதி பெற வேண்டும். மற்ற எந்த அரசிடமிருந்தோ நிறுவனத்திடமிருந்தோ உதவித் தொகை பெறக் கூடாது.

2.30. இதுவரை 31 பணிபுரியும் மகளிர் விடுதிகள் மத்திய, மாநில அரசின் நிதி உதவியுடன் இம்மாநிலத்தில் கட்டப்பட்டு உள்ளன. 1986-87-ல் இதுபோல் விடுதிகள் கட்ட 7 நிறுவனங்களுக்கு நிதி உதவி அளிக்கப்பட்டுள்ளது.

(10) மகளிர் மன்றங்கள்:

2.31. சமுதாய மற்றும் பொருளாதார இடர்பாடுகளைக் களைந்தெரியும் பொருட்டு கிராமப்புற பெண்களைக் கொண்ட மகளிர் மன்றங்கள் உருவாக்கப்பட்டன. ஒவ்வொரு ஊராட்சி ஒன்றியத்திலும் 30 மகளிர் மன்றங்கள் வீதம் 11,520 மன்றங்கள் இருக்கின்றன. உணவைப் பாதுகாப்பது, சுகாதாரம், குழந்தைகள் நலம், ஊட்ட சத்துத் தயாரித்தல் தொடர்பான செயல்முறை விளக்கம், குழந்தைகள் கண்காட்சி, கல்வி தொடர்பான சுற்றுலா மற்றும் சமுதாயக் கல்விக்கான புத்தகங்கள் வழங்குதல் போன்ற பயிற்சி முகாம்களை மகளிர் மன்றங்கள் நடத்துகின்றன.

2.32. இம் மகளிர் மன்ற அமைப்பாளர்களின் மதிப்பூதியம் ஒரு காலாண்டிற்கு ரூ. 15 ஆக இருந்தது. ஆனால் இந்த அரசு 1987-88 ஆம் ஆண்டின் இரண்டாம் பகுதி திட்டத்தின் கீழ் ஒரு காலாண்டிற்கு ரூ. 30 ஆக உயர்த்த அங்கீகரித்துள்ளது.

2.33. மகளிர் மன்றங்கள் மூலமாக பொருளாதார நிலையை ஊக்குவித்தல்.—பலவிதமான பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ள மகளிர் மன்றங்கள் ஊக்குவிக்கப்படுகின்றன. ஆண்டு முழுவதும் சிறப்பாகச் செயல் புரியும் மகளிர் மன்றங்களுக்குப் பரிசுத் தொகை பணமாக வழங்கப்படுகிறது. சிறந்த மகளிர் மன்றங்கள் 3 வகையாகப் பிரிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு பரிசு வழங்கப்படுகிறது:—

| வகை. | பரிசுத் தொகையின் மதிப்பு. |
|---|---|
| (1) | (2) |
| அ | ரூ. 1,000 தலா. |
| ஆ | ரூ. 600 தலா. |
| இ | ரூ. 400 தலா. |

(11) வழிகாட்டி நிலையங்கள்:

2.34. வழிகாட்டி நிலையங்கள் முதலில் 1978-79 ஆம் ஆண்டில் 4 மாவட்டங்களிலும் பின்னர் 1983-84 ஆம் ஆண்டில் 4 மாவட்டங்களிலும் துவக்கப்பட்டன. இந்த வழிகாட்டி நிலையங்கள் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர், திருச்சிராப்பள்ளி, கன்னியாகுமரி, சேலம், திருநெல்வேலி ஆகிய





மாவட்டங்களில் தற்போது செயல்பட்டு வருகின்றன. இவ் வழிகாட்டி நிலையங்கள் ஏழை, விதவைகள், ஆதரவற்ற மற்றும் ஏழைப் பெண்களுக்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளின் மூலம் சுயவேலை வாய்ப்புக்காக கடனுதவி பெற்றுத் தருதல், தகுதிவாய்ந்த பெண்களின் குழந்தைகளை தனியார் நல நிறுவனங்களிலும், ஆதரவற்ற குழந்தைகள் விடுதிகளிலும் சேர்க்க உதவுதல், ஓய்வூதியம் மற்றும் வைப்புநிதி ஆகியவைகளைத் தாமதமின்றி பெற உதவுதல், ஆயுள் காப்பீட்டுக் கழகத்திலிருந்து பெறவேண்டிய நிலுவைகளைப் பெற உதவுதல் ஆகிய பணிகள் மேற்கொள்ளப்படுகின்றன. அநேக ஏழைப் பெண்கள் கல்வியறிவற்றவர்களாகவோ அல்லது குறைந்த கல்வி பயின்றவர்களாகவோ இருப்பதால் இவர்களது வருங்காலத்திற்கான தக்க அறிவுரை வழங்குவதுடன் இவர்களுக்கு சுய வேலைவாய்ப்பு ஏற்படுத்துவதில் தீவிர நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. இந்த வழிகாட்டி நிலையங்கள் 63,150 ஏழைப் பெண்களுக்கு வங்கி மூலம் கடனுதவி பெற்று, சிறுதொழில் செய்ய வழிவகை செய்துள்ளது. இத் திட்டத்தின் மூலம் தமிழகத்திலுள்ள எல்லா மாவட்டங்களிலும் சிற்றுண்டிக்கடை வைத்தல், பிளாஸ்டிக் கூடை பின்னுதல், பழம், காய்கறி, மீன் வியாபாரம் செய்தல், கட்பீஸ், அரிசி, எவர்சில்வர் பாத்திரம் விற்றல், தையல் கடை வைத்தல், மாவரைக்கும் இயந்திரம், சலவைக் கடை வைத்தல் போன்ற சிறுசிறு தொழில்கள் செய்ய தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள் மூலம் குறைந்த வட்டியில் கடன் பெற்றுத் தரப்படுகிறது.

2.35. சென்னை நகரைப் பொறுத்தவரை சிறு தொழில் செய்வதற்கான மனுக்கள் முன்னோடி வங்கிகளுக்குக் கடனுதவிக்காக அனுப்பப்படுகின்றன.

(12) விதவைகளின் குழந்தைகளுக்கு பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகம் இலவசமாக வழங்குதல்:

2.36. ரூ. 3,000-க்கும் கீழ் ஆண்டு வருமானம் உள்ள விதவைப் பெண்களின் குழந்தைகள் பயன்பெற பாடப் புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் இலவசமாக வழங்கும் திட்டம் 1978-79 ஆம் ஆண்டில் துவங்கப்பட்டது. குழந்தைகளுக்கு புத்தகமும், நோட்டுப் புத்தகமும் கீழ்க்கண்டவாறு வழங்கப்பட்டு வருகின்றன.

ஆரம்பப் பள்ளியில் பயிலும் குழந்தைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 15, நடுநிலைப் பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 30, உயர்நிலைப் பள்ளியில் பயிலும் பிள்ளைகளுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 90 வீதம் ஒவ்வொரு ஆண்டும் 3,200 குழந்தைகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2.37. மேல்நிலைக் கல்வி பயிலும் 1,000 பிள்ளைகளுக்கு பிள்ளை ஒன்றுக்கு ஆண்டொன்றுக்கு ரூ. 190 மதிப்புள்ள புத்தகம் மற்றும் நோட்டுப் புத்தகம் இலவசமாக வழங்குவதற்கு 1981-82 முதல் இத்திட்டம் விரிவாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு ஆண்டும் 1,000 பிள்ளைகள் பயன்பெறும் வகையில் இந்தத் திட்டம் தொடர்ந்து செயல்பட்டு வருகிறது.

2.38. பாடப் புத்தகங்கள் மற்றும் நோட்டுப் புத்தகங்கள் இலவசமாக வழங்கும் திட்டத்தினை, மறுமணம் புரிந்து கொண்ட விதவைகளின் குழந்தைகளுக்கும் விரிவுபடுத்த ஆணை வழங்கப்பட்டுள்ளது. ஏழை விதவைகளின் குழந்தைகளுக்கு அளிக்கப்படும் விகிதத்திலேயே மறுமணம் புரிந்த விதவைகளின் குழந்தைகளுக்கும் உதவி அளிக்கப்படும். மனுதாரின் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ. 5,000-க்கு மேல் இருத்தல் கூடாது. மனுதாரர் வேறு எந்த துறையின் மூலமும் நிதியுதவி பெற்றுக் கொண்டிருக்கக்கூடாது. 1987-88 ஆம் ஆண்டு முதல் இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

## (13) ஆதரவற்ற விதவைகளின் பெண்களுக்கு திருமணத்திற்கான உதவி:

2.39. ஆண்டிற்கு ரூ. 3,000-க்கும் குறைவாக வருமானமுள்ள விதவைப் பெண்கள் அவர்களுடைய பெண்களின் திருமணத்தை நடத்துவதற்காக நிதி உதவும் திட்டம் 1981-82 ஆம் ஆண்டு முதல் அரசால் உருவாக்கப்பட்டது. இத் திட்டத்திற்காக விதிக்கப்பட்டுள்ள திருமண வயது 18 முதல் 30 வரை ஆகும்.

2.40. ஒரு நபருக்கு ரூ. 1,000 வீதம் ஒவ்வொரு ஆண்டும் 1,015 ஆதரவற்ற விதவைகளுக்கு இந்தத் திட்டத்தின் கீழ் உதவி அளிக்கப்படுகிறது. தகுதிப் பெற்ற விதவையின் ஒரே





ஒரு மகள் மட்டுமே இந்த உதவி பெறுவதற்கு தகுதியுடையவர் ஆவர். சென்னை நகரத்தில் சமூக நல இயக்குநராலும் மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியாளராலும் இந்த உதவி பெற தகுதியுடையவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

## (14) அநாதைப் பெண்களின் திருமண நிதியுதவித் திட்டம்:

2.41. 1985-86 ஆம் ஆண்டு முதல் அநாதைப் பெண்களுக்கு உதவி செய்ய தமிழ்நாடு அரசு ஒரு தனித் திட்டத்தை செயல்படுத்துகிறது. அதன்படி 18 வயது முதல் 30 வரையிலான அநாதைப் பெண்களுக்கு அவர்களது ஆண்டு வருமானம் ரூ. 3,000-க்கும் குறைவாக இருந்தால் ஒருவருக்கு ரூ. 1,000 வீதம் திருமண நிதி உதவி அளிக்கப்படும். ஒரு குடும்பத்திலிருந்து ஒரு அநாதைப் பெண் மட்டுமே இவ்வுதவியைப் பெறத் தகுதியுடையவர். இத் திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு 1,000 அநாதைப் பெண்கள் பயன் பெறுவர்.

## (15) இலவச தையல் இயந்திரம் வழங்கும் திட்டம்:

2.42. 20 முதல் 40 வயது வரையுள்ள ஆதரவற்ற ஏழை விதவைப் பெண்டிர் மற்றும் சமுதாயத்திலும் பொருளாதாரத்திலும் நலிவுற்ற பெண்டிர் மற்றும் ஊனமுற்ற ஆண்கள், பெண்கள் ஆகியோர் தமது பிழைப்பிற்கு வழிதேடும் வகையில் பல திட்டங்களை அரசு தயாரித்து நடைமுறையில் கொண்டு வந்துள்ளது. அவற்றில் இலவசமாக தையல் இயந்திரம் வழங்கும் திட்டமும் ஒன்றாகும். இதன் மூலம் அவர்கள் பிறரை எதிர்பாராமல் தங்கள் வருவாயை தாங்களே சம்பாதிக்க உதவுகிறது.

## (16) விதவை மறுமணத் திட்டம்:

2.43. விதவையை மறுமணம் செய்து கொள்ளும் தம்பதியர் இருவர் பெயரிலும் கூட்டாக ரூ. 5,000-க்கு ஏழாண்டிற்குரிய தேசிய சேமிப்புப் பத்திரம் வழங்கி ஊக்குவிப்பதன் மூலம் கைம்பெண்களுக்குப் புதுவாழ்வு அளிப்பதே, 1975-76 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட இத்திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 18 முதல் 30 வயது வரையுள்ள ஆதரவற்ற விதவைப் பெண்கள் மட்டுமே இத்திட்டத்தின்கீழ் பயன்பெற தகுதி பெற்றவர்களாவர். விவாகரத்து பெற்ற மகளிரும் கணவனால் கைவிடப்பட்ட மகளிரும் இத்திட்டத்தின்கீழ் பயனடைய தகுதியற்றவர். 1987-88 ஆம் ஆண்டில் 100 தம்பதியர் இத்திட்டத்தின் கீழ் பயனடைய உள்ளனர்.

**17. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம்:**

2.44. தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுக் கழகம் ரூ. 1 கோடி அங்கீகரிக்கப்பட்ட மூலதனத்துடன் 1983 ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் தோற்றுவிக்கப்பட்டது. முழுவதுமாக அரசுக்குச் சொந்தமான இக்கழகத்தின் அனுமதிக்கப்பட்ட பங்கு மூலதனம் ரூ. 10 இலட்சங்களாகும். விவசாயம், கால்நடை பராமரிப்பு, கிராம மற்றும் குடிசைத் தொழில்கள் மற்றும் இது போன்ற இதர துறைகளிலும் மகளிர் முன்னேற்ற திட்டத்தைத் தயாரிப்பதையும், ஊக்குவிப்பதையும், செயல்படுத்துவதையும் இக்கழகம் முக்கிய நோக்கமாகக் கொண்டுள்ளது. மேற்கண்ட முன்னேற்றத் திட்டங்கள் மகளிர் வாழ்க்கைத் திறன் உயர்வதிலும் சிறப்பான வாழ்க்கை வாழ்வதையும் முக்கியக் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. நகர்ப்புறம் மற்றும் கிராமப் புறங்களிலுள்ள மகளிர் தொழில் முனைவோர்களை ஊக்குவிப்பதற்காக இக்கழகம் பல்வேறு பயிற்சி முகாம்களை நடத்தியுள்ளது. தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் மொத்தம் 17 லட்சம் ரூபாய் செலவில் மதுரை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் தலா நூறு பெண்களுக்குக் கறவை மாடுகள் வழங்கும் திட்டம் இக்கழகத்தினால் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டுள்ளது. இதுபோலவே தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தின் கீழ் மொத்தம் 16 இலட்சம் ரூபாய் செலவில் மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்களில் 200 பெண்கள் பயன்பெறும் வகையில் ஆடுகள் வழங்கும் திட்டமும் வெற்றிகரமாக இக்கழகத்தினால் செயல்படுத்தப்பட்டுள்ளது.

2.45. இக்கழகம் தாம்பரத்தில் உள்ள சேவை இல்லத்தில் கீழ்க்கண்ட 4 பயிற்சி மற்றும் உற்பத்திப் பிரிவுகளை அமைத்துள்ளது. தேர்ந்தெடுக்கப்பட்ட பெண்களுக்கான பயிற்சி இந்நான்கு பிரிவுகளிலும் ஆகஸ்ட் 1986-ல் முடிவடைந்தது. இந்நான்கு பிரிவுகளிலும் வெற்றிகரமாக பயிற்சியை முடித்த பெண்கள் அந்தந்த பிரிவுகளிலேயே நிரந்தரமான பணியாளர்களாக 1—9—1986 முதல் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.



| பிரிவின் பெயர். | பலன் பெறும் பெண்கள். | திட்டத்தின் மொத்த மதிப்பு. |
|---|---|---|
| (1) | (2) | (3) (ரூபாய் இலட்சங்களில்.) |
| 1. நவீன ஆப்செட் அச்சகம் .. | 75 | 24.00 |
| 2. கல்வி உபகரணங்கள் மற்றும் மரச் சாமான் பிரிவு. | 50 | 13.24 |
| 3. திரை அச்சு மற்றும் பிளாஸ்டிக் வார்ப்புகள் பிரிவு. | 23 | 5.40 |
| 4. ஒலி பெருக்கிக் கருவிகள் மற்றும் இடைநிலை அலை வரிசை மாற்றுக் கருவிகள் தயாரிப்புப் பிரிவு. | 16 | 5.94 |

மேற்கண்ட பிரிவுகள் அனைத்தும் வெற்றிகரமாக இயங்கி அதன் மூலம் சமுதாயத்தின் அடித்தளத்தில் உள்ள மொத்தம் 164 பெண்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பினை அளித்து வருகின்றன.

2.46. இக்கழகம் மத்திய அரசின் மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தினை தமிழ்நாட்டில் பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 1983-84 ஆம் ஆண்டு முதற்கொண்டு ஊரக வளர்ச்சித் துறையின் கூட்டுறவுடன் செயல்படுத்தி வருகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் பெரியார் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் 1986-87 ஆம் ஆண்டு முடிய கீழ்க்கண்டபடி முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது:—

| மாவட்டத்தின் பெயர். | 1986—87 வரையில் ஏற்படுத்தப் பட்ட பிரிவுகளின் எண்ணிக்கை. | மொத்தம் பலன் அடைந்த பெண்கள். |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| பெரியார் மாவட்டம் .. | 275 | 5,110 |
| தர்மபுரி மாவட்டம் .. | 345 | 6,424 |
| மொத்தம் .. | 620 | 11,534 |

இந்த மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் 1986-87 ஆம் ஆண்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கும் விஸ்தரிக்கப்பட்டுள்ளது. திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் இத்திட்டத்தின்கீழ் 150 பிரிவுகள் அமைத்து அதன் மூலம் மூன்றாயிரம் பெண்கள் பலன் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்த மகளிர் மற்றும் குழந்தைகள் வளர்ச்சி திட்டத்தை இக்கழகம் ஊரக வளர்ச்சித் துறையினரின் முழு ஒத்துழைப்புடன் மிகவும் வெற்றிகரமாக செயல்படுத்தப்படுவதை மத்திய மற்றும் மாநில அரசுகளும் இதர முக்கியஸ்தர்களும் வெகுவாக பாராட்டியுள்ளனர். இது தவிர இக்கழகம் கதர் மற்றும் கிராம கைத்தொழில் வாரியத்தின் உதவியுடன் இயங்கி வரும் 16 சர்வோதய சங்கங்களின் மூலம் மொத்தம் ரூ. 163 இலட்சங்கள் செலவில் 1,400 கிராம ஏழைப் பெண்களுக்கு (இவர்களில் 79 சத விதம் ஆதி திராவிடர் வகுப்பைச் சார்ந்தவர்கள்) வேலை வாய்ப்பளிக்கும் ஒரு திட்டத்தையும் செயல்படுத்தி வருகிறது.

2.47. இக்கழகம் தமிழகத்தின் மகளிர் நிலை குறித்து ஒரு ஆராய்ச்சிச் சிறப்புத் திட்டத்தை மேற்கொண்டு "தமிழகத்தின் பெண்கள் நிலை—ஒரு கண்ணோட்டம்" என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டுள்ளது. இந்தத் திட்டத்திற்காக "யூனிசெப்" நிறுவனத்தாரிடமிருந்தும், கொடைக்கானல் அன்னை தெரசா பல்கலைக் கழகத்திடமிருந்தும், நிதி உதவி பெறப்பட்டுள்ளது. இத்தகைய திட்டம் இந்த நாட்டிலேயே முதன்மையானது என்று எல்லோராலும் ஒருமனதாக பாராட்டப்பட்டுள்ளது.

2.48. தமிழ்நாட்டில் காமராஜர் மாவட்டத்திலுள்ள சிவகாசி மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் சிறுவர்களை வேலைக்கு அனுப்பும் பழக்கம் பெருமளவில் உள்ளது. இதனை ஓரளவிற்கேனும் குறைக்கும் நோக்கத்துடன் சிவகாசியில் 150 கிராமப்புற ஏழை பெண்களுக்கு பலன் அளிக்கும் வண்ணம் ஒரு நவீன ஆப்செட் அச்சகத்தை நிறுவ ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (இதில் 75 பெண்கள் சிறுவர் வேலை ஆட்களின் குடும்பங்களிலிருந்தும் மற்றும் 75 ஊனமுற்ற பெண்களும்) இத்திட்டத்தின் மொத்த செலவு ரூ. 53 இலட்சமாகும். இதில் மத்திய அரசிடமிருந்து ரூ. 41 இலட்சம் மானியமாகவும், மாநில அரசிடமிருந்து நிலத்திற்காகவும், கட்டிடத்திற்காகவும் ரூ. 12 இலட்சம் கடனாகவும் நிதி உதவி பெறப்படுகிறது. இதற்கான பெண்



பயிற்சியாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு 1—9—1986 முதல் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேற்கண்ட அச்சகத்திற்கு ரூ. 10 இலட்சம் செலவில் கட்டிடம் அமைக்கும் பணி மாநில அரசு நிறுவனமான 'டான்சி'யிடம் வழங்கப்பட்டுள்ளது. ஒரு வருட பயிற்சிக்குப் பிறகு 1987 ஆம் ஆண்டு இறுதியில் இவ்வச்சகம் நிரந்தர உற்பத்தி நிலையை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

2.49. 1986-87-ல் இக்கழகம் ஊராட்சி ஒன்றியங்களிலும் நகராட்சிகளிலும் உள்ள 1,700 பாலர் பள்ளிகளுக்கான கல்வி உபகரணங்கள் (விளையாட்டு சாதனங்கள்) உற்பத்தி செய்து வழங்கும் பணியை மேற்கொண்டுள்ளது. இதே போல ஊராட்சி ஒன்றியங்களிலும், நகராட்சிகளிலுமுள்ள 2,700 பாலர் பள்ளிகளுக்கு கல்வி வரைப்படங்கள், ஸ்லேட்டுகள், புத்தகங்கள் ஆகியவற்றை வழங்கும் பணிகளையும் மேற்கொண்டுள்ளது.

2.50. இக்கழகம் பெண்களுக்கு வேலை வாய்ப்பும், நிரந்தர வருமானமும் அளிக்கும் பொருட்டு கீழ்க்கண்ட திட்டங்களை செயல்படுத்த ஏற்பாடு செய்து வருகிறது:—

| திட்டங்களின் விவரம். | பலன் பெறும் பெண்களின் எண்ணிக்கை. | திட்டங்களுக்கான மொத்த செலவு. |
| --- | --- | --- |
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சங்களில்). |
| தர்மபுரி மாவட்டத்தில் சாத்தூரிலுள்ள விவசாய நீர்ப்பாசன முன்னேற்றத் திட்டம் (ஸ்விஸ் நாட்டு நிறுவன நிதி உதவி மூலம் செயல்படுத்தப் பட்டுள்ளது). | 1,000 | 85.72 |
| பனை நார் மூலம் சுத்தம் செய்வதற்கான பிரஷ்கள் தயாரிக்கும் பிரிவு. | 40 | 0.56 (இத்திட்டம் ஏற்கெனவே அனுமதிக்கப்பட்டுள்ளது). |

[1987 ஏப்ரல் 21

| திட்டங்களின் விவரம். (1) | பலன் பெறும் பெண்களின் எண்ணிக்கை. (2) | திட்டங்களுக்கான மொத்த செலவு. (3) (ரூபாய் இலட்சங்களில்). |
|---|---|---|
| தேர்ந்தெடுக்கப்பட்ட 5 மாவட்டங்களில் மொத்தம் 1,500 பெண்களுக்கு ஆடுகள் வழங்கும் திட்டம். | 1,500 | 103.16 |
| தமிழ்நாடு மின் அணு கழகத்தின் கூட்டுறவுடன் பெண்களுக்கு பயிற்சி மற்றும் வேலை வாய்ப்பு அளிக்கும் திட்டங்கள். | 290 | 29.70 |
| கதர் மற்றும் கிராம தொழில் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டுள்ள 50 நூற்பு மற்றும் நெசவு பிரிவுகள். | 1,164 | 145.05 |

1987-88-ல் மேற்கண்ட திட்டங்கள் அனுமதிக்கப்பட்டு அதற்கான நிதி ஆதாரங்கள் பெறப்பட்டவுடன் இத்திட்டங்கள் கழகத்தினால் செயல்படுத்தப்படும்.

## அத்தியாயம் 3.

## குழந்தைகள் நலம்.

### மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம்.

3.1. குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து, கல்வி மற்றும் சுகாதார பராமரிப்பு வழங்குவதற்கு இத்துறையில் பெரும்பாலான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் சமூக நலத் துறையின் மூலம் 2 பிளஸ் முதல் 4 பிளஸ் வயது வரையுள்ள குழந்தைகளுக்கு சத்துணவு வழங்கப்படுகிறது. முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தின்கீழ் இணைந்து செயல்படும் ஒருங்கிணைந்த குழந்தைகள் நல வளர்ச்சித் திட்டத்தின் மூலம் எல்லா குழந்தைகளின் சுகாதாரம் பராமரிக்கப்பட்டு, அவர்களுக்கு ஊட்டச் சத்தும் அளிக்கப்பட்டு வருகிறது.



1987 ஏப்ரல் 21]

3.2. தமிழகம் பல வகைகளில் முன்னோடியாகத் திகழ்ந்த பெருமை வாய்ந்தது. அதில் ஒன்றாக மாண்புமிகு முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டம் தமிழ் நாட்டில் 1—7—1982 முதல் கிராமப்புறங்களிலும், 15—9—1982 முதல் நகர்ப்புறங் களிலும் 2 வயது முதல் 4 * வயது வரையுள்ள குழந்தைகளுக்கு ஊட்டச்சத்து குறைவு ஏற்படாமல் தடுப்பதற்காகவும், முன் பருவக் கல்வி அளிப்பதற்காகவும் துவக்கப்பட்டது. இது ஒரு எடுத்துக்காட்டாக முன் மாதிரியாக விளங்குகிறது. தற்போது, கிராமப்புறங்களில் 23,081 குழந்தைகள் நல மையங்களும், நகர்ப் புறத்தில் 5,044 குழந்தைகள் நல மையங்களும் நடைபெற்று வருகின்றன. இதில் 216 குழந்தைகள் நல மையங்கள் மலைவாழ் பகுதியினர் நலனுக்காக நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தில் 2 * வயது முதல் 4 * வயது வரையுள்ள பயன் பெறும் குழந்தைகளின் எண்ணிக்கை 23.30 இலட்சங்களாகும். இத்திட்டம் பல வெளிநாடு மற்றும் வெளி மாநிலத்தவர்களின் உள்ளத்தை கவர்ந்துள்ளது.

3.3. குழந்தைகளுக்கு பயன் அளிப்பதுடன் ஆயிரக்கணக் கான வேலையற்ற ஏழை மகளிர் பலர் இத்திட்டத்தின் மூலமாக வேலை பெற்றதனால், இத்திட்டம் அவர்களுக்கோர் வரப்பிரசாத மாக அமைந்துள்ளது. குழந்தைகள் நல அமைப்பாளர் களாக பணியமர்த்தப் பெற்றுள்ள 28,125 மகளிரில் தாழ்த்தப் பட்ட மற்றும் பழங்குடியினர் 5,160 பேரும், விதவைகள் 976 பேரும், ஆதரவற்ற மகளிர் 782 பேரும் உள்ளனர். அது போல குழந்தைகள் நல உதவியாளர்களாக, அமர்த்தப் பெற்ற 56,250 மகளிரில் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் மற்றும் பழங் குடியினர் 11,120 பேரும் விதவைகள் 8,305 பேரும் ஆதர வற்றோர் 2,025 பேரும் அடங்குவர். ஆக, இத்திட்டத்தில் 84,375 மகளிர், குழந்தைகள் நல அமைப்பாளர்களாகவும், குழந்தைகள் நல உதவியாளர்களாகவும் பணியமர்த்தப் பெற்றுள்ளனர். இவ்வளவு பெரிய எண்ணிக்கை வேலை வாய்ப்பை வேறு எந்தத் திட்டத்திலும் பெறவில்லை.

3.4. இத்தன்னிகரில்லாத் திட்டம் சமுதாயத்திற்கு (1) ஊட்டச்சத்து, (2) முன் பருவக் கல்வி, (3) சுகாதார பாதுகாப்பு, (4) பாகுபாடு அற்ற மன நிலை உருவாக்குதல் ஆகிய நான்கு நிலைகளில் போற்றுதற்குரிய பணியைச் செய்து வருகிறது.

[1987 ஏப்ரல் 21

## சத்துணவுத் திட்டம்.

3.5. இத் திட்டத்தின் கீழ் குழந்தைகளுக்கு கீழ்க்கண்ட அளவு பொருள்களைக் கொண்டு தலத்திலேயே தயாரித்த சூடான உணவு அளிக்கப்படுகிறது.

1. அரிசி—80 கிராம்.
2. பருப்பு—10 கிராம்.
3. எண்ணெய்—3 கிராம்.
4. காய்கறி மற்றும் தாளிதம்—50 கிராம்,

3.6. ஒரு குழந்தைக்கு ஒரு வேளை உணவுக்காகும் செலவு 44 பைசா. இச்சத்துணவு மூலமாக ஒவ்வொரு குழந்தைக்கும் சுமார் 411 கலோரிகள் தினந்தோறும் கிடைக்கும் என ஊட்டச் சத்து வல்லுநர்களால் கணக்கிடப்பட்டுள்ளது. குழந்தைகளுக்கு சுகாதாரமான முறையில் சமைக்கப்பட்டு சூடாகவும், மணமுள்ளதாகவும் கூடிய சத்துணவு தினந்தோறும் வழங்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மையத்திற்கும் ரூ. 2,000 மதிப்புள்ள சமையல் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. எரி பொருள்களுக்கான செலவை மீதப்படுத்த குழந்தைகள் நல அமைப்பாளர்கள் வைக்கோல் பெட்டியை உபயோகிப்பது குறித்து அறிவுரைகளுடன் பயிற்சியும் அளிக்கப்பட்டுள்ளார்கள்.

## முன் பருவக் கல்வி.

3.7. அனைத்து சத்துணவு மையங்களையும், நர்சரிப் பள்ளிகளாக மாற்ற அரசு தீர்மானித்துள்ளது. அதன்படி, இதுவரை 19,140 சத்துணவு மையங்கள் நர்சரி பள்ளிகளாக மாற்றப்பட்டு விட்டன. இந்த 19,140 மையங்களுக்கும் தேவையான கல்வி உபகரணங்கள், வரைபடங்கள், புத்தகங்கள் மற்றும் விளையாட்டு தளவாடங்கள் முதலியன வழங்கப்பட்டுள்ளன. இந்த மையங்களில் உள்ள குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு சிறப்பு நர்சரி பயிற்சியளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள எல்லா குழந்தைகள் நல மையங்களுமே 1987-88 ஆம் ஆண்டில் நர்சரிப் பள்ளிகளாக மாற்றப்படவுள்ளன. இக்குழந்தைகள் நல அமைப்பாளர்களுக்கு சிறப்பு நர்சரி பயிற்சி அளித்தவுடன் இம்மையங்களுக்கு கல்வி உபகரணங்கள் போன்றவைகள் வழங்கப்படும்.



1987 ஏப்ரல் 21]

## உடல் நலம் பேணுதல்.

3.8. "நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பதற்கு வழி காட்டியாக மருந்துகள், வைட்டமின் மாத்திரைகள் கொடுப்பதன் மூலமும், தடுப்பூசி மற்றும் உடல் நலம் சரிப்பார்த்தல் மூலமும், குழந்தைகளின் உடல் நலம் பேணப்படுகிறது. நகர்ப்புறங்களிலுள்ள ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டங்களில் இதற்காகத் தனியே மருத்துவர்கள் நியமிக்கப்பட்டுள்ளனர். கிராமப்புறங்களிலும் நகராட்சிகளிலும் பொது சுகாதாரத் துறையினர் குழந்தைகளின் உடல் நலத்தை பேணுகின்றனர். குழந்தைகளின் உடல் நலத்தை கண்காணிப்பதற்காக அவர்களின் எடைகள் தவறாமல் எடுக்கப்பட்டு அதற்கென்று உள்ள சுகாதார அட்டைகளில் பதிவு செய்யப்படுகின்றன. "யூனிசெப்" உதவியுடன் அனைத்து குழந்தைகள் நல மையங்களுக்கும் எடை பார்க்கும் கருவிகள் வழங்கப்பட்டுள்ளன.

3.9. கிராமப் புறங்களிலுள்ள குழந்தைகளுக்கு பற்களை பாதுகாக்கும் பொருட்டு, 14—11—1982 முதல் பற்பொடி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது. அனைத்து குழந்தைகளுக்கும் தடுப்பூசி போடும் முகாம், தர்மபுரி, பெரியார், கோயம்புத்தூர் மற்றும் மதுரை மாவட்டங்களில் ஆகஸ்ட் 1985-ல் வெற்றிகரமாக நடத்தப்பட்டது. இதைப் போன்ற முகாம்கள் மற்ற மாவட்டங்களிலும் படிப்படியாக நடத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதன் மூலம் வளரும் குழந்தைகள் இந்நாட்டின் முதுகெலும்பு என்பதற்கு சான்றாக எதிர்கால சமுதாயம் உருவாகும்.

## முதியோர்க்கான சத்துணவு.

3.10. இத்திட்டம், 15—1—1983 முதல் முதலமைச்சர் சத்துணவுத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஒவ்வொருவருக்கும் நாள்தோறும் 200 கிராம் அரிசி, 15 கிராம் பருப்பு, 3 கிராம் எண்ணெய், 50 கிராம் காய்கறி அடங்கிய சத்துணவு வழங்கப்படுகிறது. அவர்கள், தங்களது உணவை, முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு தொந்தரவு இல்லாத வகையில் வீடுகளுக்கு எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். தற்போது 2,03,000 நபர்கள் குழந்தைகள் நல மையங்களிலிருந்து சத்துணவு பெறுகின்றனர்.

3.11. 1—1—1984 முதல் அரசு இத்திட்டத்தை, முன்னாள் படைவீரர் நல நிதியிடமிருந்து ஓய்வூதியம் பெறும் முன்னாள் படை வீரர்கட்கும் அவர் தம் விதவையர்கட்கும் நீட்டித்துள்ளது. தற்போது இத்திட்டத்தின் கீழ் 102 நபர்கள் சத்துணவு மையங்கள் மூலம் சத்துணவு பெற்று வருகிறார்கள்.

3.12. கிராமப்புறங்களில் உள்ள குழந்தைகள் நல மையங்கள் குழந்தைகள் முன்னேற்றத்திற்கென சத்துணவு, முன்பள்ளிக் கல்வி மற்றும் சுகாதார பாதுகாப்பு அளித்து வருகிறது.

தாய்மார்களுக்கு குழந்தைகள் பாதுகாப்பு மற்றும் சத்துணவு பற்றிய சமுதாயக் கல்வியினை போதிக்கும் மையங்களாக மேற்படி குழந்தைகள் நல மையங்கள் செயல்பட்டு வருகின்றன. அவர்கள் பங்கேற்கும் வகையில் கிராம அளவிலான குழுக்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இத்திட்டத்தின் தீவிர பணியினால் ஆரம்பப் பள்ளியில் முதல் வகுப்பில் சேரும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. மேலும் பாதியில் பள்ளிப் படிப்பை நிறுத்தும் குழந்தைகளின் எண்ணிக்கை பெருமளவு குறைந்துள்ளது.

**ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம்.**

3.13. சமுதாயத்தில் நலிவுற்ற வகுப்பினைச் சார்ந்த குழந்தைகளுக்கும் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் செறிவு மிகுந்த பணிகள் ஒருங்கிணைந்த வடிவில் வழங்குகிற அளவில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் உருவாக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் குழந்தை கருவிலிருக்கும்போதே தொடங்கி அது பிறந்து ஆறு வயது ஆகும் வரை அக்குழந்தையின் ஊட்டச் சத்து தேவைகள், சுகாதாரப் பராமரிப்பு மற்றும் மன வளர்ச்சி ஆகியவற்றிற்கு தொடர்ந்து உதவி செய்கிறது. இத்திட்டம் முதலில் சென்னை, தளி மற்றும் நிலக்கோட்டை ஆகிய இடங்களில் 1975-76 ஆம் ஆண்டில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்திட்டம் 1982-83-ல் மேலும் 27 இடங்களிலும் 1983-84-ல் மேலும் 9 இடங்களிலும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது. தற்சமயம் சென்னை, மதுரை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி, வேலூர், திருவொற்றியூர், ஈரோடு, திருப்பூர், திண்டுக்கல், காஞ்சிபுரம், ஆலந்தூர், சேலம், தஞ்சாவூர், கும்பகோணம், திருநெல்வேலி, தூத்துக்குடி, நாகர்கோவில், இராஜபாளையம், கடலூர் ஆகிய நகர்ப்புறப் பகுதிகளிலும், அண்ணா மாவட்டத்தி

1987 ஏப்ரல் 21]

உள்ள நிலக்கோட்டை, தர்மபுரி மாவட்டத்திலுள்ள தளி ஆகிய கிராமப்புறப் பகுதிகளிலும் மற்றும் 1985-86 ஆம் ஆண்டு புதுக்கோட்டை மாவட்டத்தில் 13 ஊரகத் திட்டங்களிலும் ஆக 52 திட்டப் பிரிவுகள் உள்ளன.

3.14. ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் ஊட்டச்சத்து குறைவு மற்றும் அதன் தொடர்பால் ஏற்படும் குறைபாடுகளை எதிர்த்துப் போராட கீழ்க்கண்ட செயல் பணிகள் மூலம் முயற்சி செய்கிறது:—

1. துணை ஊட்டச் சத்து,
2. பள்ளி முன்னிலைக் கல்வி,
3. மருத்துவச் சோதனை;
4. நோய்த் தடுப்பு;
5. மேல்மருத்துவச் சோதனை;
6. சமுதாயத்தில் ஊட்டச்சத்து மற்றும் சுகாதாரக் கல்வி.

தமிழ் நாட்டில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் இயங்கிவரும் 39 திட்டங்களில் 6 மாதத்தில் இருந்து 2 வயதுக்குள் உள்ள குழந்தைகளுக்கும், கர்ப்பிணி மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் (கர்ப்பக் காலத்தின் இறுதி மூன்று மாதங்களும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 6 மாதமும்) கேர் மாவு, சாலட் ஆயில், உடைந்த கோதுமை போன்றவைகள் கேர் நிறுவனம் நிறுத்திய உடன், குழந்தைகள், கர்ப்பிணிகள், கேர் நிறுவனம் நிறுத்திய உடன், குழந்தைகள், கர்ப்பிணிகள், மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு கோதுமையினால் செய்யப்பட்ட இணை உணவான 'சத்து' மத்திய அரசின் உதவியுடன் நடக்கும் கோதுமை ஊட்ட உணவுத் திட்டத்தின் கீழ், பிப்ரவரித் திங்கள் 1987 முதல் தமிழ் நாட்டில் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டது. மேற்கண்ட 'சத்து'-வில் அடங்கி உள்ள பொருட்கள் கோதுமை 60 சதவீதம். பொட்டுக் கடலை 15 சதவீதம், நாட்டுச் சர்க்கரை 25 சதவீதம் ஆகும். பயனடையும் ஒவ்வொரு நபருக்கும் நாள் ஒன்றுக்கு 80 கிராம் வீதம் ஒரு ஆண்டில் 300 நாட்களுக்கு வழங்கப்படுகிறது. இதில், 365 கலோரியும், 10 கிராம் புரோட்டீனும் அடங்கியுள்ளது. இதை தயாரிக்க நாள் ஒன்றுக்கு குழந்தை ஒன்றுக்கு 50 பைசா வீதம் செலவு செய்யப்படுகின்றது. இத்

திட்டத்தில் 6 மாதம் முதல் 2 வயது வரை உள்ள 80,000 குழந்தைகளும், 80,000 கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களும் பயன் அடைகின்றார்கள். தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டத்தில் நடைமுறையிலுள்ள சத்துணவு, மேற்கூறிய இனங்களுக்கும், புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள 13 ஊரகத் திட்டங்களிலும் செயல்படுத்தப்படும்.

3.15. குழந்தை நல அமைப்பாளர்களுக்கு அவ்வப்போது விரிவான வழிகாட்டியாக இருக்கக்கூடிய அளவில் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சிப் பணிகள் திட்ட செய்தி அறிவிப்பு வெளியீடு ஒன்று 'பிள்ளைக்கனியமுதே' என்ற தலைப்பில் வெளியிடப்பட்டு வருகிறது. 1987-88 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டப் பிரிவுகளுக்கு ரூ. 449.10 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது தவிர மேலும் 13 திட்டங்கள் (12 கிராமப்புற திட்டங்கள், ஒரு பழங்குடியினர் திட்டம்) 1986-87 ஆம் ஆண்டில் இந்திய அரசால் அனுமதிக்கப்பட்டுள்ளது. இவைகள் விரைவில் ஆரம்பிக்கப்பட உள்ளன.

**சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டத்தின் கீழ் உலக வங்கி உதவியுடன் தாய் சேய் நலப் பணிகள் திட்டம்**

3.16. ஆறு மாதம் முதல் 5 வயது வரையுள்ள குழந்தைகளுக்கும், கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கும் சேவை புரியும் பொருட்டு உலக வங்கியின் உதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட ஓர் ஒருங்கிணைந்த திட்டம்தான் சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம். தாய் சேய் நலப் பணித் திட்டத்தின் கீழ் துணை ஊட்டச் சத்து, மருத்துவ சோதனை, நோய்த்தடுப்பு, மேல் மருத்துவ சோதனை சுகாதார மற்றும் ஊட்டச்சத்துக் கல்வி மற்றும் முறைசாராக் கல்வி ஆகிய பல்வேறு பணிகள் அடங்கியுள்ளன. தற்பொழுது, இத்திட்டத்தின்கீழ் சென்னை மாநகரத்திற்குள் 123 குழந்தைகள் நல மையங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு மையத்திலும் ஒரு குழந்தை நல அமைப்பாளரும், இரண்டு குழந்தை நல உதவியாளர்களும் பணிபுரிகின்றனர். மேலும் நடமாடும் மருத்துவ நிலையங்கள் மூலம் 3 மருத்துவ அலுவலர்கள் தம் உதவி மருத்துவ பணியாளர்களுடன் மருத்துவப் பணிகளை நடத்தி வருகின்றனர். 2 வயதுக்





குட்பட்ட குழந்தைகள் மற்றும் கருவுற்ற மகளிர் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு 'சத்து' உணவுப் பொருட்களைக் கொண்டும். இதர குழந்தைகளுக்கு முதலமைச்சரின் சத்துணவுத் திட்டத்தின் கீழ் ஊட்டச் சத்துணவு அளிக்கப்படுகிறது.

சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் 17-ன் கீழ் 59 குழந்தைகள் நல நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு நடைபெற்று வருகின்றன. சென்னை பெருநகர் வளர்ச்சித் திட்டம் II-ன் கணக்கிற்கென 115 சத்துணவுக் கூடங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அக்கூடங்களுக்கு மேம்பாடுகள் செய்வதற்கென அரசு ரூ. 19.04 லட்சங்கள் அனுமதித்துள்ளது.

**தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம்.**

3.17. உலக வங்கி உதவியுடன் தமிழ்நாடு ஒருங்கிணைந்த ஊட்டச் சத்துத் திட்டம் கொட்டாம்பட்டி வட்டாரத்தில் சோதனை முறையில் 1980 ஆம் ஆண்டு நவம்பர் திங்களில் செயல்பாட்டில் தொடங்கியது. படிப்படியாக, இத்திட்டம் மதுரை, அண்ணா, பசும்பொன் முத்துராமலிங்கம், காமராசர், இராமநாதபுரம், புதுக்கோட்டை, திருநெல்வேலி, வட ஆற்காடு, செங்கல்பட்டு ஆகிய ஒன்பது மாவட்டங்களுக்கு விரிவாக்கப்பட்டுள்ளது. 30—6—1986 அன்று முடிவடைய வேண்டிய இத்திட்டத்திற்கான காலம் உலக வங்கியின் உதவியால் 31—3—1988 வரை நீட்டிக்கப்பட்டுள்ளது.

3.18. இத்திட்டத்திற்கு ஆகும் மொத்த ஒதுக்கீடு ரூ. 55.78 கோடியாகும். இத்திட்டத்தின் குறிக்கோள் மக்கள் நலம், மேலும் ஊட்டச்சத்து நிலையினை மேம்படுத்த அரசு எடுத்து வரும் முயற்சிகளை மேலும் திறன் படைத்ததாகச் செய்து அதன் மூலம் பயனை அதிகப்படுத்துவதாகும். ஊட்டச்சத்துக் குறைவினால் அதிகமாக பாதிப்பு ஏற்படக்கூடிய 6 மாதம் முதல் 36 மாதங்கள் வரையிலான குழந்தைகளின் ஊட்டச்சத்துக் குறைவினை போக்குவதின் மூலம் இத்திட்டத்தின் குறிக்கோளை அடைய முதல் முறையாக முயற்சி மேற்கொள்ளப்படுகிறது. மேலும் மற்ற வயதுத் தொகுதியிலுள்ள குறிப்பாக ஊட்டச் சத்துக் குறைவினால் பாதிக்கப்பட்ட கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள் பள்ளி செல்லும் வயதடையாத குழந்தைகள் இவர்களுக்கும் பயனளிக்கும் வகையில் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

[1987 ஏப்ரல் 21

3.19. சமுதாய ஊட்டச்சத்து மையம் கிராமங்களுக்கு
அனைத்து பணிகளையும் தரும் முக்கிய இடமாக உள்ளது
இவை சமுதாய ஊட்டச்சத்துப் பணியாளர்கள் பொறுப்பில்
இருந்து வருகின்றன. இவர்களது பணி ஊட்டச்சத்து மேற்
பார்வையாளர்களால் கண்காணிக்கப்படுகிறது. மேலும் வட்
டார அளவில் சமுதாய ஊட்டச்சத்துப் பயிற்றுநர்களாலும்,
தாலுகா அளவில் வட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்களாலும்
மாவட்ட அளவில் மாவட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலுவலர்
களாலும் வழி நடத்தப்படுகின்றது. இத் திட்டம் குறித்து
மாவட்ட ஊட்டச் சத்துத் திட்ட அலுவலர்கள் இரண்டு வார
பயிற்சி பெறுகின்றார்கள். வட்ட ஊட்டச்சத்துத் திட்ட அலு
வலர்கள் மூன்று வார திட்டப் பயிற்சியும், மூன்று வார நிர்
வாகப் பயிற்சியும் பெறுகின்றார்கள். திட்டம் சம்பந்தப்பட்ட
பயிற்சிகள் அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரியிலும், நிர்
வாகப் பயிற்சி, பவானி சாகர் குடி முறை பயிற்சி கழகத்திலும்
தரப்படுகின்றது. இது போன்று மேற்பார்வையாளர்கள்
2 மாத திட்டப் பயிற்சியை அவினாசிலிங்கம் மனையியல் கல்லூரி
யிலோ அல்லது காந்தி கிராம ஊரக கழகத்திலோ பெறு
கின்றனர். ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிப்
பதற்கான தேர்வு செய்யப்பட்டுள்ள பயிற்றுநர்கள் அவினாசி
மனையியல் கல்லூரி அல்லது காந்தி கிராம ஊரக கழகத்தில்
ஒரு மாத பயிற்சி பெறுகின்றனர். இப்பயிற்றுநர்கள் சமுதாய
ஊட்டச்சத்துப் பணியாளர்களுக்கு வட்டார அளவில் இரு
மாத பயிற்சியளிக்கின்றனர். சமுதாய ஊட்டச்சத்துப் பணி
யாளர்கள் வேலைத் திறமையும் திட்ட அறிவையும் மேம்
படுத்தும் வகையில் தொடர் இடைவெளி உட்பணிப் பயிற்சியையும்
(Inservice Training) அளிக்கப்படுகிறது.

3.20. ஆறு மாதம் முதல் 36 மாதங்களுக்குட்பட்ட எல்லா
குழந்தைகளின் எடையும் மாதா மாதம் எடுக்கப்பட்டு தேர்ந்
தெடுக்கப்பட்ட சத்துக் குறைவுள்ள குழந்தைகளுக்கும், கர்ப்
பிணிகளுக்கும், தாய்மார்களுக்கும், இணைச் சத்துணவு தரப்
படுகிறது. மேலும் குழந்தைகளுக்கு ஆறு மாதத்திற்கு ஒரு
முறை வைட்டமின் 'ஏ' திரவமும், நான்கு மாதங்களுக்கு ஒரு
முறை வயிற்றுப் பூச்சி நீக்கு மருந்தும் தரப்படுகிறது. பொது
சுகாதாரத் துறையின் கீழ் பணியாற்றும் பல் நோக்கு சுகாதாரப்
பணியாளர்கள் குழந்தைகளுக்கு தடுப்பு ஊசிகள் போடுகின்றனர்.



1987 ஏப்ரல் 21]

3.21. ஒவ்வொரு 5,000 மக்கள் தொகைக்கும் ஒரு சுகாதார
துணை நிலையம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இங்கு ஒரு ஆண்
சுகாதாரப் பணியாளரும் ஒரு பெண் சுகாதாரப் பணியாள
ரும் பணி புரிகின்றனர். சுகாதார மேற்பார்வையாளர்கள் இவர்
களது பணிகளைக் கண்காணிக்கின்றனர். அவர்கள் யாவரும்
அண்மையிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திலுள்ள மருத்துவ
அலுவலரின் கட்டுப்பாட்டில் செயல்படுகின்றனர். ஒன்பது ஒருங்
கிணைந்த ஊட்டச்சத்துத் திட்ட மாவட்டங்களில் 1,600 துணை
சுகாதார நிலையங்கள் கட்ட திட்டமிடப்பட்டு 1,528 நிலையங்
களுக்கான வேலை முடிக்கப்பட்டுள்ளது. எஞ்சியவற்றிற்கான
(72) வேலையும் தொடர்ந்து நடைபெறுகின்றது.

3.22. இத்திட்டத்தில் தொடர்புப் பிரிவு கிராம சமுதாயத்
தின் சுகாதாரம் மற்றும் உணவுப் பழக்கங்களையும் மாற்றி
யமைக்க முயற்சி செய்வதாகும். இத்திட்டம் வெற்றி பெறு
வதற்கான ஒரு இன்றியமையாத அமைப்பாக இப்பிரிவு கருதப்
படுகின்றது. கருத்தரங்குகள், பயிற்சி தகவல் கூட்டங்கள்,
முனைப்பு இயக்கங்கள் ஆகியவற்றை நடத்துவதன் மூலம்,
திட்டத்தின் பல்வேறு பணியாளர்களுக்கும் திட்டத்தின் குறிக்
கோள், செயல்முறை முதலானவற்றைப் போதித்து வருகின்
றது. திரைப்படங்கள், சுவரொட்டிகள், சுவர் வண்ண விளம்
பரங்கள், செய்தித்தாள்கள், ஆகியவைகளைப் பயன்படுத்தி
திட்டம் சம்பந்தமான செய்திகள் பரப்பப்படுகின்றன. திட்ட
ஒதுக்கீட்டிலிருந்து செய்தி அறிவிப்பு மையம் ஒன்று ரூ. 37 இலட்
சம் செலவில் சென்னையில் நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.
மேலும் இரண்டு ஊட்டச்சத்து தயாரிப்பு நிறுவனங்கள் சென்னை
யில் ஒன்றும் மதுரையில் ஒன்றும் ரூ. 100 இலட்சம் செலவில்
நிறுவ திட்டமிடப்பட்டுள்ளது.

3.23. உலக வங்கி உதவியுடன் செயல்பட்டுவரும் ஒருங்
கிணைந்த ஊட்டச்சத்து திட்டம் 31—3—1988-ல் முடிவடையும்
தருவாயில் ஒருங்கிணைந்த ஊட்டச்சத்து திட்டத்தையும்
முதலமைச்சர் குழந்தைகள் சத்துணவுத் திட்டத்தையும்
இணைத்து இம்மாநிலத்தில் "ஒருங்கிணைந்த குழந்தைகள் நலம்
மற்றும் சத்துணவு திட்டம்" என்ற பெயரில் செயல்படுத்துவதற்கு
உலக வங்கியிடமிருந்து உதவி பெறுவது சம்பந்தமான கருத்துரு
ஒன்று தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்திட்டத்திற்கு மொத்த
செலவு சுமார் ரூ. 400 கோடி ஆகும் என எதிர்பார்க்கப்படு
கிறது.

[1987 ஏப்ரல் 21

## ஆதரவற்ற குழந்தைகள் அரசு பராமரிப்பு இல்லங்கள்.

3.24. 5 முதல் 18 வயது வரையிலுள்ள ஆதரவற்ற குழந்தைகளுக்காக 22 ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்கள் அனைத்து மாவட்டங்களிலும் இத்துறையால் பராமரிக்கப்படுகின்றன. அவை கீழ்க்கண்ட இடங்களில் அவற்றிற்கெதிரே குறிப்பிடப்பட்டுள்ள குறியீட்டெண்ணிக்கையுள்ள குழந்தைகளுடன் நடைபெற்று வருகின்றன :—

| | | | |
|---|---|---|---|
| (1) | சென்னை-600 003 | 250 | குழந்தைகள். |
| (2) | சென்னை-600 010 | 250 | டிை |
| (3) | காஞ்சிபுரம் | 250 | டிை |
| (4) | திருவண்ணாமலை | 250 | டிை |
| (5) | கடலூர் | 250 | டிை |
| (6) | தஞ்சாவூர் | 250 | டிை. |
| (7) | திருச்சிராப்பள்ளி | 250 | டிை |
| (8) | புதுக்கோட்டை | 250 | டிை |
| (9) | மதுரை | 250 | டிை |
| (10) | திண்டுக்கல் | 250 | டிை |
| (11) | மானாமதுரை | 250 | டிை |
| (12) | விருதுநகர் | 250 | டிை |
| (13) | இராமநாதபுரம் | 250 | டிை |
| (14) | ஸ்ரீவைகுண்டம் | 250 | டிை |
| (15) | நாகர்கோவில் | 250 | டிை. |
| (16) | தர்மபுரி | 250 | டிை |
| (17) | சேலம் | 250 | டிை |
| (18) | ஈரோடு | 250 | டிை |
| (19) | அவினாசி | 250 | டிை |
| (20) | உதகமண்டலம் | 250 | டிை |
| (21) | கங்கவெள்ளி (சேலம்) | 250 | டிை |
| (22) | திக்கணங்கோடு (கன்னியாகுமரி) | 100 | டிை |
| | | 100 | டிை |

3.25. இந்த இல்லங்களில் தங்கும் குழந்தைகளுக்கு இலவச உணவு, உறைவிடம், ஆடை, பாட புத்தகம் மற்றும் குறிப்பேடுகள், மருத்துவ உதவி, மற்றும் கல்வி அளிக்கப்படுகின்றன. இந்த இல்லத்திலேயே 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை இரண்டு இடைநிலை



1987 ஏப்ரல் 21]

ஆசிரியைகளால் பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படுகின்றன. 5-வது வகுப்பிற்கு மேல் உயர் கல்விக்காக, இல்லக் குழந்தைகள் அரசு அல்லது மாநகராட்சி அல்லது நகராட்சிப் பள்ளிகளுக்கு அனுப்பப்படுகிறார்கள்.

3.26. உணவுச் செலவினமாக மாதம் ஒன்றுக்கு ரூ. 60-ம் உடைச் செலவினத்திற்காக ரூ. 35-ம் படுக்கைக்காக ரூ. 20-ம் ஆண்டிற்கொருமுறை ஒவ்வொரு குழந்தைக்கும் வழங்கப்படுகிறது.

3.27. மேலும் ஆண்டிற்கொருமுறை புத்தகங்கள், நோட்டுப் புத்தகங்களுக்காக 1 முதல் 5 வகுப்பு வரை படிக்கும் ஒரு குழந்தைக்கு ரூ. 35-ம், 6 முதல் 8 ஆம் வகுப்பு வரை படிக்கும் குழந்தைக்கு ரூ. 50-ம் மற்றும் 9, 10 ஆம் வகுப்பு படிக்கும் ஒரு குழந்தைக்கு ரூ. 90-ம், பிளஸ் 1, பிளஸ் 2 வகுப்புகளில் படிக்கும் ஒரு குழந்தைக்கு ரூ. 190 வீதமும் வழங்கப்பட்டு வருகிறது.

3.28. பெண் குற்றவாளிகளின் குழந்தைகளும் இவ்வில்லங்களில் சேர்க்கப்படுகின்றனர்.

3.29. சென்னை, சேலம், மதுரை மற்றும் நாகர்கோவிலில் உள்ள அரசு ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு இல்லங்களில் தையல் பயிற்சிப் பள்ளி ஒன்று சோதனைத் திட்டமாக 1986-87 முதல் ஆரம்பிக்கப்பட்டு நடத்தப்பட்டு வருகிறது.

3.30. அரசு ஆதரவற்ற குழந்தை பராமரிப்பு இல்லங்களில் தற்பொழுதுள்ள இரண்டு இடைநிலை ஆசிரியைகள் தவிர மேலும் மூன்று இடைநிலை ஆசிரியை பதவிகள் 1987-88 ஆம் ஆண்டு ஒப்பளிப்பு வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

### ஆதரவற்ற குழந்தைகள் பராமரிப்பு:

3.31. ஆதரவற்ற குழந்தைகளுக்கு மறு வாழ்வு அளித்து சமூகத்தில் அவர்களையும் மற்ற குடிமக்களைப் போல வாழ வைக்கும் நோக்கத்துடன் 1974-75 ஆம் ஆண்டு இத்திட்டம் தொடங்கப்பட்டது. அவர்களுக்கு போதிய அளவு உணவு, உடை, இருப்பிடம், மருத்துவ வசதி, கல்வி, வாழ்க்கைக்குத் தேவையான கல்விப் பயிற்சி முதலிய வசதிகளை அளிப்பது இத்திட்டத்தின் நோக்கமாகும். இத் திட்டம் குடும்ப முறையை அடிப்படையாகக் கொண்டது. ஒவ்வொரு குடிலும் 25

[1987 ஏப்ரல் 21

குழந்தைகளைக் கொண்டது. இல்லத் தாய்களின் உதவியுடன் 5 முதல் 13 வயது வரையுள்ள குழந்தைகளுக்கு தமது சொந்தக் குடும்பங்களில் வசிப்பது போன்ற உணர்வை ஏற்படுத்தும் வகையில் இச்சேவை செய்யப்படுகிறது. பராமரிப்புக்காகவும், கட்டிடம் கட்டுவதற்காகவும் தொண்டு நிறுவனங்களுக்கு மான்யம வழங்கப்படுகிறது. நிர்ணயிக்கப்பட்ட தொகையில் 90 விழுக்காடு அல்லது உள்ளபடியான செலவு இதில் எது குறைவோ அது மான்யமாக தனியார் நிறுவனங்களுக்கு கொடுக்கப்படுகிறது. எஞ்சியுள்ள 10 விழுக்காடுச் செலவை நிறுவனமே ஏற்க வேண்டும். 90 விழுக்காடு செலவினம் மைய அரசு மற்றும் மாநில அரசால் 50:50 என்ற விகிதத்தில் பகிர்வு செய்யப்படுகிறது. 1—4—1979-க்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்டு இயங்கி வரும் அனாதை குழந்தைகளுக்கான தொண்டு நிறுவனங்களுக்கு அளிக்கப்படும் மான்யம் முழுவதையும் மாநில அரசே ஏற்கிறது.

ஆறாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் இத் திட்டத்தின் கீழ் பராமரிப்பு மான்யம் வழங்கப்பட்டது போல ஏழாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்திலும் அதே விகிதத்தில் (50:50 விகிதத்தில்) உதவி அளிக்க மைய அரசு இசைவளித்துள்ளது. மைய அரசினால் ஒப்புதலளிக்கப்பட்ட திருத்திய நிதியுதவித் திட்டம் தமிழ்நாட்டில் 1—4—1984 முதல் அமுல் செய்யப்பட்டு உள்ளது. இத் திருத்திய திட்டத்தின்படி தொண்டு நிறுவனங்களுக்கு கீழ்க்கண்டவாறு நிதியுதவி அளிக்கப்படுகிறது :—

தொடரும் செலவு :—

| | |
|---|---|
| (1) உணவு, உடை, சோப், எண்ணெய், மின்சாரம் மற்றும் தண்ணீர் கட்டணம், தபால், எழுது பொருள், கல்வி, பாடப் புத்தகம், தொழிற்பயிற்சி, சுகாதாரம், பொழுது போக்கு, இல்லத்தாய், மேற்பார்வையாளர் மற்றும் உதவியாளர்களது சம்பளம் முதலியவை உட்பட அனைத்து செலவுக்கும் மொத்தமாக. | ரூ. 150 ஒரு குழந்தைக்கு ஒரு மாதத்திற்கு (உச்சம்). |
| (2) வாடகை .. .. | ரூ. 40 குழந்தை ஒன்றுக்கு மாதம் ஒன்றுக்கு (கட்டிடம் கட்ட மான்யம் வழங்கப் பட்டவுடன் நிறுத்தப்படும்). |



1987 ஏப்ரல் 21]

தொடராச் செலவு :—

| | |
|---|---|
| (1) இருக்கைகள், தொழிற் பயிற்சிக்கான சாதனங்கள் பாத்திரங்கள், படுக்கை மற்றும் விரிப்புக்கள் வாங்க ஆரம்பத்தில் ஏற்படும் செலவு. | ரூ. 500 குழந்தை ஒன்றுக்கு. |
| (2) கட்டிட மான்யம் .. .. | ரூ. 6,000 குழந்தை ஒன்றுக்கு அல்லது பொதுப்பணித் துறையால் நிர்ணயிக்கப் பட்ட செலவு எது குறைவோ அத் தொகை. |

தமிழ்நாட்டில் 149 தொண்டு நிறுவனங்கள் இவ்வாறு மான்யம் பெறுகின்றன. 11,755 அனாதைக் குழந்தைகள் இத் திட்டத்தினால் பயனடைகின்றனர்.

**தஞ்சைக் கிளை இந்திய குழந்தைகள் நல சங்கத்தினரால் நடத்தப்படும் குழந்தைகள் நல இல்லத்திற்கு மானியம் அளித்தல்.**

3.32. தஞ்சையிலுள்ள இந்திய குழந்தைகள் நல சங்கத்தினரால் நடத்தப்பட்டு வரும் குழந்தைகள் நல இல்லத்தின் நிர்வாக கட்டுப்பாடு சீர்திருத்தப் பள்ளித் துறையிலிருந்து சமூக நலத் துறைக்கு மாற்றப்பட்டு, இவ்வில்லத்திற்கு ஆண்டொன்றுக்கு ரூ. 30,000 பராமரிப்பு மானியமாக 1982-83 ஆம் ஆண்டு முதல் வழங்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம்—4.

### உடல் ஊனமுற்றோர் நலம்.

4.1. உடல் ஊனமுற்றோர் நலம் தமிழ்நாடு மாநிலத்தில் வளரும் திட்டங்களில் ஒன்று. 1977-78 ஆம் ஆண்டில் ரூ. 26.37 லட்சங்களாக இருந்த நிதி ஒதுக்கீடு ரூ. 215 லட்சங்களாக உயர்ந்திருப்பதிலிருந்தே இத்திட்டத்தின் வளர்ச்சி பிரதிபலிக்கிறது. ஆண்டுதோறும் அரசு அளிக்கும் இச்சலுகைகளால் சுமார் 40,000 உடல் ஊனமுற்றோர் பயன் அடைகின்றனர்.

4.2. ஊனமுற்றவர்கள் மறுவாழ்வுக்கென செயற்படுத்தப் படும் கல்வி, வாழ்க்கைத் தொழிலின் பயிற்சி, வேலை வாய்ப்பு, சுய வேலை வாய்ப்புக் கருவிகள் மற்றும் உபகரணங்கள் வழங்குதல் போன்ற திட்டங்களின் விவரங்கள் பின் வருமாறு:—

**ஊனமுற்றவர்களுக்குக் கல்வி:**

**ஊனமுற்றவர்களுக்கான சிறப்புப் பள்ளி:**

4.3. பார்வையற்ற, காது கேளாத, பேச இயலாத உடல் ஊனமுற்ற மற்றும் மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளுக்கு கல்வி அளிப்பதில் தனிக் கவனம் செலுத்த வேண்டியிருக்கிறது. இவர்களுக்குக் கல்வி அளிப்பதற்கு ஆசிரியர்களுக்கு தனித் தகுதியும் மற்றும் பள்ளியில் சிறு பொறியமைப்புகளும் தேவைப்படுகிறது. இந்த சிறப்புத் தேவைகளைக் கருத்திற்கொண்டு ஊனமுற்றோர்க்கான சிறப்பு பள்ளிகளை அரசு நடத்தி வருகிறது.

4.4. அரசால் 24 பள்ளிகளும் மற்றும் அரசு நிதிவுதவியுடன் தொண்டு நிறுவனங்களால் 24 பள்ளிகளும் ஆக 48 சிறப்புப் பள்ளிகள் இயங்கி வருகின்றன

இச்சிறப்புப் பள்ளிகளின் விவரம் பின்வருமாறு:—

| வரிசை எண், நிறுவனத்தின் வகை. | அரசுப் பள்ளிகள் | மானியம் பெறும் பள்ளிகள். | நகராட்சி பள்ளிகள். | மொத்தம். |
|---|---|---|---|---|
| (1) | (2) | (3) | (4) | (5) |
| 1. பார்வையற்றோர் பள்ளி. | 11 | 9 | .. | 20 |
| 2. காது கேளாதோர் பள்ளி | 9 | 11 | 2 | 22 |
| 3. மன வளர்ச்சி குன்றியோர்க்கான பள்ளி. | 1 | 2 | .. | 3 |
| 4. தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கான பள்ளி. | .. | 1 | .. | 1 |
| 5. உடல் ஊனமுற்றோர்க்கான பள்ளிகள். | 1 | 1 | .. | 2 |
| மொத்தம் .. | 22 | 24 | 2 | 48 |



4.5. சுமார் 4,500 உடல் ஊனமுற்ற சிறுவர்கள் இலவச தங்கும் வசதி மற்றும் உணவு வசதிகளுடன் சிறப்புக் கல்வி பெறுகின்றனர். ஒவ்வொரு ஆண்டும் அவர்களுக்கு தலா 2 செட் இலவச சீருடைகள் வழங்கப்படுகின்றன.

4.6. பார்வையற்றோர்க்கான 11 அரசுப் பள்ளிகளில், 1985-86 ஆம் ஆண்டில், பெண் ஆசிரியர்களைக் கொண்டு பார்வையற்ற பெண்களுக்கென தனியாக அரசுப் பள்ளி ஒன்று திருச்சிராப்பள்ளியில் தொடங்கப்பட்டது. 115 பார்வையற்ற பெண்கள் இந்தப் பள்ளியில் தற்போது படிக்கின்றனர்.

**(2) பார்வையற்றோருக்கான பிரெய்லி எழுத்துமுறை வட்டார அச்சகம், பூவிருந்தவல்லி.**

4.7. பார்வையற்றோருக்கான பிரெய்லி புத்தகங்கள் அச்சடித்து வழங்கும் பொருட்டு பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளி வளாகத்தில் தனி அச்சகம் ஒன்று செயல்பட்டு வருகிறது. நான்கு தென் மாநிலங்களில் தேவையான பிரெய்லி எழுத்துப் புத்தகங்களை இவ்வச்சகம் அச்சிடுகிறது.

4.8. மேற்படி அச்சகத்தைப் பராமரிப்பதற்கான செலவை முதலில் தமிழ்நாடு அரசு முழுமையாக ஏற்றுக் கொள்கிறது. பின்னர் இச் செலவினம் நான்கு தென் மாநில அரசுகளால் விகிதாச்சாரப்படி பகிர்ந்து கொள்ளப்படுகிறது. 1984-85 ஆம் ஆண்டு முதல் அரசு நிதி உதவி பெறும் பார்வையற்றோர் பள்ளிகளுக்கு பிரெய்லி புத்தகம் இலவசமாக வழங்கப்படுகிறது.

**(3) ஊனமுற்றவர்களுக்கு வழங்கப்படும் உதவித் தொகை:**

4.9. முதலாம் வகுப்பு முதல் 8 ஆம் வகுப்பு வரை பள்ளிகளில் படிக்கும் ஊனமுற்ற மாணவர்களுக்கு புத்தகங்கள் மற்றும் குறிப்பேடுகள் வாங்குவதற்காக மாநில அரசு திட்டத்தின்கீழ் ஆண்டிற்கு ரூ. 10 முதல் ரூ. 84 வரை உதவித் தொகை வழங்கப்படுகிறது. இதுவரையில் இந்த சலுகையை 46,800 மாணவர்கள் பெற்றுள்ளனர்.

4.10. ஒன்பதாம் வகுப்பும், அதற்கு மேலும் பயின்று வரும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் தொழில் நுட்பத் துறையில் பயிற்சி பெறும் ஊனமுற்ற மாணவர்களுக்கும் மத்திய அரசு திட்டத்தின் கீழ் உதவித் தொகை வழங்கப்படுகிறது. அவர்

களது கல்விக்கேற்ப உதவித் தொகை மாதம் ரூ. 85 முதல் ரூ. 240 வரை வழங்கப்படுகிறது. இதுவரையில் 13,479 ஊனமுற்ற மாணவர்கள் இந்த உதவித் தொகை சலுகையை பெற்றுள்ளனர்.

**(4) மன வளர்ச்சி குன்றியோருக்கான நிறுவனம்:**

4.11. சென்னைக்கு அருகிலுள்ள குரோம்பேட்டையில் 50 மன வளர்ச்சி குன்றிய குழந்தைகளைக் கொண்ட "அரசினர் மன வளர்ச்சி குன்றியோர்க்கான நிறுவனம்" பிப்ரவரி, 1984 முதல் தமிழக அரசால் நடத்தப்பட்டு வருகிறது.

4.12. இந்த நிறுவனத்தின் நோக்கம், மன வளர்ச்சி குன்றிய சிறுவர்களுக்கு இலவச உறைவிடம், உணவு வசதியுடன் கல்வி, மருத்துவ வசதி போன்ற மறுவாழ்வு வசதிகளை அளிப்பதாகும். இந்நிறுவனம், அரசுத் துறையில் நடத்தப்படும் முதல் நிறுவனமாகும். இதில் 50 குழந்தைகள் பயிற்சி பெறுகின்றனர். தற்சமயம் இந்நிறுவனத்தில் 50 குழந்தைகள் உள்ளுறுப்பினர்களாக உள்ளனர். 1987-88 ஆம் ஆண்டிற்கு இந்நிறுவனத்தின் பராமரிப்புக்காக ரூ. 3.05 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது.

**(5) பார்வையற்ற, காது கேளாதோர், மன வளர்ச்சி குன்றியோருக்குப் போதிப்பதற்கான ஆசிரியர் பயிற்சி நிலையம்:**

4.13. திறம்பட செயல்படும் நிறுவனங்கள் மூலம், ஊனமுற்றவர்களுக்கு சிறப்பாக போதிப்பதற்கென ஆசிரியர்களுக்குச் சிறப்புப் பயிற்சிகள் ஆண்டுதோறும் அளிக்கப்பட்டு வருகிறது. தமிழ் நாட்டில் 3 ஆசிரியர் பயிற்சி நிலையங்கள் உள்ளன. அவைகளின் விவரங்கள் பின்வருமாறு:—

| வரிசை எண்ணும் நிறுவனத்தின் வகையும். (1) | அரசுப் பள்ளிகள். (2) | மானியம் பெறும். பள்ளிகள். (3) | மொத்தம். (4) |
|---|---|---|---|
| 1. பயிற்சிப் பள்ளிகள்— | | | |
| (அ) பார்வையற்றோர்க்கு (பூவிருந்தவல்லி) | 1 | .. | 1 |
| (ஆ) காது கேளாதோர்க்கு (சென்னை-6) | .. | 1 | 1 |
| (இ) மனவளர்ச்சி குன்றியோருக்கு (சென்னை-10). | .. | 1 | 1 |
| மொத்தம் .. | 1 | 2 | 3 |





**பார்வையற்றோர் பள்ளி ஆசிரியருக்கான பயிற்சி:**

4.14. பார்வையற்றோருக்குப் போதிப்பதற்கான ஆசிரியர்களுக்குப் பயிற்சி வழங்க பூவிருந்தவல்லி அரசு பார்வையற்றோர் பள்ளி வளாகத்தில் மண்டல பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தில் நான்கு தென் மாநிலங்களிலிருந்தும் 12 ஆசிரியர்கள் தேர்வு செய்யப்பட்டு பயிற்சி பெறுகின்றனர். மேலும், இந்த மையத்தில் 15 ஆசிரியர்கள் பயிற்சி பெற தமிழக அரசால் ஒரு சிறப்புப் பிரிவு செயல்பட்டு வருகிறது. இப்பயிற்சி தொடர்ந்து நடைபெற 1987-88 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ. 2.26 லட்சங்களாகும்.

**காது கேளாதோர் பள்ளி ஆசிரியர்களுக்கென பயிற்சி:**

4.15. காது கேளாதோர்க்கு போதிப்பதற்கான நுணுக்கங்களைக் கொண்ட பயிற்சி 10 தகுதி வாய்ந்த ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சென்னை சிறுமலர் காது கேளாதோர் பள்ளியில் அளிக்கப்படுகிறது. இத்திட்டத்திற்காக 1987-88 ஆம் ஆண்டில் ரூ. 1.32 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

**மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி ஆசிரியர்களுக்கான பயிற்சி பள்ளி:**

4.16. சென்னை பாலவிஹார் பயிற்சி பள்ளியில் மன வளர்ச்சி குன்றியோருக்குப் போதிப்பதற்காக ஆண்டுதோறும் 20 ஆசிரியர்களுக்குப் பயிற்சி அளிக்கப்படுகிறது. 1987-88 ஆம் ஆண்டுக்கான நிதி ஒதுக்கீடு ரூபாய் 68,000 ஆகும்.

**6. ஊனமுற்றோருக்கு வாழ்க்கை தொழிற் பயிற்சி:**

**நவீன தொழில் மற்றும் பயிற்சி உற்பத்திப் பணிமனை, முட்டுக்காடு:**

4.17. செங்கற்பட்டு மாவட்டத்தில் முட்டுக்காட்டில் ஊனமுற்றோருக்கான நவீன பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் 1975 ஆம் ஆண்டு முதல் செயல்பட்டு வருகிறது. மூச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள், பெட்டிக்கடைகள் அலமாரிகள் போன்ற சாமான்கள் உற்பத்தி செய்வதில் ஊனமுற்றவர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டது. 1980 முதல் உற்பத்திக் கூடமாக இந்நிலையம் இயங்கி வருகிறது.

4.18. பயிற்சி பெற்ற நபர்கள் அரசு அச்சகம், போக்குவரத்துக் கழகங்கள், தமிழ் நாடு மின் வாரியம், பொதுப்பணித் துறை மற்றும் சமூக நலத் துறைகளில் பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர்.

**7. பார்வையற்றோருக்கான அரசு தொழில் பயிற்சி நிலையம், கிண்டி :**

4.19. கிண்டியில் 1967 ஆம் ஆண்டு துவக்கப்பட்ட எளிய பொறியியல் திட்டத்தில் வயது வந்த பார்வையற்றவர்கள் இந்த வகைத் தொழில்களில் 6 மாத கால பயிற்சி அளிக்கப்படுகின்றனர். ஆனால் இந்த வகை பயிற்சி தொழிற் துறையினரின் எதிர் பார்ப்புகளுக்கு ஈடான வகையில் இல்லை. இதன் காரணமாக, இப்பயிற்சியின் காலம் மற்றும் பயிற்சியின் தன்மை போன்றவற்றை மாற்றி அமைக்கும்படியான அவசியம் ஏற்பட்டுள்ளது. எனவே 1982-83 ஆம் ஆண்டு முதல், அரசு பார்வையற்றவர்களுக்கு தகுந்த தேர்ந்தெடுக்கப்பட்ட தொழிலில் அவர்களுக்கு போதுமான திறமை ஏற்படவும் வேலை வாய்ப்பை அளிக்கவும் இதனை தொழிற் பயிற்சி மையமாக மாற்றி அமைத்தது. சென்ற பயிற்சி திட்டத்தின் கீழ் பொறிப்பகுதி பொருத்துதல், புத்தகம் கட்டுதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய மூன்று பிரிவுகளில் பயிற்சி அளிக்கப்படுகிறது. மின்கம்பி சுற்றுவதற்கு 6 மாதமும், ஏனையவற்றிற்கு ஒரு வருடமும் பயிற்சி அளிக்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் 30 பார்வையற்ற நபர்கள் இப்பயிற்சிகளில் சேர்க்கப்படுகின்றனர். 1987-88 ஆம் ஆண்டு வரவு செலவு திட்டத்தில் இந்த நிலையத்திற்காக ரூ. 3.26 லட்சம் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

4.20. மின்கம்பி சுற்றும் பயிற்சியை 6 மாதத்திலிருந்து ஒரு வருடமாக மாற்ற அரசு பரிசீலித்து வருகிறது.

**8. தொழிற் பயிற்சி நிலையத்தில் காது கேளாதோர்க்கென தனிப்பிரிவு ஏற்படுத்துதல்:**

4.21. காது கேளாதோர் போதுமான தேர்ச்சித்திறம் பெறவும் வேலை வாய்ப்பிற்கான தகுதியை பெருக்கிக் கொள்ளும் நோக்குடன், அரசு கிண்டி மற்றும் மதுரையில் உள்ள தொழிற் பயிற்சி நிலையங்களில், முழுவதும் காது கேளாதோர்க்கு பொறிப்பகுதி பொருத்துதல் மற்றும் மின்கம்பி சுற்றுதல் ஆகிய தொழில்களில் பயிற்சி கொடுக்க 1981-82 ஆம் ஆண்டில்



முழுமையாக காது கேளாதோர்க்கு பயிற்சியளிக்கும் வகையில் மதுரை மற்றும் கிண்டியில் இரண்டு சிறப்பு பிரிவுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பயிற்சி காலம் இரண்டு ஆண்டுகள்.

4.22. 1984-85 ஆம் ஆண்டில் கிண்டி தொழிற்பயிற்சி நிலையத்தில் பொறிப்பகுதி பொருத்துபவர் வேலைக்கு 10 காது கேளாத மாணவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு பயிற்சி கொடுக்கப்பட்டுள்ளது. அவர்கள் ஜூலை 1986-ல் பயிற்சியை முடித்தார்கள். 1986-87 ஆம் ஆண்டில் கிண்டி தொழிற் பயிற்சி நிலையத்தில் 8 நபர்களுக்குப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. முழுமையாக காது கேளாதவர்கள் கிடைக்காத காரணத்தினால், 50 சதவீதம் காது கேளாதவர்களையும் பயிற்சியில் சேர்த்துக் கொள்ளப்பட்டது. 1987-88 ஆம் ஆண்டில் இத்திட்டம் தொடருவதற்காக ரூ. 0.54 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**9. ஊனமுற்றோர்க்குப் பெட்டிக் கடைகள் அமைப்பதற்கு உதவி அளித்தல் :**

4.23. பொதுவாக கிராமப்புறங்களிலுள்ள ஊனமுற்றோர்களுக்கு கல்வித் தகுதியோ அல்லது தொழில் நுட்பத்திறனோ இல்லை. அவர்களுக்கு மாத ஊதியத்தில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவது கடினமான செயலாகும். அத்தகைய ஊனமுற்ற நபர்களுக்கு, மாநிலத்திலுள்ள பல்வேறு இடங்களில் வங்கிக் கடனுதவி மற்றும் அரசு மானியமாக ரூ. 250, ரூ. 500 பெட்டிக்கடை வைப்பதற்காக வழங்கப்படுகிறது. இதற்கென 1987-88 ஆம் ஆண்டு ரூ. 0.94 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. பார்வையற்ற மகளிருக்காக தொழிற்கூடங்களுடன் கூடிய மறுவாழ்வு மையம் :**

4.24. பார்வையற்ற மகளிருக்காக, சென்னை சாந்தோமில் 1978 முதல் உறைவிட வசதிகளுடன் கூடிய ஒரு மறுவாழ்வு இல்லம் இயங்கி வருகிறது. இங்கு வறுமையில் வாடும் ஆதரவற்ற 40 வயதுக்குக் குறைந்த பார்வையற்ற மகளிர் அவர்களது கல்வித் தகுதி எதுவாயிருப்பினும் இந்த இல்லத்தில் சேர்த்துக் கொள்ளப்பட்டு நெய்தல், சாக்குக் கட்டி செய்தல் ஆகியவற்றில் பயிற்சி அளிக்கப்படுகிறது. இப்பயிற்சி காலத்தில் அவர்களுக்கு நபர் ஒன்றிற்கு மாதம் ரூ. 50 உதவித் தொகை

வழங்கப்படுகிறது. பயிற்சி முடிந்ததும் அவர்களுக்கு இல்லத்திலேயே வேலை அளிக்கப்பட்டு, தினமும் அவர்கள் செய்யும் வேலைகளுக்கேற்ப ஊதியம் அளிக்கப்படுகிறது. அங்கு உற்பத்தியாகும் படுக்கை விரிப்புகள், கண்டுகள் மற்றும் சாக்குக் கட்டிகள் அரசு மருத்துவமனைகளிலும், பள்ளிகளிலும் விற்பனை செய்யப்படுகின்றன. இதுவரை 294 பார்வையற்ற மகளிர் பயிற்சி பெற்றுள்ளனர்.

4.25. மொத்தமுள்ள 40 இடங்களில் 4 இடங்கள், சென்னை நகரப்பள்ளி மற்றும் கல்லூரிகளில் பயிலும், தங்கும் வசதி தேவைப்படுகின்ற பார்வையற்ற மாணவிகளுக்கு ஒதுக்கப்பட்டுள்ளன.

4.26. பொருட்களின் விலை உயர்வை முன்னிட்டு உறைப்பினருக்கு வழங்கும் உதவித் தொகையை 1987-88 முதல் ரூ. 50-லிருந்து ரூ. 90 ஆக உயர்த்த உத்தேசித்துள்ளது.

11. மண்டல மறுவாழ்வு மையங்கள் :

4.27. ஊனமுற்றோர் பிரச்சினையைத் தனி கவனிப்புடன் தீர்ப்பதற்கு ஒரு சிறப்பு அமைப்பு நிறுவப்பட்டது. இந்திய அரசால் நடத்தப்படும் ஊனமுற்றோர் வாழ்க்கைத் தொழில் பயிற்சி நிலைய அமைப்பைப் போன்ற இந்நிறுவனம் மண்டல மறுவாழ்வு நிலையமாக இயங்கி வருகிறது. சென்னை, மதுரை, கோயம்புத்தூர், தஞ்சாவூர் மற்றும் வேலூர் ஆகிய இடங்களைத் தலைமை மையமாகக் கொண்டு மாநிலத்தில் உள்ள எல்லா மாவட்டங்களையும் உள்ளடக்கி இந்த மண்டல மறுவாழ்வு நிலையங்கள் செயல்படுகின்றன. இம்மையம் ஊனமுற்றவர்களை பள்ளிகளில் சேர்த்தல், பல்வேறு தொழிற் நிறுவனங்களில் சேர்த்தல், சுய வேலை வாய்ப்பிற்கு கடனுதவி வாங்கித் தருதல் போன்ற சீரிய பணிகளை ஆற்றி வருகிறது. இதுவரை 24,922 ஊனமுற்றோர் இதன் மூலம் பயனடைந்துள்ளனர்.

12. வேலையற்ற பார்வையற்றோருக்கு நிவாரண தொகை அளித்தல் :

4.28. 1981 உலக ஊனமுற்றோர் ஆண்டின் திட்டங்களில் ஒன்றாக வேலையற்றோர் நிவாரணத் தொகையாக மாதம் ரூ. 50 வழங்கும் திட்டம் படித்த பார்வையற்றோர்களுக்கும் நீட்டிக்கப்பட்டது. இதன்படி எஸ்.எஸ்.எல்.சி.





அல்லது ஐ.டி.ஐ. சான்றிதழ் பெற்று, வேலை வாய்ப்பு உயிர்ப் பதிவேட்டில் மூன்று ஆண்டுகள் தொடர்ந்து பதிவு செய்து, 40 வயதிற்குக் குறைந்து (தாழ்த்தப்பட்ட/பழங்குடியினராயின் 45 வயதிற்குள்) படித்த பார்வையற்றவர்கள் உதவித் தொகை பெறத் தகுதியுடையவர்கள்; சமூக நலத் துறை நிதி ஒதுக்கீட்டின் கீழ் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இயக்குநரால், மற்ற வேலையில்லா நிவாரணத் தொகை வழங்கும் திட்டத்துடன் இத்திட்டமும், செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஆண்டுதோறும் 85 நபர்கள் இத்திட்டத்தின் மூலம் பயனடைந்து வருகின்றனர்.

4.29. வேலையில்லாமல் இருக்கும் பார்வையற்றோருக்கு வழங்கப்படும் உதவித் தொகை 3 ஆண்டு காலம் என்றிருப்பதை 5 ஆண்டு காலமாக உயர்த்துவது அரசின் பரிசீலனையில் உள்ளது. 1987-88-ல் இத்திட்டத்திற்காக ரூ. 0.75 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

13. ஊனமுற்றோருக்குக் கருவிகள் வழங்குதல்:

4.30. ஊனமுற்றோருக்கு அவர்களது ஊனத்தின் தன்மைக்கேற்ப முச்சக்கர வண்டிகள், சக்கர நாற்காலிகள் மற்றும் காதொலி கருவிகள் இலவசமாக வழங்கப்படுகிறது.

முச்சக்கர வண்டிகள் :

4.31. 1986-87 ஆம் ஆண்டு இறுதி வரை 8,915 முச்சக்கர வண்டிகள் இரண்டு கால்களும் இழந்த ஊனமுற்ற நபர்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட ஆட்சித் தலைவர்களின் முன்மொழிவின் பேரில் 1987-88 ஆம் ஆண்டில் எல்லா மாவட்டங்களிலும் 1,000 நபர்களுக்கு முச்சக்கர வண்டிகள் வழங்குவதற்கு ரூ. 15.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

சக்கர நாற்காலிகள் :

4.32. பாரிச வாத நோயினால் பாதிக்கப்பட்ட ஊனமுற்ற நபர்களுக்கு 1981 ஆம் ஆண்டு முதல் இலவசமாக சக்கர நாற்காலிகள் வழங்கப்படுகின்றன. 1986-87 ஆம் ஆண்டு இறுதி வரை 800 சக்கர நாற்காலிகள் இலவசமாக வழங்கப்பட்டுள்ளன. 1987-88 ஆம் ஆண்டுக்கு 100 சக்கர நாற்காலிகள் வழங்க ரூபாய் 1.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

காதொலி கருவிகள் :

4.33. 1983-84 ஆம் ஆண்டு வரை 18 வயதுக்கு உட்பட்ட பள்ளிக்குச் செல்லும்/செல்லாத காது கேளாத குழந்தைகளுக்கு 3,297 காதொலிக் கருவிகள் இலவசமாக வழங்கப்பட்டன.

4.34. 1984-85 ஆம் ஆண்டு முதல் தமிழ் நாட்டிலுள்ள காது கேளாத அனைவரும் பயனடைய இலவசமாக 15,000 காதொலிக் கருவிகள் வழங்கத் திட்டமிடப்பட்டது.

4.35. பயன்பெறுவோரை தேர்வு செய்ய 1985-ல் எல்லா மாவட்டங்களிலும் மருத்துவ பரிசோதனை முகாம் நடத்தப்பட்டதில் 20,243 நபர்கள் தேர்வு செய்யப்பட்டனர்.

4.36. 1984-85-ல் 4,581 காதொலி கருவிகளும், 1985-86-ல் 10,419 காதொலி கருவிகளும், 1986-87-ல், 5,243 காதொலி கருவிகளும் வழங்கப்பட்டுள்ளன.

4.37. மேலும் காது கேளாத நபர்களுக்கு காதொலி கருவிகள் வழங்க வேண்டியுள்ளதால் 1987-88 ஆம் ஆண்டில் 5,200 காதொலி கருவிகள் வழங்குவதற்காக ரூ. 22.81 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

14. தொண்டு நிறுவனங்களுக்கு மானியம் வழங்குதல்:

4.38. 8 முதல் 14 வயதிற்குட்பட்ட மன வளர்ச்சி குன்றிய, காது கேளாத, பார்வையற்ற, கை கால் ஊனமுற்ற குழந்தைகள், தொழு நோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகள், தொழு நோயாளிகளின் குழந்தைகள் ஆகியோர்களைப் பராமரிப்பதற்காக மாதம் ஒன்றுக்கு ஒரு குழந்தைக்கு ரூ. 30 என்ற விகிதத்தில் தொண்டு நிறுவனங்களுக்கு பராமரிப்பு மானியம் மாநில அரசால் வழங்கப்படுகிறது. 1986-87 ஆம் ஆண்டில் 21 நிறுவனங்கள் மானியம் பெற்றுள்ளன. இதனால் 603 ஊனமுற்ற சிறுவர் சிறுமியர் பயனடைந்துள்ளனர்.

15. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு பயணச் சலுகை வழங்குதல் :

4.39. உடல் ஊனமுற்ற மாணவர்களுக்கு வீட்டிலிருந்து பள்ளிக்கு மற்றும் மருத்துவ மனைக்குச் சென்று திரும்பி வர அரசுக்கு சொந்தமான போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில் (திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் நீங்கலாக) இலவசமாக பயணம் செய்ய சலுகை வழங்கப்படுகிறது. இதனால் அரசு



போக்குவரத்து கழகங்களுக்கு ஏற்படும் நிதி இழப்பை சமூக நலத்துறையினரால் ஈடு செய்யப்படுகின்றது. 1986-87 வரை 14,639 ஊனமுற்ற குழந்தைகள்/மாணவர்கள் இந்தத் திட்டத்தினால் பயனடைந்துள்ளார்கள். இத்திட்டத்திற்காக 1987-88-ம் ஆண்டுக்கு ரூ. 5.00 இலட்சங்கள் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

16. செயற்கை உறுப்பு துணை நிலையம், மதுரை.

4.40. உடல் உறுப்புகள் பாதிக்கப்பட்ட 100 குழந்தைகள் படிக்கும் அரசு பள்ளிக்கு உதவுவதற்காக செயற்கை உறுப்பு துணை நிலையம் ஒன்று மதுரையில் நிறுவப்பட்டுள்ளது. இந் நிலையத்தில் அறுவைச் சிகிச்சை, உடற் கூறு பயிற்சிகள் மற்றும் துணைக் கருவிகள் வழங்குதல் போன்ற பணிகள் ஒரு உடற்கூறு நிபுணர் மற்றும் ஆயா உதவியாளர்களால் செய்யப்படுகின்றன. இப்பணிக்காக 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.13 இலட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

17. பார்வையற்றோரைத் திருமணம் செய்து கொள்ளும் பார்வை உள்ளவர்களுக்கான சலுகைகள்.

4.41. தற்சமயம் நடைமுறையில் உள்ள கலப்பு மணம் புரிந்து கொள்பவருக்கு அளிக்கப்படும் சலுகைகளான 8 கிராம் தங்கம், ரூபாய் 4,000 ரொக்கத் தொகை மற்றும் ரூ. 300 திருமணச் செலவு ஆகியவற்றை பார்வையற்றவர்களை மணந்து கொள்ளும் பார்வையுள்ளவர்களுக்கும் வழங்க அரசு ஆணையிட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் பயனடைவோர் தகுதி மற்றும் நடைமுறை விதிகள் தற்பொழுது அரசால் முடிவெடுக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் 1987-88 ஆம் ஆண்டு முதல் அமுல் படுத்தப்படும். இதன் மூலம் 20 தம்பதியர்கள் பயனடைவார்கள்.

18. வட சென்னை மற்றும் அம்பத்தூரிலுள்ள தொழில் பயிற்சி பள்ளிகளில் உடல் ஊனமுற்றோருக்கான 3-வது முறை மாற்றுப் பணியை அறிமுகப்படுத்துதல்.

4.42. உடல் உறுப்பு பாதிக்கப்பட்டவர்களுக்காக பயிற்சி பெற்று வேலை வாய்ப்பு வசதி பெறுவதற்காக வட சென்னை மற்றும் அம்பத்தூர் தொழிற்கல்வி பயிற்சி மையங்களில் மூன்றாவது ஷிப்ட் அமைக்கப்பட்டுள்ளது. வட சென்னை தொழிற்கல்வி

பயிற்சி மையத்தில் பிளம்பர் தொழிலுக்கும், அம்பத்தூர் தொழிற் கல்வி பயிற்சி மையத்தில் பெயின்டர், பிட்டர், வரைவுரைவு மற்றும் மெஷினிஸ்ட் தொழில்களுக்கும் பயிற்சி அளிக்கப்படுகிறது.

4.43. இத்திட்டம் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையில் அமுல்படுத்தப்படுகிறது. இத்திட்டத்திற்கான நிதி சமூக நலத்துறையால் வழங்கப்படுகிறது.

4.44. 1986-87 ஆம் ஆண்டில் மேற்கண்ட திட்டத்தின் மூலம் 34 ஊனமுற்றவர்கள் பல்வேறு பயிற்சிகளில் சேர்க்கப்பட்டுள்ளனர். இதற்கென 1987-88 ஆம் ஆண்டு வரவு-செலவு திட்ட மதிப்பீட்டில் ரூ. 1.20 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

**19. செங்கற்பட்டில் மாவட்ட மறுவாழ்வு மையம் நிறுவுதல்.**

4.45. மைய அரசும், அமெரிக்க ஐக்கிய நாட்டு அரசின் உடல் ஊனமுற்றோர் ஆராய்ச்சி நிறுவனமும் சேர்ந்து தமிழ் நாட்டில் ஊனமுற்றோர்க்கான விரிவான மறுவாழ்வு பணிகள் செய்வதற்கான ஒரு முன்னோடி திட்டத்தை வரைந்துள்ளன. மாநிலத்திலேயே முதன் முறையாகத் திகழும் இத்திட்டத்திற்கு மாவட்ட மறுவாழ்வு மையம் என்று பெயர்.

4.46. இத்திட்டம் தமிழகத்தில் பெரிய மாவட்டங்களில் ஒன்றான செங்கற்பட்டு மாவட்டத்தில் நிறுவப்பட்டுள்ளது. இம் மாவட்டத்தில் இத்திட்டத்திற்கு ஏதுவான பிறவசதிகள் ஏற்கெனவே உள்ளன. செங்கை மருத்துவக் கல்லூரியில் குறைந்த செலவில் மருத்துவ மறுவாழ்வு வசதிகள் செய்யப்படுகின்றன.

4.47. இத்திட்டம் முதலில் காட்டாங்குளத்தூர் மற்றும் திருக்கழுக்குன்றம் ஆரம்ப சுகாதார மையங்களில் நடத்தப்பட்டு பிறகு மாவட்டத்தின் இதர ஆரம்ப சுகாதார மையங்களுக்கும், விரிவுபடுத்தப்படும்.

4.48. இத்திட்டத்தின் ஒரு பகுதியாக முதற்கட்ட மதிப்பீட்டு மருத்துவப் பணிகளை இத்திட்டப் பகுதிகளில் நிபுணர்களால் செய்து ஊனமுற்றோருக்கான மருத்துவச் சிகிச்சை உடனடியாக வழங்கப்படுகின்றன. அறுவைச் சிகிச்சை தேவைப்படுவோர் மாவட்ட தலைமை மருத்துவ மனைக்கு அனுப்பப்படுவர். இத்திட்டப் பகுதிகளில் ஊனமுற்றோருக்குப் பள்ளிகள் மற்றும் பயிற்சி நிலையங்கள், வேலை வாய்ப்புத்தரும் தொழிற்



கூடங்கள் துவங்க முன்வரும் சமூக நல நிறுவனங்கள் ஊக்கு விக்கப்படுகின்றன. இதற்கான மைய அரசின் உதவிகள் அவர்களுக்கு பெற்றுத் தரப்படுகின்றன.

4.49. இத்திட்ட காலம் 5 ஆண்டுகளாகவும், திட்ட மதிப்பீடு ரூ. 74.80 இலட்சம் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. இதற்கான ஆரம்பகால செலவுகளை மாநில அரசு செய்ய வேண்டும். பிறகு நிதி ஆண்டு முடிவில் அச்செலவினை மைய அரசிடமிருந்து பெற்றுக் கொள்ளுதல் வேண்டும்.

**20. தமிழ்நாடு மாநில ஊனமுற்றோர் வாரியம்:**

4.50. தமிழ்நாட்டில் உள்ள பல்வேறு உடல் ஊனமுற்றவர்களின் மறுவாழ்விற்காக மாநில வாரியம் ஒன்று 1971-ல் நிறுவப்பட்டது. இதன் மூலம் பார்வையற்றோர், செவித்திறன் இல்லாதோர், உடல் உறுப்பு பாதிக்கப்பட்டவர்கள், மூளைத் திறன் பாதிக்கப்பட்டவர்கள், தொழுநோய் சிகிச்சை பெற்றோர் ஆகியோர் பயன் பெறுகின்றனர். இது முதலில் வேலை வாய்ப்பு மற்றும் பயிற்சி இயக்குநர் அவர்களால் நிர்வகிக்கப்பட்டது.

4.51. 1973-ல் இந்த வாரியம் சமூக நலத்துறைக்கு மாற்றப்பட்டது. இந்த வாரியம் பிப்ரவரி 1984-ல் தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம், 1975-ன்படி பதிவு செய்யப்பட்டு உள்ளது.

4.52. இந்த வாரியத்தின் மூலம் 7 நிறுவனங்களுக்கும், 109 உடல் ஊனமுற்றோருக்கும் சுயவேலை வாய்ப்புத் திட்டங்களுக்காகப் பண உதவி செய்யப்பட்டுள்ளது.

**21. பார்வையற்ற மாணவர்களுக்குத் தேர்வின்போது எழுத்துத் துணை உதவியாளர் :**

4.53. இத்திட்டத்தின் நோக்கம் முதல் கட்டமாக சென்னையிலுள்ள மூன்று பார்வையற்றோர் சிறப்புப் பள்ளிகளில் 9 ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் பார்வையற்ற மாணவர்கள் தேர்வின்போது வினாக்களுக்கு அளிக்கும் பதிலினை உதவியாளர்கள் மூலம் எழுதுவதாகும். இத்திட்டத்தினால் அவர்கள் பொதுத் தேர்வின்போது நல்ல மதிப்பெண்கள் பெற உதவியாக அமையும். தேர்வுத்தாள் ஒன்றுக்கு ரூ. 6 விதம் எழுத்துத் துணை உதவியாளர்களுக்கு வழங்கப்படும். 100 பார்வையற்ற மாணவர்கள் இத்திட்டத்தினால் பயன்பெறுவர்.

[1987 ஏப்ரல் 21

22. தஞ்சாவூர் அரசு காது கேளாதோர் பள்ளியில் உயர் வகுப்புகள் துவக்குதல்:

4. 54. தஞ்சாவூர் அரசு காது கேளாதோர் உயர்நிலைப் பள்ளியில் 1986-87 ஆம் ஆண்டில் 10 கூடுதல் மாணவர்கள் எண்ணிக்கையுடன் பதினோராம் வகுப்பு துவங்கப்பட்டது. காது கேளாத மாணவர்கள் தங்கள் படிப்பினைத் தொடர வேறு மேல்நிலைப்பள்ளிகளை நாடிச் செல்ல வேண்டியுள்ளது. மேலும், இங்கு வேறு அரசு காது கேளாதோர் மேல்நிலைப்பள்ளி எதுவும் இல்லை. ஆகவே, இப்பள்ளியில் ப்ளஸ் 2 வகுப்புத் துவங்க 1987-88 ஆம் ஆண்டில் 10 காது கேளாதோர் மாணவர்கள் ப்ளஸ் 2 வகுப்பில் சேர்த்துக் கொள்ளப்படுவார்கள்.

இத்திட்டத்திற்காக 1987-88 ஆம் ஆண்டில் நிதி ஒதுக்கீடு ரூ. 0.77 இலட்சமாகும்.

4.55. 1986-87 ஆம் ஆண்டில் ஈரோடு மற்றும் தர்மபுரியில் உள்ள அரசு காது கேளாதோர் பள்ளி ஒவ்வொன்றிலும் 30 மாணவர்கள் கூடுதலாக சேர்க்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இதனால் ஈரோடு அரசு காது கேளாதோர் பள்ளியில் 80 மாணவர்களும் தர்மபுரி அரசு காது கேளாதோர் பள்ளியில் 125 மாணவர்களும் கல்வி பயிலுகின்றனர்.

## அத்தியாயம் 5.

## தமிழ்நாடு சமூகநல வாரியம்.

5.1. தமிழ்நாடு சமூக நல வாரியம் 1954 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டு, தமிழ்நாட்டில் தொண்டு நிறுவனங்களது மேம்பாட்டு வளர்ச்சியில் முக்கியமான பங்கு வகித்து வருகிறது.

5.2. வாரியத்தின் முக்கிய நோக்கங்கள் வருமாறு :

1. சமூக நல அமைப்புக்களை ஆரம்பித்து, உயர்வடையச் செய்தல்.

2. தனியார் சேவை நிறுவனங்களின் பணித் திறனை வளர்ப்பதற்குத் தொழில் நுட்ப மற்றும் நிதி உதவியளித்தல்.

3. உதவித் திட்டங்களை மதிப்பீடு செய்தல்.



1987 ஏப்ரல் 21]

5.3. தமிழ்நாடு சமூக நல வாரியம், மத்திய சமூக நல வாரியத்திடம் இருந்து பண உதவி பெற்று, தொண்டு நிறுவனங்களின் மூலம் குழந்தைகள், ஊனமுற்றவர்கள் மற்றும் மகளிர் ஆகியோரது மேம்பாட்டுக்காகப் பணியாற்றுகிறது. சுமார் 50 சதவீதம் முதல் 90 சதவீதம் வரை தொண்டு நிறுவனங்களுக்குப் பண உதவி செய்யப்படுகிறது. எஞ்சிய செலவுத் தொகை தொண்டு நிறுவனங்களால் ஏற்கப்படுகிறது. சில சிறப்புத் திட்டங்களுக்கு 100 சதவீதம் கூட பண உதவி செய்யப்படுகிறது.

5.4. தற்போதைய தமிழ்நாடு சமூக நல வாரியம் 1978 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் மூன்று அலுவல்க உறுப்பினர்கள் உட்பட 32 உறுப்பினர்களைக் கொண்டதாக, திருத்தியமைக்கப்பட்டது.

5.5. 1986-87 ஆம் ஆண்டில் 1,508 தொண்டு நிறுவனங்களுக்கு மொத்தம் ரூ. 147.97 இலட்சம் பண உதவி செய்யப்பட்ட விவரங்கள் பின் வருமாறு:—

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | அலகுகளின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 1 இடைக் கால உதவி .. .. | 33 | 2.70 |
| 2 வருடாந்திர உதவி .. .. | 203 | 3.94 |
| 3 மகிலா மண்டலத் திட்டம் .. | 35 | 1.29 |
| 4 சத்துணவுத் திட்டம் .. | 95 | 7.38 |
| 5 குழந்தைகள் காப்பகத் திட்டம் .. | 770 | 77.27 |
| 6 நகர்ப்புற விரிவாக்கத் திட்டம் .. | .. | .. |
| 7 [illegible] முகாம் .. .. | 44 | 2.20 |
| 8 குறுகிய காலக் கல்விப் பயிற்சி (1 வருடம்/2 வருடம்). .. | 11 | 2.89 |
| 9 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி | 103 | 19 62 |
| 10 பணிபுரியும் மகளிர் தங்கும் விடுதி | 14 | 0.90 |

[1987 ஏப்ரல் 21

| வரிசை எண்ணும், திட்டத்தின் பெயரும். | அலகுகளின் எண்ணிக்கை. | அனுமதிக்கப்பட்ட தொகை. |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| | | (ரூபாய் இலட்சத்தில்) |
| 11 சமூகப் பொருளாதாரத் திட்டம்— | | |
| (அ) உற்பத்தி அலகுகள் .. | 9 | 15.38 |
| (ஆ) சேவை முனைப்புத் திட்டம். | 1 | 0.25 |
| (இ) பால் வளத் திட்டம் .. | 29 | 3.97 |
| (ஈ) சுய வேலை வாய்ப்புத் திட்டம் | .. | .. |
| (உ) ஆடு வளர்த்தல் .. .. | 11 | 2.62 |
| 12 கிராமப்புற மகளிர் பயிற்சித் திட்டம் | 10 | 0.80 |
| 13 மாநில அரசு மானியம் .. | 141 | 4.32 |
| 14 குடும்ப நல அறிவுரை நிலையம் .. | 6 | 1.36 |
| மொத்தம் .. | 1,508 | 147.97 |

5.6. சமூக நலப் பணிகளில் தொண்டு நிறுவனங்கள் பங்கேற்க அரசு ஊக்கமளித்து வருகிறது. தரமான இனிப்புப் பண்டங்களைத் தயாரித்து அரசு நிறுவனங்கள், கூட்டுறவு சிறப்பு அங்காடிகள் மூலமாக அவற்றை விற்பனை செய்ய ஏற்பாடு செய்வதில் உடல் ஊனமுற்ற பெண்களை வேலைக்கமர்த்தும் திட்டமொன்றை தமிழ்நாடு சமூக நல வாரியம் 1986-87 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தி வருகிறது. ஊனமுற்ற பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில், தொண்டு நிறுவனங்களின் உதவியுடன் ஆவின் பாலகங்கள் ஆரம்பிக்கவும் அரசு பரிசீலித்து வருகிறது.



1987 ஏப்ரல் 21]

அத்தியாயம் 6.

சீர்திருத்தப் பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை.

6.1. சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத் துறை முக்கியமாக இரண்டு பிரிவுகளைக் கொண்டுள்ளது. ஒன்று 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் கீழ் நிறுவப்பட்டுள்ள சீர்திருத்தப் பள்ளிகள். மற்றொன்று 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின்கீழ் நிறுவப்பட்டுள்ள கண்காணிப்பு/பாதுகாப்பு இல்லங்கள் ஆகும்.

6.2. இத்துறையின் முக்கிய நோக்கம் மற்றும் நடைமுறைகள்: தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின் (1920) கீழ் நிறுவனத்திற்கு அனுப்பப்பட்ட இளங்குற்றவாளிகள், தவறிழைத்த இளைஞர்கள், ஆதரவற்றோர், கட்டுக்கடங்காச் சிறுவர்கள் மற்றும் 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் நெறி பிறழ்ந்தவர்களாகக் கருதப்படும் சிறுமியர் மற்றும் பெண்டிருக்கு பாதுகாப்பு அளித்தல், நடத்தை (நெறிப்படுத்துதல்), கல்வி, வாழ்க்கைக் கல்விப் பயிற்சி மற்றும் மறுவாழ்வு அளித்தல் ஆகும். இத்துறை பிற்காப்பு நிறுவன வசதியை நிறுவனங்களிலிருந்து விடுதலை பெறும் இல்லவாசிகளுக்கு அளிக்கிறது.

6.3. சமூகநலத்துறை இயக்குநர், சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை இயக்குநர் (பொறுப்பில்) உள்ளார். மதுரையில் ஒரு மண்டல அலுவலகம், சீர்திருத்தப்பள்ளி மகளிர் ஒழுக்கக் கண்காணிப்புத்துறை, துணை இயக்குநரைக் கொண்டு மாநிலத்தின் தென்மண்டலங்களிலுள்ள நிறுவனங்களை நிலையான மற்றும் திறமையான மேற்பார்வை செய்ய இயங்கி வருகிறது.

தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920-ன் கீழுள்ள நிறுவனங்கள்:

6.4. 20 சீர்திருத்தப் பள்ளிகள். இம்மாநிலத்தில் 1920 ஆம் ஆண்டின் தமிழ்நாடு குழந்தைகள் சட்டத்தின்கீழ் உள்ளன. ஒன்பது அரசினால் நடத்தப்படுகின்றன. எஞ்சிய 11 தனியார் பள்ளிகள் தமிழ்நாட்டில் உள்ள நீதிமன்றங்கள் மூலம் அனுப்பப்படும் சிறுவர்கள் பயிற்சி பெற வேண்டிய அரசினரின்

மான்ய உதவியுடன் சிறுவர்களை பராமரித்து வருகின்றன. மனவளர்ச்சி குன்றிய குழந்தைகள், சென்னை, பாலவிகார் நிறுவனத்தின் கீழியங்கும் சீர்திருத்தப்பள்ளியில் அனுமதிக்கப் படுகின்றனர்.

6.5. 14 வரவேற்பு இல்லங்கள் (குறுகிய கால வரையறை) இம் மாநிலத்தில் உள்ளன. இவ்வரவேற்பு இல்லங்கள் நீதிமன்றங் களின் முன்விசாரணையேழ்க்கும் சிறுவர் சிறுமியரை விசாரணைக் காலங்களில் பொறுப்பேற்கின்றன. மொத்தமுள்ள 14 வரவேற்பு இல்லங்களில் பதினொன்று அரசினராலும், ஏனைய மூன்று வரவேற்பு இல்லங்கள், குழந்தைகள் பாதுகாப்பு சங்கம், விடுதலை பெற்ற கைதிகள் உதவிச் சங்கம் ஆகிய தனியார் நிறுவனங் களால் அரசினரின் நிதி உதவியுடன் நடத்தப்படுகின்றன. தனி யார் சீர்திருத்தப் பள்ளியிலுள்ள ஒவ்வொருவருக்கும் பராமரிப்பு மான்யம் தற்போது வழங்கப்பட்டு வருகிறது. சென்னையி லுள்ள நிறுவனங்களின் இல்லவாசிகளுக்கு, இல்லவாசி ஒருவ ருக்கு மாதம் ரூ. 45 வீதமும், சென்னை தவிர பிற நகரங்களி லுள்ள நிறுவனங்களின் இல்லவாசிகளுக்கு, இல்லவாசி ஒரு வருக்கு மாதம் ரூ. 35 வீதமும் பராமரிப்பு மான்யம் வழங்கப் பட்டு வருகிறது. அனைத்து நிறுவனங்களில் உள்ள இல்லவாசி களுக்கும் ஒரே சீராக இல்லவாசி ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு பராமரிப்பு மானியமாக ரூ. 70 வீதம் வழங்க தற்போது உத்தே சிக்கப்பட்டிருக்கிறது.

**சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்தமைத் தடுப்புச் சட்டம் 1956 ஆம் ஆண்டும் அதன் கீழ் இயங்கும் நிறுவனங்களும்:**

6.6. அரசினர் விழிப்பு/காப்பகங்கள் (நீண்டகால வரை யறை) 1956 ஆம் ஆண்டின் சிறுமியர் மற்றும் பெண்டிர் பரத்த மைத் தடுப்புச் சட்டத்தின் கீழ் சேர்க்கப்படும் சிறுமியர் மற்றும் பெண்களுக்கு புகலிடமும் பயிற்சியும் அளிக்கின்றன. ஆறு அரசினர் மகளிர் காப்பகங்கள் இத்துறையில் உள்ளன. இவற்றைத் தவிர எட்டு (குறுகிய கால) மீட்பு இல்லங்கள் சிறுமியர் மற்றும் பெண்களை நீதிமன்ற விசாரணைக் காலங் களில் பொறுப்பேற்கின்றன. இக்குறுகிய கால வரையறை யுள்ள நிறுவனங்கள் நீண்டகால வரையறையுள்ள பாதுகாப்பு இல்லங்களுக்கு துணையானவையாகும்.



பிற்காப்பு இல்லங்கள்:

6.7. மூன்று பிற்காப்பு இல்லங்கள் (சட்டத்தின்பாற்படாத) உள்ளன. இவற்றுள் இரண்டு சிறுவர்களுக்காகவும், ஒன்று சிறுமி யர் மற்றும் பெண்டிருக்காகவும் உள்ளது. பெண்களுக்கான ஒரு இல்லம் வடஆற்காடு மாவட்டம் வேலூரிலும், சிறுவர்களுக்கான இரண்டு இல்லங்கள் ஆத்தூரிலும் (செங்கற்பட்டு மாவட்டம்) மதுரையிலும் உள்ளன. இவ்வில்லங்கள் தொழிற்கல்விப் பயிற்சியை, சீர்திருத்த இல்லங்களிலிருந்து விடுவிக்கப்பட்ட இல்லவாசிகளுக்கு அவர்கள் சுயவேலைக்குத் தகுதி பெறுமள வுக்கு தொடர்ச்சியாக பயிற்றுவிக்கின்றன. உடைகள், உள் ளாடைகள் மற்றும் தோல் பொருட்கள், உற்பத்தியில் பயிற்று விக்கும் ஒரு தொழில் நிலையம் வேலூர் அரசினர் மகளிர் பிற்காப்பில்லத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. இல்லவாசிகள் அகதிப் பெண்கள் மற்றும் உள்ளூர்ப் பெண்கள் இந்நிலையத்தில் பயிற்சிக்கென தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

**கல்வி:**

6.8. அனைத்துச் சீர்திருத்தப் பள்ளிகளும் 8 ஆம் வகுப்பு வரை கல்வி பயிற்றுவிக்கப்படுவதுடன் இவை கல்வித்துறையால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி பிரிவுகளாக இயங்கி வருகின்றன. இவை நீங்கலாக செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப் பள்ளி மற்றும் சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப் பள்ளிகளில், உயர்நிலைப்பள்ளிப் பிரிவுகள் இயங்கி வருவதுடன் மாணவர்களுக்கு 10 ஆம் வகுப்பு வரை உயர் கல்வி கற்பிக்கப் படுகிறது. உயர் கல்வியில் நாட்டமுள்ள இல்லவாசிகள் மேல் நிலைப்பள்ளி/கல்லூரி/தொழிற்பயிற்சி நிலையங்கள்/பல்தொழில் நுட்பக் கல்லூரி ஆகியவைகளில் பயிற்றுவிக்கப்படுகின்றனர்.

**வாழ்க்கை தொழிற்கல்வி:**

6.9. கீழ்குறிப்பிட்ட தொழிற்கல்விப் பயிற்சிகளும் நிறுவனங் களில் இல்லவாசிகள் பயன்பெற பயிற்றுவிக்கப்படுகின்றனர் :—

(அ) சீர்திருத்தப் பள்ளிகள் மற்றும் மகளிர் காப்பகங்கள்—

1. தச்சு;
2. தையல் மற்றும் பூவேலை;
3. நெசவு;
4. பாய் நெசவு;
5. கருமார் பணி;

6. உலோகப் பணி ;
7. தோட்டம் மற்றும் வேளாண்மை ;
8. கொத்து வேலை ;
9. புத்தகம் கட்டுதல்;
10. இசைக்கருவி;
11. மாட்டுப்பண்ணை;
12. சோப்பு தயாரிப்பு ;

(ஆ) பிற்காப்பு இல்லங்கள்—
1. புத்தகம் கட்டுதல் ;
2. கருமார் பணி ;
3. தையல் ;

மேலேயுள்ள தொழிற்பிரிவு அலகுகளில் சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளி மற்றும் தஞ்சாவூர் அரசினர் இள நிலை சீர்திருத்தப் பள்ளியின் தையற்கூடங்களும், செங்கற்பட்டு அரசினர் முதுநிலை சீர்திருத்தப்பள்ளியில் தச்சு மற்றும் நெசவுத் தொழிற்கூடங்களும் இயந்திரமயமாக்கப்பட்டு மின்பொறிகளின் உதவியால் மாணவர்களுக்கு உற்பத்தி செய்ய பயிற்றுவிக்கவும், இல்ல நீக்கம் பெற்று வெளியேறும் அவர்கள் நிறுவனங்களில் வேலைவாய்ப்புப் பெற வசதியும் செய்யப்பட்டுள்ளது. தஞ்சாவூர் அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளி மற்றும் இராணிப்பேட்டை அரசினர் இளநிலை சீர்திருத்தப்பள்ளியிலும் உள்ள தச்சுப் பிரிவுகள் இயந்திரமயமாக்கப்பட்டுள்ளதுடன், சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் ஒரு மின் சலவைக்கூடமும் துவக்கப்பட்டு இயங்கி வருகிறது.

6.10. ஒரு குழந்தைகள் காப்பகம், சென்னை அரசினர் பெண்கள் சீர்திருத்தப்பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வருகிறது. 10 மாணவிகள் இப் பிரிவில் பயிற்சி அளிக்கப்படுகின்றனர். சென்னை அரசினர் மகளிர் காப்பகத்தில் 20 இல்லவாசிகளுக்கென இல்லவியல் பயிற்சியும் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

6.11. அரசினர் பற்றவைப்பு மற்றும் உற்பத்தி தொழிற்கூடம் ஒன்றினை இராணிப்பேட்டை அரசினர் இளநிலை சீர்திருத்தப் பள்ளியில் ரூ. 5.34 லட்சம் செலவில் துவங்க ஆணை பிறப்பித்துள்ளனர். 20 மாணவர்கள் இத்தொழிற்கூடத்தில் பயிற்சி பெறுவர்.





6.12. விடுதலையான இல்லவாசிகளுக்கு புதுவாழ்வு அளிக்க தமிழ்நாடு நல நிதி ஒன்று துவங்க அரசு ஆணை பிறப்பித்துள்ளது. இந்நிதி உதவி மகளிர் காப்பகங்களிலிருந்து விடுதலை பெறும் தேவைப்படும் பெண்களுக்கு வழங்கப்படும். தொடர் ஆண்டு மான்யமாக ரூ. 5 இலட்சம் இந்நிதிக்கு வழங்கப்படும். இதில் ரூ. 2.50 இலட்சம் அரசின் நேரிடை மான்யமாகவும், ரூ. 2.50 இலட்சம் தமிழ்நாடு முதலமைச்சர் பொது நிவாரண நிதியிலிருந்து மான்யமாகவும் வழங்கப்படும். ஒவ்வொரு ஆண்டும் 100 இல்லவாசிகள் இத்திட்டம் மூலம் பயன்பெறுவர்.

**சீர்திருத்தப் பள்ளிகளுக்கு இடையேயான விளையாட்டுப் போட்டிகள்:**

6.13. 1980-81 ஆம் ஆண்டு முதல் சீர்திருத்தப்பள்ளி மாணவர்களுக்கிடையே ஒருமுகப்படுத்தப்பட்ட உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுப் போட்டிகள் ஆண்டுதோறும் நடத்தப்பட்டு வருகின்றன. இப்போட்டியினால் மாணவர்களின் திறமை உயர்வதுடன் அவர்களிடையே ஒழுக்கம், கட்டுப்பாடு, சகோதரத்துவம், தலைமைப் பொறுப்பு ஆகிய பண்புகள் வளர வாய்ப்பளிக்கப்படுகிறது.

**இளங்குற்றவாளி வழிகாட்டி நிலையங்கள்:**

6.14. சென்னை, மதுரை மற்றும் வேலூர் ஆகிய மூன்று இடங்களில் உள்ள இளங்குற்றவாளி வழிகாட்டி நிலையங்கள், இளைஞர் நீதிமன்றங்கள் மற்றும் தனியார் நிறுவனங்கள் அனுப்பும் சிறுவர், சிறுமியரைப் பற்றிய மனநிலை அறிக்கைகளை அளித்து வருவதுடன், சிறுவர்களிடையே விளங்கும் குற்றவியல் தன்மை பற்றி ஆய்வுகளும் மேற்கொள்கின்றன. இவ்வழிகாட்டி நிலையங்கள் அருகிலுள்ள வரவேற்பு இல்லங்களின் கோரிக்கைகளை கவனிக்கின்றன இந்நிலையங்களின் மீதான செலவினம் அரசால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது. இவ்வழிகாட்டி நிலையங்கள் செயற்குழுக்களால் நடத்தப்படுகின்றன.

மறுவாழ்வு:

6.15. சீர்திருத்த நிறுவனங்களில் இல்லவாசிகள் சீர்திருத்தப் பயிற்சி பெற்ற பின்னர், அவர்களை சமுதாயத்தில் தகுந்த இடத்தில் அமர்த்துவதன் மூலமாக மறுவாழ்வு அளிக்கப்படுகிறது. மறுவாழ்வு அளிக்கப்படும் முறைகளாவன:—

(1) விருப்பமுள்ள (ஆதரவற்ற) பெண்களுக்கு திருமண ஏற்பாடு செய்தல்;

(3) வேலைத் திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள்

(3) வேலைத் திறமையுள்ள மாணவர்களுக்கு அவர்கள் பயின்ற தொழிற்கல்விக்கேற்ற கருவிகள் வழங்குதல்;

திருமணம் செய்துகொள்ளும் மணமக்களுக்கு அவர்கள் குடும்பம் துவங்க சீதனமாக ரூ. 1,000-மும் மற்றும் திருமணச் செலவுகளுக்கென ரூ. 100-ம் அரசால் வழங்கப்படுகிறது. கடந்த மூன்று ஆண்டுகளில் (1—1—1984 முதல் 31—12—1986 முடிய) 7 இல்லவாசிகளுக்கு திருமணம் செய்யப்பட்டு மறுவாழ்வு அளிக்கப்பட்டுள்ளது.

அரசின் ஆணைகளின்படி தமிழ்நாடு தேர்வாணைக் குழுவினரின் தேர்வு வரம்புக்கு உட்படாத இத்துறையின் அனைத்து பணியிடங்களும் மாவட்ட வேலைவாய்ப்பகங்கள் மூலம். தகுதி வாய்ந்த முன்னாள் இல்லவாசிகளைக் கொண்டு நிரப்பப்படுகின்றன. இதற்கென மாவட்ட வேலைவாய்ப்பகங்களில் தனியாக பதிவேடும் பராமரிக்கப்படுகின்றது.

வரவு-செலவு:

6.16. இத்துறையின் 1987-88 ஆம் ஆண்டின் வரவு-செலவு மதிப்பீடு (பணியாளர் சம்பளங்கள் உள்ளிட்டது) ரூ. 207.23 இலட்சம் ஆகும். மான்ய உதவியாக தனியார் நிறுவனங்களுக்கு செலுத்தப்படும் தொகை ரூ. 8.15 இலட்சம் ஆகும்.

**இளைஞர் நீதிச் சட்டம், 1986:**

6.17. தற்போது நடைமுறையில் உள்ள தமிழ்நாடு குழந்தைகள் சட்டம் 1920-க்கு பதிலாக பாராளுமன்றத்தில் ஒப்பளிக்கப்பட்டுள்ள சிறப்பு வாய்ந்த மைய அரசுச் சட்டமாகிய 'இளைஞர் நீதிச்சட்டம், 1986'-ல் 1—5—1987 முதல் தமிழ்நாட்டில் நடைமுறைப்படுத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதனை நடை-





முறைப்படுத்துவதன் மூலம் ஆதரவற்ற சிறுவர்கள் மற்றும் குற்றம் புரிந்த சிறுவர்கள் ஒரே நிறுவனத்தில் பராமரிக்கப்படுவது தவிர்க்கப்படும். ஆதரவற்ற சிறுவர்களும் குற்றம் புரிந்த சிறார்களும் தனித்தனியே பயிற்றுவிக்கப்படுவர். குற்றம் புரிந்த சிறார்கள் மற்றும் ஆதரவற்ற சிறார்களின் பொறுப்பு பயிற்சி மற்றும் மறுவாழ்வு ஆகியவற்றில் ஒரே சீரான கொள்கையை இந்திய நாடு முழுவதும் கடைப்பிடிக்கும் நோக்கத்தான் இப் புதிய சட்டம் தோற்றுவிக்கப்பட்டுள்ளது.

## அத்தியாயம் 7.

### முதியோர் உதவித் தொகை திட்டம்.

7.1. உற்றார் உறவினர் ஆதரவின்றி, வாழ வழியற்றவர் களுக்கு சமூகப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு, கீழ்க்கண்ட வகைகளின்கீழ் முதியோர் உதவித்தொகை திட்டத்தை மாநில அரசு செயல்படுத்துகிறது:—

(அ) முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம் (1—4—1962 முதல்).

(ஆ) முதியோர் உதவித் தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம் (1—11—1974 முதல்).

(இ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவை) திட்டம் (1—6—1975 முதல்).

(ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மை தொழிலாளர்) திட்டம் (21—8—1981 முதல்).

(உ) முதியோர் உதவித்தொகை திட்டம் (கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்கள்) (25—4—1986 முதல்).

**முதியோர் உதவித்தொகை (சாதாரணம்) திட்டம்:**

7.2. பார்வையற்ற, தொழுநோய், மனநோய், பாரிசவாய்வு மற்றும் அவயமிழந்த வருவாய் ஈட்ட முடியாத, ஆதரவற்ற நபர்கள் உதவித்தொகை பெற குறைந்தபட்ச வயது வரம்பு 60 ஆகும். மற்ற ஆதரவற்ற நபர்களுக்கு குறைந்தபட்ச வயது வரம்பு 65 ஆகும். இந்த திட்டம் 1—4—1962 முதல் செயல் படுத்தப்படுகிறது.

**முதியோர் உதவித்தொகை (ஆதாரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம்:**

7.3. 1—11—1974 முதல் இந்தத் திட்டம் 55 வயது நிரம்பிய ஆதாரவற்ற உடல் ஊனமுற்றவர்களுக்கு அமுலாக்கப்பட்டது. 1975-ல் குறைந்தபட்ச வயது வரம்பு 45 ஆகக் குறைக்கப்பட்டது. இந்த குறைந்தபட்ச வயது வரம்பு பார்வையற்றவர்களுக்கு பொருந்தாதென்று 1979-ம் ஆண்டில் அரசு ஆணையிட்டது.

50 சதவீதம் மற்றும் அதற்குமேல் உடல் ஊனமுற்ற ஆதரவற்ற நபர்கள் இந்த உதவித்தொகை பெற தகுதியானவர்கள், உடல் ஊனம் தொடர்பானச் சான்று குறிப்பிட்ட படிவத்தில், மருத்துவக் கல்லூரி/அரசு மருத்துவ மனை/ஆரம்பர் சுகாதார மையங்களைச் சார்ந்த அரசு மருத்துவர்களால் இலவசமாக அளிக்கப்படும். இந்த திட்டம், தொழுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் 1982-ம் ஆண்டில் விரிவுபடுத்தப்பட்டது.

**3. முதியோர் உதவித்தொகை (ஆதாரவற்ற விதவை) திட்டம்:**

7.4. 1—6—1975 முதல் இந்தத் திட்டம் 45 வயது நிரம்பிய ஆதரவற்ற விதவைகளுக்கும் அமுலாக்கப்பட்டது. 1978-ல் இந்த குறைந்தபட்ச வயது வரம்பு 40 ஆகக் குறைக்கப்பட்டது.

**முதியோர் உதவித் தொகை (ஆதாரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்) திட்டம்:**

7.5. 21—8—1981 முதல் 60 வயது நிரம்பிய ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்களுக்கு அமுலாக்கப்பட்டு செயல்படுத்தப்படுகிறது.

**கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற பெண்களுக்கு உதவித் தொகை:**

7.6. கணவனால் கைவிடப்பட்ட ஆதரவற்ற 30 வயதுக்குக் குறையாத பெண்களுக்கும் முதியோர் உதவித்தொகை திட்டத்தின் அனைத்து சலுகைகளையும் அளிக்க அரசு ஆணையிட்டுள்ளது. இந்த வகையின்கீழ் 24,758 நபர்கள் பயன்பெற ரூ. 2.04 கோடி தொகையை ஆண்டுச் செலவினமாகவும் அரசு அனுமதித்துள்ளது.



**உதவித் தொகை ஒப்பளிப்பு அளிக்கப்படும் முறை:**

7.7. மேற்கண்ட திட்டத்தின்கீழ் உதவித்தொகை ஒப்பளிப்பு அளிக்கும் அதிகாரம் கோட்டாட்சியர்களுடையது. கோட்டாட்சியரின் ஆணையை எதிர்த்து மாவட்டாட்சியர்களுக்கு மேல் முறையீடு (முத்திரை கட்டணமின்றி) செய்ய மனுதாரருக்கு [illegible] வாய்ப்புள்ளது.

**உதவித் தொகை:**

7.8. முதியோர் உதவித்தொகை திட்டம் அமுல்படுத்தப்பட்ட நாளாகிய 1—4—1962 முதல் 31—3—1979 வரை ஒவ்வொருவருக்கும் மாதம் ரூ. 20 உதவித்தொகையாக அளிக்கப்பட்டது. 1—4—1979 முதல் 31—3—1982 வரை மாதம் ரூ. 25 ஆகவும், 1—4—1982 முதல் இது நாள் வரை மாதம் ரூ. 35 ஆகவும் வழங்கப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் உதவித் தொகை பண அஞ்சல் மூலம் உதவித்தொகை பெறுபவர்களின் முகவரிக்கு வட்டாட்சியரால் அனுப்பப்படுகிறது. இதற்கான பண அஞ்சல் கமிஷன் செலவையும் மாநில அரசே ஏற்றுக்கொள்கிறது.

**இலவச கைத்தறி ஜனதா ஆடைகள்:**

7.9. ஆண்டுக்கு இருமுறை பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் அன்று உதவித்தொகை பெறும் ஆண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வெட்டியும், பெண்களுக்கு தலா ஒரு கைத்தறி ஜனதா வண்ண/வெள்ளை சேலையும் 1979 சுதந்திர நாள் முதல் அளிக்கப்பட்டு வருகிறது.

**இலவச அரிசி மற்றும் மதிய சத்துணவு வழங்குதல்:**

7.10. 1—11—1980 முதல் உதவித்தொகை பெறும் ஒவ்வொருவருக்கும் வாரம் ஒரு கிலோ சன்னரக அரிசி இலவசமாக வழங்கப்படுகிறது.

15—1—1983 முதல் உதவித் தொகை பெறுபவர்களுக்கு முதலமைச்சர் சத்துணவு திட்டம் விரிவுபடுத்தப்பட்டது. இதன்படி உதவித் தொகை பெறுபவர்களுக்கு நாள்தோறும் மதிய சத்துணவு இலவசமாக வழங்கப்படுகிறது. இந்த உணவு கீழ்க்கண்ட அளவில் இருக்கும். சத்துணவிற்கான செலவு, ஒரு நபருக்கு ஒரு வேளைக்கு 93 பைசா (இதர செலவுகளின்றி) ஆகிறது.

[1987 ஏப்ரல் 21

| | கிராம். |
|---|---|
| அரிசி | |
| பருப்பு | 200 |
| எண்ணெய் | 15 |
| காய்கறி மற்றும் தாளிதம் | 10 |
| | 50 |

மதிய சத்துணவு பெறுபவர்களுக்கு மட்டும் வாரம் ஒரு கிலோ அரிசிக்கு பதிலாக 15—1—1983 முதல் வாரம் அரை கிலோ அரிசி வழங்கப்படுகிறது.

7.11. முதியோர் உதவித்தொகை திட்டத்தின்கீழ் பயனடைவோரின் எண்ணிக்கை மற்றும் அதிகபட்ச, தோராயமான ஆண்டுச் செலவினம் :—

| | எண்ணிக்கை. |
|---|---|
| (அ) முதியோர் உதவித் தொகை (சாதாரணம்) திட்டம். | 1,54,404 |
| (ஆ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற உடல் ஊனமுற்றோர்) திட்டம். | 19,157 |
| (இ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற விதவைகள்) திட்டம். | 89,391 |
| (ஈ) முதியோர் உதவித்தொகை (ஆதரவற்ற வேளாண்மைத் தொழிலாளர்கள்) திட்டம். | 43,348 |
| மொத்தம் | 3,06,300 |

ஒரு நபருக்கு ஓராண்டில் செலவிடப்படும் விவரங்கள் அடங்கிய அட்டவணை இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. அதிகபட்ச தோராயமான ஆண்டுச் செலவினம் ரூ. 26.64 கோடி ஆகும்.



முதியோர் உதவித் தொகை திட்டத்தின் கீழ் ஓராண்டில் ஒரு நபருக்கு அரசு செலவிடும் தொகை விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வரிசை எண். | செலவின விவரம். | சத்துணவு உட்கொண்டால். | | சத்துணவு உட்கொள்ளாவிடில். | |
|---|---|---|---|---|---|
| | | ஆண். | பெண். | ஆண். | பெண். |
| (1) | (2) | 3(அ) | 3(ஆ) | 4(அ) | 4(ஆ) |
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 1. | உதவித் தொகை மாதம் ரூ. 35 வீதம் 12 மாதங்களுக்கு (35×12) .. .. | 420.00 | 420.00 | 420.00 | 420.00 |
| 2. | உதவித் தொகை அனுப்புவதற்கான பண அஞ்சல் செலவுத் தொகை (பண அஞ்சல் அட்டைக்கான விலை உட்பட) மாதம் ரூ. 1.30 வீதம் 12 மாதங்களுக்கு (1.30×12) .. .. .. | 15.60 | 15.60 | 15.60 | 15.60 |
| 3. | பொங்கல் பண்டிகை மற்றும் சுதந்திர நாள் (ஆண்டு இருமுறை) இலவச துணிகள் வழங்குதல்— | .. | .. | .. | .. |
| | (அ) இரண்டு கைத்தறி ஜனதா வேட்டிகள் ஒன்று ரூ. 18.50 வீதம் .. .. | 37.00 | .. | 37.00 | .. |
| | (ஆ) இரண்டு கைத்தறி ஜனதா வண்ண சேலைகள் ஒன்று ரூ. 22.25 வீதம் | .. | 44.50 | .. | 44.50 |

| (1) | (2) | 3(அ) | 3(ஆ) | 4(அ) | 4(ஆ) |
|---|---|---|---|---|---|
| | | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. | ரூ. பை. |
| 4. | மதிய சத்துணவு உட்கொள்பவர்களுக்கு வாரம் அரை கிலோ சன்ன ரக அரிசி (ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 2.00) (½×52×2) .. .. .. | 52.00 | 52.00 | .. | .. |
| 5. | மதிய சத்துணவு உட்கொள்ளாதவர்களுக்கு வாரம் ஒரு கிலோ சன்ன ரக அரிசி (ஒரு கிலோ அரிசியின் விலை ரூ. 2.00) (52×2) .. .. .. .. | .. | .. | 104.00 | 104.00 |
| . | ஆண்டு முழுவதும் இலவச மதிய சத்துணவு (ஒரு நபருக்கு) ஒரு வேளை உணவுக்கான செலவு 93 பைசா (0.93×365) .. | 339.45 | 339.45 | .. | .. |
| | மொத்தம் .. | 864.05 | 871.55 | 576.60 | 584.10 |

அதிக பட்ச, தோராயமான ஆண்டுச் செலவினம் ரூ. 870×3,06,300 = ரூ. 26,64,81,000.



## இணைப்பு IV

(365 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க.)

### மானியக் கோரிக்கை எண் 27.

### தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம்.

### கொள்கையும் திட்டங்களும்.

கதர் கிராமத் தொழில்களின் வளர்ச்சியினை துரிதப்படுத்தி, நல்ல முன்னேற்றம் அடையச் செய்யும் நோக்கத்துடன் 1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியச் சட்டம் 18-ன்படி 1960 ஆம் ஆண்டு ஏப்ரல் திங்கள் முதல் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் துவக்கப்பட்டது.

2. ஊரகப் பகுதிகளில் கிடைக்கும் மூலப் பொருள்களை கொண்டு நலிவுற்ற ஏழை மக்களுக்கு சுய வேலை வாய்ப்பு அளித்து அவர்களது பொருளாதார நிலையை உயரச் செய்வதே இவ்வாரியத்தின் முக்கிய குறிக்கோளாகும். தமிழ்நாட்டில் கதர் கிராமத் தொழில் திட்டங்கள் (1) வாரிய அலகுகள் (2) கூட்டுறவு சங்கங்கள் மற்றும் (3) கிராமப்புற கைவினைஞர்களுக்கு சுய வேலை துவங்க நிதி உதவிகள் அளித்தல் ஆகிய வழிகளில் செயல் படுத்தப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு அரசின் கொள்கைகளுக்கு இணங்க கிராமப் பகுதியில் வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி நலிந்த பிரிவினரை முன்னேறச் செய்ய ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் வளர்ச்சித் திட்டம், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், மேற்கு தொடர்ச்சி மலை வளர்ச்சித் திட்டம், வறட்சிப் பகுதி மேம்பாட்டுத் திட்டம் போன்ற சிறப்புத் திட்டங்களை மாவட்ட ஊரக வளர்ச்சி நிறுவனம் மற்றும் தமிழ்நாடு ஆதி திராவிடர் வீட்டு வளர்ச்சி நிறுவனங்களுடன் ஒருங்கிணைந்து இவ்வாரியம் செயல்படுத்தி வருகிறது.

3. கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தியில் தமிழ்நாடு இந்திய அளவில் முதல் இடத்தையும் கதர் உற்பத்தியில் இரண்டாவது இடத்தையும் வகிக்கின்றது.

4. வாரியம் 7.20 இலட்சம் கைவினைஞர்களுக்கு தொடர்ந்து வேலை வாய்ப்பு அளித்து வருகிறது. 1987-88-ல் 75,000 கைவினைஞர்களுக்கு கூடுதல் வேலை வாய்ப்பு அளிக்க வாரியம் முனைவதால் இவ்வாண்டு இறுதியில் வேலை வாய்ப்பு 7.95 இலட்சங்களாக உயரும்.

### கதர் கிராமத் தொழில் திட்டங்கள்:

5. தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் கீழ்க்காணும் கதர் கிராமத் தொழில்களை வளர்ச்சியடையச் செய்து வருகிறது:—

1. கதர்.
2. பனைத் தொழில்.
3. செக்கு எண்ணெய்.
4. கைக்குத்தலரிசி மற்றும் தானியங்களையும் பருப்பு வகைகளையும் பதப்படுத்துதல்.
5. தோல் தொழில்.
6. மட்பாண்டம் (செங்கல் மற்றும் ஓடுகள்).
7. சுண்ணாம்புக்கல் மற்றும் சுண்ணாம்புச் சூளை (காளவாய்).
8. தேனீ வளர்த்தல்.
9. தச்சு மற்றும் கருமார்த் தொழில்.
10. பழம் பக்குவப்படுத்தல்—பாதுகாத்தல்.
11. கைமுறைக் காகிதம்.
12. வெல்லம் மற்றும் கந்தசாரி சர்க்கரை.
13. உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு.
14. நார்த் தொழில், பாய் முடைதல்.
15. பிரம்பு மற்றும் மூங்கில்.
16. பாலிவஸ்திரா.
17. வேதுபத்தி.
18. வனத் துறை பொருட்கள் சேகரித்தல்.

### கதர்:

6. வாரியத்தின் கீழ் 591 கிராமிய நூற்பு நிலையங்களும், 5 பஞ்சு உடைக்கும் அலகுகளும், 67 பஞ்சு பட்டை போடும் அலகுகளும் உள்ளன. இவற்றின் மூலம் கிராமப்புற மக்களுக்கு பெரும்பாலும் பெண்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கப்படுகிறது. ஆறு கதிர் மற்றும் பன்னிரெண்டு கதிர் இராட்டைகள் இந்த நூற்பு நிலையங்களில் பயன்படுத்தப்படுகின்றன. இவற்றின் மூலம் நூற்கப்படும் நூல் சிட்டங்கள் நெசவாளர்களுக்கு கதர் துணி நெசவு செய்ய விநியோகிக்கப்படுகிறது. வாரியத்தின் கீழ் 81 கதர் நெசவு நிலையங்கள் உள்ளன.



### கதர் நூல் உற்பத்தி:

7. 1984-85-ல் 425.25 இலட்சம் சிட்டமாக இருந்த கதர் நூல் உற்பத்தி 1985-86-ல் 441.99 இலட்சம் சிட்டமாக அதிகரித்துள்ளது. 1986-87-ல் கதர் நூல் உற்பத்தி 455.00 இலட்சம் சிட்டமாக இருக்கும்.

### கதர் உற்பத்தி:

8. 1984-85-ல் ரூ. 788.85 இலட்சத்திலிருந்து 1985-86ல் ரூ. 821.12 இலட்சத்திற்கு கதர் உற்பத்தி அதிகரித்துள்ளது. இது 1986-87-ல் ரூ. 900.00 இலட்சத்தை அடையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு கவர்ச்சி மிக்க ரகங்களும், நேர்த்தியாக அச்சிடப்பட்ட துணி வகைகளும் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை வெளி மாநிலங்களிலும் விற்பனை செய்யப்பட்டன.

9. கதர்த் தொழில் மூலம் நூற்பாளர்கள், நெசவாளர்கள், பட்டு நூல் இழைப்பவர்கள், சாயமிடுபவர்கள், துணி சலவை செய்பவர்கள், தையற்காரர்கள் இப்படி சுமார் 44,100 பேர் வேலை வாய்ப்புப் பெற்று வருகின்றார்கள்.

### பட்டு உற்பத்தி:

10. வாரியத்தின் கீழ் 17 பட்டு உற்பத்தி அலகுகளும், 6 முறுக்கு அலகுகளும் செயல்படுகின்றன. கதர் பட்டு மக்களிடத்தில் நல்ல பெயரை பெற்றுள்ளது.

11. 1984-85-ல் ரூ. 263.63 இலட்சமாக இருந்த பட்டு உற்பத்தி 1985-86ல் ரூ. 334.66 இலட்சமாக அதிகரித்துள்ளது. 1986-87-ல் பட்டு உற்பத்தி ரூ. 400.00 இலட்சமாக இருக்கும்.

12. கதர் பட்டு ரகங்களுக்கு நல்ல வரவேற்பு ஆண்டுக்கு ஆண்டு அதிகரித்து வருகிறது. மற்ற மாநிலங்களுக்கும் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்ய இயலும் என்ற நம்பிக்கையுள்ளது. எனவே பட்டு உற்பத்தியினை அதிகரிக்க 6 புதிய பட்டு அலகுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. 1987-88-ல் பட்டு உற்பத்தி ரூ. 500.00 இலட்சத்தினை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இதன் மூலம் மேலும் 300 நெசவாளர் குடும்பங்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்க இயலும்.

[1987 ஏப்ரல் 21

**பட்டு நூல் இழைக்கும் கூட்டுறவுச் சங்கங்கள் :**

13. தற்பொழுது வாரியத்தின் கீழ், பட்டுக் கூட்டிலிருந்து பட்டு நூல் இழைக்கும் கூட்டுறவு சங்கம் தஞ்சை மாவட்டம் வேதாரண்யத்தில் இயங்கி வருகிறது. 1987-88-ல் மேற்கொண்டு 3 பட்டு நூல் இழைக்கும் கூட்டுறவு சங்கங்களை கோவை மாவட்டம் சேலூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம் வையாவூர் ஆகிய இடங்களில் வாரியம் துவக்கவுள்ளது.

**தையல் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் :**

14. இப்பொழுது சென்னை, திருப்பூர் மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில் மூன்று தையல் அலகுகள் செயல்பட்டு வருகின்றன. ஆயத்த ஆடைகள், மெத்தை உறைகள், தலையணை உறைகள் முதலியன தயாரிக்கப்பட்டு வருகின்றன. தேர்ச்சி பெற்ற தையல் தொழிலாளர்களைக் கொண்டு மூன்று கூட்டுறவுச் வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. இதற்

**கைவினைஞர்களுக்கான நலத் திட்டங்கள்:**

15. நூற்பாளர்களுக்கும், நெசவாளர்களுக்கும் வாரியம் பல் வேறு நலத் திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. இதற் கென நூற்பாளர்கள், நெசவாளர்கள் நல நிதி ஒன்று உருவாக்கப் பட்டுள்ளது. தொழிலாளர்கள் அவர்கள் ஊதியத்திலிருந்து 5 சதவீதம் செலுத்துகின்றார்கள். அதே அளவினை வாரியம் தனது பங்காகச் செலுத்தி வருகிறது. இது தவிர, அவர்களது ஊதியத்தில் 8-1/3 சதவிகிதத்தை ஊக்க ஊதியமாகவும் அளித்து வருகிறது.

16. இப்பொழுது வீட்டு வளர்ச்சி வாரியத்துடன் இணைந்து நெசவாளர்களுக்காக ஒரு புதிய வீடு கட்டும் திட்டத்தினை செயல்படுத்த வாரியம் முயற்சி செய்து வருகிறது. அத்துடன் ஆயுள் பாதுகாப்பு (எல்.ஐ.சி.) கழகத்துடன் இணைந்து குழு பாதுகாப்பு திட்டம் ஒன்றினை 1987-88-ல் கதர் நெசவாளர்களின் நலனுக்காக வாரியம் அமுல்படுத்தவுள்ளது.



1087 ஏப்ரல் 21]

**தள்ளுபடி:**

17. 1983-84 ஆம் ஆண்டிலிருந்து தமிழக அரசு கதர், பருத்தி மற்றும் பட்டு ரகங்களுக்கு பண்டிகைக் காலங்களில் மொத்தம் ஆண்டுக்கு 90 நாட்களுக்கு 10 சதவிகிதம் தள்ளுபடி அளித்து வருகிறது. பாலிவஸ்திரா துணிகளுக்கும் தமிழக அரசு 1983-84 ஆம் ஆண்டிலிருந்து 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடியாக ஆண்டுக்கு 60 நாட்களுக்கு வழங்கி வருகிறது. கதர் கிராமத் தொழில் ஆணையம் கதர் ரகங்களுக்கு 15 சதவிகிதம் தள்ளுபடியை ஆண்டு முழுமையும் வழங்கி வருகிறது. அத்துடன் அவ்வாணையம் 10 சதவிகிதம் சிறப்புத் தள்ளுபடியை ஆண்டுக்கு 120 நாட்களுக்கு வழங்கி வருகிறது.

**கிராமத் தொழில்கள்:**

18. ஊரகப் பகுதிகளில் கிடைக்கின்ற மூலப் பொருள்களையும் மனித சக்தியையும் பயன்படுத்தி பின்தங்கிய ஊரகப் பகுதிகளிலிருந்து வறுமையை அகற்றுவதற்கு இவ்வாரியம் முழு முயற்சி செய்து வருகிறது. குறைவான மூலதனத்தில் அதிக வேலை வாய்ப்பு அளிப்பது, கிராமத் தொழில் திட்டங்களின் சிறப்பாகும்.

19. இவ்வாரியத்தின்கீழ் 260 துறை அலகுகளும், 1,340 தொழிற் கூட்டுறவுச் சங்கங்களும் செயல்பட்டு வருகின்றன. வாரியம் 40,256 தனிப்பட்ட கைவினைஞர்களுக்கு பல்வேறு தொழில்களைச் செய்திட நிதியுதவி அளித்துள்ளது. 1984-85-ல் கிராமத் தொழில் பொருட்கள் உற்பத்தி-விற்பனை, முறையே ரூ. 10,693 இலட்சமாகவும் ரூ. 10,298 இலட்சமாகவும் இருந்தது. 1985-86-ல் உற்பத்தி-விற்பனை, முறையே ரூ. 10,972 இலட்சமாகவும், ரூ. 11,612 இலட்சமாகவும் உயர்ந்துள்ளது. 1986-87-ல் உற்பத்தி ரூ. 12,015 இலட்சத்திற்கும், விற்பனை ரூ. 12,223 இலட்சத்திற்கும் அதிகரிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

**பனைத் தொழில்:**

20. நம் நாட்டில் அதிக அளவில் பனை மரங்கள் உள்ள மாநிலம் தமிழ்நாடுதான். இந்தியாவிலுள்ள மொத்தம் 8 கோடி பனை மரங்களில் தமிழ்நாட்டில் மட்டும் 5 கோடிக்கும் அதிகமான பனை மரங்கள் உள்ளன. எனவே பனைத் தொழிலாளர்களுக்கு பெருமளவில் இத்திட்டத்தின் மூலம் வேலை வாய்ப்பு அளிக்கப்

படுகிறது. இத்திட்டம் ஆரம்ப கூட்டுறவுச் சங்கம், மாவட்ட பனைவெல்ல கூட்டுறவுச் சங்கங்கள், மாநில பனைவெல்ல இணையம் ஆகியவற்றின் மூலம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. பதநீர்; பனைவெல்லம், பனைவெல்ல ஜாம் கலந்த பனம் சீனி சாக்லேட் பாப்டா மற்றும் பாம்கோலா போன்ற இனிய குளிர் பானங்கள், செழுமைப்படுத்தப்பட்ட பழச்சாறு, ஐஸ்கிரீம் மற்றும் பனை ஓலை வண்ணப் பொருள்கள் தயாரிக்கப்படுகின்றன.

21. பனைத் தொழில் நல்ல அந்நியச் செலாவணியினை ஈட்டுகிறது. ரூ. 77 இலட்சம் மதிப்புள்ள பனை நார் வகைகள் 1985-86-ல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளன. 1986-87ல் இந்த ஏற்றுமதி ரூ. 100 இலட்சமாக உயரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

22. தமிழகத்தில் 1987 ஜனவரி 1 ஆம் நாள் முதல் மதுவிலக்கு அமுல்படுத்தப்பட்டதால் பாதிக்கப்பட்ட 30.000 கள் இறக்கும் தொழிலாளர்கட்கு மறுவாழ்வு அளிக்க, அரசு ரூ. 6 கோடி நிதியுதவி அளித்துள்ளது. இதன்படி ரூ. 1,000 மானியமும், ரூ. 1,000 வட்டியில்லா கடனும் கிட்டும்.

**எண்ணெய் தொழில்:**

23. எண்ணெய் உற்பத்தி, வாரியத்தின்கீழ் உள்ள மற்றொரு பெரிய தொழிலாகும். இவ்வாண்டில் 3,729 மின்விசை செக்குகள் விநியோகம் செய்யப்பட்டுள்ளன. மின்விசைச் செக்குகளிலிருந்து அதிக உற்பத்தி திறனை பெறும் வண்ணம் கைவினைஞர்கட்கு உதவ நான்கு சேவை மையங்களை நிறுவ வாரியம் நடவடிக்கை எடுத்து உள்ளது.

**உண்ணா எண்ணெய் மற்றும் சோப்பு:**

24. வாரியத்தினால் உற்பத்தி செய்யப்படும் குளியல் சோப்பு மற்றும் சலவை சோப்பு பொருட்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது. யாத்ரீகர்கள் தேவைக்கென 50 காசுகள் விலையில் 50 கிராம் சலவை சோப்புகளை வாரியம் புகுத்தியுள்ளது. இவ்வாண்டு மத்திய அரசின் கீழுள்ள பாதுகாப்புத் துறைக்கு வாரியம் 5 இலட்சம் குளியல் சோப்புக் கட்டிகளை வழங்கியுள்ளது.

1987, ஏப்ரல் 21]

**தோல் தொழில்:**

25. தோல் தொழில் கடைநிலை ஏழை கைவினைஞர்களுக்கு உதவி வரும் மற்றொரு முக்கியத் தொழிலாகும். வாரியம் இது வரை 3,500 காலணி தயாரிப்பாளர்கள் மற்றும் தோல் பதனிடுவோருக்கு நிதியுதவி அளித்துள்ளது. இதுவரை வாரியம் தோல் தைக்கும் இயந்திரம் உட்பட்ட 1,000 இரும்பு பெட்டிக் கூடங்களை விநியோகித்து உள்ளது. இவ்வாண்டில் தோல் தைக்கும் இயந்திரம் உள்ளிட்ட ஒவ்வொன்றும் ரூ. 3,500 மதிப்புள்ள 750 காலணி பெட்டிக்கூடங்களை முழு மானிய அளவில் வாரியம் விநியோகித்துள்ளது.

**கைமுறை காகிதம்:**

26. வாரியத்தின்கீழ் 12 கைமுறை காகித அலகுகளும் 5 கூட்டுறவு சங்கங்களும் உள்ளன. மேலும் 5 துறை அலகுகள் இயங்க தயாராக உள்ளன. இன்னும் 6 அலகுகள் இவ்வாண்டில் துவங்கப்படும். பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியத்திடமிருந்து பாண்டு' (Bond) பேப்பர் பெற்று வருகிறது. அரசின் பல்வேறு துறைகளுக்கு வழங்க, வாரியம் பதிவேடுகள் மற்றும் மேல் அட்டைகளையும் அரசு எழுதுபொருள்-அச்சுத் துறைக்கு வழங்கி வருகிறது.

**தச்சு கருமாரத் தொழில்:**

27. நான்கு வாரிய அலகுகளும் மற்றும் 44 கூட்டுறவு சங்கங்களும் இருக்கின்றன. அனைத்து வாரிய அலகுகள் மற்றும் கூட்டுறவு சங்கங்கள் நல்ல முறையில் மர மற்றும் இரும்பு பொருட்கள் தயாரித்து வருகின்றன. எனவே இப்பொருட்களுக்கு நல்ல வரவேற்பு உள்ளது.

**பாலிவஸ்திரா:**

28. 1982-83 ஆம் ஆண்டு முதல் வாரியம் பாலிவஸ்திரா கதர் துணி உற்பத்தியை மேற்கொண்டுள்ளது. 1984-85 ஆம் ஆண்டில் ரூ. 55.72 இலட்சம் மதிப்புள்ள பாலிவஸ்திரா துணி உற்பத்தி செய்யப்பட்டது. 1985-86 ஆம் ஆண்டில் இதன் உற்பத்தி மதிப்பு ரூ. 75.0 இலட்சமாக உயர்ந்தது. 1986-87-ல் பாலிவஸ்திரா உற்பத்தி ரூ. 150.00 இலட்ச மதிப்புள்ளதாக

இருக்குமென எதிர்பார்க்கப்படுகிறது. பாலிவஸ்திரா துணிகளுக்கு தமிழ்நாட்டிலும் மற்றும் வட மாநிலங்களிலும் மிகுந்த வரவேற்பு உள்ளது. எனவே உற்பத்தியை 1987-88-ல் இரு மடங்காக உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**பாலிவஸ்திரா பதப்படுத்தும் அலகு:**

29. தற்சமயம் ஒரு பாலிவஸ்திரா பதப்படுத்தும் அலகு (Processing Unit) பவானிசாகரில் ரூ. 4.50 இலட்சம் செலவில் நிறுவப்பட்டுள்ளது. இவ்வலகு 1987-88 ஆம் ஆண்டில் செயல்படத் துவங்கும்.

**பாலிவஸ்திரா மற்றும் பருத்தி கலந்து சுத்தம் செய்யும் கூடம் நிறுவ:**

30. ஆதி திராவிடர் நலனுக்காக சிறப்புக் கூட்டுத் திட்டத்தின் கீழ் ரூ. 55 இலட்சத்தில் ஒரு பாலிவஸ்திரா மற்றும் பருத்தி கலந்து சுத்தம் செய்யும் கூடம் (Blow Room) நிறுவ அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இந்த அலகு 1987-88 ஆம் ஆண்டில் சேலம் மாவட்டத்திலுள்ள சென்னகிரி என்ற ஊரில் தொடங்க இருக்கின்றது.

**தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்:**

31. 5.45 இலட்சம் நபர்களைக் கொண்டு 1,340 கூட்டுறவு சங்கங்கள் இயங்கி வருகின்றன. 1985-86 ஆம் ஆண்டில் இக்கூட்டுறவு சங்கங்களின் மூலம் ரூ. 4,943.16 இலட்சம் மதிப்பிற்கான உற்பத்தியும் மற்றும் ரூ. 5,732.46 இலட்சம் மதிப்பிற்கான விற்பனையும் நடைபெற்றுள்ளது. மேற்கூறியவற்றில் 79 சங்கங்கள் ஆதி திராவிடர்களுக்கு மட்டுமாகவும், 33 சங்கங்கள் பெண்களுக்காகவும் உள்ளன.

32. 1986 ஏப்ரல் 1 ஆம் நாள் முதல் டிசம்பர் 31 ஆம் நாள் வரை, 28 தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள் புதிதாக அமைக்கப்பட்டன.



## சிறப்புத் திட்டங்கள்.

**ஒருங்கிணைந்த மலைவாழ் மக்கள் மேம்பாட்டுத் திட்டம்:**

33. 1985-86 ஆம் ஆண்டில் 270 மலைவாழ் மக்கள் நலனுக்காக ரூ. 10 இலட்சம் அரசு ஒதுக்கியது. 1986-87 ஆம் ஆண்டில் தேனீ வளர்ப்பு, பாய் நெசவு, பிரம்பு, மூங்கில், புளி பக்குவப்படுத்துதல் மற்றும் கடுக்காய்த்தூள் பக்குவப்படுத்துதல் ஆகிய தொழில்களில் 1,116 நபர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் வண்ணம் ரூ. 39.22 இலட்சங்கள் அரசு வழங்கியுள்ளது.

**மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

34. 1985-86 ஆம் ஆண்டில் நீலகிரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்பு வளர்ச்சி மற்றும் எண்ணெய் இறக்கும் கருவிகள் விநியோகிப்பதற்கென ரூ. 6.73 இலட்சங்கள் வழங்கப்பட்டது. 1986-87 ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்திற்கென ரூ. 5.00 இலட்சங்கள் அரசு வழங்கியது.

**மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டம்:**

35. இத்திட்டத்தை 1985-86 ஆம் ஆண்டிலிருந்து வாரியம் செயல்படுத்த துவங்கியுள்ளது. தேனீ வளர்ப்புத் தொழில், யூகலிப்டஸ் மற்றும் தைலப்புல் எண்ணெய் இறக்கும் கருவிகள் விநியோகத்திற்காக ரூ. 6.00 இலட்சங்கள் ஒதுக்கப்பட்டுள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக அரசு ரூ. 7.73 இலட்சங்கள் அளித்துள்ளது.

**வறட்சிப் பகுதிகளுக்கான திட்டம்:**

36. 1985-86 ஆம் ஆண்டு ரூ. 2.33 இலட்சம் மதிப்புள்ள பனைத் தொழில் சம்பந்தமான திட்டங்களை இராமநாதபுரம் மற்றும் தர்மபுரி மாவட்டங்களில் நிறைவேற்ற அரசு ஒப்புதல் அளித்துள்ளது. 1986-87 ஆம் ஆண்டில் தர்மபுரி மாவட்டத்தில் தேனீ வளர்ப்புத் தொழில் மற்றும் மத்தூரிலுள்ள பனைப் பண்ணையை மேம்படுத்தும் திட்டங்களுக்கென அரசு ரூ. 8.29 இலட்சமும் அனுமதித்துள்ளது.

**வாரியத்தின் புதிய திட்டங்கள் (பகுதி இரண்டு திட்டங்கள்):**

37. 1986-87 ஆம் ஆண்டில் அகர்பத்தி, பயிற்சி மற்றும் உற்பத்தி நிலையம் துவககுதல், பிரம்பு மூங்கில் கிடங்கு கட்டுதல், கோரைப்புல் இணையம், சென்னையிலுள்ள எண்ணெய் மற்றும் சோப்பு பரிசோதனைக் கூடத்தை மேம்படுத்துதல், மற்றும் கதர் நெசவாளர்களுக்கு உபகரணங்கள் விநியோகித்தல் ஆகிய புதிய திட்டங்களை நிறைவேற்ற அரசு ரூ. 6.26 இலட்சங்கள் ஒதுக்கியுள்ளது. வாரியம் துணிகளுக்கான பாபின்கள் (Bobbins) உற்பத்தி செய்யும் அலகு ஒன்றினை மதுரை மாவட்டத்திலுள்ள ஆண்டிப்பட்டியில் ரூ. 1.85 இலட்சம் செலவில் 1987-88-ல் துவக்கவுள்ளது.

**இராமநாதபுரம் ஏற்புத் திட்டம்:**

38. மாண்புமிகு முதலமைச்சர் 1985 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் தேதியில் அறிவித்ததனை தொடர்ந்து கதர் மற்றும் கிராமத் தொழில் திட்டங்களைத் தீவிரமாகச் செயல்படுத்துவதற்கென இராமநாதபுரம் மாவட்டத்தை வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது. 20,000 கிராமப்புற கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் ஒரு நான்கு ஆண்டுத் திட்டம் வகுக்கப்பட்டுள்ளது. இதன்படி நடப்பு ஆண்டில் பம்பாய் கதர் ஆணைக் குழுவின் நிதியுதவி மற்றும் ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்படும் மான்யம் கொண்டு ரூ. 66.15 இலட்சங்கள் செலவினத்தில் 26 தொழிற் கூட்டுறவு சங்கங்களும், 2 துறை அலகுகளும் அனுமதிக்கப்பட்டுள்ளன. இத்திட்டத்தினால் 1,161 நபர்கள் பயன் பெறுவர்.

**பசும்பொன் முத்துராமலிங்கம் மாவட்டம் மேம்பாட்டுத் திட்டம்:**

39. மாண்புமிகு மத்திய அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்கள் கிராமப்புறத்திலுள்ள எளியோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் கதர் கிராமத் தொழில்களை துவக்குவதற்கென காரைக்குடி அருகிலுள்ள கண்டனூரில் 26.16 ஏக்கர் நிலத்தைக் கொடையாக அன்புடன் அளித்துள்ளார்கள். ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டத்தின் கீழ் பெறப்படும் மான்யம் மற்றும் கதர் ஆணைக் குழுவின் நிதியுதவி கொண்டு ரூ. 21.55 இலட்சம் செலவிலான கதர் கிராமத் தொழில் மையம் ஒன்றை



தேவகோட்டை வட்டாரத்தில் கண்டனூர் கிராமத்தில் நிறுவ திட்டம் தீட்டப்பட்டுள்ளது. இங்கு 186 நபர்கட்கு பயனளிக்கும் வகையில் 6 துறை அலகுகளும் ஒரு தொழிற் கூட்டுறவு சங்கமும் துவக்கப்படவுள்ளன. இந்த மையத்தில் நூற்பு மற்றும் நெசவு அலகுகள், மட்டு இழைக்கும் அலகு, சோப்பு அலகு, காலணி அலகு மற்றும் ஒரு தச்சு கருமார் அலகு துவக்கப்பட உள்ளன.

**ஏற்கப்பட்ட கிராமங்கள்:**

40. 1985-86 ஆம் ஆண்டு அக்டோபர் திங்கள் 2 ஆம் நாள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தபடி தமிழ்நாட்டிலுள்ள மாவட்டங்களிலுள்ள 26 கிராமங்களை கதர் கிராமத் திட்டங்கள் செயல்படுத்த வாரியம் ஏற்றுக் கொண்டுள்ளது. இதுவரை வாரியம் 1,010 கைவினைஞர்களுக்கு வேலை வாய்ப்பளித்து 22 கிராமங்களை தழுவியுள்ளது. இத்திட்டங்களுக்கென ரூ. 44.61 இலட்சங்கள் இதுவரை செலவிடப்பட்டுள்ளது.

**புதிய திட்டம்:**

41. ஒவ்வொரு ஆண்டும் இவ்வாரியம் ஆயிரக்கணக்கான கைவினைஞர்கட்கு நிதியுதவி அளித்து வருகிறது. அவர்கள் தொழில்களை முறையாகச் செய்யவும் உற்பத்தி செய்யவும் பொருள்களை சிரமமில்லாமல் விற்பனை செய்ய ஏதுவாகவும், பரவலான அளவில், பலநோக்கு கதர் கிராமத் தொழில்கள் கூட்டுறவு சங்கங்களை நிறுவிட வாரியம் எண்ணியுள்ளது. முன்னர் வாரியத்தின் நிதியுதவி பெற்றவர்களும், இனி நிதியுதவி பெற விரும்புவர்களும் இத்தகைய கூட்டுறவு சங்கங்களின் கீழ் கொணரப்படுவர்.

**வாரியத்தின் வணிகம்:**

42. வாரியம் தமிழ்நாடு முழுவதும் பரவியுள்ள அதன் 156 கதர் அங்காடிகள், 10 கிராமோதய விற்பனை நிலையங்கள், 7 கிராம சில்லறைகள் மற்றும் 3 பெரிய தோல் பொருட்கள் விற்பனை நிலையங்கள் மூலம் கதர் கிராமத் தொழில் பொருட்களை விற்பனை செய்து வருகிறது. பம்பாய், கல்கத்தா மற்றும் புது டெல்லி போன்ற இடங்களில் வாரியம் தனது கதர் கிராமப் பொருட்கள் விற்பனை நிலையங்களை துவக்க திட்டமிட்டுள்ளது. இதன் முதற்படியாக, 1984 டிசம்பர் திங்களில் பெங்களூரில் ஒரு கதர் அங்காடி துவக்கப்பட்டது.

[1987 ஏப்ரல் 21

43. கடந்த ஆண்டில் வாரியம் பல்வேறு அரசுத் துறைகளுக்கு ரூ. 925 இலட்சங்கள் மதிப்புள்ள கதர் கிராமப் பொருட்களை விற்பனை செய்தது. இவ்வாண்டு விற்பனை ரூ. 1,100 இலட்சம் மதிப்பினை எட்டும் என எதிர்பார்க்கப்படுகிறது. இவ்வாண்டு வாரியம் அண்டை மாநிலங்களிலுள்ள முகவர்கள் மூலம் ரூ. 3 கோடி பெறுமானமுள்ள சோப்பை விற்பனை செய்ய முனைந்துள்ளது. தரமுள்ள மற்றும் அக்மார்க் செய்யப்பட்ட தேன் வாரியத்திடமுள்ளதால், வாரியத்தின் கதர் அங்காடிகளில் விற்பனை செய்யப்படும் தேனுக்கு மக்களிடையே மிகுந்த வரவேற்புள்ளது. மக்களுக்குத் தேவையான பொருட்களை 5 இயங்கும் ஊர்திகள் மூலமாக (Mobile Van) பொருட்களை அவர்கள் வீட்டிற்கே நேரில் கொண்டு சென்று விற்பனை செய்வதற்கு வாரியம் திட்டமிட்டுள்ளது.

பயிற்சி திட்டங்கள்:

44. வாரியம் தனது அலுவலர்களை ஆட்சி, வணிகம் மற்றும் கணக்கு ஆகியவற்றில் பயிற்சி தர அண்ணா மேலாண்மை பயிலகத்தில் குறுகிய கால பயிற்சிக்கு அனுப்பியுள்ளது. கதர் ஆய்வாளர் மற்றும் மத்திய கதர் அலுவலர் பதவிகளில் உள்ள தொழில் நுட்ப அலுவலர்களுக்கு கோவையிலுள்ள தேசிய பஞ்சாலை கழகத்தில் (National Textile Corporation) பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. கதர் அங்காடிகளில் பணிபுரியும் ஊழியர்களுக்கு அண்ணா மேலாண்மை பயிலகத்தில் விற்பனையாளருக்கான பயிற்சி வழங்கப்பட்டது. வாரியம் தனது பணியாளர்களுக்கு நேபாளி தறி மற்றும் புது மாதிரி இராட்டையில் பயிற்சி வழங்க கதர் கிராமத் தொழில் ஆணைக்குழுவால் விரபாண்டி, கல்லுப்பட்டியில் நடத்தப்படும் பயிற்சி நிலையங்களுக்கு அவர்களை அனுப்பி பயிற்சி பெற ஆவன செய்துள்ளது. சென்னை மற்றும் மதுரையில் உள்ள கூட்டுறவு பயிற்சி கல்லூரியில் கூட்டுறவுத் துறை பயிற்சி பெற வாரியம் பணியாளர்களை அனுப்புகிறது.

வாரியத்தின் நிதி நிலை:

45. பல்வேறு திட்டங்களை நிறைவேற்ற வாரியத்திற்கு தேவைப்படும் நிதி உதவி இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட நிதி உதவி கொள்கையின்படி, பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு வழங்கி வருகிறது. தமிழ்நாடு அரசு, கதர் கிராமத்



1987 ஏப்ரல் 21]

தொழில்கள் நிதிகளின் கீழ் வணிகமுறையில் அல்லாத செலவினங்களால் ஏற்படும் பற்றாக்குறையை சரிக்கட்டுவதற்கு நிகரச் செலவு மானியம் வழங்குகிறது.

46. 1986—87-ம் ஆண்டில் முடிவாக ஒப்புக்கொள்ளப்பட்ட திட்டத்தின் கீழ் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழு கீழ்க்கண்ட நிதிகளை ஒதுக்கியுள்ளது.

| | ஆணைக்குழுவின் நிதி. | | |
|---|---|---|---|
| | மானியம். | கடன். | வங்கி நிதி கடன். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்) | | |
| 1. கதர் .. .. | 3.98 | 131.46 | 90.90 |
| 2. இராமத் தொழில்கள்— | | | |
| (அ) வாரியத் திட்டங்கள் | 61.99 | 234.57 | 81.00 |
| (ஆ) தீப்பெட்டித் தொழில் (இயக்குநர், தொழில் வணிகத் துறை கண்காணிப்பில் இயங்குவது). | .. | 0.70 | 285.00 |
| மொத்தம் .. | 65.97 | 366.73 | 456.90 |

1987–88ஆம் ஆண்டிற்கு கீழ்க்கண்ட ஒதுக்கீடுகளை வாரியம் கோரியுள்ளது.

| | ஆணைக்குழுவின் நிதி. | | |
|---|---|---|---|
| | மானியம். | கடன். | வங்கி நிதி கடன். |
| (1) | (2) | (3) | (4) |
| | (ரூபாய் இலட்சத்தில்.) | | |
| 1. கதர் .. .. | 2.24 | 253.74 | .. |
| 2. இராமத் தொழில்கள்— | | | |
| (அ) வாரியத் திட்டங்கள் | 63.70 | 276.65 | 32.00 |
| (ஆ) தீப்பெட்டித் தொழில். | .. | 0.70 | 285.00 |
| மொத்தம் .. | 65.94 | 531.09 | 317.00 |

[1987 ஏப்ரல் 2

47. பம்பாய் கதர் கிராமத் தொழில் ஆணைக் குழுவிடமிருந்து பெறப்படும் நிதி உதவியுடன் மாநில அரசால் உருவாக்கப்படும் சிறப்புத் திட்டங்களை அமலாக்கி நிறைவேற்ற மாநில அரசிடமிருந்தும் நிதி பெறப்படுகிறது. தமிழ்நாடு அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியுதவி விவரங்கள் பின்வருமாறு:—

| (1) | திருத்திய மதிப்பீடு 1986–87. (2) | திட்ட மதிப்பீடு 1987–88. (3) |
|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்.) | |
| 1. மாநில அரசிடமிருந்து மானியம்— | | |
| (அ) கதர் நிதி நிகர செலவு மான்யம். | 65.00 | 60.00 |
| (ஆ) கிராமத் தொழில் நிகர செலவு மான்யம். | 38.34 | 60.00 |
| (இ) தணிக்கைக் கட்டணம் | 27.00 | 27.00 |
| (ஈ) கதர் விற்பனை தள்ளுபடி | 175.00 | 185.00 |
| (உ) மற்ற சிறப்புத் திட்டங்களை நிறைவேற்ற. | 57.13 | 44.95 |
| மொத்தம் .. | 362.47 | 376.95 |
| 2. அரசிடமிருந்து கடன்— | | |
| மற்ற சிறப்புத் திட்டங்களை நிறைவேற்ற. | 0.04 | 1.91 |
| | 0.04 | 1.91 |

V211,31 N87
N87.39.2
136521